நெசவாளி

மே 1967

விலை 25 காசு

கைத்தறிப் பொருட்காட்சி சிறப்பு மலர்

13-வது அகில இந்திய கைத்தறி வார விழாவையொட்டி 9—4—1967 முதல் 23—4—1967 முடிய தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் சார்பாக சென்னையில் கைத்தறிப் பொருட்காட்சி சிறப்பாக நடைபெற்றது. கைத்தறி வார விழாவை ஆரம்பித்து வைத்த தமிழகக் கல்வி. தொழிலமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களையும், கூட்டத்திற்குத் தலைமை வகித்த சென்னை இராஜ்ய கூட்டுறவு பாங்குத் தலைவர் திரு ஆர். கனகசபை, எம்.எல்.ஏ., அவர்களையும், பொது மக்களையும் மாநில சங்கத் தலைவர் திரு எம். பி. நாச்சிமுத்து அவர்கள் வரவேற்று உரையாற்றும் காட்சி. மாநில சங்க உப-தலைவர் திரு கே. ஏ. காசிவிஸ்வநாத முதலியார், மாநில சங்க இயக்குநர் திரு எஸ். என். சோமசுந்தரம் ஆகியோரையும், இதரர்களையும் படத்தில் காணலாம்.

சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க மாத வெளியீ

போன்: 2433 & 4623 தந்தி: "சொஸைட்டி" ஸ்தாபிதம்: 1938

சென்னை இராஜ்யத்திலேயே மிகச் சிறந்த
சொஸைட்டி என்று பரிசு பெற்றதும்,
கைத்தறி ஜவுளி போட்டிகளில் முதற் பரிசு பெற்றதும்

★ சேலம் அம்மாப்பேட்டை சொஸைட்டி ★



எங்களிடம் 20 நெ. முதல் 100 நெ. வரை உங்களுக்குத் தேவையான சேலை, வேஷ்டி, துண்டு, கர்சீப், ஷர்ட்டிங், மற்றும் ஜரிகைபேட்டு ரகங்களும் புதுமையான டிஸைன்களில் குறைந்த விலையில் கிடைக்கும். எங்கள் ஜவுளிகள் இந்தியாவில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் விற்பனைச் செய்யப்படுகின்றன.

ஏ. மாரியப்பன்,
தலைவர்.

★

அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சொஸைட்டி லிமிடெட், எஸ். 532,

அம்மாப்பேட்டை, சேலம்-3. (தென்னிந்தியா)

பொருளடக்கம்

தழி 7	மே 1967	யாழ் 9

கௌரவ ஆசிரியர் :
எம். பி. நாச்சிமுத்து

ஆசிரியர் :
கோ. பன்னீர்செல்வம்

பக்கம்

பதின்மூன்றும் திருவிழா (தலையங்கம்) ... 2

நம்பிக்கைத் திருவிழா ... 3

கேள்விக்குறியில் எதிர்காலம்!
திரு எம். பி. நாச்சிமுத்து, பி.ஏ., பி.எல்., 5

நிரந்தர வாழ்வளிப்போம்!
திரு இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., ... 9

தொடரும் நெருக்கடி
திரு ஆர். கனகசபை, எம்.எல்.ஏ., ... 12

பகட்டிலே மனத்தைப் பறிகொடுக்காதீர்!
திருமதி சரோஜினி வரதப்பன் ... 13

பெண்களுக்குப் பெருமை தரும் கைத்தறி
திருமதி டி. என். அனந்தநாயகி, பி.ஏ., பி.எல்., ... 15

வேறு தொழிலுக்குப் போவது நாட்டுக்கு நல்லதுதானா?
திரு எம். பக்தவத்சலம், பி.ஏ., பி.எல்., 18

தேக்கத்திற்குக் காரணம் தேவைக் குறைவுதானா?
திரு டி. செங்கல்வராயன், பி.ஏ., பி.எல்., எம்.பி., ... 20

மாநில சங்கத்தின் சாதனை
திரு ஜே. சி. ரயான், எம்.ஏ., ஐ.ஏ.எஸ்., (ரிடையர்டு) ... 22

உடைப் பிரச்னை அல்ல, இது ஓர் உயிர்ப் பிரச்னை
திரு கே. ஏ. மதியழகன், பி.ஏ., ... 24

புதிய ஊக்கம் பிறந்தது. ஆனால்...!
திரு எம். சோமப்பா ... 23

பெருகட்டும் ஏற்றுமதி!
டாக்டர் எஸ். விஜயலட்சுமி, எம்.ஏ., டி.லிட்., ... 23

எழில் கொஞ்சும் கைத்தறி
திரு காஞ்சி மணிமொழியார் ... 30

கைத்தறிக் கலையைக் காப்போம்
திரு மு. கருணாநிதி ... 33

இரு கண்கள்!
திரு த. சஞ்சீவி, எம்.ஏ., எம்.லிட்., ... 35

கூட்டுறவால் பாதுகாப்போம்!
திரு எஸ். மாதவன், பி.காம்., பி.எல்., ... 39

நமது கடமை
திரு பி. ஜி. கருத்திருமன், பி.எஸ்ஸி., எம்.எல்.ஏ., ... 41

சபதமேற்போம்!
திரு கே. விநாயகம், எம்.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ., ... 43

பக்கம்

கவர்ச்சியான கைத்தறி!
திருமதி சத்தியவாணிமுத்து ... 45

நிரிங்கு சொர்க்கம்
திரு ம. பொ. சிவஞான கிராமணியார், எம்.எல்.ஏ., ... 46

மறுமலர்ச்சித் தேவை
திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா, பி.ஏ., பி.எல்., ... 48

ஆத்ம திருப்தி!
திருவாசகமணி திரு கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்., ... 50

திறன்மிக்க கரங்கள்
திரு ஏ. கோவிந்தசாமி ... 52

மூவகையான சிக்கல்கள்!
திரு ஆர். துரைசாமி, ஐ.ஏ.எஸ்., ... 54

சிக்கல் தீர வழி!
திரு ஈ. வெ. கி. சம்பத் ... 56

ஆச்சரியம்! ஆனால் உண்மை
திரு எம். ஏ. மாணிக்கவேலு, பி.ஏ., பி.எல்., ... 57

மாணவர்களின் பங்கு
திரு கே. பாலதண்டாயுதம் ... 59

காலத்திற்கேற்ற கண்கவர் ஆடைகள்!
திரு சி. என். அண்ணாதுரை, எம்.ஏ., ... 61

எதிர் நீச்சல்
புலவர் திரு கே. கோவிந்தன், எம்.ஏ., பி.ஓ.எல்., ... 65

முக்கோணச் சுழல்
திரு பி. முராரி, ஐ.ஏ.எஸ்., ... 66

இருமுனைப் போட்டி
டாக்டர் எம். சந்தோஷம், எம்.பி., ... 69

வேலை வாய்ப்புப் பெருக...
திரு டி. என். லட்சுமிநாராயணன், ஐ.ஏ.எஸ்., ... 71

வயதைக் குறைக்க இதோ ஒரு வழி!
திரு எம். ஆர். பெருமாள், எம்.ஏ., எல்.டி., ... 73

தேசியப் பிரச்னை
திரு கே. ஏ. காசிவிஸ்வநாத முதலியார் ... 75

கைத்தறி விழா பட்ஜெட்
ராஜாமணி ... 77

கைத்தறி வார விழாச் செய்திகள் ... 81

நெசவொளி

மே 1967

பதின்மூன்றாம் திருவிழா

கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாகக் கைத்தறி வார விழாவைத் தமிழகத்தில் மட்டுமல்ல, பாரதம் முழுதும் பரவலாக நாம் கொண்டாடிவருகிறோம். இவ்வாண்டும் பதின்மூன்றாவது அகில இந்திய கைத்தறி வார விழா குமரி முதல் இமயம் வரை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்தக் கைத்தறி வார விழா ஆண்டு தோறும் கொண்டாடப்படுவதற்கான காரணங்கள் நாம் யாவரும் அறிந்ததே. 'பூக் கடைக்கு விளம்பரம் எதற்கு?' என்பார்கள்; அது அந்தக் காலம்! ஆனால், இதுவோ விளம்பர யுகம்; பூக் கடைக்கும் விளம்பரம் தேவையான காலம். இல்லாவிட்டால் கைவண்ணமும், கலைச் சிறப்பும், எழில்மயமான தோற்றமும் கொண்ட—அதே நேரத்தில் விலை மலிவானதும் நீடித்து உழைக்கக் கூடியதுமான—கைத்தறி ஆடைகளின் புகழைப் பரப்பவேண்டிய அவசியம் நமக்கு ஏற்பட்டிருக்குமா?

இங்கிருந்து எழில் கொழிக்கும் கைத்தறி ஆடைகள் ஏராளமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அதற்கு மாற்றாக பொன்னும் மணியும் அந்நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்துகொண்டிருந்தன என்பது சரித்திர உண்மை.

ஆனால், இன்று? கைத்தறி ஆடைகளின், குறிப்பாக வண்ணம் மாறும் சென்னைத் துணியின் தன்மைகள் அமெரிக்காவில் சரியான முறையில் விளம்பரப் படுத்தப்படாத காரணத்தாலும் அந்நாட்டிற்கான கைத்தறி ஆடைகளின் ஏற்றுமதி குறைந்துவிட்டது என்பதைக் காண்கிறோம்.

வெளிநாடுகளை விட்டுத் தள்ளுங்கள்; உள்நாட்டில் இன்று என்ன நிலை? கைத்தறி ஆடைகளின் உண்மையான மேன்மையை மக்கள் பூரணமாக உணர்ந்து கொண்டிருந்தார்களானால், கைத்தறித் துணித் தேக்கம் என்ற பயங்கர பூதம் ஏன் இப்படி அடிக்கடி லட்சக்கணக்கான நெசவாளர்களின் வாழ்வில் குறுக்கிடவேண்டும்?

கைத்தறி ஆடைகளின் சிறப்பையும், அவைகளை வாங்கி ஏழை நெசவாளர்களை ஆதரிக்கவேண்டியதன் அவசியத்தையும் பொது மக்களுக்கு நல்ல முறையில் உணர்த்துவதற்காகத்தான் அகில இந்திய கைத்தறி வார விழா ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது.

வழக்கம்போல் சென்னை நகரிலும் கைத்தறி வார விழா மாநில சங்கத்தின் சார்பில் 9—4—'67 முதல் 23—4—'67 முடிய பதினைந்து நாட்களுக்குச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் இவ்வாண்டும் அமைச்சர்களும், அரசியல் தலைவர்களும், கலைஞர்களும், தமிழ் அறிஞர்களும், எழுத்தாளர்களும், சிந்தனையாளர்களும், அதிகாரிகளும் இன்னும் பிற பிரமுகர்களும் கலந்து கொண்டு, கைத்தறி ஆடைகளைப் பொது மக்கள் வாங்கி நெசவாளர்களை ஆதரிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும், அரசாங்கமும் இதரர்களும் உதவி செய்ய வேண்டியதன் கடமை பற்றியும் தெளிவாக விளக்கிக் கூறினார்கள். இவ்விதழில் வருகிற பக்கங்களில் வெளியாகியிருக்கும் பேச்சுக்களையும், நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்களையும படிப்பவர்களுக்கு, கைத்தறி வார விழா இவ்வாண்டும் ஒரு திருவிழாவாகக் கொண்டாடப்பட்டிருப்பது புரியும்.

சென்னைப் பொருட்காட்சியில் மட்டும் பதினைந்து நாட்களிலும் கைத்தறி ஆடைகளின் விற்பனை சுமார் ரூ. 26 லட்சமாகும். விற்பனை அதிகாரிகளின் ஆளுகைக்குட்பட்ட கடைகளில் விற்பனையான கைத்தறி ஆடைகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டால் இவ்வாண்டில் இவ்விழாவின்போது ஏற்பட்ட மொத்த விற்பனை சுமார் ரூ. 49 லட்சமாகும்.

அடுத்த ஆண்டு இத்தொகை இரண்டு மடங்காகப் பெருகுமளவுக்குப் பொதுமக்களின் ஆதரவு பெருக வேண்டுமென்றும், அதற்கு வசதியாக நெசவாளர்கள் தங்களது உற்பத்திகளைப் புதுப் புது தினுசுகளாக தொடர்ந்து மாற்றிக் கொண்டே இருக்க வேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறோம்.

கேள்விக் குறியில் எதிர்காலம்!

திரு எம். பி. நாச்சிமுத்து, பி.ஏ., பி.எல்.,

மாநில சங்கத் தலைவர்.

கைத்தறியை நம்பியிருக்கும் லட்சோப லட்சம் மக்களின் வாழ்வுக்காக மத்திய—மாநில அரசாங்கங்களின் உதவியால் இமயம் முதல் குமரிவரை இந்தக் கைத்தறி வார விழா கொண்டாடப்படுகிறது. கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாகக் கொண்டாடப்பட்டு வரும் இந்த வாரவிழா இன்று பதின்மூன்றுவது வார விழாவாகும்.

இந்த விழா சென்ற மார்ச் மாதத்திலேயே தொடங்கப்பட்டிருக்கவேண்டும். பொதுத் தேர்தலின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டு விட்டதால் இந்த மாதத்தில் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

கைத்தறித் தொழில் மிகப் புராதனமான தொழில். நம் நாட்டில் இந்தத் தொழில் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்த ஒரு தொழிலாகும். இந்த நாட்டில் கைத்தறியில் நெய்யப்பட்ட துணிகள் இந்த நாட்டுத் தேவையையும் பூர்த்தி செய்ததோடு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு அந்த நாடுகளிலிருந்தெல்லாம் பொன்னையும் மணியையும் இங்கு கொண்டுவந்து குவிக்கக் காரணமாக இருந்த ஒரு தொழிலாகும் என்பதை வரலாறுகளிலிருந்தும் ஆராய்ச்சிகளிலிருந்தும் புராணங்களிலிருந்தும் நாம் அறியலாம்.

அப்படிப்பட்ட ஒரு தொழில் ஆங்கிலேயர் ஆட்சியின் காரணமாக அழிக்கப்பட்டது. சுதந்திரத்திற்குப்பின் நமது தேசியத் தலைவர்களின் முயற்சியால் இந்தத் தொழில் புத்துயிர் பெற்றுள்ளது. இன்று அகில இந்திய ரீதியில் சுமார் 29 லட்சம் தறிகள் இருக்கின்றன. இந்தத் தறிகளை நம்பி சுமார் ஒன்றரைக் கோடி உயிர்கள் வாழுகின்றன. தமிழ் நாட்டில் சுமார் ஏழு லட்சம் தறிகள் இருக்கின்றன. இதை நம்பி சுமார் முப்பது லட்சம் மக்கள் வாழ்கின்றனர்.

முன்பக்கத் தொடர்ச்சி

9—4—'67 அன்று காலை 10 மணியளவில் தலைமை அலுவலகக் கட்டிடத்தில் பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி நடைபெற்றது. போட்டியில் 17 பள்ளிகள் கலந்துகொண்டன. விவேகானந்தா சென்டினரி பெண்கள் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த எம். கே. இராஜலட்சுமி என்ற மாணவியும், குருசாமி முதலியார் டி. டி. வி. உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த சுதர்சனம் என்ற மாணவனும் முதற் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 20—4—'67 அன்று மாணவர் தினத்தன்று பரிசு பெற்ற மாணவர்கள் கண்காட்சி மேடையில் சொற்பொழிவாற்றினர். பரிசுகளும் வழங்கப்பட்டன.

20—4—'67 அன்று இரண்டாவதாக மாணவர்களின் பல்கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பல பள்ளிகள் கலந்துகொண்டு சிறப்பித்தன. அன்றைய கலை நிகழ்ச்சிக்கு மாநில விளையாட்டுக் குழு காரியதரிசி திரு ஏ. பத்மநாப நாயுடு அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

பரிசு பெற்ற மாணவர்களுக்கும், கைத்தறியாடைப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாதர்களுக்கும் கண்காட்சியின் இறுதி நாளன்று பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த ஆண்டு 9—4—1967 ஞாயிறன்று தொடங்கிய விழா 23—4—1967 ஞாயிறன்றுதான் முடிவடைந்தது. இந்தப் பதினைந்து நாட்களிலும் விழாவில் கலந்துகொண்ட தலைவர்களின் உரைகள் அடுத்துவரும் பக்கங்களில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

துறை காரியதரிசி திரு டி. என். லட்சுமிநாராயணன், ஐ.ஏ.எஸ்., புதுவை பொதுக் கல்வி இயக்குனர் திரு எம். ஆர். பெருமாள் ஆகியோர் அனைவரும் தொடர்ந்து பங்குகொண்டு உரையாற்றினர்கள்.

இந்த ஆண்டு விழாவின் சிறப்பைத் தலைவர்களின் உரைகளிலிருந்தே உணரலாம். விழாவில் பங்கெடுத்துக் கொண்ட அமைச்சர்களும், தலைவர்களும், அதிகாரிகளும் கைத்தறித் தொழிலுக்குச் சிறந்த ஓர் எதிர்காலத்திற்கு உத்திர வாதமளித்து உறுதிமொழி கூறி இவ்விழாவை நம்பிக்கைத் திருவிழாவாக மாற்றி விட்டனர்.

"அரசாங்க அலுவல்களுக்கு—ஊழியர்களுக்கு கைத்தறி" என்ற நமது நீண்ட நெடுநாளைய கோரிக்கை நிறைவேறப் போகிறது என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகின்ற வகையில் அமைச்சர்களின் உறுதிமொழிகளடங்கிய உரைகளைப் படிக்கும் நெசவாளர்களின் உள்ளம் குளிருமாக.

விழா தொடங்கிய நாள்தொட்டு எல்லா நாட்களிலும் தலைவர் திரு எம். பி, நாச்சிமுத்து அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். உப-தலைவர் திரு கே. ஏ. காசிவிஸ்வநாத முதலியார், மாநில சங்க இயக்குநர்கள் திருவாளர்கள் இ. எஸ். தியாகராஜன், எஸ். கே. சம்பந்தம், பி.ஏ., எம்.பி., டி. கே. குழந்தைவேலு முதலியார், எம். எஸ். ஏ. மஜீத், பி.ஏ., ஆகியோர்கள் நன்றியுரை கூறுவதில் பங்கெடுத்துக் கொண்டனர். ஸ்ரீ பராசக்தி நாடக மன்றத்தாரின் 'காருவகி', நாஞ்சில் ராஜப்பா நாடக மன்றத்தாரின் 'ஒளியும் நிழலும்', சேவா ஸ்டேஜ் நாடக சபாவினரின் 'சுயம்வரம்', ஏஸ் என்ட்டர்டெய்னர்ஸாரின் 'நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்?', புதுமைக் கலைமன்றத்தாரின் 'மதுரை மன்னன்', தோட்டக் கார விஸ்வநாதனின் 'கனவு', மாணவர்களின் பல்கலை நிகழ்ச்சிகள், சுந்தரனுர் நாடக மன்றத்தாரின் 'மண்பொம்மை', நேஷனல் தியேட்டர்ஸாரின் 'மாலிக் காபூர்', பவானி பைன் ஆர்ட்ஸாரின் 'வினோதத் தரகர்கள்', கலாவிலாசினி நாடக சபாவினரின் 'ஊரும உறவும்', ஸ்ரீ சங்கரதாஸ் நாடகாலயத்தாரின் 'அடிக்கிற கைதான் அணைக்கும்', கோ-ஆப்டெக்ஸ் பொழுதுபோக்கு நாடகக் குழுவினரின் 'கோபுரவாசல்', கன்னியா கலைக் குழுவினரின் 'இதயக் கோவில்' ஆகிய நாடகங்கள் நடைபெற்றன.

மாநில சங்க உப-தலைவர் திரு கே. ஏ. காசிவிஸ்வநாத முதலியார் அவர்களும், மாநில சங்க இயக்குநர்கள் திருவாளர்கள் ஆர். மாடசாமி, எஸ். என். சோமசுந்தரம், இ. எஸ். தியாகராஜன், எம். எஸ். ஏ. மஜீத், பி.ஏ., ஆகியோர் நாடகங்களின் முடிவில் கலைஞர்களையும், நாடகக் குழுவினரையும் பாராட்டி நன்றி தெரிவித்தனர்.

15—4—'67 அன்று மாலை 7-30 மணியளவில் கண்காட்சி மைதானத்தில் மாணவர்களின் பல்கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சென்னையிலுள்ள பல பள்ளிகள் கலந்துகொண்டு சிறப்பித்தன. கௌரவ மாஜிஸ்ட்ரேட் திருமதி காந்திமதி இலட்சுமணன், கௌரவ மாஜிஸ்ட்ரேட் திருமதி பட்டு பாலகோபால், திரு கே. எஸ். கோவிந்தராஜன் ஆகியோர் நீதிபதிகளாக இருந்து பரிசுக்குரியவர் களைத் தேர்ந்தெடுத்தனர். சத்தியமூர்த்தி பள்ளி முதற் பரிசும், ஆர். பி ஏ. என். சி. உயர்தர ஆதாரப் பள்ளி இரண்டாவது பரிசும், கின்டர் கார்டன் பள்ளி மூன்ருவது பரிசும், லேடி வெலிங்டன் பள்ளி, கண்ணப்ப நாயனுர் ஆரம்பப் பள்ளி, ஆர் டி. ஆர். ஆரம்பப் பள்ளி ஆகியவைப் பாராட்டுப் பரிசுகளும் பெற்றன.

17—4—'67 அன்று மாலை ராணி மேரி கல்லூரியில் தமிழகக் கவர்னர் அவர்களின் துணைவியார் சர்தார்னி உஜ்ஜல்சிங் அவர்கள் தலைமையில் மாதர் களுக்கான கைத்தறியாடை அணியும் போட்டி நடைபெற்றது. போட்டியில் 23 இந்திய மாதர்களும், 25 ஐரோப்பிய மாதர்களும் கலந்துகொண்டனர். திருமதி கார்டனர், திருமதி டவுன், திருமதி மதன், திருமதி ராஜன், திருமதி பெல்கம்வாலா, சர்தார்னி உஜ்ஜல்சிங் ஆகியோர் நீதிபதிகளாக இருந்து பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்தனர். பருத்தியாடைப் போட்டியில் திருமதி அமிர்தா வாலியா முதற் பரிசும், குமாரி கிரிஜா கிருஷ்ணசாமி இரண்டாவது பரிசும், திருமதி சங்கீத் சோப்ரா மூன்ருவது பரிசும் பெற்ருர்கள். பட்டாடைப் போட்டியில் திருமதி சங்கீத் சோப்ரா முதற் பரிசும், குமாரி கிரிஜா கிருஷ்ணசாமி இரண்டாவது பரிசும், திருமதி லலிதா கரோஷி மூன்ருவது பரிசும் பெற்றனர். தமிழகக் கல்வி. தொழிலமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களும், ஹரிஜன, தகவல் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களும் போட்டியைக் கண்டுகளித்தனர்.

நம்பிக்கைத் திருவிழா

நாடகம்—திரைப்படம் பார்ப்பதற்கு மட்டுமல்ல, நல்ல பேச்சைக் கேட்கவும் கூட்டம் கூடும் என்பதை மெய்பிக்கத் தக்கவகையில் கண்ணுக்கெட்டிய தூரம் முண்டியடித்துக்கொண்டு முன்னுல் வர முயற்சிக்கும் கூட்டத்தின் நடுவே பெண்களின் கலகலப்பும், சிறுவர்களின் உற்சாக வெள்ளமும் நிரம்பி வழிய இந்த ஆண்டில் கைத்தறி வார விழாத் தொடங்கியது.

இவ்விழாவைத் தொடங்கி வைக்க தொழிலமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் வருகிருர் என்ற செய்திதான் இவ்வளவு பெரிய கூட்டத்தை இந்த விழாக் கண்காட்சித் திடலில் கூட்டியிருக்கிறது என்று ஒரு சில பெரியவர்கள் பேசிக் கொள்ள, அதைக்கேட்ட இளைஞர்கள் "அதுவும் சரிதான்; அவரது பேச்சைக் கேட்கத்தான் வந்திருக்கிரோம்; அத்துடன் கைத்தறித் துணிக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ள அவரது அறிக்கையின்படி ஆளுக்கு ஐம்பது—நூறு என்று திரட்டிக்கொண்டும் வந்திருக்கிரோம்" என்று உற்சாகத்துடன் கூறிக் கொண்டிருக்கும்போதே, கண்காட்சியைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் தலைவர்கள் மேடையை அடைந்தார்கள்.

அன்றைய விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று, தலைமை தாங்க வந்திருந்த மாநிலக் கூட்டுறவு வங்கித் தலைவர் திரு ஆர். கனகசபை அவர்களையும், விழாவைத் தொடங்கிவைக்க வந்திருந்த தொழிலமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்களையும் கூட்டத்தினருக்கு சம்பிரதாய பூர்வமாக அறிமுகப் படுத்தி அவர்களையும் வருக வருக என்று வரவேற்று, அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்களை விழாவைத் தொடங்கி வைக்குமாறும், திரு ஆர். கனகசபை அவர்களை விழாவுக்குத் தலைமை தாங்குமாறும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு எம். பி. நாச்சிமுத்து அவர்கள் கேட்டுக்கொண்டார்.

திரு இரா. நெடுஞ்செழியன் தொடங்கிவைக்க, திரு ஆர். கனகசபை தலைமை தாங்க பதின்மூன்ருவது அகில இந்தியக் கைத்தறி வார விழாவின் முதல் நாள் நிகழ்ச்சி 9—4—'67 ஞாயிறு இரவு ஏழு மணிக்கு மிகச் சிறப்பாகத் தொடங்கியது.

பின்னர் தொடர்ந்து நடைபெற்ற விழாவில் திருமதி சரோஜினி வரதப்பன், திருமதி டி. என். அனந்தநாயகி, திரு எம். பக்தவத்சலம், திரு டி. செங்கல்வராயன், திரு ஜே. சி. ரயான், உணவு அமைச்சர் திரு கே. ஏ. மதியழகன், டாக்டர் எஸ். விஜயலட்சுமி, அகில இந்திய கைத்தறி ஜவுளி விற்பனை கூட்டுறவு சங்கத்தின் தலைவர் திரு எம். சோமப்பா, பொதுப்பணித் துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி, திரு காஞ்சி மணிமொழியார், சென்னைப் பல்கலைக் கழக துணைப் பேராசிரியர் திரு ந. சஞ்சீவி, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு எஸ். மாதவன், தமிழக சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் திரு பி. ஜி. கருத்திருமன், திரு கே. விநாயகம், எம்.எல்.ஏ., தகவல் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, திரு ம. பொ. சிவஞானம், எம்.எல்.ஏ., சுகாதார அமைச்சர் திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா, திருவாசகமணி திரு கே. எம். பாலசுப்பிரமணியம், வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி, ஜவுளிக் கமிஷனர் திரு ஆர். துரைசாமி, ஐ.ஏ.எஸ்., திரு ஈ. வெ. கி. சம்பத், தமிழக மேல்சபைத் தலைவர் திரு எம். ஏ. மாணிக்கவேலு, திரு கே. பால தண்டாயுதம், முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை, சட்டமன்ற உதவி சபாநாயகர் புலவர் திரு கே. கோவிந்தன், கைத்தறி நெறியாளர் திரு பி. முராரி, ஐ.ஏ.எஸ்., டாக்டர் எம். சந்தோஷம், எம்.பி., தொழில், தொழிலாளர் வீடமைப்புத்

எனவே இந்த நாட்டின் பொருளாதாரத்தோடு கைத்தறித் தொழிலின் பொருளாதாரமும் பின்னிப் பிணைந்துள்ளது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் அகில இந்திய ரீதியில் பத்துக் கோடி ரூபாய் கைத்தறித் தொழிலுக்கென்று ஒதுக்கப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அகில இந்திய ரீதியில் 32 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. தமிழகத்தில் இரண்டாவது திட்ட காலத்தில் ஏழு கோடி ரூபாய் செலவிடப்பட்டது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அகில இந்திய ரீதியில் 34 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதில் தமிழகத்திற்கென எட்டுக் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதன் காரணமாக கைத்தறி நெசவாளி அரை வயிற்றுக் கஞ்சியாவது குடிப்பதற்கு வழியேற்பட்டுள்ளது.

ஆனுல் இன்று கைத்தறித் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியின் காரணமாக கைத்தறி நெசவுத் தொழிலாளி இருப்பதா, இறப்பதா என்ற நிலைக்கு உந்தித் தள்ளப்பட்டிருக்கிருன். ஒருகால் 1952-ம் ஆண்டிலிருந்த நிலை மீண்டும் வந்துவிடுமோ என்று அஞ்சத்தக்க வகையில் இன்று மிகப் பெரிய நெருக்கடி உருவாகியிருக்கிறது.

பஞ்சு விலை உயர்வின் காரணமாக நூல் விலை உயர்ந்து விட்டது. நூல் விலை உயர்வின் காரணமாக இன்று பல கைத்தறிகள் இயங்க முடியாமலிருக்கின்றன. அத்துடன் கைத்தறித் துணிகளின் தேக்கமும் சேர்ந்து விட்டதால் கைத்தறி நெசவாளிக்குக் கூலி கிடைப்பது அரிதாகி விட்டது.

எனவே கைத்தறி நெசவுத் தொழிலாளியின் இந்த அவல நிலையைப் போக்க மத்திய அரசாங்கத்திடம் எடுத்துக் கூறி கைத்தறிக்குக் கொடுக்கப்படும் நூலுக்குக் கலால் வரியிலிருந்து விலக்களிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று நமது மாநில அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக கூட்டுறவு நெசவாளர்களுக்கு இன்று மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ரிசர்வு பாங்கின் விதிகளில் திருத்தம் செய்யப்பட்டிருப்பதின் காரணமாக நெசவாளர்களுக்குக் கூலி கொடுக்க முடியாமல் கூட்டுறவு சங்கங்கள் திணறிக்கொண்டிருக்கின்றன. சில கூட்டுறவு சங்கங்கள் மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலை நீடிக்குமானுல் கைத்தறிக் கூட்டுறவு சங்கங்கள் அனைத்தும் மூடப்படவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும் என்பதில் ஐயமில்லை.

எனவே இந்த நெருக்கடிக்கு உடனடியாக ஒரு பரிகாரம் தேடியாக வேண்டும் என்றும் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கைத்தறித் துணி ஏற்றுமதியிலும் ஒரு சரிவு ஏற்பட்டுள்ளதைப் பற்றியும் கவனிக்கவேண்டும். 1965-ம் ஆண்டில் ரூபாய் பதினைந்து கோடிக்கு கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனுல் 1966-ம் ஆண்டில் ரூபாய் பத்தரை கோடிக்குத்தான் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. ஆகவே கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தடுத்துக் கைத்தறித் தொழிலுக்கு ஏற்பட்டுவரும் நெருக்கடிகளுக்கு அவ்வப்போது தற்காலிகமாக உதவி செய்து வருவதன்மூலம் கைத்தறித் தொழில் இன்னும் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறது. இப்படித் தற்காலிகப் பரிகாரம் செய்வதைவிட ஒரு நிரந்தரமான பரிகாரம் செய்வதற்கு அரசாங்கம் முயலவேண்டும்.

குறிப்பாக கரை போட்ட வேட்டியையும் சேலையையும் கைத்தறிக்கென்று ஒதுக்குவதுதான் கைத்தறித் தொழிலுக்கு ஒரு நிரந்தரமான பரிகாரமாகும்.

1952-ம் ஆண்டில் தமிழ்நாடு சட்டசபையில் இது பற்றிய தீர்மானமொன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. அசோக்மேத்தா கமிட்டியும் கொள்கையளவில் இதை ஒப்புக்கொண்டுள்ளது. எனவே கரைபோட்ட வேட்டியையும் சேலையையும் கைத்தறிக்கு ஒதுக்கவேண்டும் என்பதை மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தவேண்டும் என்றும் நமது அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய அமைச்சர் திரு நெடுஞ்செழியனைப் பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. அவர் நல்ல பண்புடையவர்; அன்புடையவர். பாவலர் மட்டுமல்ல; நாவலரும்கூட. கைத்தறித் தொழிலின்பால் பரிவு கொண்டவர். அவர் காலத்திலேயே கைத்தறித் தொழிலுக்கு ஒரு நிரந்தரப் பரிகாரம் காண்பார் என்ற நம்பிக்கை உண்டு. இந்த விழாவைத் தொடக்கி வைக்கவேண்டும் என்று அவரை உங்கள் சார்பிலும் எங்கள் சங்கத்தின் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த விழாவுக்குத் தலைமை தாங்கும் கனகசபை அவர் களைப் பற்றி நான் குறிப்பிடும்போது அவரால் கைத்தறி நெசவுத் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நன்மைகளை இங்கு குறிப்பிடவேண்டும். அவர் நமது மாநிலக் கூட்டுறவு பாங்கின் தலைவராக இருந்து எங்கள் சங்கத்திற்குப் பண நெருக்கடி வந்தபோதெல்லாம் பணம் கொடுத்து உதவி வருகிறார். புதிதாக ரிசர்வ் பாங்கின் விதிகள் திருத்தப்பட்டிருப்பதால் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் காரணமாக இன்று கைத்தறிக் கூட்டுறவு சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியின் கொடுமையை அவர் நன்கு உணர்ந்திருக்கிறார். எனவே அவர் ரிசர்வு பாங்காரிடம் போராடி கைத்தறித் தொழிலுக்கு உதவக் கூடிய வகையில் விதிகளைத் தளர்த்துமாறு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர் முன்பு பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தார். இப்போது சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். கூட்டுறவு இயக்கத்திற்காகவும் பாடுபட்டு வருகிறார். அவர் இந்த விழாவுக்குத் தலைமை வகிப்பது முற்றிலும் பொருத்தமாகும் என்று சொல்லத் தேவையில்லை.

* * *

மாதர் தினம்

கைத்தறி நெசவுத் தொழில் இன்றளவும் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் நமது தாய்மார்கள்தான். அவர்களது ஆதரவு மட்டும் இல்லாதுபோயிருந்தால் இந்தக் கைத்தறித் தொழில் என்றோ அழிந்து போயிருக்கும். கைத்தறியில் உற்பத்தி செய்யப்படும் துணிகளில் பாதிக்கு மேற்பட்ட துணிகளை வாங்குபவர்கள் தாய்மார்கள்தான். எனவே கைத்தறியில் பெண்களுக்குத் தேவையான துணிகளைத்தான் பாதிக்குமேல் உற்பத்தி செய்கிறார்கள்.

தொன்றுதொட்டு நம் நாட்டில் இருந்துவரும் பண்பாட்டை — கலாச்சாரத்தை — நாகரீகத்தைப் போற்றிப் பாதுகாத்துவரும் பெண்கள் கைத்தறிப் புடவைகளைத் தவிர இதர புடவைகளைக் கட்டுவதில்லை என்ற கொள்கையை இன்றளவும் உறுதியாகக் கடைப்பிடித்து வருவதன் காரணமாகத்தான் இன்று நெசவாளர்களுக்கு அரை வயிற்றுச் சாப்பாட்டிற்கேனும் வழியேற்பட்டுள்ளது.

எனவே, இந்தக் கைத்தறி வாரத்தில் ஒரு நாளை மாதர் தினமாகக் கொண்டாடி வருகிறோம். இன்று இந்த தினத்திற்கு இங்கு தலைமை வகிக்க ஒப்புக் கொண்டுள்ள திருமதி சரோஜினி வரதப்பன் அவர்களைப் பற்றி நான் அதிகம் கூறத் தேவையில்லை. அவர் பெண்கள் சமூகத்திற்காகவும் குடிசைத் தொழில் வளர்ச்சிக்காகவும் உழைத்து வருபவர்களாவார். பொதுத் தொண்டையே தனது வாழ்நாளின் குறிக்கோளாகக் கொண்டுள்ள அவர் இன்று இவ்விழாவுக்குத் தலைமை தாங்க ஒப்புக் கொண்டது எங்கள் பாக்கியமாகும். அடுத்தபடியாக திருமதி அனந்தநாயகி அவர்கள் இங்கு இன்று சிறப்புரை ஆற்ற இருக்கிறார். அவரைப் பற்றியும் நான் அதிகம் கூறத் தேவையில்லை. அவர் வழக்குரைஞராகப் பணியாற்றி வருவதுடன் மக்களுக்குத் தொண்டு செய்வதிலும் தம்மை முழுக்க முழுக்க ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். காங்கிரஸ் கட்சியில் ஒரு தலை சிறந்த பேச்சாளர் அவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் மிக அழகாகவும் தெளிவாகவும் இனிமையாகவும் பேச வல்லவர் அவர். அவர் மாதர் தினமாகிய இன்று இவ்விழாவில் சிறப்புரையாற்றுவது மிகமிகப் பொருத்தமாகும்.

* * *

பட்டு தினம்

தமிழ்நாட்டு வரலாற்றோடு பின்னிப் பிணைந்து, பண்பாட்டோடு — நாகரிகத்தோடு இரண்டறக் கலந்து, மங்களகரமான சின்னமாக விளங்கிவரும் பட்டுக்கு என்று இந்தக் கைத்தறி வாரத்தில் ஒரு நாளை ஒதுக்கிக் கொண்டாடி வருகிறோம்.

இப்போது தமிழகத்தில் பட்டு ஆடைகளை நெய்வதில் ஈடுபட்டுள்ள தறிகளின் எண்ணிக்கை சுமார் நாலாயிரமாகும். இவைகளில் இரண்டாயிரம் தறிகள் கூட்டுறவுத் துறையில் உள்ளன.

சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் பருத்தித் துணிகளோடு பட்டு, நார்ப் பட்டு, செயற்கைப் பட்டு, செயற்கைப் பட்டு நூலும் பருத்தி நூலும் கலந்து நெய்யப்பட்ட துணிகள் ஆகிய அனைத்துக்கும் இந்த விசேஷத் தள்ளுபடி வழங்கப்பட்டு வருகிறது.

பட்டு தினமாகிய இன்று பட்டுப் போன்ற உள்ளமும் பைந்தமிழ் நெஞ்சமும் கொண்ட திரு ந. சஞ்சீவி அவர்கள் சிறப்புரையாற்றுவது சாலப் பொருத்தமாகும். காந்தீயத்தில் அளவுகடந்த ஈடுபாடு கொண்டுள்ள அவர் இன்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் துணைப் பேராசிரியராகப் பணியாற்றி

வருகிறார். நல்ல தமிழிலும், அழகாக ஆங்கிலத்திலும் பேச வல்லவர். அவர் இன்று இங்கு சிறப்புரை ஆற்ற ஒப்புக் கொண்டது எங்கள் பாக்கியமாகும்.

* * *

குழந்தைகள் தினம்

சின்னஞ்சிறு பருவத்தில் குழந்தைகளின் உள்ளத்தில் பதிந்துவிடுகின்ற நல்ல பழக்கவழக்கங்கள் அவர்களது ஆயுள் பரியந்தம் நிலைத்து நிற்கும். எனவே, நம் நாட்டுக் குழந்தைகளின் உள்ளத்தில் கைத்தறி ஆர்வம் என்ற விதையை ஊன்றி விட்டால் அது முளைத்துச் செடியாகி, வளர்ந்து மரமாகி வருங்காலத்தில் கைத்தறி நெசவாளர் சமுதாயத்தைக் காக்கவல்ல சக்தியாக உருவெடுக்கும் என்ற நம்பிக்கையின் மீதுதான் இந்தக் கைத்தறி வார விழாவில் குழந்தைகள் தினம் என்று ஒரு நாளைக் கொண்டாடுகிறோம். குழந்தை உள்ளத்தில் கைத்தறி ஆர்வம் உருவாகி விட்டால் எதிர்காலத்தில் இந்தக் கைத்தறித் தொழிலுக்கு சிக்கல்கள் எதுவும் ஏற்படாது என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. இன்றைய சிறுவர்கள் நாளைய வரலாற்றை உருவாக்கும் சிற்பிகளாவார்கள். அவர்களது உள்ளங்களில் கைத்தறிக்கு ஒரு இடம் பிடித்துக் கொள்ள முடியுமானால் பின்னர் கைத்தறி நெசவாளர்களது வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டு விடும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது.

இந்த தினத்திற்குத் தலைமை தாங்க ஒப்புக்கொண்டுள்ள மதிப்பிற்குரிய அமைச்சர் திரு. எஸ். மாதவன் அவர்கள் சட்டப் படிப்புப் படித்து பட்டம் பெற்று வழக்குரைஞராக சேவை செய்து இன்று சட்டம்–கூட்டுறவுத் துறைகளின் பொறுப்பை ஏற்றுள்ளார். கைத்தறித் தொழிலுக்கு மிகப் பெரிய நெருக்கடி தோன்றிய காலமான 1952-ல் கைத்தறித் துணிகளை மூட்டை கட்டித் தலையிலும் தோளிலும் சுமந்து விற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அவர் காலத்தில் கூட்டுறவுத் துறையும் கைத்தறித் தொழிலும் நல்ல முறையில் வளர்ந்து வளம்பெற்று வாழும் என்பதில் ஐயப்பாடு கிடையாது. இன்று அவர் தலைமை தாங்க ஒப்புக்கொண்டுள்ளது நமது பாக்கியமாகும்.

மாணவர்கள் தினம்

நாட்டின் வருங்காலம் மாணவர்கள் கையில்தான் இருக்கிறது என்பதை இன்றைய பல மாறுதல்கள் மெய்ப்பித்துக் காட்டியுள்ளன. மாணவர் சமுதாயத்தின் வளர்ச்சியைப் பொருத்துத்தான் ஒரு நாட்டின் வரலாறே அமையும்.

ஒரு நாட்டின் வளர்ச்சியும் வீழ்ச்சியும், ஏற்றமும் தாழ்வும் மாணவர்களது கையில்தான் இருக்கின்றன. அவர்களது உள்ளங்களில் தூவப்படுகின்ற புரட்சி வித்துக்கள்தான் வளர்ந்து மரமாகி வருங்கால சமுதாயத்திற்கு நிழல் கொடுத்துப் பாதுகாக்கக்கூடிய சக்தியைப் பெறும். ஆகவே, அவர்களது உள்ளங்களில் கைத்தறி ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்தக் கைத்தறி வார விழாவில் ஒரு நாளை மாணவர்கள் தினமாகக் கொண்டாடுகிறோம். மாணவர்களின் ஆதரவு மட்டும் கைத்தறியின் பக்கம் சாய்ந்து விடுமானால் அதன் பிறகு இந்தக் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களது வாழ்வில் எந்தவிதமான குறைகளும் ஏற்படாது.

மாணவர் தினமாகிய இன்று தலைமை வகிக்க ஒப்புக்கொண்டுள்ள மேல் சட்டசபைத் தலைவர் திரு மாணிக்கவேலு அவர்கள் சிறந்த படிப்பாளி. சட்டப் படிப்புப் படித்தவர். எனவே அவர் இன்று தலைமை தாங்க ஒப்புக் கொண்டது மிக மிகப் பொருத்தமானதாகும்.

அடுத்தபடியாக திரு பாலதண்டாயுதம் அவர்களைப் பற்றி சென்னையில் நான் அதிகமாகக் கூறத் தேவையில்லை. அவர் சிறந்த பேச்சாளர். நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பின்னிப் பிணைந்திருக்கும் இந்தக் கைத்தறித் தொழில் பற்றி அவர் நன்கு உணர்ந்தவர். அவர் இன்று சிறப்புரை ஆற்ற ஒப்புக்கொண்டுள்ளது எங்கள் பாக்கியமாகும்.

[9—4—1967 முதல் 23—4—1967 முடிய சென்னையில் நடைபெற்ற கைத்தறி வார விழாவின்போது நிகழ்த்திய வரவேற்புரைகளிலிருந்து.]

13 வது அகில இந்திய கைத்தறிப் பொருட்காட்சி 1967

1. பொருட்காட்சியில் திருமதிகள் சரோஜினி வரதப்பன், அனந்த நாயகி ஆகியோர் மாநில சங்கத் தலைவருடன் தைக்கப்பட்ட கைத்தறிச் சட்டையைக் கண்ணுறுகின்றனர்.

2. பொருட்காட்சியில் அமைச்சர் திரு எஸ். மாதவன்.



3. சென்னிமலை சங்க பெட்ஷீட்டுகளின் எழிலைக் கண்ணுறும் அமைச்சர் திரு மு. கருணாநிதி.



1. பொருட்காட்சியில் திரு வாளர்கள் எம். பக்த வத்சலம், டி. செங்கல் வராயன், ஜே. சி. ரயான் ஆகியோர்.

2. திரு ந. சஞ்சீவி அவர்கள் சிறப்புரை யாற்றுகிருர்.



3. கைத்தறி ஆடைகளின் நேர்த்தியைக் கண்ணுறும் திருவாளர்கள் பி. ஜி. கருத்திருமன், கே. விநாயகம் ஆகியோர்.

4. கைத்தறியாடை அணியும் போட்டியில் கலந்துகொண்ட மாதர்களில் ஒரு பகுதியினர்.

நிரந்தர வாழ்வளிப்போம்!

திரு இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.,
கல்வி, தொழிலமைச்சர்.

கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாகச் சீரும் சிறப்பும் பெற்று வளர்ந்துவரும் இக்கைத்தறி வார விழா இன்றுப் பதின்மூன்றாவது ஆண்டை எட்டிப்பிடித்திருக்கிறது. இந்தியத் துணைக்கண்டம் முழுதும் நடைபெறும் இவ்விழா தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு பகுதிகளில் இன்று தொடங்குகிறது. இந்த விழாவைத் தமிழகத்தின் தலைநகரில் தொடங்கி வைக்கும் ஒரு சீரிய வாய்ப்பினை நல்கிய விழாக் குழுவினருக்கும் கூட்டுறவு சங்க இயக்குனர்களுக்கும் தலைவருக்கும் மற்றுமுள்ள நெசவாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விழாக் கொண்டாடப்படும் நோக்கத்தைப் பற்றி—அவசியத்தைப் பற்றி—அரசின் கடமை பற்றி—பொதுமக்களின் பொறுப்பு பற்றி மிகத் தெளிவாக, அழகாக, விளக்கமாக, நேர்த்தியாக நெஞ்சை உருக்கும் வகையில் நண்பர் நாச்சிமுத்து எடுத்துச் சொல்லிவிட்டார்.

கைத்தறி வாழ—வளர மத்திய அரசு என்னென்ன உதவி செய்யவேண்டும், மாநில அரசு எந்தெந்த வகையில் உதவவேண்டும், நண்பர் கனகசபை எந்த வகையில் உதவவேண்டும், பொதுமக்கள் எந்த வகையில் உதவினால் கைத்தறி நெசவாளர்கள் வாழமுடியும் என்பது பற்றியெல்லாம் மிகமிக அழகாக உருக்கமாக எடுத்து விளக்கிவிட்டார்.

நம் நாட்டில் உழவுத் தொழிலும் நெசவுத் தொழிலும் மிகப் பெரிய தொழில்களாகும். உழவுத் தொழில் உயிர் பிரச்னை. நெசவுத் தொழில் மானப் பிரச்னை. உண்ணுவதை உனக்காக உண்ணு; உடுத்துவதைப் பிறருக்காக உடுத்து என்றார்கள். உண்மையிலேயே நாம் பிறருக்காகத்தான் உடுத்துகிறோம். நாம் ஒரு உடையைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்புகூட மற்றவர்களிடம் கருத்துக் கேட்கிறோம்! இதோ பார் இது நன்றாக இருக்கிறதா? இதை நான் அணிந்து கொண்டால் நன்றாக இருக்குமா? உனக்கு இது பிடித்திருக்கிறதா?—என்றெல்லாம் மற்றவர்களைக் கேட்டுத்தான் உடுத்துகிறோம்.

ஆக, பிறருக்காக உடுத்தும் துணிகளை உற்பத்தி செய்வது நெசவுத் தொழில். இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் தொகை வேறு பல தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களின் தொகையைக் காட்டிலும் அதிகமாகும். உழவுத் தொழிலுக்கு அடுத்தபடியாக அதிக மக்கள் ஈடுபட்டுள்ள தொழில் கைத்தறி நெசவுத் தொழில்தான். இந்தியத் துணைக்கண்ட முழுவதுமுள்ள சுமார் ஒன்றரைக் கோடி பேர் இந்தத் தொழிலை நம்பி வாழுகிறார்கள். தமிழகத்தில் சுமார் ஏழு லட்சம் தறிகளை நம்பி இருபத்தெட்டு லட்சத்திற்கும் முப்பது லட்சத்திற்கும் இடையில் மக்கள் வாழுகிறார்கள்.

இந்தத் தொழிலில் இருப்பவர்கள் இதைவிட்டால் பிடித்துக்கொள்ள வேறு ஒரு தொழில் இல்லை என்ற நிலையில் இந்தத் தொழிலை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வருவாய் வரக்கூடிய வேறு பல தொழில்களுக்கு அவர்கள் மாறும் வாய்ப்பு ஏற்படுகின்ற காலம்வரை அவர்களைக் காப்பாற்றியாக வேண்டிய கடமை, பொறுப்பு நமக்கு உண்டு.

அந்த வகையில் என்னென்ன உதவிகளைச் செய்ய முடியுமோ அந்த உதவிகளையெல்லாம் அரசும் செய்து வருகிறது. மக்களும் ஆதரவு கொடுத்து வருகிறார்கள். என்றாலும் இந்தத் தொழிலுக்கு அடிக்கடி நெருக்கடிகள் ஏற்படுகின்றன.

நூல் விலை உயர்வு பற்றி நண்பர் நாச்சிமுத்து குறிப்பிட்டார். கைத்தறிக்குக் கொடுக்கப்படும் நூலுக்குக் கலால் வரியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இது மத்திய அரசின் கையிலிருக்கிறது. இது பற்றி மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி ஆவன செய்ய மாநில அரசு முயலும். நண்பர் கனகசபை ஒரு சார்பிலும் நான் ஒரு சார்பிலும் மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி ரிசர்வு பாங்கின் புதிய கட்டுத்திட்டங்களால் கைத்தறித் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை விளக்கி, மூன்று பக்கமிருந்தும் ரிசர்வு பாங்கை நெருக்கி, அதன் புதிய விதிகளைத் தளர்த்தி கைத்தறித் தொழிலுக்கு உதவத் தக்க வகையில் திருத்தி அமைக்க முயற்சி செய்வோம்.

வட்டிக்கும் வயிற்றுப் பசிக்குமுள்ள வேறுபாட்டை எடுத்து விளக்கி, பல்லாயிரக் கணக்கான நெசவாளர்களின் உயிர் பிரச்னை இதில் அடங்கி இருப்பதை எடுத்துக் கூறி ரிசர்வு பாங்கு நிர்வாகிகளுக்குப் புரியும்படி செய்து கைத்தறிக் கூட்டுறவு சங்கங்களுக்கு உதவக் கூடிய வகையில் புதிய விதிகளை உருவாக்கித்தர வேண்டிய அவசியத்தை ரிசர்வ் பாங்கு நிர்வாகிகள் உணரும்படி செய்வோம்.

அடுத்தபடியாக கைத்தறி நெசவுத் தொழிலுக்கு ஒரு நிரந்தரப் பாதுகாப்புத் தேவை. அதற்குக் கரைபோட்ட வேட்டியும் புடவையும் கைத்தறிக்கு ஒதுக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை நண்பர் நாச்சிமுத்து நினைவுபடுத்தினார்.

கைத்தறிக்கு உதவவேண்டும் என்பதில் தமிழகத்தில் கட்சி வேறுபாடு கிடையாது. அரசியலைவிட கைத்தறி வளர்ச்சியில் இங்குள்ள கட்சிகள் அனைத்துமே ஒன்றுபட்டுள்ளன. 1952-ல் எல்லாக் கட்சியினரும் ஒருமனதாக ஆதரித்து தமிழக சட்ட மன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதென்றால் கரை போட்ட வேட்டியும் புடவையும் கைத்தறிக்கே ஒதுக்கப்படவேண்டும் என்ற தீர்மானந்தான்.

எனவே கைத்தறி வாழ—வளர என்னென்ன உதவிகளைச் செய்ய வேண்டுமோ அந்த உதவிகளையெல்லாம் செய்வதில் இங்கு கட்சி வேறுபாடு என்றுமே தலைதூக்கியதில்லை. எனவே கரைபோட்ட வேட்டியும் புடவையும் கைத்தறிக்கு ஒதுக்குவதில் உள்ள சிக்கல்கள் என்ன என்பது பற்றி ஆராய்ந்து அதை மாநில அரசால் மட்டுமே செய்துவிட முடியுமா? மத்திய அரசுதான் செய்யவேண்டுமா? அல்லது இரண்டு அரசுகளுமே சேர்ந்து செய்ய வேண்டுமா என்பதையெல்லாம் பரிசீலனை செய்து இதில் விழுந்துள்ள முடிச்சை அவிழ்க்க முயற்சிக்க வேண்டும்.

இந்த முடிச்சை எங்களால் மட்டும் அவிழ்த்துவிட முடியுமா? இல்லை, டில்லியால்தான் அவிழ்க்க முடியுமா? அல்லது ஆளுக்கு ஒரு முனையைப் பிடித்து இழுத்தால் இந்த முடிச்சு அவிழ்ந்து விடுமா? அல்லது மில் முதலாளிகளிடம் புதிதாக ஒரு முடிச்சைப் போட வேண்டாம் என்று கேட்டுக்கொள்ள வேண்டுமா? என்பதை எல்லாம் பார்த்து கரைபோட்ட வேட்டியும் புடவையும் கைத்தறிக்கே ஒதுக்குவது என்ற சிக்கலுக்குத் தீர்வு காண்போம். கைத்தறித் தொழிலை நம்பியுள்ளவர்களுக்கு வாழ்வளிப்போம். அவர்களுக்கு அந்த வாழ்வு நிரந்தரமாக நீடிக்க வகை செய்வோம்.

ஏற்றுமதியில் கைத்தறித் துணிகளுக்கு வெளிநாடுகளில் இருந்து வந்த வரவேற்பு குறைந்து விட்டதாகக் கூறப்பட்டது. வண்ணம் மாறும் துணிகளுக்கு அமெரிக்காவில் கிராக்கி குறைந்து விட்டது. காரணம் அங்கு வண்ணம் மாறும் துணியான பிளீடிங் மதருஸைப் போன்ற ஒரு போலி ரகத்தை—மில் துணியை—மிகமிக மலிவான விலைக்குக் கொடுக்கிறது ஜப்பான். இதனால் வண்ணம் மாறும் துணிகளுக்கு அங்கு கிராக்கி குறைந்துவிட்டது. அத்துடன் வண்ணம் மாறும் துணிமீது அமெரிக்க மக்களுக்கு இருந்த பாஷன் மாறி விட்டதும் ஒரு காரணமாகும்.

எனவே எந்தெந்த நாட்டு மக்கள் எவ்வெப்போது எந்தெந்த பாஷன்களை விரும்புகிறார்களோ அந்தந்த விருப்பங்களுக்கு ஏற்றவாறு அந்தந்த பாஷன்களை நமது கைத்தறியில் உற்பத்தி செய்யவேண்டும். இந்த வகையில் வெளிநாடுகளில் எப்படி மார்க்கெட் பிடிப்பது என்பது பற்றியும் அரசு தன்னாலியன்ற அளவு முயலும்—உதவும்.

என்னதான் அரசு உதவினாலும் உள்நாட்டில் மக்களது ஆதரவு இல்லை

யெனில் கைத்தறியை நம்பியிருக்கும் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் வாழ முடியாது. எனவே பொதுமக்களது ஆதரவைப் பெறவேண்டியே இத்தகைய விழாக்களை ஏற்பாடு செய்து உங்களது கருத்தை கைத்தறித் துணிகளின்பால் ஈர்த்து, அதன் மூலம் உங்களிடமிருக்கும் காசுகளையும் ஈர்த்து, அந்தக் காசுகளை கைத்தறி நெசவாளர்களிடம் போய்ச் சேர வழிசெய்து, அவர்களை வாழ வைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இப்படிப்பட்ட கைத்தறி வார விழாக்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

கண்ணைப் பறிக்கும் வண்ணங்களில், கவர்ச்சி மிக்க ரகங்களில், நேர்த்தியும் தரமும் நீடித்த உழைப்பும் மனதுக்கு நிம்மதியைத் தரும் அமைப்பும் பொருந்திய விலையிலும் மலிவான கைத்தறித் துணிகள் இங்கே ஏராளமாக வந்திருக்கின்றன. அந்தத் துணிகளை வாங்கி ஆதரிப்பதன் மூலம் இந்த விழா கொண்டாடப்படும் நோக்கம் நிறைவேறும்படி செய்யவேண்டும். இங்கிருந்து வெளியே செல்லும் ஒவ்வொருவருடைய கையிலும் கைத்தறித் துணிகள் இருக்க வேண்டும். அத்துடன் பொழுது விடிந்தவுடன் பக்கத்து வீடு, எதிர்த்த வீடு அடுத்த வீட்டில் உள்ளவர்களிடம் நீங்கள் எடுத்துச் சென்ற கைத்தறித் துணிகளைக் காட்டி அவர்களையும் கைத்தறித் துணிகளை வாங்கும்படி தூண்ட வேண்டும்.

கைத்தறிக்கு நீங்கள் கொடுக்கும் பணம் இந்த மண்ணுக்குரிய மக்களின் வாழ்வுக்குப் பயன்படும். இந்த மண்ணிலே தங்கும். எனவே இந்த மண்ணுக்குரிய பணம் இந்த மண்ணுக்குரியவர்களின் வாழ்வுக்காக இந்த மண்ணிலேயே தங்கிப் பயன்படும்படியான வகையில் உங்களது பணம் செலவு செய்யப்படவேண்டும் என்றால் கைத்தறித் துணிகளை வாங்குவதன் மூலம் இது சாத்தியமாகிறது. எனவே இங்குள்ள கைத்தறித் துணிகளை தவறாமல் எல்லோரும் வாங்கிச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

போன் நெ.: 2915

உறையூர் தேவாங்க
கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், ஆர். 527
உறையூர் P.O., திருச்சி-3.

புகழ்பெற்ற உறையூர் 100-ம் நெ. புடவைகள் தயாரிப்பாளர்கள்

உடை நயம்! *கெட்டிச் சாயம்!!*

கண்கவரும் இரகங்கள்.

மொத்த, சில்லறை விற்பனை

விற்பனைக் கிளைகள்:

3/8, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மைலாப்பூர், சென்னை - 4.

தேரடிக் கடைத் தெரு,
மலைவாசல், திருச்சி.

ரிபேட்:
மொத்த விற்பனை: ரூபாய்க்கு 3 புதுக்காசுகள்.
சில்லறை விற்பனை: ரூபாய்க்கு 5 புதுக்காசுகள்.

L. K. ஜெயராமன்,
காரியதரிசி.

A. M. V. முத்துசாமி,
தலைவர்.

தொடரும் நெருக்கடி

திரு ஆர். கனகசபை, எம்.எல்.ஏ.,

கைத்தறிகளுக்கு நூல் கிடைக்கவில்லை என்ற நிலை ஏற்பட்டதால் அதிக அளவில் நூற்பாலைகள் ஏற்படுத்தப் பட்டன. இப்போது அவைகளுக்குப் பஞ்சு கிடைக்கவில்லை. அதனால் நூலின் விலையும் உயர்ந்து விட்டது. இதனால் கைத்தறிக்கு மீண்டும் ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அத்துடன் ரிசர்வ் பாங்கின் புதிய கட்டுப்பாட்டின் காரணமாகக் கைத்தறிக் கூட்டுறவு சங்கங்களுக்குப் பணக் கஷ்டம் ஏற்பட்டு, அதனால் கைத்தறித் தொழிலுக்கே ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட நெருக்கடிகளுக்கும் சோதனைகளுக்கும் இடையில்தான் கைத்தறித்தொழில் வாழவேண்டியிருக்கிறது.

இந்த நிலையில் கைத்தறித் தொழிலுக்குப் பொதுமக்களின் ஆதரவு ஒன்றுதான் பரிகாரமாக இருக்கமுடியும். கைத்தறித் தொழிலை நம்பியுள்ள நெசவாளர்களை வாழவைக்கவேண்டும் என்பதற்காக அரசாங்கமும் எவ்வளவோ வகையில் உதவி செய்துவருகிறது. இருந்தாலும் அடிக்கடி நெருக்கடிகளுக்கு இலக்காகி கைத்தறித் தொழில் திணறிக் கொண்டிருக்கிறது. அந்தச் சமயங்களிலெல்லாம் அரசாங்கம் தற்காலிகமாக உதவி வருகிறது.

ரிசர்வ் பாங்கு விதிகளால் ஏற்பட்டுள்ள பண நெருக்கடியிலிருந்து கைத்தறியை மீட்க என்னென்ன வகையில் உதவ முடியுமோ அந்தந்த வகையில் முயற்சி செய்வோம். என்றாலும் கைத்தறித் தொழிலில் பண நெருக்கடி ஏற்படாமலிருக்க வேண்டுமானால் தேக்கம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். தேக்கமேற்படாமலிருக்க வேண்டுமானால் பொதுமக்களது ஆதரவு பெருகவேண்டும்.

எப்படிச் சுற்றி வளைத்தாலும் பொது மக்களின் ஆதரவை நம்பித்தான் கைத்தறித்தொழில் வாழ முடியுமே தவிர வேறு எத்தகைய உதவியாலும் கைத்தறிக்கு ஒரு நிரந்தர வாழ்வு கிடைத்துவிடாது.

எனவே பொதுமக்கள் கைத்தறித் துணிகளை வாங்கி அந்தத் தொழிலை நம்பியுள்ள நெசவாளர்களுக்கு வாழ்வளிக்கவேண்டும்.

கைத்தறித் துணிகளுக்கு நாம் கொடுக்கும் பணம் அந்தத் தொழிலை நம்பியிருக்கும் லட்சக் கணக்கான உயிர்களைக் காப்பாற்ற உதவி செய்யப்படும் பணமாகும். இதை உணர்ந்து நீங்கள் அனைவரும் கைத்தறித் துணிகளை வாங்கி ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ★

வெள்ளாண்டிவலசை நெசவுத் தொழில் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடட், No. S. 1333,

வெள்ளாண்டிவலசை,

இடைப்பாடி P.O., சேலம் Dt.

எங்களிடம் காட்டன், டைமன்டு நூல்களைக் கொண்டு துண்டுகள், வேட்டிகள், டிசைன்ஸ் ரகங்கள் பாக்டரி முறையில் கைதேர்ந்த நெசவாளர்களால் தயார் செய்யப்படுகின்றன.

டிரேட் மார்க் "வின்கோ" லேபில் ஒட்டப்பட்ட ரகங்களையே கேட்டு வாங்குங்கள் !

பகட்டிலே மனதைப் பறிகொடுக்காதீர்!

திருமதி சரோஜினி வரதப்பன்

பதின்மூன்ருவது அகில இந்தியக் கைத்தறி வார விழாவில் மாதர்களுக்கு என்று ஒரு தினத்தை ஒதுக்கிச் சிறப்பிக்கும் இன்று இவ்விழாவுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பை எனக்கு வழங்கியுள்ள நிர்வாகிகளுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் சென்ற பல ஆண்டுகளாகக் கைத்தறிக் கலையில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் கைத்தறி வார விழாவின்போது புதிய புதிய ரகங்களையும் வகைகளையும் வண்ணங்களையும் கொண்ட விதவிதமான துணிகளைக் கொண்டுவந்து இவ்விழாவைச் சிறப்பித்து வருகிருர்கள். இந்த விழாவின் சிறப்புக்கும் வெற்றிக்கும் காரணமாக இருப்பவர்கள் பெண்கள்தான் என்று கூறினுல் அது மிகையாகாது. ஒவ்வொரு ஆண்டும் ஏராளமான பெண்கள் தங்களுக்குத் தேவையான துணிகளை இந்தப் பொருட்காட்சிக்கு வந்து வாங்கிச் செல்கின்றனர்.

சில குடும்பங்கள் திட்டமிட்ட வகையில் தங்களது குடும்பத்திற்கு ஒரு ஆண்டுக்குத் தேவையான துணிகளை வாங்கிச் செல்கின்றனர். குடும்பத்திற்குத் தேவையான துணிகளை வாங்கும் பொறுப்பு பெரும்பாலும் பெண்களிடமே இருப்பதால் இந்த விழாவில் பெண்கள் உற்சாகமாகப் பங்கெடுத்துக் கொள்கின்றனர். அந்த அளவு பெண்களைக் கவரத்தக்க முறையில் புதிய புதிய ரகங்களில் ஏராளமான கைத்தறித் துணிகள் இங்கே கிடைக்க ஏற்பாடு செய்துள்ள தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும், அதன் தலைவர் திரு நாச்சிமுத்துவுக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிருேம்.

நம்முடைய நவநாகரீகமான தேவைகளை அனுசரித்து அதற்கேற்ற வகையில் கவர்ச்சிகரமான நல்ல தரமுள்ள, நீடித்து உழைக்கக்கூடிய மலிவான துணிகளை ஒரே இடத்தில் கொண்டு வந்து வைத்து பெண்களின் வேலையை எளிதாக்கும் அளவுக்கு முன்னேறியுள்ள இந்தப் பொருட்காட்சியை ஏற்பாடு செய்துள்ள அனைவருக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிருேம். ஒவ்வொரு கடையாக ஏறி இறங்காமல் ஒரே இடத்தில் பல்வேறு ரகங்களைப் பார்த்து தேவையான ரகங்களைத் தேர்ந்தெடுக்க வசதியாக இந்தப் பொருட்காட்சி அமைந்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் இந்தப் பொருட்காட்சி சீரும் சிறப்புமாக நடைபெறுகிறது என்ருல் அதற்குக் காரணம் திரு நாச்சிமுத்து அவர்களின் அயராத உழைப்பும் முயற்சியுமே யாகும். அவரோடு ஒத்துழைத்து இந்த விழாவின் சிறப்புக்காகப் பணியாற்றும் இதர நிர்வாகிகளும் இந்த விழாவின் வெற்றிக்குக் காரணமாவார்கள்.

நம்முடைய நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் வெளிநாடுகளுக்கும் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அந்த அளவு இன்று கைத்தறி முன்னேறி இருக்கிறது என்ருல் அதற்குக் காரணம் நம்முடைய நாட்டுக் கைத்தறி நெசவாளர்களின் திறமையே யாகும். நம் நாட்டில் கைத்தறித் தொழில் ஒரு புராதனமான தொழிலாகும். இந்தத் தொழிலை நம்பி லட்சக் கணக்கான மக்கள் வாழ்கின்றனர். அவர்களது வாழ்வு வளம் பெற நம்மாலியன்ற அளவு உதவவேண்டும். பொதுமக்களது ஆதரவு இருந்தால்தான் ஒரு தொழில் வாழ—வளர முடியும். அந்தத் தொழில் வாழ்ந்தால்தான் அதை நம்பி யிருக்கும் மக்கள் வாழமுடியும். குறிப்பாக தாய்மார்களின் ஆதரவால்தான் கைத்தறித் தொழில் இன்றளவும் நம் நாட்டில் வாழ்ந்து வருகிறது.

எனவே நமது தாய்மார்கள் வெளிநாட்டுத் துணிகளின் பகட்டிலே மனத்தைப் பறி கொடுத்து விடுவார்களேயாளுல் கைத்தறிக் கலை நசிந்து விடும். அதை நம்பி வாழும் லட்சக் கணக்கான மக்களின் வாழ்வு இருண்டுவிடும். ஆகவேதான் இந்தக் கைத்தறி வார விழாவில் மாதர்களுக்கென ஒரு நாளை ஒதுக்கிச் சிறப்பிக்கிருர்கள். தாய்மார்கள்

மனது வைத்தால் நடைபெருதது ஒன்றுமில்லை. ஒரு நாட்டின் முன்னேற்றமே தாய்மார்களின் கையில்தான் இருக்கிறது. கைத்தறி நெசவாளர்களை வாழவைக்கவேண்டும் என்று தாய்மார்கள் உறுதியெடுத்துக் கொள்வார்களேயானுல் கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

கைத்தறித் துணியை அணிவது நமது சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் சுதேசிய இயக்கத்தின் ஒரு அம்சமாகும். நம்முடைய சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ள காந்திஜி கதர்—கைத்தறி திட்டத்தை மக்கள் முன்பு வைத்தார். மக்களைத் தட்டியெழுப்பி சுதேசிய உணர்வை ஊட்டி கைத்தொழிலின் சிறப்பையும் தேசிய நிர்மாணத் திட்டங்களின் அவசியத்தையும் வலியுறுத்திஞர். காந்திஜியால் ஊட்டப்பட்ட சுதேசிய உணர்வு நாளும் வளர்ந்து நம்முடைய தேவையை நாமே பூர்த்தி செய்து கொள்ளும் நிலைக்கு நாம் இன்று வளர்ந்துள்ளோம். எடுத்ததற்கெல்லாம் வெளிநாட்டை எதிர்நோக்கியிருந்த காலம் மாறி எதுவும் நம் நாட்டிலேயே கிடைக்கும் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்ருல் அதற்குக் காரணம் நம்மிடையே வளர்ந்துள்ள சுதேசிய உணர்வுதான்.

நமது சுதேசிய உணர்வை மேலும் மேலும் வளர்த்துக்கொள்வதன் மூலம் நம்முடைய நாட்டுப் பொருளாதாரத்தில் மகத்தான முன்னேற்றங்கள் ஏற்பட முடியும். எனவே வெளிப் பகட்டில் நம்முடைய மனத்தைப் பறிகொடுத்துவிடாமல் சுதேசிய உணர்வைக் குன்றவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

எனவே சுதேசிய உணர்வின் சின்னமாக விளங்கும் கைத்தறிக்கு மக்கள் மேலும் மேலும் ஆதரவு தரவேண்டும்.

இந்த வார விழாவில் நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறித் துணிகள் மட்டுமின்றி அண்டை மாநிலங்களிலிருந்தும் வித விதமான ரகங்களில் ஏராளமான துணிகள் வந்திருக்கின்றன.

இந்த விழா நம்முடைய மாநிலத்தில் மட்டுமின்றி அகில இந்தியாவிலும் பல் வேறு மாநிலங்களில் நடைபெறுகிறது. அங்கெல்லாம் நம்முடைய மாநிலத்திலிருந்தும் கைத்தறித் துணிகள் போய் இருக்கின்றன.

இந்த விழாவின் நோக்கம் வெற்றி பெற, கைத்தறி நெசவாளர்களை வாழவைக்க நம்மாலியன்றதை நாம் செய்ய வேண்டும். அதிலும் குறிப்பாகத் தாய்மார்கள் கைத்தறிக்குப் பேராதரவு தர வேண்டும்.

பகட்டான ஆடைகளில் மனதைப் பறி கொடுத்துவிடாமல் ஏழைக் கைத்தறி நெசவாளியால் உற்பத்தி செய்யப்படும் கண்ணைப் பறிக்கும் வண்ணத்தில் உள்ள—நீடித்து உழைக்கக்கூடிய கைத்தறித் துணிகளை வாங்கவேண்டும்.

இன்று கைத்தறித் தொழிலில் உள்ள ஒரு பெரிய சிக்கல் தேக்கம் என்பது தான். கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பதால் நெசவாளர்களுக்கு வேலை கிடைக்கவில்லை, வேலை கிடைத்தாலும் கூலி கிடைக்கவில்லை என்ற ஒரு நிலை ஏற்பட நாம் அனுமதிக்கக் கூடாது.

எனவே இந்த விழாவுக்கு வந்துள்ள பொதுமக்கள், அதிலும் குறிப்பாக பெண்கள் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவு இங்குள்ள கைத்தறித் துணிகளை வாங்கிச் சென்று மற்றவர்களுக்கும் காட்டி அவர்களையும் இவ் விழாவுக்கு அழைத்துவந்து கைத்தறித் துணிகளை வாங்கிச் செல்லும்படி வற்புறுத்த வேண்டும்.

ஆசைக்கும், தேவைக்கும் ஏற்ற உயர்தர கைத்தறி ஆடைகள்!

20-ம் நெம்பர் முதல் 100-ம் நெம்பர் வரை எல்லா ரக ஜவுளிகளும் எங்களிடம் கிடைக்கும்.

விபரங்களுக்கு :

வாரியங்காவல் முதலியார் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், நெ. ஆர். 743

வாரியங்காவல் போஸ்டு, (வழி) உடையார்பாளையம் (திருச்சி மாவட்டம்)

குறிப்பு : *எங்கள் சங்க ஜவுளிகள் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க விற்பனை நிலையங்களிலும், கீழ்க்கண்ட எங்கள் கிளை விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்:*

(1) தபாலாபீஸ் சமீபம், ஜெயங்கொண்டம்.
(2) 2396, மானோஜியப்பா தெரு, தஞ்சாவூர்.
(3) 95-A, நேதாஜி ரோடு, திருவாரூர்.

பெண்களுக்குப் பெருமைதரும் கைத்தறி

திருமதி டி. என். அனந்தநாயகி, பி.ஏ., பி.எல்.,

ஆண்டு தோறும் நடைபெற்றுவரும் இந்த விழாவில் பெண்களுக்கென்று ஒரு தினத்தை ஒதுக்கிச் சிறப்பித்து வருகிறார்கள். பொதுவாக பெண்களாகிய நாம்தான் இந்த விழாவின் பயனை அனுபவிக்கின்றோம். காரணம் பெண்கள்தான் கைத்தறித் துணிகளை வாங்கி ஆதரிப்பதில் முன்னணியில் இருக்கிறார்கள். பெண்களிடம்தான் குடும்பத்திற்குத் தேவையான துணிமணிகளை வாங்கும் பொறுப்பும் இருக்கிறது.

பெண்கள் ஒரு கடைக்கு நான்கு கடையாக ஏறி இறங்கி நல்ல துணியாகப் பார்த்து புதிய ரகத்தைத் தேடிப் பிடித்து எடுப்பதில் கெட்டிக்காரர்கள். பொதுவாகவே ஆண்களுக்குப் பெண்களுடன் கடைக்கு வருவது என்றாலே பயம். அதுவும் துணிக் கடைகளுக்கு அவர்களுடன் போவதென்றால் ஆண்களுக்குப் பல வழிகளில் சங்கடம் என்று உணருகிறார்கள். ஒருகால் போட்ட திட்டத்திற்கு மேல் பணம் ஓடிப்போய் விடுமோ, அதனால் பூசல் ஏற்பட்டு விடுமோ என்ற பயம் ஆண்களுக்கு. எனவே, புத்திசாலியான ஆண்கள் பெண்களிடம் பணத்தைக் கொடுத்து விருப்பமான துணியை வாங்கிக் கொள்ளும்படி சொல்லிவிடுகிறார்கள். எனக்கேன் அந்த வம்பு? நீயே போய் பார்த்து உனக்கு விருப்பமான துணியை எடுத்துக் கொள் என்று அனுப்பிவிடுகிறார்கள். எனவே, பெண்கள்தான் துணி வாங்கும் பொறுப்பை வகித்து வருகிறார்கள்.

கைத்தறியைக் காக்கும் பெருமை பெண்களைத்தான் சாரும் என்று கூறினால் அது மிகையாகாது. அவர்கள் கைத்தறித்துணியைத்தவிர வேறு துணிகளை வாங்குவது என்பது அரிதாகும். பெண்களிடம் இன்னும் பழைய பண்புகள் இருந்து வருவதால்தான் கைத்தறித் தொழில் வாழ்ந்துகொண்டிருக்கிறது. பெண்களிடம் எத்தனைப் புடவைகள் இருந்தாலும் புதிதாக ஒரு ரகம் வந்துவிட்டால் அந்த ரகத்தில் நான்கைந்து புடவைகளை வாங்கினால் அவர்களுக்கு மனம் நிறைவு பெறும். மற்றவர்களிடம் இல்லாத ஒரு புதிய ரகப் புடவை தன்னிடம் இருக்கிறது என்று பெருமைப் படுவது பெண்களின் இயல்பு. புதிதாக ஒரு புடவையை எடுத்துக்கொண்டுவந்தால் அந்தப் புடவையை அடுத்த வீட்டிலுள்ளவர்களிடமும் எதிர் வீட்டிலுள்ளவர்களிடமும் காட்டிப் பெருமைப்படுவது பெண்களின் இயல்பு. அப்போதும் அடுத்த வீட்டு அம்புஜத்திடம் உள்ள புடவையைப்போல நம்மிடம் இல்லையே என்ற குறை இருந்துகொண்டிருக்கும். எப்படியாவது அந்தமாதிரி ஒரு புடவையை வாங்கினால்தான் மனம் நிம்மதியடையும்.

நம் காலத்திலேயே நாம் அனுபவிக்க வேண்டியவைகளையெல்லாம் அனுபவித்து விடவேண்டும். நாம் கண்ணை மூடிவிட்ட பிறகு நம்முடைய பிள்ளைகள் எப்படியிருப்பார்கள் என்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கப் போவதில்லை. வெளிநாடுகளில் உள்ள மக்களிடம் இந்த எண்ணம் மேலோங்கி நிற்கிறது. அவர்கள் நாம் இருக்கும் வரை அனுபவிக்க வேண்டியவைகளை யெல்லாம் அனுபவித்துவிடுவோம் என்று எண்ணி

நல்ல துணிமணிகளை வாங்கி அணிகிருர்கள். நாங்கள் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள மக்களிடம் இந்தப் பண்பு இருப்பதைக் கண்டோம். அங்குள்ள மக்களுக்குத் தாங்கள் இறந்துவிட்ட பிறகு தங்களது குழந்தை குட்டிகள் இருந்து அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. அதுபோலவே நாமும் உயிரோடு இருக்கும் வரை நாம் அனுபவிக்கவேண்டியவைகளையெல்லாம் அனுபவித்துவிட வேண்டும். நமது ஆசைதீர துணிமணிகளை வாங்கி அணிந்து மன நிறைவு கொள்ளவேண்டும். அப்படி வாங்கும் துணிகள் கைத்தறித் துணிகளாகவே இருக்கவேண்டும். அதன் மூலம் நாமும் இன்பம் அனுபவிப்பதுடன் கைத்தறி நெசவுத் தொழிலை நம்பியிருக்கின்ற லட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்வளித்தவர்களுமாவோம்.

இந்த நாடு நாகரீகத்தில் இந்த உலகத்திலுள்ள மற்ற நாடுகளைவிட மிக மிக முன்னணியிலிருந்த நாடு. குறிப்பாக ஆடை நெய்யும் கலையில் உலக நாடுகளையெல்லாம் மிஞ்சி நின்ற நாடு. இந்த உலகத்திலிருக்கும் மற்ற நாடுகள் கைத்தறியால் நெய்யப்பட்ட துணிகளை நம் நாட்டிலிருந்து வாங்கி அதற்குப் பதிலாகப் பொன்னும் மணியும் வாரிக் கொடுத்தன. அவுரங்கசீப் தன்னுடைய கை விரலில் அணிந்திருந்த ஒரு மோதிரத்தில் நூற்றுக்கணக்கான கெஜமுள்ள ஒரு புடவையை அடக்கிக் காட்டினுர். அவ்வளவு மென்மையான மஸ்லின் என்ற துணியை நெய்த பெருமை நம் நாட்டுக்கு மட்டுமே உண்டு.

அப்படிப்பட்ட நம் நாடு, வந்தவர்களுக்கெல்லாம் சந்தையாக—லாப வேட்டைக் காடாக மாறி, இங்கிருந்து பருத்தியை லங்காஷயருக்கு அனுப்பி அங்கிருந்து வந்த துணியை உடுத்திக் கொள்ளவேண்டிய அவல நிலைக்குத் தாழ்ந்துவிட்டது. நம்முடைய மானத்தைக் காக்க பிற நாட்டை எதிர்பார்த்துக் காத்திருக்கவேண்டிய மானங்கெட்ட நிலையிலிருந்த நம்மைத் தட்டியெழுப்பி சுதேசிய உணர்வை ஊட்டினுர் மகாத்மா காந்தி. அவர் மட்டும் சுதேசிய உணர்வைப் பரப்பாமலிருந்திருந்தால் இன்று உணவுக்காகப் பிற நாட்டை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் நாம் உடைக்காகவும் பிற நாட்டை எதிர்பார்த்துக் காத்திருக்கவேண்டிய நிலையில் இருப்போம். உணவுக்கே நம்மிடம் பணமில்லாதபோது உடைக்குப் பணம் கொடுத்து வாங்க நாம் எங்கே போவது?

எந்த நாடு எடுத்ததற்கெல்லாம் பிற நாடுகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்ததோ அந்த நாடு பிற நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைக்கு உயர்ந்துள்ளதென்ருல் அதற்குக் காரணம் நம் நாட்டில் ஏற்பட்ட சுதேசிய உணர்வுதான். எந்த ஒரு நாட்டில் சுதேசிய உணர்ச்சி மேலோங்கி நிற்கிறதோ அந்த நாடு சுயதேவைப் பூர்த்தியில் அசுர வேகத்தில் முன்னேறிவிடும்.

நம் நாட்டில் எண்ணற்ற தொழில்கள் ஏற்பட்டிருந்தாலும், உற்பத்திகள் நடைபெற்றுக்கொண்டிருந்தாலும், அவைகளையெல்லாம்விட கைத்தறித் தொழிலில்தான் உற்பத்தி தேங்கிவிடுகிறது என்ற குரலைக் கேட்க முடிகிறது. கைத்தறித் துணிகள் தேங்கிவிட்டால் அதை நம்பியிருக்கும் நெசவாளியின் நிலை என்ன?

அமெரிக்கா போன்ற வெளி நாடுகளிலெல்லாம் நமது கைத்தறித் துணிகளுக்கு மகத்தான வரவேற்பு இருக்கும்போது உள் நாட்டில் அதற்கு ஆதரவு குறைகிறது என்ருல் எவ்வளவு கேவலம்?

அமெரிக்காவிலுள்ள பெண்களுக்கு சேலைகட்டவேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்திய பெருமை நம் நாட்டுக் கைத்தறிகளுக்கு மட்டுமே உண்டு. நம் நாட்டுக் கைத்தறிப் புடவைகளின் நேர்த்தியைக் கண்டு அவர்கள் இந்தச் சேலைகளைக் கட்டிக்கொள்வது எப்படி என்று அறிந்துகொள்வதற்காக அங்குள்ள இந்தியப் பெண்களை அணுகி உதவி கேட்கிருர்கள். சேலை கட்டுவது எப்படி என்று அட்டைகளில் விளக்கிப் படங்கள் போட்டு அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. நாங்கள் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள பெண்கள் எங்களிடம் வந்து சேலை கட்டிப் பழக்கி விடும்படிக் கேட்டுக்கொண்டார்கள். நாங்கள் எவ்வளவோ தூரம் சொல்லிக்கொடுத்தும் அந்தப் பெண்களுக்கு கை மடங்கவில்லை. இருந்தாலும் தாறுமாருக வேனும் சுற்றிக் கொண்டு பெருமை கொள்ளுகிருர்கள். அந்த அளவு அந்தப் பெண்களிடையே ஆவலைத் தூண்டிவிட்ட நமது கைத்தறி நெசவாளர்களின் கலைத் திறனும் கைவண்ணமும் நம்முடைய அனுதாபத்தை எதிர்நோக்கியிருக்கிறது என்ருல் இது மிகவும் வருந்தத் தக்கதாகும். நமது ஆதரவு ஒரு கடமையாக இருக்க

வேண்டுமே தவிர, நம்முடைய அனுதாபத்தை எதிர்பார்த்து அவர்கள் காத்துக்கொண்டிருக்கக்கூடாது. அவர்களை ஆதரிக்கவேண்டியது நமது தலையாய கடமையாகும்.

அந்நியச் சந்தையில் போட்டியிட்டு வெற்றி பெறக்கூடிய வகையில் விதவிதமான ரகங்கள் கைத்தறியில உற்பத்தி செய்யப்படுகின்றன. தான் கட்டியிருக்கும் சேலை ஒரு பக்கம ஒரு கரை மற்றொரு பக்கம் ஒரு கரை. ஒரே சேலையில் இரண்டு வகை. ஒரு முறை ஒரு கரையைக் கீழே விட்டுக் கட்டிக்கொண்டால் மறுமுறை மற்றொரு கரையைக் கீழே விட்டுக் கட்டிக்கொள்ளலாம். இரண்டு சேலைகளின் பலனை ஒரே சேலை தருகிறது.

உழைக்கக்கூடிய தரத்திலும் கைத்தறித் துணிகள் மற்றெல்லாத் துணிகளையும்விட உயர்ந்துள்ளது. ஒரு தலையணை உறை ஆலைத் துணியான மல்லிலோ லாங்கிளாத்திலோ தைத்துப் போட்டால் ஆறு மாதத்தில் கிழிந்துவிடுகிறது. கைத்தறித் துணியில ஒரு தலையணை உறை தைத்துப் போட்டுவிடுவோமானல் ஆயுள் உள்ள வரை அது கிழிவதில்லை. இப்படிப்பட்ட வகையில் காசுக்குக் காசும் மீதியாகிறது. செலவும் சிக்கனமாகிறது.

நீடித்த உழைப்பும் நேர்த்தியும் மனதுக்கு நிம்மதியும் தருகின்ற கைத்தறித் துணிகளை வாங்குவதன்மூலம் அந்தத் தொழிலை நம்பியுள்ள மக்களையும் நாம் வாழ வைத்தவர்களாகிறோம்.

ஏற்றுமதி வர்த்தகத்தில் ஏற்றம் இறக்கம் என்பது சாதாரணம். நமது கைத்தறித் துணிகளுக்கு அமெரிக்காவில் கிராக்கி அதிகரித்தால் இங்கே துணி தேங்காது. கிராக்கி குறைந்தால் இங்கே தேங்கிவிடும். இங்கு கைத்தறித் துணிகள் தேங்குமானல் கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு பயங்கரச் சோதனை ஏற்படும். இந்த நிலையை நாம் அனுமதிக்கக்கூடாது. நம்முடைய ஆதரவு அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும். வெளி நாட்டு வர்த்தகம் அவர்களது வாழ்வை வளப்படுத்த வேண்டும். அந்த அளவு நமது ஆதரவு பெருக வேண்டும் என்று விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். ★

ஸ்தாபிதம் : 1947 — போன் நெ. 694

திருச்சிராப்பள்ளி கைத்தறி நெசவுத் தொழிலாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சொசைட்டி லிமிடெட், R. 784,

உறையூர் P.O., திருச்சி — 3.

TRADE MARK

REGD.
No. 193749

★ தரத்தில் உயர்ந்தது !

★ கலர்களில் சிறந்தது !

★ கவர்ச்சி மிக்கது !

வண்ணக் கலர்கள் ! — கண்கவர் ரகங்கள் !

உறையூர் 100 நெ. "கோர்வைபானை" புடவைகள்

எங்கள் புடவை ரகங்கள் (10, 9, 8, 7, 6 5½, 5 கெஜம்) தமிழகத்திலும், மற்ற மாநிலங்களிலும "கோ-ஆப்டெக்ஸ்" விற்பனை நிலையங்களிலும, கைத்தறி மாளிகைகளிலும் விற்பனையாகின்றன.

தமிழகம், ஆந்திரம், மைசூர் மாநில வியாபாரிகளும், மற்ற மாநில வியாபாரிகளும் வருடம் முழுவதும் எங்களிடம் வாங்கிப் பயன் பெறுகிறார்கள்.

உங்கள் தேவைகளுக்கும் எங்கள் புடவை ரகங்களை வாங்கிப் பயன பெறுங்கள். வாடிக்கைக்காரர்களுக்கும், பொதுமக்களுக்கும் எங்கள் நன்றி !

சில்லறை விற்பனை நிலையம் : 53, மலைவாசல், திருச்சி - 2.

P. மகாலிங்கம், தலைவர்.

வேறு தொழிலுக்குப் போவது நாட்டுக்கு நல்லதுதானா?

திரு எம். பக்தவத்சலம், பி.ஏ. பி.எல்.,

கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக இந்தக் கைத்தறி வார விழா நடைபெற்று வருகிறது அதுபோலவே இந்த ஆண்டும் பதின்மூன்ருவது கைத்தறி வார விழா நடைபெறுகிறது. இந்த விழா மிகச் சிறப்பாக நாடெங்கும் கொண்டாடப்பட்டுவருகிறது. வேறு பல திருவிழாக்களைப் போலவே இந்த விழாவும் நமது வாழ்க்கையில் ஒரு பிரிக்க முடியாத அம்சமாக மாறிவிட்டது.

நாடெங்கும் கொண்டாடப்பட்டு வரும் வேறுபல திருவிழாக்களுக்கு மக்கள் எப்படிக் கூடுகிருர்களோ அதுபோலவே இந்தத் திருவிழாவுக்கும் மக்கள் ஏராளமாகக் கூடுகிருர்கள்.

காஞ்சிபுரம், திருவொற்றியூர், மைலாப்பூர் ஆகிய இடங்களில் நடைபெறும் திருவிழாக்களைப் போலவே ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் ஒரு திருவிழாவாகக் கைத்தறி வார விழா மாறிவிட்டது. அந்தத் திருவிழாக்களெல்லாம் பல நூற்ருண்டுகளாக நடைபெற்று வருபவை அந்த விழாக்களில் ஒவ்வொரு ஆண்டும் மக்கள் கூடுகிருர்கள். சென்ற ஆண்டு பார்த்த திருவிழா தானே! இந்த ஆண்டு போகாவிட்டால் என்ன என்று மக்கள் எண்ணுவதில்லை. அதுபோலவே இந்தக் கைத்தறி வார விழாக் கொண்டாடத் தொடங்கிப் பன்னிரெண்டு ஆண்டுகளே ஆகியிருந்தாலும் ஒவ்வொரு ஆண்டும் லட்சக் கணக்கான மக்கள இந்த விழாவில் கூடுகிருர்கள். தொன்றுதொட்டு நடைபெற்று வரும் மற்ற திருவிழாக்களைப் போலவே இந்த திருவிழாவும் ஆண்டுக்காண்டு சிறப்புப் பெறுகிறது.

சென்ற ஆண்டு இந்த விழாவுக்கு வந்து கைத்தறித் துணிகளை வாங்கிச் சென்றவர்கள், அந்தத் துணிகளின் அருமையை உணர்ந்து அனுபவித்தவர்கள் இந்த ஆண்டும் வருகின்றனர்.

கடந்த இரண்டு நாட்களில் மூன்று லட்சம ருபாய்க்குத் துணிகள் விற்பனையாகி உள்ளது என்று கேட்டபோது நான் மிகமிக மகிழ்ச்சி அடைந்தேன். இந்த விற்பனை சென்ற ஆண்டைக் காட்டிலும் அதிகமாகும்.

மனிதனுக்கு இரண்டு பொருட்கள் மிகவும் அவசியமாகும். ஒன்று உண்ண உணவு, இரண்டு உடுக்க உடை. உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வது விவசாயம். உடைத் தேவையைப் பூர்த்தி செய்வது நெசவு. உணவுக்கு அடுத்தபடியாக உடைத் தேவை இரண்டாவது இடத்தை வகிப்பது போலவே விவசாயத்திற்கு அடுத்தபடியாக நெசவு இரண்டாவது இடத்தை வகிக்கிறது. விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகத் தொகையினர் ஈடுபட்டிருக்கும் தொழில் கைத்தறி நெசவுத் தொழில் ஆகும்.

எனவே இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களின் வாழ்வு உயர்வு பெறவேண்டும் என்பதற்காக அரசாங்கம் பல வகையிலும் உதவி செய்துவருகிறது. கைத்தறித் தொழிலுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும் என்பதற்காக மத்திய—மாநில அரசாங்கங்கள் தனிக் கவனம் செலுத்தி வருகின்றன.

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு இந்த விழாவுக்கு ஒரு தனிச் சிறப்பு ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு இங்கு ஸான்போரைஸ்டு துணிகளும் காலண்டர் செய்யப்பட்ட துணிகளும் வந்துள்ளன. ஸான்போரைஸ்டும், மெர்ஸிரைஸ்டும் மில் துணிகளுக்குத் தான் என்று இருந்தது. ஆனல் இப்போது கைத்தறியிலும் அம்மாதிரியான சுருங்காத் தன்மை வாய்ந்த பளபளப்பான துணிகளைத் தயாரிக்க முடியும் என்பதை அறிந்து கொண்டோம். இந்தத் துணிகள் இங்கேயே ஈரோட்டில் பக்குவப்படுத்தப் படுகின்றன.

கைத்தறித் துணிகளால் மில் துணிகளோடு போட்டியிட முடியுமா என்று சந்தேகம். ஆனல் மில் துணிகளைவிட பளபளப்பாக, கவர்ச்சிகரமாக, நல்ல தரமுடன் நீடித்து உழைக்கக்கூடிய வகையில் விதவிதமான ரகங்களை கைத்தறியில் உற்பத்தி செய்ய முடியும் என்பதை அறிகிருேம். விலையில்கூட இது மில் துணியைவிடக் குறைவுதான். அற்புதமான வேலைப்பாடுகளுடன் கூடிய துணிகளை மலிவான விலைக்குக் கொடுக்கக்

கூடிய ஒரு நிலையிலும் கைத்தறித் தொழிலுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது. கைத்தறி நெசவாளர்களின் கவலை நீங்கியபாடில்லை. அவர்கள் அவதிக்குக் காரணம் என்ன என்பதுகூட நமக்குப் புரியாமல் போய்விடுகிறது.

உலகத்தில் எதற்கும் போட்டி இருக்கிறது. அந்தப் போட்டியைச் சமாளிக்க நாம் நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும். கைத்தறியில் ஓரளவு திறமையும் இருக்கிறது. அந்தத் திறமையைக்கொண்டு மட்டுமே போட்டியிட முடியும் என்பதும் கடினம்தான். எனினும் போட்டி என்பதும் தவிர்க்க முடியாததுதான். அந்தப் போட்டியைச் சமாளித்துத்தான் ஆகவேண்டும்.

கூட்டுறவின் மூலம் போட்டியைச் சமாளிக்கலாம். கைத்தறிக்கு எவ்வளவோ சலுகைகள் செய்யலாம். என்ருலும் சலுகை என்பது தற்காலிகமானதாகத்தான் இருக்கும். கைத்தறித் தொழில் தனது சொந்தத் திறமையினுலும் வலிமையினுலும்தான் போட்டியைச் சமாளித்தாகவேண்டும். கூட்டுறவு நிறுவனங்கள் மற்ற நிறுவனங்களோடு போட்டியிடத் தயாராகவேண்டும். கூட்டுறவு ஒரு உலக இயக்கம். கூட்டுறவுத் தத்துவத்தை உலக மக்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள். என்ருலும் இந்தியாவில் கூட்டுறவின் வளர்ச்சி போதுமானதாக இல்லை.

தமிழ் நாட்டிலும் மற்றும் சில ராஜ்யங்களிலும்தான் கூட்டுறவு வெற்றிகரமாக நடந்து வருகிறது. குறிப்பாக கூட்டுறவு இயக்கத்தைச் சீரிய முறையில் நடத்திவரும் பெருமை தமிழ் நாட்டுக்கு உண்டு. கூட்டுறவுத் தத்துவத்தைப் பரப்பி வருகின்ற பெருமையும், எல்லாப் பகுதிகளுக்கும் கூட்டுறவை விரிவுபடுத்திய பெருமையும் தமிழ் நாட்டுக்கு உண்டு. அதிலும் குறிப்பாக அதிக அளவில் கைத்தறித் தொழிலில் கூட்டுறவு வெற்றியடைந்துள்ளது. தமிழ் நாட்டில்தான் கூட்டுறவின் மூலமாக கைத்தறித் தொழிலுக்கு அதிக நன்மை ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு, மகாராஷ்டிரம், ஆந்திரா ஆகிய ராஜ்யங்களில்தான் கூட்டுறவு வெற்றியடைந்துள்ளது என்று கூட்டுறவு அமைச்சர்கள் மகாநாட்டில் காலஞ் சென்ற பிரதமர் நேருஜி கூறியதைக்கேட்ட நான் பெருமிதம் கொண்டேன். அந்த அளவு தமிழ்நாட்டில் கூட்டுறவின் வளர்ச்சியில் அரசாங்கம் பிரத்தியேக கவனம் செலுத்திவருகிறது.

கூட்டுறவின் மூலம் கைத்தறியில் ரக ரகமான துணிகளை உற்பத்தி செய்து, ஏற்றுமதிக்கான முயற்சிகளை மேற்கொண்டு, பலவகையிலும் சலுகைகள் பெற்றும் கைத்தறி நெசவாளர்களின் துயரம் நீங்கவில்லையே என்று நினைத்துப் பார்க்கும்போது சங்கடமாக இருக்கிறது.

அரசாங்கம் பலவகையில் கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர்களுக்காக உதவி வருகிறது. கூட்டுறவில் இல்லாதார்களுக்கும் உதவுகிறது. இப்படி எந்தெந்த வகையில் உதவ வேண்டுமோ அந்தந்த வகையிலெல்லாம் அரசாங்கம் உதவி வருகிறது. இருந்தும் கைத்தறி நெசவாளர்கள் கஷ்டம் தீரவில்லையென்ருல் என்ன செய்வது?

இந்தத் தொழிலில் உள்ளவர்கள் வேறு தொழிலுக்குப் போகலாமே என்கிருர்கள். எந்தத் தொழிலும் செய்ய மனிதனுக்கு உரிமையுண்டு. இந்தத் தொழிலில் உள்ளவர்கள் இதைவிட நல்ல வருவாய் கிடைக்கக்கூடிய வேறு தொழிலுக்குப் போவது அவர்களுக்கு நல்லதுதான். ஆனுல் அது இந்தத தொழிலுக்கு நல்லதல்ல. நாட்டுக்கும் நல்லதல்ல. இந்தத் தொழிலில் இருப்பவர்கள் மனம் வெறுத்து வேறு தொழிலுக்குப் போவது என்பது நினைத்துப் பார்க்கமுடியாத ஒரு நெருக்கடியாகும்.

பெரிய பெரிய இயந்திரங்களைக் கொண்டு இந்தத் தொழிலைச் செய்யலாமே என்று வெளியிலிருப்பவர்கள் சொல்கிருர்கள். நம் நாட்டின் பொருளாதாரத்தை உணர்ந்தால் இப்படிச் சொல்லமாட்டார்கள். இயந்திரத்தால் செய்யப்பட்ட பொருள்களைக் காட்டிலும் கையினுல் செய்யப்படும் பொருளுக்கு என்றும் தனி மதிப்பு இருக்கிறது. இன்று அமெரிக்காவில்கூட இயந்திரத்தினுல் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை விட, பொருட்களை விட கையினுல் செய்யப்பட்ட பொருட்களை மதித்து வாங்குகிருர்கள்.

நாம் இயந்திரத்திற்கு அடிமைகளாகி விடக்கூடாது. கைத்தொழிலைப் போற்றி பாதுகாக்க வேண்டும். கைத்தறித் தொழிலை நம்பியுள்ளவர்களது வாழ்வில் சுபிட்சம் ஏற்பட வேண்டும். அதற்காக நம்மால் இயன்ற அளவுக்குக் கைத்தறி துணிகளை வாங்கி ஆதரிக்க வேண்டும். இந்த விழாவில் மட்டுமின்றி எப்போதுமே எல்லோருமே கைத்தறித் துணிகளை முடிந்த அளவு வாங்குவது என்று முடிவு செய்து கொள்ளவேண்டும்.

தேக்கத்திற்குக் காரணம்

திரு டி. செங்கல்வராயன்,
பி.ஏ., எல்.எல்.பி., எம்.பி.,

கைத்தறிப் பிரச்னை ஒரு தேசியப் பிரச்னை—சமுதாயப் பிரச்னை. விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிக மக்கள் ஈடுபட்டுள்ள ஒரு தொழில் கைத்தறித் தொழில். இந்தத் தொழில் வளர வேண்டும், வாழ வேண்டும் என்பதில் இங்கு கட்சி வேறுபாடு இல்லை. எந்த அரசியல் கட்சியும் இந்தப் பிரச்னையில் வேறுபட முடியாது. இது ஒரு மகத்தான தேசியப் பிரச்னையாகும். இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதில் எல்லோரும் ஒன்றுபட்டுச் செயல்படவேண்டும்.

மகாத்மா காந்திஜி சுதந்திரப் போராட்ட காலத்தில் நமக்குச் சுதேசிய உணர்வை ஊட்டியிருக்காவிட்டால், கதருக்கும் கைத்தறிக்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்காவிட்டால் இன்று கைத்தறித் தொழில் அடியோடு நசிந்து போயிருக்கும். இன்று இந்த அளவு கைத்தறித் தொழில் சிறப்புடன் விளங்குகிறது என்றால், பொதுமக்களது ஆதரவைப் பெற்றிருக்கிறது என்றால் தேசிய நிர்மாணத் திட்டத்தில், சுதந்திரப் போராட்டத் திட்டத்தில் கதரும் கைத்தறியும் இடம் பெற்றதுதான்.

கைத்தறியையும் கதரையும் ஊக்குவிப்பதில் ஒரு பெரிய பொருளாதாரத் திட்டம் அடங்கியிருக்கிறது. ஒன்று நம்முடைய பணம் அந்நிய நாட்டுக்குச் செல்லாது. இரண்டு உள்நாட்டிலும் ஒரே இடத்தில் சென்று குவியாது. கைத்தறித் துணிகளை வாங்குவதன் மூலம் அந்தப் பணம் பரவலாகச் சென்று மக்களை அடைகிறது.

கைத்தறித் தொழில் பழம்பெரும் சிறப்புப் பெற்ற ஒரு கலைத் தொழிலாகும். இந்தத் தொழில் நசிந்துபோவது நமக்கும் நல்லதல்ல; நாட்டுக்கும் நல்லதல்ல. இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களின் எண்ணிக்கைக்காகமட்டுமல்லாமல் இந்தத் தொழிலுக்கு உள்ள கலைச் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் இத்தொழிலை ஆதரிப்பது நமது கடமையாகும். இந்தத் தொழில் கேவலம் அரசாங்கத்தின் உதவி பெற்றுத்தான் வாழ வேண்டும் என்ற ஒரு நிலையிருந்தால் இந்தத் தொழில் வாழவே முடியாது. எந்தத் தொழிலும் அரசாங்கத்தின் உதவி பெற்று நீண்ட நாள் நிலைத்திருக்க முடியாது.

எனவே கைத்தறித் தொழிலை ஒரு சமுதாயப் பிரச்னையாக மதித்து, அதற்கு பொது மக்கள் ஆதரவு கொடுக்க வேண்டும். அந்த அளவு மக்களது ஆதரவைப் பெற்றிருப்பதின் காரணமாகத்தான் இன்றளவும் கைத்தறி வாழ்ந்து வருகிறது; வளர்ந்து கொண்டும் வருகிறது. நாளுக்கு நாள் ஆண்டுக்கு ஆண்டு இந்தக் கைத்தறி வார விழாவின் சிறப்பு ஓங்கிய வண்ணம் இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் பொது மக்களது ஆதரவே அல்லாமல் அரசாங்கத்தின் உதவி மட்டும் ஆகாது.

உள்நாட்டில் மக்களது ஆதரவைப் பெற்றுள்ள கைத்தறி வெளி நாடுகளிலும் உள்ள மக்களைக் கவரத்தக்க வகையில் முன்னேறியுள்ளது. நம்முடைய நாட்டில் நெய்யப்படும் கைத்தறித் துணிகள் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், ஆப்ரிக்க நாடுகள் ஆகிய இடங்களிலெல்லாம் நல்ல செல்வாக்குப் பெற்றிருக்கின்றன. அந்த செல்வாக்கை மேலும் மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

நமது திறமையின் மூலமும் நாணயத்தின் மூலமும் அந்தச் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிஷமும் மாறிவரும் பேஷன்களைக் கண்டு அதற்கேற்றவாறு கைத்தறியிலும் அடிக்கடி பேஷன்களை மாற்றிக்கொண்டே இருக்க வேண்டும்,

கடந்த ஒரு வார காலமாக வெளி நாடுகளில் நமது கைத்தறித் துணிகளை

தேவைக் குறைவுதானா?

பற்றிய விளம்பரம் மிகப் பிரமாண்டமான அளவில் செய்யப்பட்டு வருகிறது. அந்த விளம்பரங்களைப் பார்த்து அங்குள்ள மக்கள் பிரமித்துப் போயிருக்கிறார்கள். அவர்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு பேஷன்களும் தரமும் இருந்தால் மட்டும் போதும். நமது கைத்தறித் துணிகளோடு வேறு நாட்டுத் துணிகள் போட்டியிட முடியாது,

அப்படி விதவிதமான பேஷன்களில் விரைவாக உற்பத்தி செய்யக் கூடிய சக்தியைப் பெறவேண்டுமானால் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவின் கீழ் திரளவேண்டும். கைத்தறிக் கூட்டுறவு சங்கங்களுக்கு உள்ள ஆற்றல் தனிப்பட்டவர்களுக்கு இருக்க முடியாது. எனவே, கூட்டுறவுக்கு வெளியே உள்ள நெசவாளர்கள் கூட்டுறவில் சேரவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நாட்டில் உற்பத்தியாகும் பொருட்கள் அனைத்தும் பற்றாக்குறை என்ற நிலையிலேயே உள்ளன. தேவைக்கும் குறைவாகவே மற்ற பொருட்கள் உற்பத்தியாகின்றன. ஆனால் கைத்தறித் துணிகள் மட்டும்தான் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப் படுகின்றன. நாட்டின் தேவைக்கென்று கணக்கிட்டால் கைத்தறியில் உற்பத்தி செய்யபடுகின்ற துணிகள் ஒரு நாளைக்குக் கூட வராது. உபயோகிப்பவர்கள் என்ற அளவில்தான் குறைவே தவிர தேவையென்று எடுத்துக் கொண்டால் ஆளுக்கு ஒரு கைகுட்டை வாங்கினால் கூட இங்கு கைத்தறித் துணிகளின் தேக்கத்திற்கு இடமேற்படாது.

எனவே கைத்தறியை உபயோகிக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லோருக்கும் வரவேண்டும். கைத்தறியை உபயோகிப்பவர்களின் எண்ணிக்கையும் வளரவேண்டும். எனவே, மக்கள் கைத்தறிக்குத் தங்களாலியன்ற ஆதரவைக் கொடுக்க வேண்டும் என்றும், குறிப்பாகத் தாய்மார்கள் கைத்தறிக்கு அமோக ஆதரவைக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

Erotex
FABRICS
புதுமை
தரம்
சிக்கனம்

எமது விசேஷ தயாரிப்புகள்

★ பெட்ஷீட் - டவல்ஸ்
★ அலங்காரத் துணிகள்
★ வேஷ்டி - மல்

விற்பனை நிலையம்

ஈரோடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்,
நெ. 4. வடக்கு மாட வீதி,
மயிலாப்பூர், சென்னை-4.

தலைமைக் காரியாலயம்
ஈரோடு

தலைவர்
M. ஜெகநாதன்

மாநில சங்கத்தின் சாதனை

திரு ஜே. சி. ரயான், எம்.ஏ., ஐ.ஏ.எஸ்., (ரிடையர்டு)

தமிழ் நாட்டுக் கூட்டுறவோடு பதின் மூன்று ஆண்டு காலமாக இருந்த எனது தொடர்பின் காரணமாக எனது நண்பர்கள் என்மீது அன்புகொண்டு என்னை இந்த விழாவில் கலந்து கொள்ளுமாறு அழைத்துள்ளனர். திரு நாச்சிமுத்து அவர்களும், மற்றுமுள்ள கூட்டுறவு சங்க நண்பர்களும் என்மீது அன்புகூர்ந்து என்னை இந்த விழாவில் பேச அழைத்ததற்காக அவர்களுக்கும் உங்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனம்.

இன்றைய விழா மிகவும் அலங்காரமாக இருக்கிறது. ஏராளமாகக் கூட்டம் வந்திருக்கிறது, இதற்குக் காரணம் கைத்தறித் துணிகள் மீது மக்களுக்கு ஆர்வம் அதிகரித்துள்ளதேயாகும்.

கைத்தறிச் சரக்குகள் ஏராளமாகத் தேங்கிவிட்ட காரணத்தாலே இத்தகைய விழாக்களை நடத்தி அந்தச் சரக்குகளை விற்பனைச் செய்யவேண்டும் என்பதற்காகத்தான் பத்து காசு தள்ளுபடி கொடுத்து இந்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இதேபோல மற்ற ராஜ்யங்களிலும் விழாக்கள் நடைபெறுகின்றன. ஆனால் அங்கெல்லாம் இவ்வளவு சிறப்பாக நடைபெறவில்லை. சென்னையில் மட்டுமே இத்தகைய அலங்காரமான விழா நடைபெறுகிறது. இதற்கு காரணம் இங்குள்ள மாநில சங்கத்தின் திறமையேயாகும். இந்த சொஸைடியிலுள்ளவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு அந்த இயக்கத்தின் வெற்றிக்காகக் கடுமையாக உழைக்கிறார்கள். திரு நாச்சிமுத்து அவர்கள் இந்த சொஸைடியின் முன்னேற்றத்திற்காக மிகக் கடுமையாக உழைத்து வருகிறார். அவரது முயற்சியால் இந்த ராஜ்யத்தில் கைத்தறித் தொழில் நல்ல முன்னேற்றமடைந்துள்ளது.

சென்னை ராஜ்யத்தில்தான் முதன் முதலாகக் கைத்தறிக் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இங்குதான் கைத்தறிக்காரர்களின் எண்ணிக்கை அதிகம். கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கையும் அதிகம். இங்குள்ள சங்கங்களில்தான் பொருளாதார வசதியும் அதிகம்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக தேசத்தின் பொருளாதார நிலையில் கணிசமான பங்கு வகிப்பது கைத்தறித் தொழில்தான். சென்னை ராஜ்யத்தில் கைத்தறித் தொழிலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் காரணமாக இம் மாநிலம் பொருளாதாரத்திலும் முன்னேறிக் கொண்டு வருகிறது. அந்த வகையில் சென்னை ராஜ்யத்தின் முன்னேற்றத்திற்காக உழைத்து வரும் இந்த மாநில சங்க நிர்வாகிகளின் திறமை சாதாரணமானதல்ல. இந்த சொஸைடியின் விற்பனை நிலையங்கள் பம்பாய், ஹைதராபாத், பீகார், டெல்லி, கல்கத்தா போன்ற இடங்களிலெல்லாம் அமைக்கப் பட்டிருக்கின்றன. இந்த சொஸைடியினால் சிங்கப்பூர், கோலாலம்பூர், ஏதன்ஸ், கிழக்காப்பிரிக்க நாடுகள் ஆகியவற்றிலும் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அந்த நிலையங்களை இப்போது அகில இந்திய மார்க்கெட்டிங் சொஸைடி எடுத்துக் கொண்டிருக்கிறது.

சென்னை ராஜ்யத்தில்தான் ஸ்பெஷல் ரிபேட் கொடுக்கப்படுகிறது. இங்கு கைத்தறித் துணிகளுக்கு விற்பனை வரி கிடையாது. சென்னை ராஜ்ய அரசாங்கம் கைத்தறித் தொழிலுக்கு எல்லாவிதமான உதவியையும் செய்து வருகிறது.

கைத்தறித் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக மத்திய அரசாங்கம் பலவகையில் உதவி வருகிறது. அதற்கென அகில இந்திய மார்க்கெட்டிங் சொஸைடி ஏற்படுத்தப் பட்டுள்ளதுடன் கைத்தறிக்கென்று தனிப்பட்ட முறையில் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கௌன்சில் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இதன் மூலம் வெளிநாடுகளில் நமது கைத்தறித் துணிகளுக்கு மார்க்கெட் தேட முயற்சியெடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. நானுங்கூட இதற்காக வெளிநாடுகளுக்குப் போகும்படி உத்திரவிடப் பட்டிருக்கிறேன். இங்கிருந்து கைத்தறித் துணிகளை எடுத்துச் சென்று அங்குள்ள மக்களிடம் அந்தக் கைத்தறி துணிகளின் கவர்ச்சியைக் காட்டி அவர்

களது ஆதரவைப் பெற்று அங்கு மார்க்கெட் பிடிக்கவேண்டும் என்று உத்திர விட்டிருக்கிறார்கள்.

ரோமில் நடைபெறும் சர்வ தேச மகாநாட்டுக்கும் நான் போகவிருக்கிறேன். அந்த மகாநாட்டில் நமது கைத்தறித் துணிகளைக் காட்டி வெளிநாட்டு மக்களின் மனத்தைக் கவர வேண்டும். மற்றும் பிரான்ஸ், ஜெர்மனி, ஜினேவா, வெனிஸ் ஆகிய நாடுகளுக்கும் சென்று இதேபோல் கைத்தறிக்கு மார்க்கெட் பிடிக்க முயற்சி செய்வேன்.

வெளிநாடுகளில் மார்க்கெட் தேடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் உள் நாட்டிலும் மார்க்கெட் விரிவடைய வேண்டும். வெளி நாட்டை மட்டும் நம்பி கைத்தறித் தொழில் வாழ முடியாது. உள் நாட்டிலும் நல்ல ஆதரவு இருக்க வேண்டும். இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்து தங்களது பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும். கூட்டுறவு இயக்கத்தின் மூலம்தான் நல்ல முன்னேற்றம் அடையமுடியும். தனிப்பட்ட முறையில் பெரும் மூலதனம் போட்டு நடத்தப்படும் பெரிய பெரிய மில்களிலிருந்து வருகின்ற துணிகளோடு கைத்தறித் துணிகள் போட்டிபோட வேண்டுமானால் கூட்டுறவின் மூலம்தான் முடியும். எனவே இங்குள்ள கைத்தறி நெசவாளர்களும் மற்றவர்களும்கூட கூட்டுறவில் நம்பிக்கை வைக்க வேண்டும்.

எந்த நாட்டில் கூட்டுறவு முறை அதிகமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறதோ அந்த நாட்டில் பொருளாதாரம் பரவலாக விநியோகமாகிறது. அதனால் ஏழை மக்களும் நடுத்தர மக்களும் பயனடைகிறார்கள்.

எனவே பொது மக்கள் கைத்தறித் துணிகளை வாங்கி நெசவாளர்களை ஆதரிப்பதுடன் கூட்டுறவு முறைக்கும் ஆதரவு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்னை ராஜ்யத்தில் நல்ல முறையில் கூட்டுறவு இயக்கம் வளர்ந்து வருகிறது. இது இன்னும் நல்லபடி முன்னேற வேண்டும் என்று விரும்புகிறேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலை
(வரையறுக்கப்பட்டது)

தமிழ்நாடு அரசு பங்குதாரர்கள்

தலைவர்: ஸ்ரீ ரா. கிருஷ்ணசாமி நாயுடு, எம்.எல்.ஏ.,

நிறுவப்பட்ட கதிர்கள் ... 12,544

மேலும் நிறுவப்படுவதற்கு உத்திரவு பெறப்பட்ட கதிர்கள் ... 12,456

உயர்தர 40 நெ. ஆண்டாள் நூல் உற்பத்தி செய்கிறோம்

கூட்டுறவு ஸ்தாபனங்கள், தனிநபர்கள், ஸ்தாபனங்கள், சென்னை ராஜ்ய சர்க்கார் முதலியவர்கள் பங்குதாரர்கள்.

★★ மில்லில் உற்பத்தி செய்யும் எல்லா நூலும் சாதாரணமாக நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கே விற்பனை செய்யப்படுகிறது.

★★ 25,000 கதிர்கள் வரை நிறுவ ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

★★ விஸ்தரிப்புக்காக மேலும் பங்குகள் வழங்கப்படுகின்றன.

★★ கூட்டுறவு துறையில்லாத ஸ்தாபனங்கள், தனி நபர்கள் (முக்கியமாக பஞ்சு உற்பத்தியாளர்கள், நெசவாளர்கள், கைத்தறி சம்பந்தமான உற்பத்தியாளர்கள்) கம்பெனிகள் ஆகியவர்கள் பங்கு ஒன்றுக்கு ரூ. 100-ம், பிரவேசக் கட்டணம் ரூ. 2-ம் கட்டி "சி" வகுப்பு பங்குகள் பெறலாம்.

★★ டிவிடெண்டு உச்ச அளவு 9%.

எம். ராஜாராம் பாண்டியன், பி.ஏ., பி.எல்.,
ஜெனரல் மேனேஜர்.

உடைப் பிரச்னை அல்ல, இது ஓர் உயிர்ப் பிரச்னை

திரு கே. ஏ. மதியழகன், பி.ஏ.,
உணவு, ரெவின்யூ துறை அமைச்சர்.

கைத்தறியென்றால் தலைவர் திரு நாச்சிமுத்து அவர்களின் பெயர்தான் நினைவுக்கு வரும். அந்த அளவு அவர் கைத்தறி நெசவாளர்களது மேம்பாட்டுக்கென்றே தன்னை ஒப்படைத்துக் கொண்டு அயராமல் பாடுபட்டு வருகிறார். அவர் தன்னாலியன்றவரை உழைத்து கைத்தறி நெசவாளர்களது பிரச்னைகளைத் தீர்க்கப் போராடி வருகிறார்.

கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக இந்தக் கைத்தறி வார விழா நடைபெற்று வருகிறது. இது பதின்மூன்றாவது ஆண்டு. இப்படிப்பட்ட ஒரு சிறப்பான விழாவை ஏற்பாடு செய்துள்ளதின் நோக்கம், இதில் வெறும் கைத்தறித் தொழில் பிரச்னை மட்டுமல்ல, ஒரு மனிதாபிமானப் பிரச்னையும் அடங்கியுள்ளது என்பதுதான்.

இது ஒரு சாதாரண உடைப் பிரச்னை மட்டுமல்ல, ஓர் உயிர் பிரச்னையுமாகும். இந்த நாட்டின் பொருளாதாரம், வேலை வாய்ப்பு; உடைத் தேவை ஆகிய மூன்று கோணங்களிலிருந்தும் இந்தப் பிரச்னையை அணுகவேண்டும்.

அந்த வகையில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசு இந்தப் பிரச்னைக்கு ஒரு நல்ல தீர்வைக் காண்பதற்கு முயன்றுவருகிறது. புதிய அரசின் பிரதிநிதி என்ற முறையில் அமைச்சரவையின் சார்பில், இந்தப் பிரச்னையில் அக்கறை செலுத்தவேண்டியது பெருங்கடமை என்பதை உணர்ந்து செயல்படுவேன் என்று கூறிக்கொள்கிறேன்.

இன்று இந்த விழாவில் நான் கலந்துகொண்டிருப்பது ஏதோ ஒரு சம்பிரதாயமாக அல்ல. இந்தக் கைத்தறிப் பிரச்னையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதற்குத் தீர்வு காணவேண்டும் என்ற கடமையை உணர்ந்து கலந்துகொண்டிருக்கிறேன். இது போன்று வேறு பல பகுதிகளில் நடைபெறும் விழாக்களிலும் நான் கலந்துகொள்ளவிருக்கிறேன்.

கைத்தறி நெசவுத் தொழில் நமது அத்தியாவசியத் தேவையான உடைத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு தொழில் என்பது மட்டுமல்ல, இதில் அடங்கியிருக்கும் மிகப் பெரிய பொருளாதாரப் பிரச்னையும் சேர்ந்து இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த தொழிலாக விளங்குகிறது என்பதோடு, வேலை வாய்ப்பு என்ற அடிப்படையிலும் இது பிரதானமாகக் கொள்ளப்படவேண்டிய ஒரு தொழிலாக இருக்கிறது.

நாம் பழங்கதை பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. அந்தக் காலத்தில் கைத்தறி அப்படியிருந்தது-இப்படியிருந்தது-ரோமாபுரிக்கு அனுப்பினோம்-கிரேக்கத்திற்கு அனுப்பினோம்-என்றெல்லாம் வெறும் பழம் பெருமை மட்டும் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை.

தமிழகத்தைப் பொருத்தமட்டில் இந்தத் தொழிலில் அடங்கியுள்ள மனிதாபிமானப் பிரச்னையைக் கவனிக்க வேண்டும். இயந்திர வளர்ச்சியும் விஞ்ஞான முன்னேற்றமும் மட்டும் ஏற்பட்டுவிட்டால் போதாது. வேலை வாய்ப்பு என்ற பிரச்னைக்கும் தீர்வு காணப்பட வேண்டும்.

இயந்திரங்களாலும் விஞ்ஞான வளர்ச்சியாலும் மனிதனுடைய வேலைப் பளுவைக் குறைக்கலாம். ஆனால் வேலை யில்லாத மனிதனை என்ன செய்வது என்ற பிரச்னைக்குத் தீர்வுகாண விஞ் ஞானத்தால் முடியாது. பொருளாதார அடிப்படையில் தேவையின் அளவைக் கொண்டு உற்பத்தியின் வேகத்தை நிர் ணயம் செய்யவேண்டும். அந்த வகை யில் இயந்திர வளர்ச்சி பேருதவியாக இருக்கிறது என்றாலும் மனித உழைப் புக்கும் இயந்திர வளர்ச்சிக்கும் இடை யிலே இருக்கின்ற வேலை வாய்ப்பு என்ற பிரச்னையையும் கவனிக்க வேண்டும்.

தமிழகத்தைப் பொருத்தமட்டில் கைத் தறித் தொழிலை நம்பி இருபது லட்சம் குடும்பங்கள் வாழுகின்றன. எனவே, தமிழகத்தைப் பொருத்தமட்டிலும் இது ஒரு ஜீவனும்சப் பிரச்னை; மனிதாபிமான பிரச்னையாகும். இந்தத் தொழிலை நம்பி யுள்ள ஏழு லட்சம் தறிகளுக்குப் பின்னு லுள்ள இருபது லட்சம் குடும்பங்களைப் பார்க்கவேண்டும். இந்தக் கோணத்தில் தான் இந்தப் பிரச்னையைப் புதிய அரசு அணுகியுள்ளது.

கைத்தறித் தொழிலுக்கு நெருக்கடி ஏற்பட்டு நெசவாளர்கள் அல்லலுற்றுக் கொண்டிருந்த காலத்தில் நான் சேலத் தில் கைத்தறித் துணிகளை மூட்டை கட்டி தலையில் சுமந்து சென்று விற்பனை செய்திருக்கிறேன். இன்று முதலமைச்ச ராக இருக்கும் அறிஞர் அண்ணா அவர் கள் கைத்தறி வாழ வேண்டும் என்பதற் காக கைத்தறித் துணிகளை மூட்டை கட் டித் தலையிலே சுமந்து தெருத் தெருவாக சென்று விற்பனைச் செய்தார்கள். அது வரை அரவிந் போன்ற உடைகளையே அணிந்துகொண்டிருந்த நாங்களும் எங் களது குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் அன்று முதல் இன்று வரை கைத்தறி ஆடைகளைத்தான் அணிந்துவருகிறோம். இனியும் தொடர்ந்து கைத்தறித் துணி களைத்தான் அணிந்துகொள்வோம்.

கைத்தறித் தொழிலுக்குப் பல கோணங்களில் பல வகையான நெருக் கடிகள், பயங்கர சோதனைகள் ஏற் பட்டுக்கொண்டே வருகின்றன. கைத் தறித் தொழிலை நம்பியுள்ள நெசவாளர் களின் எதிர்காலம் ஒரு பயங்கரமான கேள்விக் குறியாக இருக்கிறது. கிராக்கி கிடைத்தால் நூல் கிடைக்காது. நூல் கிடைத்தால் கிராக்கியிருக்காது. இரண்டும் இருந்தால் நூல் விலை அதிக மாக இருக்கும். அதையும் வாங்கிச் சமாளித்தால் தேக்கம் ஏற்படும். தேக்கம் ஏற்பட்டால் வேலை கிடைக் காது. வேலை கிடைத்தாலும் கூலி கிடைக்காது. இப்படி சங்கிலித் தொடர் போன்று பல பிரச்னைகள் அடுக்கடுக்காக வந்து கொண்டே இருக்கும்.

ஐந்தாண்டுத் திட்டங்கள் என்று உருவாக்கப்பட்டதற்கே காரணம் வேலை வாய்ப்புகள் கிடைக்கவேண்டும் என்ப தற்காகத்தான். திட்டங்களின் காரண மாக புதிய புதிய தொழில்கள் உரு வாயின. ஆனால் வேலை வாய்ப்பு என்பது ஏழையின் கைக்கு எட்டாத பழமாகி விட்டது. திட்டங்களுக்காகச் செலவிட்ட கோடிக் கணக்கான பணம் கடலில் கரைத்த பெருங்காயமாகிவிட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

எனவே இந்தக் கைத்தறித் தொழிலை நம்பியுள்ள இருபது லட்சம் குடும்பங் களுக்கு வேலை வாய்ப்பு என்ற அடிப் படையில் தான் இந்தப் பிரச்னை அணுகப்படவேண்டும். நம் நாட்டின் உடைத் தேவையில் மூன்றிலொரு பங் கைப் பூர்த்தி செய்வது கைத்தறிதான். ஆண்டொன்றுக்கு ஐம்பத்திரண்டு கோடி கெஜங்கள் கைத்தறியில் உற் பத்தி செய்யப்படுகின்றன. இந்தத் துணிகளுக்கு மார்க்கெட் தேடியாக வேண்டும். வெளிநாடுகளில் மார்க்கெட் தேடுவதில் மற்ற நாடுகளில் போட்டி யைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. உள்நாட்டில் மார்க்கெட் பிடிப்பதற்கு ஆலைகளின் போட்டியைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் துணிகள் தேங்கிவிடுவது தவிர்க்கமுடி யாததாகி விடுகிறது. அந்தத் தேக்கத் தைப் போக்குவதற்காகத்தான் இம் மாதிரி விழாக்கள்—பொருட்காட்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அதற் கென தனிப்பட்ட முறையில் தள்ளுபடி கொடுக்கப்படுகிறது.

அரசாங்கத்தால் கொடுக்கப்படும் இந்தத் தள்ளுபடியினால் மட்டுமோ, கடனுதவி, இதர வகையான உதவி ஆகியவைகளால் மட்டுமோ கைத்தறி வாழ்ந்துவிட முடியாது. அரசாங்கத்தின் தயவை மட்டுமே நம்பி ஒரு தொழில் வாழ—வளர முடியாது. மக்களது ஆதாவு இருந்தால்தான் ஒரு தொழில் வாழ முடியும். அந்தத் தொழிலை நம்பியுள்ள வர்களும் வாழ முடியும். எனவே இதனை ஒரு மனிதாபிமானப் பிரச்னையாகக் கருதி மக்கள் இந்தத் தொழிலுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும். கைத்தறித் துணி களை வாங்குவதன் மூலம் கைத்தறியை நம்பியிருக்கின்ற குடும்பங்களுக்கு வாழ் வளிக்க வேண்டும்.

புதிய ஊக்கம் பிறந்தது, ஆனால்...!

திரு எம். சோமப்பா

பாரதத்தின் மிகப் புராதனமானத் தொழில் கைத்தறித் தொழில். நம் நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்கெல்லாம் சென்று புகழ்கொடி நாட்டியுள்ள ஒரு பெருந்தொழில். இந்த நாட்டுக் கைத்தறித் துணிகள் ஒரு காலத்தில் உலக நாடுகளிலெல்லாம் விற்பனை செய்யப்பட்டு அந்தந்த நாடுகளிலிருந்து ஏராளமான பொன்னும் மணியும் கொண்டு வந்து வரலாற்றுப் பெருமை கொண்டிருந்தது. ஆனால் இன்று இந்தத் தொழிலுக்கு ஒரு கஷ்டமான நேரம்.

சென்னையும், ஆந்திராவும் இந்தத் தொழிலில் முன்னணியில் நிற்கின்றன. பாரதத்திலுள்ள மற்ற ராஜ்யங்களைவிட இந்த இரண்டு ராஜ்யங்களிலும் இந்தத் தொழிலில் அதிகமான மக்கள் ஈடுபட்டுள்ளனர். அதிலும் குறிப்பாக சென்னை ராஜ்யத்தில் மிக மிக அதிகமான அளவில் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அதுமட்டுமல்லாமல், சென்னை ராஜ்யத்திலுள்ள கைத்தறிக் கூட்டுறவு சங்கம் மிகப் பெரிய முன்னேற்றம் கண்டுள்ளது. மற்ற ராஜ்யங்களிலுள்ள கூட்டுறவு சங்கங்களைக் காட்டிலும் எல்லா வகையிலும் சிறந்து விளங்குகிறது. நண்பர் நாச்சிமுத்து இந்தச் சங்கத்தின் முன்னேற்றத்திற்காகத் தொடர்ந்து பாடுபட்டு வருகிறார். மத்திய அரசாங்கத்தோடும் ராஜ்ய அரசாங்கத்தோடும் போராடிக் கூட்டுறவு சங்கத்திலுள்ள நெசவாளர்களுக்கு மட்டுமின்றி கூட்டுறவுக்கு வெளியே உள்ள நெசவாளர்களுக்கும் சலுகை பெற்றுத் தந்திருக்கிறார்.

அரசாங்கம் இந்தத் தொழிலின் வளர்ச்சிக்காக உதவி வருகிறது. என்றாலும் இந்தத் தொழிலின் கஷ்டம் மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. பாரதம் சுதந்திரமடைந்த பிறகு கைத்தறி நெசவுத் தொழிலுக்கு ஒரு புதிய ஊக்கம் பிறந்தது. ஆனால் சில காலத்திற்குள்ளாகவே அந்த ஊக்கம் மறைந்து விட்டது. நெருக்கடி தோன்றி விட்டது. அந்த நெருக்கடிகளைத் தொடர்ந்து சமாளித்து வரவேண்டிய ஒரு நிலையில் இன்று இத்தொழில் இருக்கிறது.

இப்போது பஞ்சு விலை உயர்ந்துவிட்டதால் நூல் விலை உயர்ந்து விட்டது. மற்றும் சாயப் பொருட்களுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனால் கைத்தறித் துணியின் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது. ஆகவே விலையையும் உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. விலையை உயர்த்தினால் கைத்தறித் துணிகளுக்கு மார்க்கெட் கிடைப்பது கஷ்டம். அதனால் தேக்கம் ஏற்பட்டு விட்டது. இந்தத் தேக்கத்தைத் தாக்குப் பிடிக்கக் கூடிய சக்தி கிடையாது. அதுவும் குறிப்பாக ரிசர்வ் பாங்கின் கட்டுத்திட்டங்களால் கடன் வசதிகள் குறைந்துவிட்ட காரணத்தால் இப்போது ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பொதுவாக தென்னிந்தியாவில் கைத்தறித் தொழிலை நம்பியுள்ள மக்களின் தொகை மிகமிக அதிகமாகும். இந்த மக்களுக்குப் பாதுகாப்பளிக்கவேண்டியது நம்முடைய எல்லோருடைய கடமையுமாகும். கைத்தறித் துணிக்கு மார்க்கெட் பிடிப்பதற்காக அகில இந்திய கைத்தறி துணி விற்பனைக் கூட்டுறவு சங்கம் தன்னாலியன்ற முயற்சிகளையெல்லாம் செய்து வருகிறது. உள் நாட்டில் பம்பாய், டில்லி, கல்கத்தா, உத்திரப் பிரதேசம், சென்னை ஆகிய இடங்களில் பெரிய பெரிய விற்பனை நிலையங்கள் உள்ளன. அங்கெல்லாம் சென்னை ராஜ்யத்திலிருந்து வருகிற கைத்தறித் துணிகளுக்கு நல்லவரவேற்புக் கிடைக்கிறது. சென்னை ராஜ்யத்திலிருந்து வரும் துணிகளைப் பார்த்துத்தான் மற்ற ராஜ்யங்களிலிருக்கும் நெசவாளர்கள் தங்களது துணிகளின் ரகங்களை மாற்றுகிறார்கள். சென்னை ராஜ்யத்திலிருந்து வரும் சேலைகளில் கோவை தேவாங்கா, சின்னாளபட்டி ரகங்களுக்கு நல்ல வரவேற்பிருக்கிறது. சென்னிமலை பெட்ஷீட்களுக்கும் நல்ல கிராக்கியிருக்கிறது.

வெளி நாடுகளில் மார்க்கெட் பிடிப்பதற்காகக் கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ரோம், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு ஒரு தூதுக்குழு சென்று அங்கெல்லாம் கைத்தறித் துணிக்கு மார்க்கெட் பிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்

பட்டன. அந்தத் தூதுக் குழுவிற்கு அன்று தொழிலமைச்சராக இருந்த திரு வெங்கட்ராமனவர்கள் தலைமை வகித்தார். திரு நாச்சிமுத்துவும் அந்தத் தூதுக் குழுவுடன் சென்றிருந்தார்கள்.

சென்னை ராஜ்யத்தில் கைத்தறியில் உற்பத்தி செய்யப்படும் பிளீடிங் மதரூஸ் துணிக்கு அமெரிக்காவில் நல்ல மார்க்கெட் இருந்தது. இப்போது அந்த மார்க்கெட் விழுந்துவிட்டது. காரணம் ஜப்பானிலிருந்து பிளீடிங் மதரூஸ் போல ஒரு போலி ரகம் அங்கு போட்டியிடுகிறது.

இந்த நிலையில் நமது கைத்தறித் துணிகளின் ஏற்றுமதி குறைந்துவிட்டது. அதனால் தேக்கம் ஏற்பட்டுவிட்டது. அதன் காரணமாக நெசவாளர்களுக்கு வேலை கொடுக்க முடியவில்லை. வேலை கொடுத்தாலும் சரிவரக் கூலி கொடுக்க முடியவில்லை.

ஆகவே வெளிநாட்டு மார்க்கெட்டை மட்டுமே நம்பி இந்தத் தொழில் வாழ முடியாது. உள் நாட்டில் மக்களது ஆதரவு பெருகவேண்டும். கைத்தறித் துணிகளில் இப்பொழுது நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆலைத் துணிகளைவிடக் கைத்தறித் துணிகள் பல வகையிலும் சிறந்து விளங்குவதோடு விலையும் குறைவாக இருக்கிறது. ஆகவே பொது மக்கள் தங்களாலியன்ற வரை கைத்தறித் துணிகளை வாங்கி இந்தத் தொழிலை நம்பியிருக்கின்ற லட்சக் கணக்கான மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டும். இதனை ஒரு தேசியக் கடமையாக எண்ணிச் செய்யவேண்டும்.

குறிப்பாகத் தாய்மார்கள் கைத்தறிக்கு நல்ல ஆதரவு கொடுத்து வருகிறார்கள். அவர்களது ஆதரவு மேலும் மேலும் பெருகவேண்டும். கைத்தறிக்கு வர்ணப் புடவைகளின் உற்பத்தியை ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது. அந்தக் கோரிக்கைக்கு அரசாங்கமும் ஆதரவளித்திருக்கிறது. அப்படி ஒரு நிலை ஏற்படுவதற்காக நாம் காத்திருக்க வேண்டியதில்லை. புடவைகளும் வேட்டிகளும் கைத்தறியாகப் பார்த்துத்தான் வாங்குவது என்று நீங்கள் முடிவு செய்து கொண்டால் போதும்; கைத்தறிக்கென்று வேட்டி—புடவை உற்பத்தியை ஒதுக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கே அவசியமில்லாமல் போய்விடும்.

எனவே எல்லோரும் கைத்தறித் துணிகளை வாங்கி ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ★

வாழ்க கைத்தறி! வளர்க கூட்டுறவு!

கானகோயில்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம், ஜி. 2124,

கானகோயில்பேட்டை,

திருக்கழுக்குன்றம் அஞ்சல் - செங்கற்பட்டு மாவட்டம்.

கண்ணைக் கவரும் திறம், கவர்ச்சியான ரகம், அழுத்தமான நெசவு அருமையான டிசைன்களில்

1.	ஷர்டிங்குகள்	...	60s × 40s — 42″ × 48″ 80s × 80s — 36″ × 48″
3.	லுங்கிகள்	...	60s × 40s — 49″ — 2 மீட்டர் 80s × 80s — 49″ — 2 மீட்டர்
3.	கைக்குட்டைகள்	...	60s × 60s — 18″ × 18″ 80s × 80s — 18″ × 18″

சிறந்த நெசவாளர்களைக் கொண்டு தயார் செய்கிறோம். எமது ஜவுளிகள் எல்லா கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

குறிப்பு: எமது 80s × 80s — 48″ ஷர்டிங்குகள் மாநில சங்கத்தாரின் ஈரோடு பதனிடும் சாலையில் "சான்போரைஸ்ட் & மெர்ஸரைஸ்ட்" செய்யப்படுகிறது.

ஞா. ஏழுமலை முதலியார்,
தலைவர்.

பெருகட்டும் ஏற்றுமதி!

டாக்டர் எஸ். விஜயலட்சுமி, எம்.ஏ., டி.லிட்.,

கைத்தறியைப் பொருத்தவரை இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான மக்களின் பொருளாதார நிலை என்ற கண்ணோட்டத்துடன் தான் இந்தப் பிரச்னையைக் கவனிக்கவேண்டும். இத்தொழிலில் ஈடுபட்டுள்ள லட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்வளிக்க, அவர்களது துயரத்தைத் துடைக்க எந்தெந்த வகையில் உதவி செய்யவேண்டும் என்பதைப் பார்க்கவேண்டும். இந்தத் தொழிலுக்கு ஏற்படும் நெருக்கடிகளுக்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் காணவேண்டும்.

நூல் கிடைப்பதில்லை; கிடைத்தாலும் விலை அதிகம். உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் விற்பனையாவதில்லை; தேங்கிக் கிடக்கிறது. அதனால் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க முடியவில்லை என்ற பிரச்னை தொடர்ந்து இருந்து கொண்டே வருகிறது. இந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் ஒரு பரிகாரம் காணவேண்டும்.

உணவுக்கு அடுத்தபடியாக உள்ள உடைப் பிரச்னையைத் தீர்க்கும் மிகப் பெரிய தொழிலான கைத்தறித் தொழிலுக்கு ஏற்படும் நெருக்கடி, நமது நாட்டின் பொருளாதாரத்தையே பெருத்த அளவில் பாதிக்கக்கூடிய ஒரு பிரச்னையாகும்.

எனவே இந்தத் தொழிலுக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்பு ஏற்படவேண்டும். இந்தத் தொழிலை நம்பியுள்ள லட்சக்கணக்கான குடும்பங்களுக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படக்கூடிய வகையில் வசதிகள் செய்துகொடுக்கப்படவேண்டும். இந்தத் தொழில் வளம் பெற்று அதில் ஈடுபட்டுள்ள மக்கள் வசதியோடு வாழ வகைசெய்யவேண்டும்.

அதற்காக அரசாங்கத்தால் செய்யப்படும் உதவிகள் மட்டும் போதாது. பொது மக்களின் ஆதரவும் வேண்டும். மத்திய அரசாங்கமும், ராஜ்ய அரசாங்கமும் இந்தத் தொழிலுக்குப் பலவகையிலும் உதவி செய்து வருகிறது என்றாலும் மக்களுடைய ஆதரவு இருந்தால்தான் அந்த உதவியின் பலனை இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் அனுபவிக்க முடியும்.

பொதுவாக ஒரு நாட்டின் பொருளாதார நிலை அந்த நாட்டின் ஏற்றுமதி சக்தியைப் பொறுத்துத்தான் முன்னேற முடியும். உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளில் தங்கள் தங்கள் நாடுகளில் சிறப்பாக உற்பத்தி செய்யப்படுகிற பொருட்களை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் தங்களுடைய பொருளாதார நிலையை வளர்த்துக் கொள்கின்றார்கள்.

நாற்பது லட்சம் மக்களையே கொண்டுள்ள டென்மார்க் நாட்டில் கிடைப்பதெல்லாம் மீனும், முட்டையும், பாலும் தான். அவைகளைப் பிற நாடுகளுக்கு அனுப்பி அதன் மூலம் தங்களுடைய பொருளாதாரத்தை வளர்த்துக்கொள்கின்றனர். நம் நாட்டைப் பொருத்த மட்டில் சிறப்பான தொழில்கள் கைத்தொழில்கள்தான். குறிப்பாகக் கைத்தறித் தொழில் மிக மிகச் சிறப்பான ஒரு தொழிலாகும். இந்தத் தொழிலைக் கொண்டுதான் நாம் வெளிநாடுகளுடன் வர்த்தகத்தை அபிவிருத்தி செய்து கொள்ளவேண்டும். அதன்மூலம் நமது பொருளாதாரமும் முன்னேற்றமடையும்.

அந்நிய ஆட்சிக்குப் பிறகு கைத்தறித் தொழிலில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கைத்தறித் தொழிலின் வளர்ச்சிக்காக அரசாங்கம் பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. என்றாலும் இத்தொழில் தானே வளரக்கூடிய வாய்ப்பைப் பெறவில்லை. கூட்டுறவு முறையின் மூலம் இந்தத் தொழில் நன்கு வளர முடியும். என்றாலும் உள்நாட்டு மக்களிடம் இந்தத்

தொழிலுக்குப் போதுமான ஆதரவு வளரவேண்டும். அதற்காக உள்நாட்டில் சில பிரத்தியேகமான ரகங்களைக் கைத்தறிக்கு என்று ஒதுக்கிப் பாதுகாப்பளிக்கவேண்டும். வெளிநாட்டு ஏற்றுமதிக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்.

வெளி நாடுகளிலுள்ள மக்கள் எந்தெந்த வகையான துணிகளை விரும்புகிறார்களோ அந்தந்த வகையான துணிகளை இங்கு கைத்தறியில் உற்பத்தி செய்யவேண்டும். அதற்கென பிரத்தியேகமான ஆராய்ச்சி வசதிகள் செய்ய வேண்டும். வெளி நாடுகளுக்குச் சென்று அங்குள்ள மக்களின் மன நிலையை அறிந்து அதற்கேற்ற வகையில் இங்கு புதிய புதிய ரகங்களைத் தயார் செய்து அவைகளை அந்தந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும். அங்கெல்லாம் நல்ல முறையில் விளம்பரம் செய்து நம்முடைய கைத்தறித் துணிகளுக்கு கிராக்கி ஏற்படுத்த வேண்டும்.

இதன் மூலம் நம்முடைய தேசியப் பொருளாதாரம் வளர்ச்சியடைவதுடன் அந்நியச் செலாவணியும் ஏராளமாகக் கிடைக்கும். அதன்மூலம் இங்கு தொழில் வளமும் பொருளாதார சுபிட்சமும் ஏற்படும். கைத்தறி நெசவாளர்களது வாழ்வுக்கும் பாதுகாப்புக் கிடைக்கும்.

வெளிநாடுகளில் நமது கைத்தறித் துணிகளுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. இங்கிருந்து வெளிநாடு செல்கின்றவர்கள் கைத்தறித் துணிகளை அணிந்து கொண்டிருந்தால் அதைப் பார்த்து அந்த நாட்டு மக்கள் விரும்புகிறார்கள். நாம் உடுத்தியிருப்பது பழைய துணியாக இருந்தால்கூட அது நான்கைந்து சலவைகளுக்குப் போய் வந்த துணி என்றாலும், அதனைக் கேட்டு வாங்கிக் கொள்ளுமளவுக்கு அந்த மக்களிடையே ஆர்வம் வளர்ந்துள்ளது. நான் அண்மையில் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தபோது இதனை உணர முடிந்தது. நான் மட்டும் கையில் கொஞ்சம் கைத்தறித் துணிகளை எடுத்துச் சென்றிருந்தால் பத்தாயிரம் டாலர் பெறுமான அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துக்கொண்டு வந்திருக்க முடியும் என்று நான் சொன்னபோது அமைச்சர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

இந்த நிலையை நன்கு பயன்படுத்திக் கொண்டு நமது கைத்தறித் துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் நாம் வெற்றி பெறவேண்டும். முயற்சியெடுத்தால் முடியாதது ஒன்றுமில்லை. இன்று வெளிநாடுகளில் நமது கைத்தறித் துணிகளுக்கு ஓரளவு கிராக்கி குறைந்திருப்பதாகவும், அதற்குக் காரணம் சர்வதேசப் போட்டியே என்றும் கூறப்படுகிறது. அந்தப் போட்டியைச் சமாளிக்கும் சக்தியை நாம் பெற வேண்டும்.

அத்துடன் உள்நாட்டிலும் நமது ஆதரவு பெருகவேண்டும். அரசாங்கத்தின் உதவியை மட்டும் நம்பி வாழ வேண்டிய அவல நிலையில் கைத்தறித் தொழிலை நாம் விடக்கூடாது. கைத்தறியை ஆதரிப்பது நம்முடைய தேசியக் கடமைகளில் ஒன்றாகக் கருதி நாம் கைத்தறித் துணிகளை வாங்கவேண்டும்.

“இனியொரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்”—என்று

பாரதியார் கூறியதுபோல நாம் இனிக் கைத்தறித் துணிகளையே வாங்குவோம் என்று உறுதியெடுத்துக் கொள்ள வேண்டும்.

நிறுவியது 16—3—1959

ஒரக்காட்டுப்பேட்டை திருவள்ளுவர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி, விற்பனைச் சங்கம் லிமிடெட், நெ. G. 1714,

ஒரக்காட்டுப்பேட்டை அஞ்சல் : செங்கை மாவட்டம்.

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதிபோல் ஒரக்காட்பேட்டெக்ஸ் சர்ட்டிங் உழைப்பிற் குறுதி. கைதேர்ந்த நெசவாளர்களைக் கொண்டு நல்ல தரமுள்ள நூலால் மந்தவெளி கோ-ஆப்டெக்ஸ், பென்னி சர்ட்டிங் ரகங்கள் போன்ற உயர்ந்த நெருக்கமாக நேர்த்தியாக 80s x 80s, 60s x 40s-ல் கண்கவர் வண்ண ஓவிய வர்ணஜால கட்டங்கள் காலத்திற்கேற்றவாறு சர்ட்டிங்குகள் தயாரிக்கிறோம்.

எங்கள் சர்ட்டிங் எல்லா 'கோ-ஆப்டெக்ஸ்' கடைகளிலும் கிடைக்கும்.

தேவைக்கு வருக அல்லது வரைக. உங்கள் ஆதரவுக்கு நன்றி.

குட்டி ந. கந்தசாமி முதலியார், தலைவர்.

எழில் கொஞ்சும் கைத்தறி

திரு காஞ்சி மணிமொழியார்

கடந்த பன்னிரெண்டாண்டுகளாக சீரும் சிறப்பும் பெற்று நடந்து வரும் இந்தக் கைத்தறி வார விழா இன்று பதின்மூன்றாவது ஆண்டைக் கடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்த விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பினை எனக்கு நல்கி என்னைப் பெருமைப்படுத்தி வருகிறார் தலைவர் திரு நாச்சிமுத்து அவர்கள்.

கைத்தறி நெசவாளர்களது வாழ்வுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள அவர் குறிப்பிட்டதுபோல் நானும் ஒரு நெசவாளியின் குடும்பத்தில் பிறந்தவன்தான். எனது தந்தை ஐம்பது ஆண்டுகளாகக் கைத்தறி நெசவுத் தொழில் செய்து வந்தார். அதன் பிறகு ஜவுளி வியாபாரியானார்.

அத்துடன் நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் கைத்தறி நெசவாளர்களுக்கு நெருக்கடி என்றவுடன் பரிந்தோடி வந்து உதவும் ஒரு இயக்கமாகும்.

1952-ம் ஆண்டில் கைத்தறித் தொழிலில் ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டு நெசவாளர்கள் குடும்பம் குடும்பமாகத் தெருக்களில் பிச்சையெடுத்தனர். பலர் தற்கொலை செய்து கொண்டனர். அந்த நிலையில் இன்று அமைச்சர்களாக இருப்பவர்களெல்லாம் அன்று கைத்தறித் துணிகளை தலையிலும் தோளிலும் சுமந்து தெருத் தெருவாகச் சுற்றி விற்பனைச் செய்தவர்களாவார்கள். இன்று முதலமைச்சராக இருக்கும் அறிஞர் அண்ணா அவர்கள் மதுரை, சேலம் ஆகிய நகரங்களில் கைத்தறித் துணிகளை மூட்டைக் கட்டிச் சுமந்து விற்றார்கள். நானும் நண்பர் டி. வி. நாராயணசாமியும் வேலூர் தெருக்களில் சுற்றி விற்பனைசெய்தோம்.

அதன் மூலம் கைத்தறியை ஆதரிக்க வேண்டும் என்று பொது மக்களது உள்ளத்தில் பதியும்படி செய்தோம். அன்று பொது மக்களுடைய உள்ளங்களில் நாங்கள் ஊன்றிய அந்த விதைதான் இன்று இந்தக் கைத்தறி வார விழா இவ்வளவு சிறப்பாக நடைபெறக் காரணம் என்று கூறினால் அது மிகையாகாது.

அப்படிப்பட்டவர்கள் இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளார்கள். எனவே இந்த ஆட்சியில் கைத்தறி தொழிலுக்கு ஒரு நிரந்தரமான—நிச்சயமான வாழ்வு கிடைக்கும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாட்டுக்கும் இடமில்லை.

இந்த விழா பொதுவாக மார்ச் மாதக் கடைசியில் அல்லது ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் ஏற்பாடு செய்யப்படுகிறது. இதற்குக் காரணம் இந்தக் காலத்தில்தான் கைத்தறித் துணிகள் பெரும் அளவில் தேங்கி விடுகின்றன. இதற்குக் காரணம் தீபாவளிப் பண்டிகை, பொங்கல் பண்டிகைகள் தீர்ந்து விடுகின்றன. திருவிழாக்களுக்கு இடையில் இரண்டு மூன்று மாதங்கள் இருக்கின்றன.

எனவே இந்தக் காலத்தில் இப்படிப்பட்ட விழாக்களை ஏற்பாடு செய்து தேங்கிக் கிடக்கின்ற கைத்தறித் துணிகளை விற்பனைச் செய்வதன் மூலம் நெசவாளர்களுக்கு வாழ்வளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

இந்த விழா கடந்த ஆண்டுகளில் நடைபெற்றதைவிட இந்த ஆண்டு மிகச் சிறப்பான முறையில் நடைபெறுகிறது. சென்ற ஆண்டில் இந்த விழாவில் இந்த நான்கு நாட்களில் விற்பனையானதை விட இந்த ஆண்டு ஒன்றரை மடங்கு

விற்பனையாகியுள்ளது. நேற்று மட்டும் சுமார் இரண்டு லட்சம் ரூபாய்களுக்கு விற்பனை நடைபெற்றிருக்கிறது என்பதைக் கேள்விப்பட்டுப் பூரிப்பும் புளகாங்கிதமுமடைந்தேன்.

இந்த உலகத்துக்கெல்லாம் நாகரிகத்தைப் பரப்பி வந்த தமிழகக் கைத்தறிக் கலை இன்று இந்த உலக நாடுகளிலெல்லாம் ஆதரவைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறது. மூவாயிரம் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நமது கைத்தறித் துணிகளை வெளி நாடுகளில் போட்டி போட்டுக்கொண்டு வாங்கினர்கள். இன்று வெளி நாடுகளில் நமது கைத்தறித் துணிகளுடன் மற்ற நாட்டுத் துணிகள் போட்டி போடுகின்றன.

கிரேக்கச் சீமாட்டிகளும் ரோமாபுரி ராணிகளும் எகிப்திய எழிலரசிகளும் நம் நாட்டுக் கைத்தறித் துணிகளை விரும்பி வாங்கி அணிந்து அழகுக்கு அழகு செய்து கொண்டனர். ஆனால் இன்று உள்நாட்டில் நமது பெண்களிடம் நமது கைத்தறித் துணிகளுக்கு ஆதரவு தேட வேண்டிய நிலையுள்ளது.

பழங்காலத்தில் கைத்தறி நெசவாளர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்கள் கோடி கோடியாக அடுக்கி வைத்திருப்பதாகக் குறிப்பிடுவார்கள். கோடீஸ்வரனும் கோடி கோடியாக வைத்திருக்கிறான்; கைத்தறி நெசவாளியும் கோடி கோடியாக அடுக்கி வைத்திருக்கிறான் என்ற பொருள்பட புலவர் மீனாட்சி சுந்தரனார் வேடிக்கையாகப் பாடி வைத்தார். அன்று உண்மையிலேயே கைத்தறி நெசவாளர்களது வீடுகளிலே அடுக்கி வைக்கப்பட்ட கோடிகள் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து கோடி கோடியாகப் பணத்தை கொண்டு வந்து குவிக்க உதவின. ஆனால் இன்று அந்தக் கோடிக்கு ஆளைத் தேடிப் பிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

"பட்டினிலாடையும் பஞ்சி னிலாடையும்
பண்ணி மலைகளென வீதிகுவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டுவருவார்
காசினி வணிகருக்கவை கொடுப்போம்"

என்று பாடினர் பாரதியார். அன்று பாரதியார் கண்ட கனவில் ஒரு பகுதி நிறைவேறிவிட்டது. பட்டினிலாடையும் பஞ்சினிலாடையும் பண்ணி மலைகளெனக் குவித்துவிட்டோம். ஆனால் மற்றொரு பகுதியான கட்டித் திரவியம் கொண்டுவரும் காசினி வணிகரைத் தான் காணோம். அதாவது உலக நாடுகளிலிருந்தெல்லாம் வர்த்தகர்கள் நம்மைத் தேடி கட்டித் திரவியம், அதாவது கட்டித் தங்கத்தைக் கொண்டு வரவில்லை. நாம்தான் கைத்தறித் துணிகளுக்குச் சந்தையைத் தேடி காசினி வணிகர்களிடம் ஓடுகிறோம்.

எனவே இங்கே கூடியுள்ள நீங்கள் தான் காசினி வணிகர்களாவீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் உங்களைக் காசினி வணிகர்களாக நினைத்துக் கொண்டு—வெளிநாட்டு வர்த்தகர்களாக எண்ணிக் கொண்டு கைத்தறித் துணிகளை வாங்கிச் செல்லவேண்டும்.

இங்கே கூடியுள்ள நீங்கள்தான் இந்நாட்டு மன்னர்கள். நீங்கள் மனது வைத்தால் கைத்தறித் துணிகள் வெளி நாட்டுச் சந்தையைத் தேடி ஓடவேண்டியதில்லை. வெளிநாட்டவர்கள் தாங்களாகவே விரும்பிக்கேட்டால்—வற்புறுத்தினால்—நல்ல விலை கொடுக்க முன வந்தால் அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டுவிடலாம்.

எனவே நெசவாளர்களின் துயரம் நீங்க, தொல்லைகள் தீர, வறுமை அகல, வாழ்வு சிறக்க உங்களால் ஆன அளவு கைத்தறித் துணிகளை வாங்கவேண்டும். நீங்கள் கொடுக்கின்ற பணம் ஏழைக் கைத்தறி நெசவுத் தொழிலாளியிடம் சென்று சேருகிறதா என்று பார்த்துத் தான் உங்களுக்குத் தேவையான துணிகளை வாங்கவேண்டும்.

இன்று கைத்தறியில் எவ்வளவோ முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆலைத் துணிகளைப் போலவே சுருங்காத் தன்மையும், பள பளப்புமுள்ள பக்குவப்படுத்தப்பட்ட கைத்தறித் துணிகள் மில் துணிகளைவிடக் குறைந்த விலையில் கிடைக்கின்றன. அத்துடன் நீடித்து உழைக்கக்கூடிய தன்மையிலும் மில் துணிகளைவிடச் சிறப்பாக இருக்கின்றன.

அதுமட்டுமின்றி, இந்தத் தொழிலை நம்பியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை மற்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கையைவிட அதிகம். உழவுத் தொழிலுக்கு அடுத்தபடியாக அதிகக் குடும்பங்கள் இந்தத் தொழிலில்தான் ஈடுபட்டுள்ளன. அத்துடன் இந்தத் தொழிலைச் சார்ந்த துணைத் தொழில்களான நூல் வியாபாரம், ஜவுளி வியாபாரம் சாயத்தொழிற்சாலைகள் ஆகியவைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் குடும்பங்கள் எனக் கணக்கிட்டுப் பார்த்தால் கிட்டத்தட்ட முப்பது லட்சம் குடும்பங்கள் தேறும். இந்தக் குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும் என்பதை நாம் உணர்ந்து கைத்

தறித் துணிகளுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும்.

இன்று நம் நாட்டில் எற்பட்டுள்ள ஆட்சி ஏழை மக்களின் ஆட்சி. கைத் தறிக்கு ஒரு சில ரகங்களை ஒதுக்கிக் கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசைக் கிட்டிப் போட்டு நெருக்கத் தயங்காத ஆட்சி. கரை போட்ட வேட்டியையும் வண்ணப் புடவையையும் கைத்தறிக்கே ஒதுக்கவேண்டும் என்று கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ள தாக அறிவிக்கப்பட்டு ஏறத்தாழ ஒன் றரை ஆண்டுகளாகியும், அதனை அமுல் நடத்தாமல் காலம் கடத்திவரும் மத்திய அரசை வற்புறுத்தி இந்தக் கோரிக் கையை உடனடியாக அமுல் நடத்தும் படி செய்ய நமது மாநில அரசு முயற்சி யெடுக்கும் என்பதில் ஐயமில்லை. கைத் தறிக்கென்று கரை போட்ட வேட்டியும் வண்ணப் புடவையும் ஒதுக்கப்பட்டால் ஓரளவு இந்தத் தொழிலுக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்பு ஏற்பட்டுவிடும். நெசவாளர்களது வாழ்விலும் நிம்மதி யேற்படும்.

அத்துடன் நமது அரசாங்கம் போக்கு வரத்துத் துறைத் தொழிலாளர்களுக்கு கதர் துணிகளுக்குப் பதிலாக மில் துணி களைக் கொடுப்பதை விட கைத்தறித் துணிகளையே கொடுக்கலாம். கைத் தறித் துணி மில் துணியைவிட நீடித்து உழைக்கக் கூடிய நல்ல தர முள்ளது என்பதுடன் விலையும் மில் துணியைவிட மலிவாகவே இருக்கும் என்றும், இந்த விஷயத்தை நமது மதிப் பிற்குரிய அமைச்சர் பரிசிலனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள் கிறேன்.

அத்துடன் நமது அரசாங்க ஊழியர் களுக்குப் பொங்கல்—தீபாவளி போன்ற பண்டிகைக் காலங்களில் தவணை கடன் களுக்குக் கைத்தறித் துணிகளை விற் பனை செய்ய ஏற்பாடு செய்யலாம். இப்படிப்பட்ட பண்டிகைக் காலங்களில் நமது அரசாங்கத்தில் பணியாற்றும் கடை நிலை, இடை நிலை ஊழியர்கள் ஏராளமான துணிகளை வாங்குகிறார்கள். அவர்களுக்குத் தவணைக் கடன்களில் கைத்தறித் துணிகள் கொடுக்கப்படு மானால் மனமுவந்து உற்சாகத்தோடு முன்வந்து தங்களுக்குத் தேவையான துணிகளைக் கைத்தறித் துணிகளாகவே வாங்குவார்கள். அவர்களுக்குக் கொடுக் கப்படும் கைத்தறித் துணிகளுக்கான தொகையை மூன்று மாதத் தவணையில் அவர்களது சம்பளத்திலிருந்து பிடித்துக் கொள்ளலாம். இதுபற்றியும் நமது அரசாங்கம் பரிசிலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கைத்தறித் தொழிலுக்கு அர சாங்கம் எந்தெந்த வகையில் உதவி செய்ய முடியுமோ அந்த வகையிலெல் லாம் உதவி செய்யும் என்பதில் சந்தேக மில்லை. அத்துடன் பொதுமக்களும் தங்களாலியன்ற ஆதரவைக் கொடுத் தால்தான் இந்தத் தொழில் வாழும்—வளரும்—நெசவாளர்கள் குடும்பம் நிம்மதியடையும். எனவே இங்கு வந் துள்ள மக்கள் அனைவரும் இங்குள்ள துணிகளை வாங்கிச் சென்று கடந்த நான்கு நாட்களில் ஏற்பட்ட விற் பனையை மிஞ்சக்கூடிய வகையில் இன் றைய விற்பனை அமையும்படி பார்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் அடுத்து வருகின்ற ஒவ்வொரு நாளும் முதல் நாளைவிட விற்பனை அதிகம் என்ற நிலை ஏற்படவேண்டும்.

இன்று கைத்தறித் துணிகளில் ஏற் பட்டுள்ள முன்னேற்றத்தைக் கண்டு நீங்களே வியப்படைவீர்கள். ஒருமுறை நீங்கள் கைத்தறித் துணிகளை வாங்கிப் பாருங்கள். அதனுடைய உழைப்புத் தரத்தைக் கணக்கிட்டுப் பாருங்கள். அதன் விலைக்கும் மில் துணியின்விலைக் கும் உள்ள விலை வித்தியாசத்தை யும் பாருங்கள். அப்போது மில் துணியை விட கைத்தறித் துணி நீடித்து உழைக்கக்கூடியதாக இருப்பதையும், விலை குறைவாக இருப்பதையும் உங் களால் உணர முடியும். எனவே இந்த வித்தியாசத்தைச் சோதித்துப் பார்ப்ப தற்காகவாவது நீங்கள் ஒவ்வொரு வரும் கட்டாயம் கைத்தறித் துணிகளை வாங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கைத்தறிக் கலையைக் காப்போம்

திரு மு. கருணாநிதி,
பொது மராமத்துத் துறை அமைச்சர்.

இந்தக் கைத்தறி வார விழா சில ஆண்டுகளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. மக்களது கருத்தைக் கவரத்தக்க வகையில் ஆண்டுக்கு ஆண்டு சிறப்படைந்து வரும் இந்த விழா இந்த ஆண்டு ஒரு தனிச் சிறப்புடன் விளங்குகிறது. சென்ற பல ஆண்டுகளைவிட இந்த ஆண்டு இந்த விழாவில் அதிக அளவில் கைத்தறித் துணிகள் விற்பனையாகியுள்ளன என்று நண்பர் நாச்சிமுத்து அவர்கள் குறிப்பிட்டார்.

சென்ற ஆண்டில் இந்த விழாவில் முதல் நான்கு நாட்களில் நடந்த விற்பனையைவிட இந்த ஆண்டு இந்த நான்கு நாட்களில் விற்பனை அதிகமாகியுள்ளது. நேற்று மட்டும் கிட்டத்தட்ட இரண்டு லட்சம் ரூபாய் அளவுக்கு விற்பனையாகியுள்ளது என்று அவர் கூறியதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த அளவு இந்த விழா சிறப்படைந்தமைக்குக் காரணம் மக்கள் காலமெல்லாம் பாடுபட்டு புதிய அரசை நிறுவியுள்ள திருப்தியாக இருக்கலாம்.

1952-ஆம் ஆண்டில் கைத்தறித் தொழிலுக்கு ஏற்பட்ட சோதனையையும் அந்தச் சமயத்தில் கழகத்தின் சாதனையையும் எடுத்து இங்கே விளக்கினார்கள்.

அன்று கைத்தறித் தொழிலில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டதின் காரணமாக நெசவாளர்கள் குடும்பம் குடும்பமாக கண்ணீரும் கம்பலையுமாக சேலத்திலிருந்தும் சின்னாளப்பட்டியிலிருந்தும் சென்னை நோக்கி ஓடி வந்தார்கள். அவர்களது கண்ணீரை முழுமையாகத் துடைக்க முடியாவிட்டாலும் கைத்தறித் துணிகளுக்குப் பொது மக்களிடையே ஆதரவு ஏற்பட நம்மாலான நல்ல முயற்சி செய்வோம் என்ற நல்ல எண்ணத்தோடு நாங்கள் கைத்தறித் துணிகளை மூட்டை மூட்டையாகக் கட்டித் தலையிலும் தோளிலும் சுமந்து கொண்டு பட்டிதொட்டிகளிலும் பட்டணங்களிலும் தெருத்தெருவாக வீடு வீடாக ஏறி இறங்கினோம். கைத்தறித் துணிகளுக்கு நல்ல ஆதரவு கிடைக்கத் துணை புரிந்தோம்.

நாங்கள் கைத்தறித் துணிகளை தலையில் சுமந்து விற்றதோடு நின்றுவிடவில்லை; மற்றவர்களைக் கைத்தறி ஆடைகளை வாங்குங்கள் என்று வற்புறுத்துவதோடும் நின்றுவிடவில்லை. நாங்களே அதற்கு அடையாளச் சின்னங்களாகவும் இருந்து வருகிறோம்.

கழகத் தலைவர்களும் தொண்டர்களும் ஆதரவாளர்களும் கூடுமானவரை கைத்தறி ஆடைகளையே அணிந்து கொள்ளவேண்டும் என்று தீர்மானித்து அதன்படி நடந்து வருகிறோம். எங்கள் கழகத்தில் கைத்தறித் துணி அணிவது ஒரு கட்டாயக் கடமையாகக் கருதப்படுகிறது.

எப்படி விடுதலைப் போராட்டத்தின் போது காங்கிரஸிலிருந்தவர்கள் கதர் அணிவது கட்டாயமாக இருந்ததோ, காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கு கதர் அடையாளமாக இருக்கிறதோ அது போலவே இன்று கழகத்தில் உள்ளவர்களுக்குக் கைத்தறியாடை ஒரு கட்டாயச் சின்னமாகக் கருதப்படுகிறது.

நீண்ட நெடுங்காலமாக தமிழகத்தின் தனிச் சிறப்பிற்குக் காரணமாக இருந்து வரும் கைத்தறிக் கலையைக் காப்பாற்ற வேண்டியது தமிழ் மக்களின் தலையாய கடமையாகும்.

கைத்தறித் தொழிலுக்கு இன்று தரப்படவேண்டிய மரியாதை தரப்படவில்லை என்பதையும், கைத்தறி நெசவாளர்களுக்கு இருக்கவேண்டிய வசதியும் வாய்ப்பும் இல்லையென்பதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

கோடீஸ்வரர்களிடமும் கோடியிருக்கிறது, நெசவாளியிடமும் கோடியிருக்கிறது என்று மணிமொழியார் சிலேடையாகக் கூறினார். ஆனால் அந்தக் கோடியை வைத்திருக்கும் கோடீஸ்வரன் கூடகோபுரத்திலே குதூகலமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றான். இந்தக் கோடியை வைத்திருக்கும் நெசவாளி ஒரு கோடியிலே, குடிசையிலே குடிப்பதற்குக் கஞ்சியின்றி குமுறிக் கொண்டிருக்கிறான்.

பட்டாடை நெய்யும் தொழிலாளியின் வாழ்வு பட்டுப்போய் கிடக்கிறது. இந்த நிலையை மாற்றித் தீரவேண்டும். அதற்காகத் தான் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விழாவுக்குத் தாய்மார்கள் ஏராளமாக வந்திருக்கிறார்கள். இங்கு பெருங் கூட்டம் கூடியிருக்கிறது.

இப்படியெல்லாம் விழா நடத்தி, வேடிக்கை காட்டி, நாடகம் நடத்தி உங்களைக் கூட்டிவைத்து கைத்தறித் துணிக்கு ஆதரவு தேடப்படுகிறது. காரணம் கலைத் துறையில் மக்களுக்கு ஒரு தனி ஈடுபாடு ஏற்பட்டுவிட்டது. அதை யாராலும் மாற்றமுடியாது.

எனவே, இனி இந்த விழாவில் நடைபெறும் நாடகங்கள் அனைத்தும் கைத்தறித தொழிலின் நிலையை விளக்குவதாக, நெசவாளர்களது வாழ்க்கைப் போராட்டங்களை எடுத்துக்காட்டுவதாக இருக்க வேண்டும் என்று நண்பர் நாச்சிமுத்து அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட நாடகங்களுக்குக் கதை எங்கே என்று கேட்டால் என்னைப் பொருத்தமட்டில் அதற்குக் கொஞ்சம் நேரத்தை ஒதுக்கி அதற்கான கதையை எழுதிக் கொடுக்க என்றும் தயாராக இருக்கிறேன்.

பன்னெடு நாட்களுக்கு முன் வாழ்ந்த பழந்தமிழ் மக்கள் பலவண்ண கைத்தறியாடைகளை அணிந்து பசும் புற்றரையில் அமர்ந்து பால் வண்ண நிலவொளியில் மகிழ்ந்திருந்ததெல்லாம் பழங்கதையாக விட்டன. அன்று கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருந்த மக்கள வசதியும் வாய்ப்பும் பெற்றிருந்தார்கள். அந்தக் காலத்தில் நெய்யபபட்ட அழகான மெல்லிய ஆடைகளைத் தைத்துக் கொடுக்கத் தையற்காரர்களும் இருந்தார்கள். சிலப்பதிகார காலததில் அவர்களைத் துன்னகர்கள் என்று அழைத்தாகள். பொற்கொல்லன் சட்டை போட்டுக்கொண்டு அரசவைக்கு வந்தான் என்று கூறப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புப் பெற்ற நமது தமிழகத்தில் இன்று கைத்தறி நெசவாளர்களின் நிலை வேதனையளிப்பதாக இருக்கிறது. அழகான ஆடைகளை நெய்பவன் அழுது கொண்டே இருக்கிறான். பட்டாடை நெய்பவன் பட்டினிக் கிடந்து துடித்துக் கொண்டிருக்கிறான். எனவே இன்று அல்லல்பட்டு ஆற்ருது துடிக்கும் நெசவாளர்களது கண்ணீரைத் துடைக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும். இந்த அரசும் அந்தக் கடமையை உணர்ந்து தன்னாலானதைச் செய்யும்....

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் காக்கி உடைகளுக்குக் கைத்தறித் துணியைப் பயன்படுத்தலாம் என்று நண்பர் காஞ்சி மணிமொழியார் கூறினர். கைத்தறித் துணிகள் மில் காக்கித் துணிகளைப் போலவே நீடித்து உழைக்கக்கூடியவையாக இருக்கும் என்றும், விலையும் மில் துணியைவிடக் குறைவாகவே இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். அதற்காகத்தான் நண்பர் நாச்சிமுத்து அவர்கள்கூட அரசாங்கக் காரியங்களுக்கெல்லாம் கைத்தறித் துணிகளை உபயோகப்படுத்தவேண்டும் என்று ஜாடையாகக் குறிப்பிட்டார்.

நான் கடந்த நான்கு நாட்களில் பத்தாயிரம் போக்குவரத்துத் தொழிலாளர்களையும் சந்தித்தேன். அவர்கள் அனைவரும் ஒரே குரலில் கதர் துணியை அணிந்து கொண்டு எங்களால் தாக்குப் பிடிக்க முடியவில்லை; அவை நீடித்து உழைப்பதும் இல்லை; எனவே எங்களுக்கு மில் துணி கொடுக்கவேண்டும் என்று கேட்டார்கள்.

அதன் பிறகு அதிகாரிகளைக் கலந்து கணக்கு பார்த்தபோது மில் துணியை விடக் கதர் துணிக்கு இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் அதிகம் செலவாகிறது என்பதை அறிந்தேன். ஆகவே போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு மில் துணி கொடுக்கப்படும் என்று கூறினேன்.

இப்போது மில் துணியைவிடக் கைத்தறித் துணி விலை குறைவாக இருக்கும் என்றும், அது மில் துணியைப் போலவே நீடித்து உழைக்கக்கூடியதாகவும் இருக்கும் என்றும் கூறப்படுகிறது. இதையும் நாங்கள் பரிசீலிப்போம்.

நாளைக்கே உங்களது கோரிக்கையை அனுப்பி வையுங்கள். கைத்தறித் துணியின் விலை விவரம் குறிப்பிட்டு எழுதுங்கள். அது மில் துணியின் அளவுக்கு மிச்சப்படக் கூடியதாக இருந்தால் நிச்சயம் ஏற்றுக் கொள்வோம.

கைத்தறித் தொழிலுக்கு எந்தெந்த வகையில் பாதுகாப்புக் கொடுக்க முடியுமோ, நெசவாளர்களது வாழ்வில் நிம்மதியேற்பட என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்யத் தயங்க மாட்டோம். பொது மக்களது ஆதரவும் அரசாங்கத்தின் உதவியும் கைத்தறித் தொழிலுக்கு என்றும் இருக்கும். இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களது வாழ்வும் சிறக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இரு கண்கள்!

திரு ந. சஞ்சீவி, எம்.ஏ., எம்.லிட்.,

கைத்தறியின்மீதும் கைத்தறி நெசவாளர்கள்மீதும் பற்றுக்கொண்டு காலமெல்லாம் பணியாற்றிவரும் தலைவர் திரு நாச்சிமுத்து அவர்களுக்கும், கைத்தறி நெசவாளர்கள் வாழ அவர்களுக்கு ஆதரவு கொடுத்துவரும் பொதுமக்களுக்கும், அரசாங்கத்திற்கும் தமிழ்ப் புத்தாண்டு பிறந்துள்ள இந்நந்நாளில் எனது உளங்கனிந்த வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இந்தக் கைத்தறி வார விழாவில் பேச ஒப்புக்கொள்வதற்கே காரணம் எனக்கு காந்தீயத்தின் மீதுள்ள நம்பிக்கைதான்.

நான் முன்பும் பல முறைகளில் வற்புறுத்திவந்த அதே கருத்தைத்தான் இன்றும் வற்புறுத்துகிறேன். என்றைக்கு இந்த உலகத்திலிருந்து யந்திரங்கள் ஒழிகின்றனவோ அன்றுதான் மனித குலத்திற்கு நிம்மதியேற்படும் என்று அன்றும் சொன்னேன்; இன்றும் ஆண்டுகள் சில குறுக்கே கடந்துவிட்டாலும், வாதப் பிரதிவாதங்கள் எழுந்திருந்தாலும் அதையேதான் நான் வற்புறுத்திக் கூறுவேன்.

கைத்தறியின்பாலும் கதரின் மீதும் நான் கொண்டுள்ள பற்று கண்மூடித்தனமானதல்ல. காந்தீயத் தத்துவத்தில் நான் கொண்டுள்ள பற்றுதலின் காரணமாகத்தான் கதரின்மீதும் கைத்தறியின்மீதும் பற்றும் பாசமும் வைத்துள்ளேன்.

யந்திரங்களுக்கு நாம் அடிமைகளாகி விட்டோம். அந்த மாயையிலிருந்து என்று விடுபடுகின்றோமோ அன்றுதான் நமது வாழ்வு முழுமை பெற்றதாகும்.

இந்த உலகத்தில் சில உண்மைகள் சில தலைமுறைகளுக்கு அல்லது பல தலைமுறைகளுக்கேகூட ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணிக்கப்படுவதுண்டு. அப்படிப் புறக்கணிக்கப்படுவதாலேயே அந்த உண்மைகள் உண்மைகளல்ல என்று ஆகிவிடாது. எத்தனை தலைமுறைகளுக்கு அந்த உண்மைகள் புறக்கணிக்கப்பட்டாலும் என்றைக்காவது ஒருநாள் அந்த உண்மைகள் உணரப்பட்டே தீரும்.

ஒரு சில உண்மைகள் உணரப்பட்டாலும் அவைகளைப் பின்பற்ற முடியாத காரணத்தாலும் அவைகள் புறக்கணிக்கப்படுவதுண்டு. அப்போதும் அந்த உண்மைகள் மடிந்து விடுவதில்லை.

யந்திரம் மனிதகுலத்தின் முதல் விரோதி என்ற உண்மையை என்றேனும் ஒருநாள் இந்த உலகம் உணர்ந்துதான் தீரும். அன்றுதான் இந்த உலகத்தின் அடிப்படைச் சிக்கல்கள் தீரும்.

உழவும் நெசவும் சமுதாயத்தின் இரண்டு கண்களாகக் கருதப்படுகின்றன. இந்தச் சமுதாயத்தின் பொருளாதாரமே இந்த இரண்டு தொழில்களின் வாழ்விலும் வளத்திலும்தான் அடங்கியிருக்கிறது என்பதை மிகத் தெளிவாக உணர்ந்து கொண்ட காந்தியடிகள் உழவுக்கும் நெசவுக்கும் உயர்ந்த இடத்தைக் கொடுத்தார்.

காந்தீயத் தத்துவத்தில் நம்பிக்கை வைத்தால்தான் நம் நாட்டின் வருங்காலம் வளமுள்ளதாக இருக்கமுடியும்; இல்லாவிட்டால் ஒருபோதும் இந்த நாட்டிற்கு விடிவு ஏற்படமுடியாது என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

நாம் கைத்தறித் தொழிலை ஆதரிப்பதில் ஒரு மத ஈடுபாடு போன்ற ஈடுபாட்டைக் கொண்டிருக்கவேண்டும். ஒரு சிலவற்றில் அத்தகைய விரதங்களைக் கைக்கொண்டால்தான் ஒரு மாறுதலை எதிர்பார்க்க முடியும். நாம் எப்போதும் கைத்தறித் துணிகளையே அணிவது, எதற்கும் கைத்தறித் துணிகளையே பயன்படுத்துவது என்ற ஒரு விரதத்தை மேற்கொள்ளவேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன்பே ராஜாஜி அவர்கள் கைத்தறிச் சிக்கலுக்கு ஒரு தீர்வைக் கண்டுபிடித்துக் கூறினார். அகில இந்தியக் காங்கிரஸில் செல்வாக்குப் பெற்று அவர் அனைத்திந்தியத் தலைவராக விளங்கியபோது இந்த யோசனையை வெளியிட்டார்.

கைத்தறிக்கென்று கரைபோட்ட வேட்டியையும் வண்ணப் புடவைகளையும் ஒதுக்கவேண்டும் என்று அவர் கூறினார். அவர் மாநிலத்திலிருந்து கூறிய இந்த யோசனையை மையத்திலிருப்பவர்கள் கிடப்பில் போட்டுவிட்டார்கள்.

இந்தக் கைத்தறித் தொழிலில் அதிக அளவில் ஈடுபட்டுள்ள மாநிலங்கள் தமிழகமும் ஆந்திரமும்தான். எனவே, கைத்தறிச் சிக்கல் என்பது ஒரு தென்னிந்தியச் சிக்கலாக இருக்கிறது. இது ஒரு தென்னிந்தியச் சிக்கலாக இருப்பதால்தான் இந்தச் சிக்கலில் மத்திய அரசு அக்கறை காட்டவில்லையோ என்று என்போன்றவர்களையெல்லாம் ஐயுறும்படி செய்கிறது. இந்த ஐயத்தைப் போக்கும் வகையில் மத்திய அரசு இந்தச் சிக்கலில் இனிமேலாவது அக்கறை செலுத்தும் என்று நம்புகிறேன்.

இன்று தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி ஏற்பட்டுள்ளது. அவர்கள்பால் நல்லெண்ணம் கொண்டவன் என்ற முறையில் அவர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குக் கதர் துணிகளுக்குப் பதிலாக மில் துணிகள் கொடுக்கப்படவிருப்பதாக ஒரு செய்தியைப் பார்த்தேன். அதைவிட கைத்தறித் துணியை அவர்களுக்குக் கொடுப்பது நல்லது என்று நான் வேண்டிக் கொள்கிறேன். கைத்தறித் துணிகள் இன்று மில் துணியைவிடப் பலவகையிலும முன்னேற்றமடைந்துள்ளன. பளபளப்பிலும் சுருங்கா தன்மையிலும் நீடித்து உழைக்கும் தரத்திலும் சிறந்து விளங்குகின்றன. எனவே போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குக் கதருக்குப் பதிலாக வேறு ஆடைகள் கொடுககப்படுவதாக இருந்தால் அது கைத்தறி ஆடைகளாக இருக்கட்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

இன்று ஆட்சிப் பொறுப்பேற்ற தி.மு.க. வினர் அன்று கைத்தறிக்கு நெருக்கடி என்றவுடனே ஒரு மாபெரும் இயக்கத்தை நடத்திக் கைத்தறிக்கு ஆதரவு திரட்டியவர்களாவார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்று ஆட்சிக்கு வந்திருப்பதால் கைத்தறிக்கு உரிய பாதுகாப்பை அவர்கள் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

இன்று பொது மக்களிடையே கைத்தறித் துணிகளுக்கு நல்ல ஆதரவு ஏற்பட்டு வருகிறது. கைத்தறியின்பால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பரிவுணர்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இந்நாட்டுப் பத்திரிகைகள் கைத்தறிச் சிக்கல்களையும் நெசவாளர்களது நிலையையும் உள்ளத்தைத் தொடும் அளவில் சித்தரித்துக் காட்டி, இந்தத் தொழிலின்பால் மக்களது ஆதரவை மேலும் மேலும் பெருக்க உதவவேண்டும்.

அத்துடன் கைத்தறித் துணிகள் நீடித்து உழைப்பதில்லை என்ற பழிச் சொல்லைப் போக்கவும் பத்திரிகைகள் பாடுபடவேண்டும்.

அத்துடன் நாம் நமது கைத்தறித் துணிகளுக்குப் பிற நாட்டார்களின் ஆதரவை எதிர்பார்த்து நிற்பது அநீதியாகும். தன் கையே தனக்குதவி என்பது போல் நம் நாட்டு நெசவாளர்களை வாழ வைப்பது நமது கடமை என்பதை நாம் உணரவேண்டும்.

நம் நாட்டிலுள்ள லட்சக்கணக்கான நெசவாளர்களது குடும்பங்களைக் காப்பாற்றும் பொறுப்பை நாம்தான் ஏற்றுக் கொள்ளவேண்டும். அமெரிக்கர்களும் ஐரோப்பாக் கண்டத்திலிருப்பவர்களும் நம் நாட்டு நெசவாளர்களுக்கு வாழ்வளிப்பார்கள் என்று நம்பிக்கொண்டிருக்கக்கூடாது.

எனவே இந்தக் கடமையை உணர்ந்து நீங்கள் எல்லோரும் கைத்தறித் துணிகளை வாங்குவது என்று உறுதியெடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன் குறிப்பாகத் தாய்மார்கள் கைத்தறிக்குக் கொடுத்துவரும் ஆதரவைத் தொடர்ந்து கொடுத்து வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை

தாராபுரம்

20, 2 x 20, 40, 60, நம்பர்களில்

நேர்த்தியான நூல்கள் தயாராகின்றன.

தந்தி : கூட்டுறவு   ஸ்தாபிதம் : **1947**   போன் : **4034**

No. A. 1922 மதுரை மஹாலெக்ஷ்மி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

50, லெக்ஷ்மிபுரம் குறுக்குத் தெரு, மதுரை.

*நீடித்த உழைப்பு, நியாயமான விலை, கவர்ச்சியான ரகம், கண்ணைக் கவரும் நிறம், புதுமையான டிசைன், நம்பிக்கையான தயாரிப்புகளுக்குச் சிறந்தவை **"மஹாலெக்ஷ்மி கைத்தறி ஆடைகளே"**. தற்காலத்திற்கேற்ற 100s × 80s நூல்களில் பல விதமான அழகிய டெக்னிக் பார்டர்களில் பேட்டு & கொட்டடி தினுசுகள் தயார்செய்து வருகிறோம். நம் சங்கத்திற்கு ஒருமுறை விஜயம் செய்து எங்களை ஆதரிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.*

"உங்கள் திருப்தியே எங்கள் நோக்கம்"

குறிப்பு :—எங்கள் சங்க ஜவுளிகள் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் எல்லா 'கோ-ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையங்களிலும், மற்றும் 'கைத்தறி மாளிகை' மதராஸ், கல்கத்தா & பாம்பேயிலும் கிடைக்கும்.

★

MAHALAKSHMI CO-OP. FABRICS ARE FAMOUS FOR
FAIR PRICE, FAST COLOUR, FANCY DESIGNS, FINE QUALITY.

— ***Please visit and choose your wants*** —

No. A. 1922, MADURAI MAHALAKSHMI W. C. S. LIMITED,
50, Lakshmipuram Cross Street : MADURAI.

J. N. சுப்பய்யர், தலைவர்.

தந்தி: "KANYASPIN" தொலைபேசி எண்: 4

கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட், ஆரல்வாய்மொழி.

★

அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம்	...	ரூ. 60 லட்சம்
செலுத்தப்பட்ட பங்குத் தொகை	...	ரூ. 23.68 லட்சம்

தமிழக அரசு ரூ. 14 லட்சம் பங்காக முதலீடு செய்துள்ளது.
கதிர்களின் எண்ணிக்கை 12,000.

இவ்வாலையில் 9—12—1965-லிருந்து உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. தற்போது 20s & 26s தரமான நூலை உற்பத்தி செய்து, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் மூலமாக நெசவாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஒரு பங்கின் விலை ரூ. 100. ஒவ்வொரு பங்குக்கும் ரூ. 2 வீதம் பிரவேசனக் கட்டணம் வசூலிக்கப்படும்.

பங்குகளுக்கு 9% வரை டிவிடென்ட் கொடுப்பதற்கு அரசாங்கத்தினர் சிறப்பாக அனுமதி தந்துள்ளார்கள் என்பதை மகிழ்வுடன் தெரியப்படுத்துகிறோம்.

பொதுமக்களும், கூட்டுறவு நிறுவனங்களும் ஏராளமாகப் பங்குகள் எடுக்குமாறு கோரப்படுகிறார்கள்.

விபரங்களுக்கு மானேஜிங் டைரக்டருக்கு எழுதவும்.

A. M. சுவாமிநாதன், B.Com. (Hons.), மானேஜிங் டைரக்டர்.

R. பொன்னப்ப நாடார், M.A., B.L., M.L.A., தலைவர்.

தொலைபேசி எண்: 21 தந்தி: 'மில்ஸ்'

திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை லிமிடெட், நாசரேத்.

எங்களது நூற்பாலை 12,000 கதிர்களைக் கொண்டு கடந்த மூன்று ஆண்டு காலமாக கூட்டுறவுத் துறையில் வெற்றிகரமாக இயங்கி வருகின்றது. இந்த ஆலையானது முக்கியமாக அயல்நாடுகளிலிருந்து தாயகம் திரும்பும் இந்தியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட முதல் கூட்டுறவு நூற்பாலையாகும். இந்த ஆலையின் தனிச் சிறப்பானது இதில் பணியாற்றுபவர்கள் அனைவரும் இந்த ஆலையின் உறுப்பினர்கள் ஆவர்.

ஆலையின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ. 60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ. 20,00,000
இயங்கும் கதிர்கள்	...	13,200
உற்பத்தி செய்யும் நூல்	...	40-ம் நம்பர்
1964—65-ம் வருடத்தில் பங்குதாரர்களுக்கு அறிவிக்கப்பட்ட டிவிடெண்ட்	...	9 சதவிகிதம் (ஆலையின் விதிகளில் கண்ட உச்சக்கட்ட வரம்பு)

ஆலையின் நூற்பு கதிர்களை 25,000-மாக உயர்த்த அனுமதிபெற்று, மத்திய, மாநில அரசினரின் உதவிகளுடன் விஸ்தரிப்புத் திட்டம் விரைவாக அமுல் செய்யப்பட்டு வருகிறது.

அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன இயந்திரங்களின் மூலம் நல்ல தரமுள்ள நூல் உற்பத்தி செய்கிறோம்.

எம். எம். ராஜேந்திரன், ஐ.ஏ.எஸ்., தலைவர்.

கூட்டுறவால் பாதுகாப்போம்!

திரு எஸ். மாதவன், பி.காம்., பி.எல்.,
சட்டம், கூட்டுறவுத்துறை அமைச்சர்.

கைத்தறித் தொழிலைப் பொருத்த மட்டிலும் எப்படிப்பட்ட உதவிகளைச் செய்தாலும் இது நீடித்து நிலைக்குமா என்பதுதான் இப்போதுள்ள சிக்கல். இந்தத் தொழில் நீடித்து நிலைத்து வாழ, இதை நம்பியுள்ள நெசவாளர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட நாம் எந்தெந்த வகையில் உதவி செய்ய வேண்டும் என்பதுதான் இப்போது நம் முன்புள்ள கேள்வி.

இந்தக் கைத்தறித் தொழில் வாழ, வளர இதை நம்பியுள்ள நெசவாளர்களது வாழ்வில் நிம்மதியேற்பட வழியென்ன? எப்படிப்பட்ட உதவிகளைச் செய்தால் இந்தத் தொழிலுக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்புக் கொடுக்க முடியும்? என்பது பற்றியெல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

தலைவர் திரு நாச்சிமுத்து அவர்கள் கைத்தறி நெசவாளர்களது நல்வாழ்வுக்காகத் தன்னை முழுக்க முழுக்க ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். அவரது இதயத்தில் கைத்தறி நெசவாளியின் உருவம் ஆழப் பதிந்துள்ளது. அவர் கைத்தறித் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைப் பற்றியும் சங்கடங்களைப்பற்றியும் விளக்கினார். இந்தத் தொழிலுக்கு எந்த அளவு உதவி செய்ய முடியுமோ, எந்தெந்த வகையில் பாதுகாப்பளிக்க முடியுமோ, இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள லட்சக்கணக்கான மக்களது வாழ்வு வளம்பெற என்னென்ன செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்யவேண்டும் என்பதை இந்த அரசாங்கம் ஒரு கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளது.

கைத்தறி நெசவாளர்களின் நிலை பற்றியோ, கைத்தறித் துணிகளின் நேர்த்தி பற்றியோ நான் விளக்க வேண்டிய அவசியமில்லை. நெசவாளர்களது நேர்மையும் கைத்தறித் துணிகளின் கவர்ச்சியும் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

இன்று ஆலைத் துணிகளோடு போட்டியிடத்தக்க அளவில் கைத்தறித் துணிகளின் மதிப்பு உயர்ந்துள்ளது. என்றாலும் நெசவாளர்களது வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. என்னதான் இந்தத் தொழிலுக்கு ஆதரவு தரப்பட்டாலும், உதவிகள் செய்யப்பட்டாலும் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படும்போது இந்தத் தொழில் தன்னைத்தானே தாக்குப் பிடிக்கக்கூடிய நிலையில் இல்லை. எனவே அந்த அளவில் இந்தத் தொழிலுக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்புத் தேவைப்படுகிறது.

ஓரளவு தனது திறமையாலும் பொது மக்களது ஆதரவாலும் இந்தத் தொழில் இன்று உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் வளர்ந்துவரும் சமுதாயத்தில் ஏற்படுகின்ற மாறுதல்களில்–பொருளாதாரப் போட்டிகளில் இந்தத் தொழில் அடிக்கடி நெருக்கடிகளுக்கு ஆளாகவேண்டிய நிலை ஏற்படுகிறது.

கூட்டுறவுத் துறையின் மூலம் இந்தத் தொழிலுக்கு ஓரளவு பாதுகாப்புக் கிடைத்து வருகிறது. எனவே கூட்டுறவுத் துறையை வலுப்படுத்துவதன் மூலம் இந்தத் தொழிலிலுள்ளவர்களுக்கு ஒரு பாதுகாப்புக் கிடைக்கும் என்பதால் அரசாங்கம் கூட்டுறவுத் துறைக்குத் தன்னாலான உதவிகளையெல்லாம் செய்து வருகிறது. இனி மேலும் தேவையான உதவிகளைச் செய்யும்.

கலைத்திறன் நிறைந்த இந்தத் தொழில் வாழ்ந்துதான் ஆகவேண்டும். இந்தத் தொழிலை நம்பியுள்ள லட்சக்கணக்கான குடும்பங்களுக்கு வாழ்வளித்துத்தான் தீரவேண்டும். தமிழக அரசைப் பொருத்த மட்டில் இந்தத் தொழிலை எப்பாடு பட்டேனும் பாதுகாத்துத்தான் தீருவதென்று உறுதியுடனிருக்கிறது. கூட்டுறவின் மூலமும் தனிப்பட்ட முறையிலும் இந்தத் தொழிலுக்கு எந்தெந்த வகையில் உதவி செய்ய முடியுமோ அந்தந்த வகையில் உதவி செய்ய வேண்டும் என்பதை தமிழக அரசு ஒரு கொள்கையாகவே வைத்துக் கொண்டுள்ளது.

அரசாங்க அலுவலகங்களில் எல்லாவற்றிலும் கதர் துணிதான் பயன்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டது. நாங்கள் பொறுப்பேற்றவுடன் எங்களுக்குக்

கைத்தறித் துணிதான் வேண்டு என்று கேட்டோம். எங்கள் வேண்டுகோளை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

இப்படி அரசாங்கமட்டத்தில் எல்லாத் துறைகளிலுமே கைத்தறித் துணிகள் பயன்படுத்தப்பட்டால் இந்தத் தொழிலுக்கு ஓரளவு உதவியாக இருக்கும். மதிப்பிற்குரிய பொதுப்பணி அமைச்சர் திரு கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டது போல அரசாங்கத் துறைகளில் கைத்தறித் துணிகளைப் பயன்படுத்துவது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைக் கூறிக் கொள்கிறேன். கைத்தறித் தொழிலுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதைக் கொள்கை அடிப்படையில் ஏற்றுக் கொண்டுள்ள இந்த அரசாங்கம் கைத்தறி நெசவாளர்களது வாழ்வுக்கும் உத்திரவாதமளிக்க முயலும் என்பதையும் கூறிக் கொள்கிறேன்.

தமிழகத்து நெசவாளர்களது திறமை வெளிநாட்டு மக்களும் விரும்பிப் போற்றுமளவு வளர்ந்துள்ளது. வண்ணம் மாறும் துணிகளுக்கு அமெரிக்காவில் வரவேற்புக் கிடைத்துள்ளது. ஆனால் இப்போது அங்கு மற்ற நாடுகளின் போட்டியின் காரணமாக நமது கைத்தறித் துணிகளுக்கு இருந்த கிராக்கி ஓரளவு குறைந்து விட்டதாகக் கூறப்படுகிறது. இருந்தாலும் அந்தப் போட்டியையும் சமாளிக்கக்கூடிய அளவில் விதவிதமான ரகங்களில் புதிய புதிய தினுசுகளைக் கைத்தறியில் நெய்வதன்மூலம் நமது ஏற்றுமதியை அதிகரிக்கமுடியும். அதற்காக அரசாங்கம் பலவழிகளிலும் முயற்சி செய்து வருகிறது. அதை அனுசரித்து நெசவாளர்கள் புதிய புதிய ரகங்களை உற்பத்தி செய்யவேண்டும்.

இந்த ஆண்டு இந்த விழா புதுமுறையில் நடைபெறுகிறது. சென்ற ஆண்டுகளைவிட இந்த ஆண்டில் மிகச் சிறப்பாக இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாவட்டங்கள் தோறும் பல்வேறு நகரங்களில் மிகச் சிறப்பாக இவ்விழா கொண்டாடப்பட வேண்டும் என்று அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இந்த விழாக்களிலெல்லாம் நாங்கள் தவறாது கலந்துகொள்ள வேண்டும் என்ற முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் கட்டளைக்கிணங்க நானும் எனது நண்பர்களும் இந்த விழாக்களில் தவறாது கலந்து கொண்டு வருகிறோம்.

இந்த ஆண்டு ஆங்காங்கு நடைபெற்றுவரும் விழாக்களில் சென்ற ஆண்டுகளைவிட நல்ல முறையில் விற்பனையாகி வருகிறது. கைத்தறித் துணிகளுக்குப் பொதுமக்களின் ஆதரவு நாளும் பெருகிக்கொண்டே இருக்கிறது. இத்தகையதொரு சூழ்நிலையில் கைத்தறிக்கு என்று சில குறிப்பிட்ட ரகங்கள் ஒதுக்கப்பட்டால் இந்தத் தொழிலுக்கு ஒரு நிரந்தரப் பாதுகாப்புக் கிடைக்கும். நெசவாளர்களது வாழ்விலும் நிம்மதியேற்படும்.

அந்த வகையில் மத்திய அரசை இந்த மாநில அரசு வற்புறுத்தும். இத்தொழிலுக்குச் சட்ட பூர்வமான பாதுகாப்புக் கிடைப்பதற்கான எல்லா முயற்சிகளையும் இந்த அரசாங்கம் மேற்கொள்ளும்.

கைத்தறித் தொழிலைப் பாதுகாக்க—நெசவாளர்கள் குடும்பங்களைக் காப்பாற்ற அரசாங்கம் எல்லாவிதமான உதவிகளையும் செய்யும். அதுபோலவே பொது மக்களும் இந்தத் தொழிலுக்கு ஆதரவு கொடுத்து இந்தத் தொழிலை நம்பியுள்ள குடும்பங்களைக் காப்பாற்றத் தங்களாலியன்றஅளவுஉதவவேண்டும்.

இன்று இந்தக் கைத்தறிப் பொருட்காட்சியைச் சுற்றிப் பார்த்தேன். விதவிதமான வண்ணங்களில் வியக்கத்தக்க வேலைப்பாடுகள்—விலையோ மிக மிக மலிவு—என்றாலும் அவை நீடித்து உழைக்கக் கூடியவை என்று கூறப்பட்டது. அதைப் பார்த்தபோது நான் உண்மையிலேயே மலைத்துப் போய் விட்டேன். நம் நாட்டில் கைத்தறி நெசவுக் கலை இந்த அளவு முன்னேறியுள்ளதா என்ற கேள்வியே என் உள்ளத்தில் எழுந்தது. பார்த்தால் அவை கைத்தறித் துணிகள் என்ற நம்பிக்கையே ஏற்படவில்லை. ஆலைத் துணிகளோ என்ற ஐயம்தான் ஏற்படும். அந்த அளவு இன்று கைத்தறி நெசவாளர்களின் கலைத் திறமை வளர்ந்துள்ளது. வறுமைக்கும் கலைக்கும் ஓர் உறவுண்டு போலும். வறுமையிலே வாடுகின்ற நெசவாளர்கள் கலைத் திறமையிலே எந்த அளவு உயர்ந்திருக்கிறார்கள் என்று நினைத்துப் பார்க்கும் போது இந்தத் திறமையைப் பாதுகாக்க வேண்டியது நம் நாட்டில் பிறந்த ஒவ்வொருவருடைய கடமையுமாகும் என்பதை உணர்ந்தேன். என்னைப் போலவே நீங்களும் உணர்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். எனவே இந்தத் தொழிலுக்கு என்றென்றும் அழிவு கிடையாது என்பது உறுதியாகிறது. இந்த உறுதிக்கு உருவம் கொடுக்க வேண்டியவர்கள் நாம்தான். இதை நிச்சயம் நாம் நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

நமது கடமை

கைத்தறித் துணிகளுக்குப் போட்டியாக மில் துணிகள் வந்துவிட்டதால் இந்தத் தொழிலுக்குக் கொஞ்சம் நெருக்கடி ஏற்பட்டது. அந்த நெருக்கடியிலிருந்து இந்தத் தொழிலை மீட்டால்தான் இதை நம்பியிருக்கின்ற ஏழை நெசவாளர்களைக் காப்பாற்ற முடியும்.

இந்தக் காலத்தில் எல்லாம் வேகத்திலேயே ஓடிக்கொண்டிருக்கிறது. எதையெடுத்தாலும் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. எவ்வளவுக்கெவ்வளவு யந்திரங்களைக் கொண்டு வேகமாகத் தயாரிக்கப்பட முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு வேகமாகத் தயாரிப்பதில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். அந்த அளவு தேவையும் அதிகரித்து வருகிறது. வேகமாகச் செய்வதன்மூலம் அதிக உற்பத்தியைப் பெருக்கி விலையைக் குறைக்கவேண்டும் என்று கூறப்படுகிறது.

ஆனால் கைத்தறிப் பிரச்னை இந்த வேகத்திலிருந்து மாறுபட்டது. மற்ற பொருட்களெல்லாம் எவ்வளவு உற்பத்தி செய்தாலும் பற்றுக்குறை என்ற நிலை ஏற்படுகிறது. ஆனால் கைத்தறித் துணிகள் எவ்வளவு குறைவாக உற்பத்தி செய்தாலும் தேக்கம் ஏற்படுகிறது.

அத்துடன் கைத்தறிக்குப் பலவகையிலும் நெருக்கடிகள் ஏற்படுகின்றன. பருத்தி விளைச்சல் குறைவாக இருப்பதால் பஞ்சு வெளியேயிருந்து இறக்குமதி செய்யப் படுகிறது. ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்ட காரணத்தால் இறக்குமதி செய்யப்படும் பஞ்சின் விலை அதிகரித்துள்ளது. அப்படியே அதிக விலை கொடுத்தாலும் ஆலைகளுக்குத் தேவையான பஞ்சு கிடைப்பதில்லை. இதன் காரணமாக ஆலைகளின் வேலை நாட்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் நூல் விலை உயர்ந்துவிட்டது. அதனால், கைத்தறித் துணியின் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது. என்றாலும் துணியின் விலை உயரவில்லை. இதனால் நெசவாளர்களுக்குக் கூலி கட்டுப்படியாவதில்லை.

இதற்குக் காரணம் நம் நாட்டில் விவசாயத்திற்கு ஊக்கமளிக்கக்கூடிய வகையில் அவனது உற்பத்திப் பொருட்களுக்கு விலை கிடைப்பதில்லை. நம் விவசாயிகளுக்கு உற்சாகமேற்படத்தக்க வகையில் விவசாயப் பொருட்களின் விலை இருக்குமானால், கைத்தறித் தொழிலுக்கும் அது நன்மை தருவதாக அமையும்.

பருத்தியின் விலையை எடுத்துக் கொண்டால் ஒரு பொதிக்கு முன்னூற்றி ஐம்பது ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த விலைக்கு விவசாயிகளிடமிருந்து வாங்கப்படுகிற பருத்தியிலிருந்து விதையை எடுத்து, அதை விவசாயிகளிடமே அதிக விலைக்கு விற்பதுடன் பஞ்சின் விலையும் பல மடங்கு உயர்த்தப்படுகிறது. ஒரு பேல் பஞ்சு ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் என்று விற்கப்படுகிறது. இடையிலுள்ளவர்கள் ஆயிரத்து இருநூறு ரூபாய் இலாபத்தை அடைகிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். இடையில் இலாபத்தை அனுபவிக்கும் தரகர்கள் ஒழிக்கப்பட வேண்டும். விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை கொடுக்கப்படுவதுடன் வாங்கி உபயோகிக்கும் மக்களுக்கும் குறைந்த விலைக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

திரு பி. ஜி. கருத்திருமன்,
பி.எஸ்ஸி., எம்.எல்.ஏ.,

விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைத்தால் அவர்கள் உற்சாகத்துடன் உற்பத்தியில் ஈடுபடுவார்கள். நம் நாட்டுக்குத் தேவையான அளவு பருத்தியை உற்பத்திசெய்ய முன்வருவார்கள். இங்கேயே தேவையான அளவு பருத்தி உற்பத்தி செய்யப்படுமானால் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய நிலை வராது. அதே சமயத்தில் இடையில் இலாபம் அனுபவிப்பவர்களும் இல்லாமல் போனால் குறைந்த விலைக்கு நூல் கிடைக்கும். அப்போது கைத்தறித் துணிகளின் உற்பத்திச் செலவும் குறையும். நெசவாளிகளுக்கும் கட்டுப்படியாகக்கூடிய அளவு கூலி கிடைக்கும்.

கைத்தறித் தொழிலுக்கும் விவசாயத் திற்கும் இப்படிப்பட்ட ஓர் உறவு இருப்ப தோடு கைத்தறித் தொழிலில் ஈடுபட் டுள்ள மக்களைப் போல மூன்று மடங்கு அதிகமான மக்கள் விவசாயத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். இந்த இரண்டு தொழில்களிலுள்ளவர்கள்தான் இன்று சமுதாயத்தில் பரந்து இருக்கிறார்கள். இவர்களது வாழ்க்கை நிலைமை நாளுக்கு நாள் கீழ்நோக்கிப் போகுமானால் சமு தாயத்தின் மொத்தப் பொருளாதார நிலையே சீர் குலைந்து விடும்.

இந்த நிலையை மாற்றியமைக்கவேண் டும். உற்பத்திக்கும் விநியோகத்திற்கு மிடையே உள்ள தரகர்கள் ஒழிக்கப் பட்டாலே போதும். விவசாயிகளுக்கும் கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைக்கும். கைத்தறிகளுக்கும் குறைந்த விலையில் நூல்கிடைக்கும். கூலியும் கட்டுப்படி யாகக்கூடியதாக இருக்கும். விவசாயி களது வாழ்விலும் நெசவாளர்களது வாழ்விலும் மறுமலர்ச்சி ஏற்படுமானால் நமது பொருளாதாரத்திலும் ஒரு மறு மலர்ச்சி ஏற்பட்டுவிடும்.

இப்போது கைத்தறித் துணிகளுக்கு ஒரு விலை நிர்ணயம் கிடையாது. இந்த நிலை மாறவேண்டும். நெசவாளர் களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய கூலி இருக்கவேண்டும். அப்படி கைத்தறித் துணிகளின் விலை நிர்ணயம் செய்யப் படும்போது கைத்தறித் தொழிலுக்கு சில சட்டபூர்வமான பாதுகாப்பளிக்கப் படவேண்டும். கைத்தறிக்கென்று குறிப் பிட்ட சில ரகங்களை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும்.

கரை போட்ட வேட்டியும், புடவையும் கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட வேண் டும் என்ற கோரிக்கையை அரசாங்கம் கொள்கையளவில் ஏற்றுக்கொண் டுள்ளது. இந்தத் திட்டம் அமுல் நடத்தப்பட்டால் அப்போது ஓரளவு இந்தக் கைத்தறித் தொழிலுக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்புக் கிடைக்க வழி ஏற்படும்.

எப்படி இப்பொழுது மில்களுக்கு விலை கட்டுப்படியாகவில்லையென்றவுடன் விலைக் கட்டுப்பாடு செய்யப்பட்ட துணி களுக்கு நாலரை சத விகித விலை உயர்வு அளிக்கப்பட்டதோ, அதுபோலவே கைத்தறிக்கும் விலை கட்டுப்படியாக வில்லை என்றால் விலையை உயர்த்திக் கொள்ள வசதி இருக்கவேண்டும். அதற்கு ஒரே வழி கைத்தறிக்கென்று ஒரு சில ரகங்களை ஒதுக்கிக்கொடுப்பது தான். அப்படி ஒதுக்கப்பட்டால்தான் இந்தத் தொழில் ஒரு நிரந்தரத் தன்மை யைப் பெற முடியும்.

இந்தத் தொழிலுக்கு நிரந்தரத் தன்மை ஏற்படவேண்டும் என்று நாம் விரும்புவதற்குக் காரணம் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கைப் பெருக்கம்தான்.

தமிழ் நாட்டில் இந்தத் தொழிலை நம்பி முப்பது லட்சம் பேர் இருப்பதாக கூறப் படுகிறது. இந்த முப்பது லட்சம் பேருக்கும் வேலை வாய்ப்புக் கொடுப்பது என்பது சாதாரண விஷயமல்ல. அதுவும் நம் நாட்டில் பெருகிவரும் ஜனத் தொகை விகிதத்தைப் பார்க்கும்போது வேலை வாய்ப்புகள் மிகமிகக் குறைவான நிலையிலேயே என்றும் இருந்து கொண் டிருக்கும் என்று தோன்றுகிறது. இந்த நிலையில் இந்தத் தொழில் வாழ்ந்து தான் ஆகவேண்டும் என்ற ஒரு கட்டா யம் ஏற்பட்டுள்ளது.

எனவே எந்த எந்த வகையில் கைத் தறிக்கு உதவி செய்யமுடியுமோ, பாது காப்புக் கொடுக்க முடியுமோ, அந்தந்த வகையில் உதவி செய்து இந்தத் தொழிலைப் பாதுகாத்துத் தீரவேண்டி யது நமது கடமையாகும். அரசாங்கம் தன்னாலியன்ற உதவிகளைச் செய்ய வேண்டும். பொது மக்கள் தங்களா லியன்ற ஆதரவை கொடுக்கவேண்டும்.

இன்று கைத்தறித் துணிகள் நல்ல முறையில் முன்னேறியுள்ளன. புதிய புதிய ரகங்களில் விதவிதமான நிறங் களில் அற்புதமான வேலைப்பாடு களோடு கூடிய துணிகள் இந்த விழாக் கண்காட்சிக்கு வந்துள்ளன. அவை களின் விலையும் குறைவாகவே இருக் கிறது. எனவே, இங்கு வந்துள்ள மக்கள் இங்குள்ள கைத்தறித் துணிகளை ஏராளமாக வாங்கிச் செல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சபதமேற்போம்!

திரு கே. விநாயகம், எம்.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ.,

நம் நாட்டில் உழவுக்கு அடுத்தபடியாக மிகப்பெரிய தொழில் கைத்தறி நெசவுத் தொழில்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள். மனிதன் என்று பிறந்தானோ அன்றே இந்தியாவில் நாகரிகமும் பிறந்துவிட்டது. நாகரிகம் என்று பிறந்ததோ அன்றே ஆடையும் பிறந்துவிட்டது.

உலகத்தில் மற்ற பகுதிகளில் மக்கள் தோலாடைகளை அணிந்துகொண்டிருந்த காலத்திலேயே இந்தியாவில் நூலாடைகள் நெய்யப்பட்டு, அந்த ஆடைகளை இந்த உலகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி அங்கெல்லாம் நாகரிகத்தைப் பரப்பிய பெருமை நமது கைத்தறிக்குத்தான் உண்டு. அன்று மிக உயர்ந்த நிலையில் இந்தக் கைத்தறித் தொழில் இருந்தது. அன்று கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த மக்கள் உயர்ந்த நிலையில் வாழ்ந்தார்கள். கைத்தறி ஆடைகளை இந்த உலகமெல்லாம் அனுப்பி, அங்கிருந்து பொன்னும் மணியும் கொண்டுவந்து தங்களது வீடுகளிலே குவித்து வைத்திருந்தார்கள்.

இந்திய நாகரிகம் கடல்கடந்து பரவக் காரணமாக இருந்தது கைத்தறி. அன்று கைத்தறியால் நெய்யப்பட்ட ஆடைகள் எகிப்து அழகிகளையும், ரோமாபுரி ராணிகளையும் கவர்ந்தது என்றால் அதற்குக் காரணம் அந்த ஆடைகளின் அற்புதமான அமைப்புத்தான். ஒரு மோதிரத்திற்குள் முப்பது முழச்சேலையை அடக்கிவிடுமளவு அவ்வளவு மெல்லியதாகவும், கண்ணைப் பறிக்கும் வண்ணங்களைக் கொண்டதாகவும் இருந்தன.

கைத்தறித் துணிகளை வாங்குவதற்காக வெளிநாடுகளிலிருந்து வணிகர்கள் கட்டுமரங்களில் மாதக் கணக்கில் கடலில் பிரயாணம் செய்து இந்தியாவிற்கு வருவார்கள். அவர்கள் கொண்டு வந்த தங்கக் கட்டிகளையும் வைரக் கற்களையும் கொடுத்து கைத்தறி ஆடைகளையும் வாங்கிச் செல்வார்கள்.

கிளியோபாட்ரா இந்த உலகத்திலேயே மிகச் சிறந்த அழகி. அப்படிப்பட்ட அழகியைப் பார்த்து ரசிக்காமல் அவள் கட்டியிருந்த ஆடையைப் பார்த்து ரசித்தான் ஜூலியஸ் ஸீஸர். உடனே ஆண்டனியிடம் அதைப் பற்றி விசாரித்தான். இது இந்தியாவில் பட்டு என்று சொல்லப்படுகிறது. அங்கிருந்துதான் இந்த ஆடை வாங்கிவரப்பட்டது என்று ஆண்டனி கூறினான்.

மாவீரன் ஜூலியஸ் ஸீஸரை மயக்க வந்த அழகி கிளியோபாட்ராவையும் மிஞ்சி நின்றது இந்தியக் கைத்தறி ஆடை என்றால் அன்று கைத்தறி நெசவாளர்களின் நிலை எப்படியிருந்திருக்கும் என்பதை நீங்களே கற்பனைச் செய்து பாருங்கள்.

அந்நியர்கள் இந்த நாட்டை அடிமைப்படுத்தியவுடன் முதல் வேலையாக இங்கு செழித்து வளர்ந்திருந்த கைத்தறித் தொழிலைத்தான் நசுக்கினார்கள். அவர்களது மான்செஸ்டர் துணிக்கும் கிளாஸ்கோ துணிக்கும் இங்கே சந்தையை ஏற்படுத்திக் கொள்ள வழியில்லாமல் செய்த கைத்தறித் தொழிலை நசுக்குவதற்கு அவர்கள் பல பயங்கரமான முறைகளைக் கையாண்டார்கள்.

நமது கைத்தறி நெசவாளர்களின் திறமையைக் கண்டு பொறாமை கொண்ட வெள்ளையர்கள் நமது நெசவாளர்களின் கட்டை விரல்களை வெட்டி விட்டதாக நாம் வரலாற்றிலிருந்து அறிகிறோம்.

வெள்ளைக்காரன் காலத்தில் அழித்து ஒழிக்கப்பட்ட இந்தியக் கைத்தறித் தொழில், காந்திஜியின் கதர் இயக்கத்தால் மீண்டும் உயிர் பெற்றது. அன்று மக்களிடையே பரவியிருந்த சுதேசிய உணர்ச்சியின் காரணமாக கதரும் கைத்தறியும் ஒரு நல்ல நிலைக்கு உயர்ந்தன. ஆனால் இப்போது கதர் என்றால் அது கைத்தறிக்கும் அப்பாற்பட்டது என்ற ஒரு கருத்து நிலவுகிறது. கதரும் கைத்தறியால் நெய்யப்படுவதுதான். கதரை நெய்யும் தொழிலாளியும் கைத்தறி நெசவுத் தொழிலாளிதான். கைத்தறிக்கு ஆலை நூல் பயன்படுத்தப் படுகிறது. கதர் தறிக்கு கையால் நூற்கப்பட்ட நூல் பயன்படுத்தப்படுகிறது. கைத்தறியில் தறிக்கு ஒரு ஆளுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்தால் கதர் நெய்யப்படும் ஒரு தறியால் பத்துப் பேர் வேலை வாய்ப்பைப் பெறுகின்றனர். பத்துப் பேர் கையால் நூற்கும் நூலை ஒருவன் தறியால் நெய்கிறான். ஆகவே வேலை வாய்ப்பு என்ற அடிப்படையில் கதரும் கைத்தறியும் இரண்டு கண்களாகக் கருதப்படவேண்டும். இரண்டும் குடிசைத் தொழில்கள். இரண்டும் ஏழைகளுக்கு வாழ்வளிக்கும் தொழில்கள். எனவேதான் முன்பெல்லாம் காங்கிரஸ் பொருட்காட்சிகளில் கதரும் கைத்தறியும் இடம் பெற்றன. இன்றும் அதே வழக்கம் நடைமுறையிலிருக்கிறது.

ஆலைத் துணிகளோடு போட்டியிட முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் கைத்தறித் தொழிலுக்கு எந்தெந்த வகையில் உதவி செய்ய முடியுமோ அந்தந்த வகையிலெல்லாம் அரசாங்கம் உதவி செய்து வருகிறது. முன்பு இங்கு இருந்த அரசாங்கம் கைத்தறித் தொழிலுக்கு ஏராளமான உதவிகளைச் செய்துள்ளது. இன்றுள்ள அரசாங்கமும் கைத்தறிக்கு உதவுமென்று நம்புகிறேன்.

இன்று கைத்தறியில் மெர்ஸிரைஸ்டு, ஸான்போரைஸ்டு துணிகள் வந்து விட்டன. ஆலைத் துணிகளைவிட கெட்டியாகவும் பளபளப்பாகவும் நீடித்து உழைக்கக்கூடியதாகவும் உள்ள கைத்தறித் துணி மிக மிக மலிவான விலைக்கும் கிடைக்கிறது. என்றாலும் கைத்தறித் துணிகள் தேக்கம் என்ற ஒரு பெரிய நெருக்கடிக்கு அடிக்கடி ஆளாக வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதற்குக் காரணம் கைத்தறித் துணிகளுக்கு பொதுமக்களிடம் இன்னும் போதுமான அளவு ஆதரவு கிடைக்காததுதான்.

கிடைக்கவேண்டிய ஆதரவு கிடைக்காமலிருப்பதால் நியாயமாக விற்க வேண்டிய விலைக்கும் குறைவாக விற்கப் படுகிறது. இதனால் கைத்தறி நெசவாளர்களுக்குப் போதுமான ஊதியம் கிடைப்பதில்லை. சாதாரணமாக அதிக பட்சம் ஒரு நெசவாளிக்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் அல்லது ஒன்னரை ரூபாய் தான் கூலி கிடைக்கிறது. இதை வைத்துக்கொண்டு இன்றைய விலைவாசி நிலவரத்தில் அவனால் எப்படித் தன் குடும்பத்தைக் காப்பாற்ற முடியும்?

எனவே இந்த நிலையில் இந்தத் தொழிலை நம்பியுள்ளவர்களின் பிள்ளைகளும் இந்தத் தொழிலிலேயே ஈடுபடக் கூடிய ஒரு நிலை ஏற்படுமானால் அது மிகவும் கவலைக்குரியதாகும். எனவே கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுக்கும் கைத்தறி நெசவாளர்களின் பிள்ளைகளுக்கும் வேறு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டும்.

கைத்தறித் தொழிலுக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்பு—நெசவாளர்களுக்குக் குறைந்தபட்ச வருமானத்திற்கு உத்திரவாதம்—என்ற நிலை ஏற்படவேண்டும். இந்த நிலை ஏற்பட வேண்டுமானால் கைத்தறிக்கு மக்களது ஆதரவு மேலும் மேலும் பெருகவேண்டும். தள்ளுபடியே இல்லாமல் நெசவாளிக்கு ஓர் அளவுக்கு கூலி கட்டுப்படியாகக்கூடிய அளவில் கைத்தறித் துணிகளுக்கு விலை நிர்ணயம் செய்யக்கூடிய ஒரு நிலை வரவேண்டும் என்று விரும்புகிறேன். இது என்னுடைய விருப்பம் மட்டுமல்ல. இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களுடைய விருப்பமும் இதுதான். இந்த விருப்பம் செயலாக மாறவேண்டும். ஒரு சபதமாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். ஒரு விரதமாகக் கடைபிடிக்கப்பட வேண்டும்.

கைத்தறித் துணியின் விலையைப் பற்றிக் கவலைப்படாமல் அந்தத் துணிக்குப் பின்னாலிருக்கும் உயிரைப் பற்றி மட்டுமே நாம் கவலைப்படுவது என்ற ஒரு நிலை வரவேண்டும். இந்த அளவு கைத்தறிக்கு ஆதரவு மேலும் மேலும் பெருகவேண்டும்.

கவர்ச்சியான கைத்தறி!

திருமதி சத்தியவாணிமுத்து,
ஹரிஜன, தகவல்துறை அமைச்சர்.

நாங்கள் சார்ந்திருக்கின்ற இயக்கம் கைத்தறி நெசவாளர்களுக்குப் பெரும் பணியாற்றியுள்ளது என்பதைத் தலைவர் திரு நாச்சிமுத்து குறிப்பிட்டார். இன்று ஆளும் கட்சியாக இருக்கும் நாங்கள் அன்று எதிர்க்கட்சியாக இருந்தோம். இன்றைக்குச் சரியாகப் பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, 1954-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ந் தேதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு கூடி எடுத்துக்கொண்ட முடிவுக்கிணங்க நாங்கள் கைத்தறித் துணிகளை மூட்டை மூட்டையாகக் கட்டிக்கொண்டு தலையிலும் தோளிலும் சுமந்துசென்று ஊர் ஊராக விற்பனைச் செய்தோம். நான் ஈரோட்டிலும், அறிஞர் அண்ணா அவர்கள் மதுரையிலும், கலைஞர் கருணாநிதி அவர்கள் சேலத்திலும், மற்றுமுள்ள கழக முன்னணித் தலைவர்களும ஆங்காங்கு கைத்தறித் துணிகளை விற்பனை செய்ததன்மூலம் சுமார் இரண்டு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள துணிகள் செலவாயின.

அன்று கைத்தறித் தொழிலுக்கு ஏற்பட்ட மிகப் பெரிய நெருக்கடியின் காரணமாக நெசவாளர்கள் குடும்பம் குடும்பமாகச் சிங்காரச் சென்னையை நோக்கி ஓடிவந்து தெருக்களிலே பிச்சையெடுத்த காட்சியும், பிள்ளையோ பிள்ளை யென்று தாய்மாரகள் தங்களது குழந்தைகளை விலை கூறி விற்க முன்வந்த காட்சியும் எங்களது உள்ளத்தை உருக்கியது. உடனே அவர்களுக்கு உதவி செய்ய நினைத்தோம. ஆனால் அன்று எதிர்க்கட்சியாக இருந்த நாங்கள் தேங்கிவிட்ட கைத்தறித துணிகளை விற்பனை செய்து உதவுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற ஒரு நிலையிருந்ததால் அந்த அளவே உதவி செய்ய முடிந்தது

அத்துடன் கழகத்திலிருப்பவர்கள் யாரும் கைத்தறித் துணிகளைத் தவிர வேறு துணிகளை அணியக்கூடாது என்று தீர்மானித்து அதன்படியே இன்றுவரை நடந்துவருகிறோம். இனியும் தொடர்ந்து அப்படியே நடந்துவருவோம். பொதுக்கூட்டங்களில்கூட மாலை வேண்டாம்; அதற்குப் பதில் கைத்தறித் துண்டுகளைப் போடுங்கள் என்று தலைவர்கள் கேட்டுக்கொண்டார்கள். ஒரே நாளில் கசங்கிப் பாழாகிவிடும் பூமாலைக்குப் போடுகிற பணத்தைக் கைத்தறித் துணிகளுக்குச் செலவிடுவதன்மூலம் ஏழை நெசவாளிக்கு அந்தப் பணம் போய்ச் சேரும் என்பதால்தான் அப்படி ஒரு வேண்டுகோளை கழகத் தலைவர்கள் விடுத்தார்கள். அதற்குக் கட்டுப்பட்ட கழகத் தொண்டர்களும் ஆதரவாளர்களும் அதே கொள்கையை இன்றளவும் கடைபிடித்து வருகிறார்கள்.

அத்துடன் நாங்கள் சட்ட மன்றத்திலும் கைத்தறி நெசவாளர்களுக்காக வாதாடியிருக்கிறோம். நான் அன்று சட்டமன்றத்தில் பேசிய பேச்சுகளை இன்று புரட்டிப் பார்த்தாலும் தெரியும்.

ஆலைத் துணிகளைவிட கைத்தறித் துணிகள கவர்ச்சிகரமானவை—நீடிதது உழைக்கக்கூடியவை—விலையும் மலிவானவை. இன்று கைத்தறி ஆடைகளுக்கு மக்களிடையே நல்ல ஆதரவு பெருகி வருகிறது. கோவையிலும் திருச்சியிலும் நடைபெறும் கைத்தறிக் கலை காட்சிக்கு ஏராளமான மக்கள் வந்து கூட்டம் கூட்டமாகக் கைத்தறி ஆடைகளை வாங்கிச் செல்வதைப் பார்த்தேன். அங்குள்ள கலெக்டர் மேலும் ஒரு வாரத்திறகு இந்த விழாவை நீடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்த அளவு இன்று கைத்தறிக்கு மக்களுடைய ஆதரவு பெருகியுள்ளது. எனவே இந்த விழாவை இப்படி ஏப்ரல் மாதத்தில நடத்தாமல் பொங்கல் பண்டிகையின்போது நடத்தினால் நல்ல பலன கிடைக்கும். அப்போது ஏழை எளியவர்கள்கூட நிறையத் துணிகளை வாங்குவார்கள். அரசாங்கத்தால் கொடுக்கப்படுகிற தள்ளுபடியை அந்த ஏழை மக்களும் அனுபவிப்பார்கள்.

ஆகவே, அடுத்த ஆண்டிலிருந்து இநத விழாவை பொங்கல பண்டிகை வருகின்ற சமயத்தில் ஜனவரி மாதத்தில் நடத்துவதற்கு அரசாங்கம் உதவும் என்று நம்புகிறேன். தலைவர் திரு நாச்சிமுதது அவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்காகப் பாடுபட்டு வருகிறார். அவர் விரும்பினால், முயற்சியெடுத்துக் கொண்டால் இந்த விழாவை ஜனவரி மாதத்தில் நடத்த ஏற்பாடு செய்யமுடியும் என்று நம்புகிறேன்.

அத்துடன் அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் ஆடைகளைக் கைத்தறி ஆடைகளாகக் கொடுக்கவேண்டும் என்றும ஒரு திட்டம் இருக்கிறது. இன்று ஏற்பட்டுள்ள ஆட்சி ஏழைகளின் ஆட்சி. இந்த ஆட்சி ஏழை நெசவாளர்களுக்கு எந்தெந்த வகையில் உதவமுடியுமோ அந்தந்த வகையிலெல்லாம் உதவும் என்று உறுதிகூறுகிறேன்.

திரிசங்கு சொர்க்கம்

திரு ம. பொ. சிவஞானக் கிராமணியார், எம்.எல்.ஏ.,

கைத்தறித் தொழிலுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும் என்பதில் எந்த அரசியல் கட்சிக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. கைத்தறித் துணிகள் இந்த நாடு முழுதும் பரவலாக அணியப்பட வேண்டும் என்ற கருத்தில் கட்சி வேறுபாடு கிடையாது.

இங்கு நேற்று வரை ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சியாகட்டும், இன்று ஆட்சியிலிருக்கும் தி. மு. க வாகட்டும் கைத்தறிக்கு உதவவேண்டும் என்ற தீவிரத்தில் யாரும் சளைத்தவர்களல்ல. இதில் யார் காட்டுவது தீவிரம் அல்லது அதி தீவிரம் என்பதில் போட்டியிருக்கலாமே தவிர கைத்தறிக்கு உதவவேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது.

குறிப்பாக அன்று திரு ராஜாஜி காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சராக இருந்தபோது 1952-ல் தமிழக சட்ட மன்றத்தில் எதிர்கட்சியினரின் ஒருமித்த ஆதரவுடன் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றால் அது இந்தக் கைத்தறி பற்றிய தீர்மானம்தான்.

கரைபோட்ட வேட்டியும், வர்ணப் புடவையும் கைத்தறிக்கே ஒதுக்கப்பட வேண்டும் என்ற அந்தத் தீர்மானத்திற்கு என்ன காரணத்தாலோ அன்று மத்தியில் நிதியமைச்சராக இருந்த நம்மவர் ஆதரவு கொடுக்கவில்லை. அதற்குப் பல காரணங்களிருக்கலாம். அது எந்தக் காரணமாக இருந்தாலும் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு கொடுக்காதது வருந்தத்தக்கதுதான். இதை அன்றும் தவறு என்று கூறினோம். இன்றும் தவறு என்றுதான் கூறுகிறோம்.

நல்லவேளையாக இங்கு இப்போது தி.மு.க. ஆட்சி ஏற்பட்டுள்ளது. இவர்கள் அந்தத் தீர்மானத்தை மத்திய அரசாங்கத்திடம் மீண்டும் வற்புறுத்திப் பார்ப்பார்கள். வழிக்கு வரவில்லையென்றால் போராடுவார்கள். அன்று இருந்த காங்கிரஸ் அமைச்சரவையால் போராட முடியவில்லை. அவர்களது நிலை அப்படி; இவர்கள் அப்படியல்ல. அவசியமேற்பட்டால் மத்திய—மாநில அரசுகளின் உறவு பாதிக்காதவகையில் ஒரு போராட்டத்தை நடத்துவார்கள். அதில் வெற்றியும் பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

நம் நாட்டிற்கு சுதந்திரம் வந்ததால் பல நன்மைகள் ஏற்பட்டதோடு சில தீமைகளும் ஏற்பட்டன. அதில் முதல் தீமை நமது கைத்தறித் தொழிலுககு ஏற்பட்ட தீமையாகும். சுதந்திரத்திற்கு முன்பு நமது கைத்தறித் துணிகள் பாகிஸ்தான், பர்மா, இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. இப்போது அந்த நாடுகளுக்கெல்லாம் நம் கைத்தறித் துணிகள் போவதில்லை. காரணம் அந்த நாடுகளும் நம்மைப் போலவே சுதந்திரம் பெற்றன. நம்மைப் போலவே சுயதேவைப் பூர்த்தி செய்துகொண்டு அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தி தங்களது பொருளாதார நிலையை உயர்த்திக்கொள்ள முடிவு செய்தன. இது தவறல்ல. நாம் எப்படி நமக்குத் தேவையான இன்றியமையாப் பண்டங்களைக்கூட இறக்குமதி செய்யாமல் தடை விதித்தோமோ, அது போலவே அந்த நாடுகளும் நமது கைத்தறித் துணிகளை இறக்குமதி செய்வதைத் தடை செய்தன.

அதன் விளைவு இங்கு கைத்தறித் துணிகள் தேக்கமடையத் தொடங்கின. அதனால் நெசவாளர்களுக்கு வேலை கிடைக்காது போயிற்று. எனவே பத்துக் காசு தள்ளுபடி கொடுத்து தேக்கமடைந்த கைத்தறித் துணிகளை மக்களிடம் விற்று வேலையிழந்த நெசவாளர்களுக்கு மீண்டும் வேலை கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிலை கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு திரிசங்கு சொர்க்கத்தைப் போன்ற நிலையாகும்.

இதன் காரணமாக கைத்தறி நெசவுத் தொழில்முன்னேறவும் வழியில்லை. அதே சமயத்தில் அடியோடு அழிந்தும் போய் விடவில்லை. இப்படிப்பட்ட ஒரு இடை நிலை ஏற்பட்டிருப்பது ஒருவகைக்கு நல்லதுதான். இனி இந்த இடை நிலையிலிருந்து ஒரு உயர்ந்த நிலைக்கு உந்தித் தள்ளுவதுதான் நம்முடையக் கடமையாகும்.

இன்று மக்களிடையே கைத்தறித் துணிகளை ஆதரிக்க வேண்டும் என்ற எண்ணம் பரவலாக ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாகத்தான் இந்த விழாவுக்கு ஏராளமான மக்கள் வந்து ஏராளமாகக் கைத்தறித் துணிகளை வாங்கிச் செல்கின்றனர். மக்களிடையே சுதேசிய உணர்வு வளர்ந்துள்ளது என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

கைத்தறிக்கு ஒரு நிரந்தரமான தன்மையுண்டு. உழவு எப்படியோ அப்படி இந்தக் கைத்தறியும் அதிகமான மக்களைக் கொண்ட ஒரு தொழிலாகும். எனவே உழவும் நெசவும் இந்த நாட்டின் இரட்டை மூச்சுக் குழாய்களாகும். மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாக இந்தக் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேறு வேலைகளில் வாய்ப்புக் கிடைப்பது என்பது முடியாத காரியம். எத்தனை தொழில்கள் ஏற்பட்டாலும் எத்தனை புதிய புதிய எந்திரங்கள் வந்தாலும் இந்த நாட்டின் மக்கள் தொகைச் சிக்கலின் காரணமாக இந்தக் கைத்தறித் தொழில் இருந்து கொண்டுதான் இருக்கும்.

இப்போது நம் நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி தி. மு. க. ஆட்சி. எனது சகாக்களின் ஆட்சி. அவர்களிடம் இதைப் பற்றி எடுத்துக் கூறி கைத்தறிக்கு எந்தெந்த வகையில் ஆதரவு தர முடியுமோ அந்தந்த வகையில் ஆதரவு தருமாறு வற்புறுத்துவேன்.

இன்று இந்த விழாவுக்கு வந்திருக்கும் தாய்மார்கள் இங்குள்ள கடைகளை ஒரு முறை சுற்றிப் பார்த்தார்களானால் நிச்சயம் சும்மா போக அவர்களுக்கு மனம் வராது. அந்த அளவு கண்ணைக் கவரத்தக்க வகையில் நல்ல நல்ல ரகங்களில் இங்கு துணிகள் வந்திருப்பதாகக் கூறினார்கள். எனவே பொதுமக்கள் தங்களாலியன்ற அளவு இங்குள்ள கைத்தறித் துணிகளை வாங்கிச் செல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தந்தி: "SALCOMILLS" தொலைபேசி: 2040 & 2080

சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட்,

அம்மாப்பேட்டை, சேலம் - 3

அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம்	...	ரூ. 60 லட்சம்
செலுத்தப்பட்ட பங்கு மூலதனம்	...	ரூ. 29 ,,
கதிர்களின் எண்ணிக்கை		12,320

எங்களது நூற்பாலையில் தற்போது 60s & 80s உயர்ந்த ரக நூல் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் தமிழக நெசவாளர்களுக்கு விற்பனை செய்துவருகிறோம்.

மேலும், நெசவாளர்களுக்காக எமது ஆலை நிறுவப்பட்டு, நெசவாளர்களால் நூல் உற்பத்தி செய்யப்பட்டு நெசவாளர்களுக்கே வினியோகித்து வரப்படுகிறது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பொதுமக்களும், கூட்டுறவு நிறுவனங்களும் அதிக அளவில் பங்குகள் எடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விபரங்களுக்கு ஜெனரல் மேனேஜருக்கு எழுதவும்.

எம். ஏ. விக்டர், எம். ஏ.,
டெப்டி ரிஜிஸ்டிரார் —
ஜெனரல் மேனேஜர்

கே. வி. ஏ. அர்த்தனாரி முதலியார்,
தலைவர்.

மறுமலர்ச்சித் தேவை

திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா, பி.ஏ., பி.எல்.,
பொது சுகாதாரத்துறை அமைச்சர்.

தமிழகத்தில் மாவட்டங்கள்தோறும் உள்ள முக்கிய நகரங்களிலெல்லாம் இந்தக் கைத்தறி வார விழா நடைபெற்று வருகிறது. நான் கடந்த நான்கு நாட்களாகக் கோவை, ஈரோடு, சேலம் ஆகிய இடங்களில் நடைபெறும் கைத்தறி வார விழாக்களில் கலந்துகொண்டு இன்று சென்னையில் நடக்கும் இந்த விழாவில் கலந்துகொண்டுள்ளேன்.

இந்த ஆண்டில் மிகச் சிறப்பாகவும் பரவலாகவும் இந்தக் கைத்தறி வார விழாக் கொண்டாடப்படவேண்டும்; அந்த விழாக்களிலெல்லாம் நாங்கள் அவசியம் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கட்டளையிட்டதற்கிணங்க, நானும் என் நண்பர்களும் இத்தகைய விழாக்களில் தவறாது கலந்துகொண்டு வருகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே கைத்தறித் தொழிலுக்கு நெருக்கடி ஏற்பட்டபோது ஆற்றிய பணியைப்பற்றி தலைவர் திரு நாச்சிமுத்து அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்காக அவருக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். அத்துடன் அவர் ஒரு முக்கியமான பிரச்னையையும் குறிப்பிட்டார். அரசாங்க அலுவல்களுக்கெல்லாம் கைத்தறித் துணிகளையே பயன்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். இது சம்பந்தமாக அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும். என்னுடைய சுகாதாரத் துறையைப் பொருத்தமட்டில் இதுபற்றிப் பரிசீலனை செய்வதாக உறுதியளிக்கிறேன். அரசாங்க அலுவல்களுக்கு எந்த அளவுக்கு இந்தக் கைத்தறித் துணிகளைப் பயன்படுத்த முடியும் என்பதுபற்றிப் பரிசீலனை செய்து அந்த அளவுக்குக் கைத்தறித் துணிகளைப் பயன்படுத்திக்கொள்ள ஏற்பாடு செய்யப்படும் என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும்.

அகில இந்தியக் கைத்தறி போர்டின் தலைமை அலுவலகம் சென்னைக்கு மாற்றப்பட வேண்டும் என்று கோவையில் நடைபெறும் இவ்வார விழாவில் நான் கலந்துகொண்டபோது என்னிடம் கூறப்பட்டது. தமிழகத்தில்தான் அதிக அளவு கைத்தறிகள் இருக்கின்றன. ஆனால் கைத்தறிகள் அதிகமில்லாத இடமான பம்பாயில் கைத்தறி போர்டின் அலுவலகம் இருக்கிறது. எனவே, அந்த அலுவலகம் சென்னைக்கு மாற்றப்படவேண்டியது அவசியமாகும். இது பற்றித் தலைவர் திரு நாச்சிமுத்து அவர்கள் நடவடிக்கை எடுப்பாரானால் தமிழக அரசு அவருக்குத் துணையாக நிற்கும் என்று உறுதியளிக்கிறேன்.

இன்று கைத்தறித் துணிகளுக்கு மக்களிடையே நல்ல ஆதரவு பெருகியிருக்கிறது. இந்த ஆதரவு மேலும் மேலும் பெருகி கைத்தறி நெசவாளர்களது வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படும் என்று நம்புகிறேன்.

வெளிநாடுகளில் நமது கைத்தறித் துணிகளுக்கு இருந்து வந்த கிராக்கி இப்பொழுது ஓரளவு குறைந்து விட்டதாகக் கூறப்படுகிறது. அதற்கான காரணங்களை ஆராய்ந்து மீண்டும் அந்த நாடுகளிலெல்லாம் நம்முடைய கைத்தறித் துணிகளுக்குக் கிராக்கி ஏற்படுத்த மத்திய அரசு முயற்சி செய்ய வேண்டும்.

கைத்தறித் தொழில் உள்நாட்டு ஆதரவை மட்டும் நம்பி வாழ முடியாது. வெளிநாடுகளில் ஆதரவு பெருகினால்தான் நெசவாளர்களது வாழ்வில் வசதிகளும் வாய்ப்புகளும் பெருகமுடியும்.

எனவே வெளிநாட்டு மக்களின் கருத்தைக் கவரகூடிய வகையில் புதிய ரகங்களைக் கைத்தறியில் உற்பத்தி செய்யவேண்டும்.

இன்று கைத்தறியில் புதிய ரகங்கள் இல்லையென்று கூறமுடியாது. ஏராளமான அளவில் புதிய புதிய ரகங்கள் வந்துள்ளன. என்றாலும் அந்த நாட்டு மக்களின் விருப்பங்கள் அடிக்கடி மாறிக் கொண்டே இருக்கும் இயல்புள்ளது. அங்குமட்டுமில்லை; இங்கும்தான். நாகரிகம் வளர வளர மக்களுடைய விருப்பங்கள் வேகமாக மாறிக்கொண்டிருக்கின்றன. அந்த வேகத்தை அனுசரித்து ரகங்களை அடிக்கடி மாற்றுவதுடன் பல்வேறு ரகங்களையும் ஒரே சமயத்தில் உற்பத்தி செய்யவேண்டும்.

இப்போதும் இந்த விழாவில் சுற்றிப் பார்த்தேன். இங்கு வந்துள்ள துணிகளைப் பார்க்கும்போது இவை கைத்தறித் துணிகளா என்ற சந்தேகம் ஏற்பட்டது. அந்த அளவு மென்மையாகவும் கவர்ச்சிகரமாகவும் கண்ணைப் பறிக்கும் பல வண்ணங்களிலும் காட்சியளிக்கின்றன கைத்தறித் துணிகள். இவ்வளவு கவர்ச்சிகரமான முறையில் அழகாகவும் மென்மையாகவும் இருந்தாலும் அவை நீடித்து உழைக்கக் கூடியவையாகவும் இருக்கின்றன என்று அறியும் போது விலை எப்படியிருக்குமோ என்ற சந்தேகம் ஏற்படும். ஆனால் விலையும் மிகமிக மலிவு என்று தெரிந்துகொண்டவுடன் வியப்புத்தான் ஏற்படும்.

இப்படிப்பட்ட கலைத்திறன் படைத்த நமது நெசவாளர்களது வாழ்வு ஊசலாடிக்கொண்டிருக்கிறது என்பதையும் அறியும்போதுதான் நமது உள்ளம் வேதனையடைகிறது. அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டிய அவர்களை வாழவைக்கவேண்டிய அவர்களது வாழ்விலே மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டிய கடமை உணர்ச்சி ஏற்படுகிறது.

இந்தக் கடமையை அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளது. கைத்தறித் தொழிலுக்கு எந்தெந்த வகையில் பாதுகாப்புக் கொடுக்க முடியுமோ அந்த வகையில் பாதுகாப்புக் கொடுக்கும். கைத்தறிக்கு என்று ஒருசில குறிப்பிட்ட ரகங்களை ஒதுக்குவது பற்றியும் மத்திய அரசை வற்புறுத்தி ஆவன செய்யும்.

பொதுமக்களும் தங்களால் இயன்ற ஆதரவைக் கைத்தறிக்கு அளித்து இந்தத் தொழிலை நம்பியுள்ள மக்களது வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

ஆட்டையாம்பட்டி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், S. 691,

ஆட்டையாம்பட்டி போஸ்டு : சேலம் மாவட்டம்.

தோற்றம்: 1941 போன் நெ. 22

தமிழகத்தில் மிகப் பிரசித்திப் பெற்ற எங்கள் சங்கத்தில் 20s, 30s, 40s, 60s, 80s நெம்பர் நூல்களில் பாவஞ்சு, பெரிய பாவஞ்சு, பேட்டு வேஷ்டிகளும், காடா பீஸ்களும் மிகச் சிறந்த முறையில் தயாரிக்கப்படுகின்றன. மற்றும் சங்கத்தின் சொந்த சாயப்பட்டறையில் நல்ல முறையில் சாயம் தோய்க்கப்பட்டு 40s, 60s, 80s நெம்பர் நூல்களில் திடமான சேலை ரகங்களும் தயாரிக்கப்படுகின்றன.

எங்கள் சங்க ஆர்ட்சில்க் வேஷ்டி ரகங்களும், வெள்ளை கலர் பீஸ்களும் எல்லா கோ-ஆப்டெக்ஸ் எம்போரியங்களிலும், டெப்போக்களிலும் கிடைக்கும்.

K. V. A. அர்த்தனாரி முதலியார்,
தலைவர்.

ஆத்ம திருப்தி!

திருவாசகமணி
திரு கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.,

உலகத்தில் மனிதன் பிறந்தவுடன் அவனுக்கு இரண்டு தேவைகள் இன்றியமையாதவையாக இருக்கின்றன. ஒன்று உணவு; இரண்டு உடை. உண்ண உணவு என்று முதலாவதாகவும், உடுக்க உடை என்று இரண்டாவதாகவும் சொல்லப்பட்டிருந்தாலும் உடைதான் முதலிடம் வகிக்கிறது. பசியைப் போக்க வேண்டுமா? மானத்தைக் காக்க வேண்டுமா? என்று கேட்டால், முதலில் மானத்தைத்தான் காக்கவேண்டும் என்று சொல்வோம். முதலில் பசியைத்தான் போக்கவேண்டும்; பிறகுதான் மானத்தைப் பற்றிய சிந்தனையெல்லாம் என்று கூறும சாப்பாட்டு ராமன்களை பார்ப்பது மிகவும் அரிது. அப்படியும் சில சாப்பாட்டு ராமன்கள் இருப்பார்கள். ஆனால் அவர்களை இந்த சமுதாயம் மதிப்பதில்லை.

'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்' என்று கூறினார்கள். உணவுச் சிக்கலைத் தீர்க்க உழவும், உடைச் சிக்கலைத் தீர்க்க நெசவும் இருக்கின்றன. உழவை முதலாவதாகவும் நெசவை இரண்டாவதாகவும் வைத்துத்தான் இந்த சமுதாயம் பார்த்தது. அதுபோலவே உழவுக்கு அடுத்தபடியாக அதிக மக்கள் ஈடுபட்டிருக்கும் தொழிலும் நெசவுத் தொழில்தான்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" என்று வள்ளுவப் பெருந்தகை கூறினார். அவர் உழவுக்கு முதலிடம் வழங்கியிருந்தாலும் அவர் தேர்ந்தெடுத்துக் கொண்ட தொழில் நெசவுத் தொழில்தான். அவர் நெசவுத் தொழிலைத் தேர்ந்தெடுத்துக்கொண்டதற்கு ஒரு காரணம் இந்தத் தொழிலில் அடங்கியுள்ள இன்முறை இயல்தான். வன்முறைக்கு, இத்தொழிலில் இடம் கிடையாது. நெல் பயிர் செய்வதற்கும் பருத்தி பயிர் செய்வதற்குமே வேறுபாடு உண்டு. நெல் பயிரிடவேண்டுமானால் சேற்றிலே கால் புதைய எருதுகள் நடந்தாகவேண்டும். அவை தம் கால்களைச் சேற்றிலே சிக்க வைத்துக் கொண்டு அடுத்த அடி எடுத்துவைக்க முடியாமல் திணறும்போது அதை ஓட்டும் உழவன் தன் கையிலுள்ள தார்குச்சியால் குத்தி அதிலிருந்து குருதி வழிவதைக் காண்பான். ஆனால் பருத்திப் பயிருக்கு இவையெல்லாம் தேவைப்படாது. நெசவுத் தொழில் செய்வதால் எந்தச் சமயத்திலும் எந்த உயிருக்கும் எந்த விதமான தீங்கும் செய்யவேண்டிய அவசியமேற்படாது என்பதால்தான் வள்ளுவர் நெசவுத் தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

கைத்தறித் தொழில் ஒரு புனிதமான தொழில். இந்தத் தொழிலில் கொடுப்பவனுக்கும் இன்பம், வாங்குபவனுக்கும் இன்பம். கைத்தறியில் ஆடை நெய்கின்ற தொழிலாளி தனது தொழிலுக்கு ஆதரவு கிடைக்கின்றது என்ற மகிழ்ச்சியில்—இன்பத்தில் தனது திறமைகளையெல்லாம் அந்த ஆடையில் காட்டுகிறன். கைத்தறித் துணிகளை வாங்கி அணிந்துகொள்பவர்கள் அந்த ஆடையில் உள்ள அரிய வேலைப்பாடுகளைக் கண்டு மகிழ்ச்சியும் மனநிறைவும் கொள்கின்றனர். இப்படிக் கொடுப்பவருக்கும் வாங்குபவருக்கும் ஏற்படும் இன்பத்திற்குத்தான் வெள்ளைக்காரர்கள் 'ஹ்யூமன்டச்' என்றார்கள்.

அதாவது, நாம் ஒரு உணவு விடுதியில் சாப்பிடுவதைவிட வீட்டில் நமக்குப் பிரியமானவர்கள் பரிமாறும் உணவில்தான் நமக்கு மனநிறைவு ஏற்படுகிறது. அதுபோலவே எந்திரத்தில் செய்யப்பட்ட பொருட்களைவிட கையினால் செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்துவதில்தான் நமக்கு முழு மனநிறைவு ஏற்படுகிறது.

கணக்குப் போடும் எந்திரம் இருக்கிறது. அது நொடியில் மிகப் பெரிய கணக்குகளையெல்லாம் போட்டுவிடுகிறது. அதை நாம் பாராட்டுவதில்லை. அதே சமயத்தில் கணித மேதை திரு ராமாநுஜம் என்று கூறியவுடன் நமக்கு ஒரு நன்மதிப்பு ஏற்படுகிறது. ஒரு கணத்தில் நூற்றுக்கணக்கான பொருட்களை உற்பத்தி செய்யும் எந்திரத்திற்கு

நாம் நன்றி தெரிவித்துக் கொள்வதில்லை. ஆனால் நாம் எதிர்பார்த்த வேகத்தைவிடக் கொஞ்சம் அதிகமான வேகத்தில் செய்யும் தொழிலாளியின் மீது நமக்கு ஒரு நன்மதிப்பு ஏற்படுகிறது.

அதுபோலத்தான் ஆலைத் துணிகளை அணிந்து கொள்வதிலும் கைத்தறித் துணிகளை அணிந்து கொள்வதிலும் ஏற்படும் உணர்வில் உள்ள வேறுபாடு. கைத்தறி ஆடைகளை அணிந்து கொள்ளும்போது ஏற்படும் இன்பம் ஆலைத் துணிகளை அணிந்து கொள்ளும் போது ஏற்படாது. இதற்குத்தான் 'மன ஒட்டு' என்று பெயர்.

அந்த வகையில் கைத்தறித் துணிகளை வாங்கியணியும்போது ஏற்படுகின்ற 'மன ஒட்டு' இரண்டு ஆத்மாக்களையும் நிறைவு செய்கிறது. ஒன்று உழைக்கும் ஆத்மா; மற்றொன்று உபயோகிக்கும் ஆத்மா. உழைக்கும் ஆத்மாவாகிய நெசவாளி தனது வேலையைத் தொடங்கும்போதே "இறைவா, இன்று நான் நெய்யும் ஆடை மிகவும் நேர்த்தியாக அமையவேண்டும்" என்று வேண்டிக்கொண்டுதான் வேலையைத் தொடங்குகிறான். அப்போது அவனுடைய ஆத்மா முழுதும் அவன் நெய்யும் ஆடையில் கலந்து விடுகிறது. அந்த ஆடைகளை வாங்கி அணியும்போது அவைகளிலுள்ள அருமையான வேலைப்பாடுகளைக் கண்டு நமது ஆத்மாவும் அதில் கலந்து விடுகிறது. இப்படி இரண்டு ஆத்மாக்களும் ஒன்று கலந்து இன்பம் பெறும் கைத்தறி ஆடைகளையே வாங்கி எல்லோரும் அணியவேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

பாடல்

அழகுக் கைத்தறி ஆடை வேண்டும்—அதை
அனைவருமே அணிய வேண்டும்—
வேறென்ன வேண்டும்?
பழகு கைத்தறி அணிய வேண்டும்—மீண்டும்
பழ நாகரிகம் மலர வேண்டும்—
வேறென்ன வேண்டும்?
கல்லூரிப் பாவையரும் கவிஞர் தேவியரும்
கைத்தறி அணிய வேண்டும்
வெள்ளை மாதர்களும் வேண்டித் தறித் துணி
அணிய வேண்டும்.
தமிழக அமைச்சரரும்
சாதிக் பாட்சா அணிகின்ற
தறி யாடை யாவரும்
அணிய வேண்டும்.
உத்தியோகஸ்தர் முதல்
ஊழியர் செல்வர் ஏழை
பக்தியோர்கள் அணிய வேண்டும்.
போக்குவரத் தூழியர்
போலீஸ் வீரர்கள் ஏனையோர்
ஊக்கமுடன் அணிய வேண்டும்.
மருத்துவச் சாலையில்
மாண்புறு தொண்டர்களெலாம்
திருத்தமுடன் அணிய வேண்டும்.
கோவில் சாமி யம்பாள்
குருக்கள் அதிகாரிகள்
பேணியதை அணிய வேண்டும்.
ஏழைக் கைத்தறியாளர்
இன்புற்றிருக்க வேண்டும்—அவர்
இன்னல்களகன்று—நல்
வாழ்க்கை பெற வேண்டும்—
வேறென்ன வேண்டும்?
(அழகுக் கைத்தறி.)

தென்னாற்காடு கூட்டுறவு மத்திய பாங்கு லிமிடெட், கடலூர்-1.

கிளைகள்: செஞ்சி, திண்டிவனம், உளுந்தூர்பேட்டை, சிதம்பரம்.

தலைவர்: திரு. ஆர். கனகசபை, எம்.எல்.ஏ.

அதிகாரம் பெற்ற முதலீனம் ரூ. 1,00,00,000 அலுவல் நிதி ரூ. 3,55,28,689
செலுத்தப்பட்ட முதலீனம் ரூ. 69,92,200 இதர நிதிகள் (காப்பு நிதி) ரூ. 20,98,567

நிரந்தர டிபாசிட்டுகளின் வட்டி விகிதங்கள்

3 மாதங்களுக்கும், அதற்கு மேலும் ...	5½%	4 வருடங்களுக்கும், அதற்கு மேலும் ...	6¾%
6 ,, ,, ...	6%	5 ,, ,, ...	7¼%
12 ,, ,, ...	6¼%	7 ,, ,, ...	7½%
2 வருடங்களுக்கும், ,, ...	6½%	சேமிப்பு கணக்குகளுக்கு ...	4%

தவணை வைப்புகளில் மூன்றாண்டுகளுக்குமேல் செலுத்தப்படும் தொகைகளுக்கு அசலுக்கும், வட்டிக்கும் தமிழ்நாடு அரசினர் உத்திரவாதம் அளித்துள்ளனர்.

நீண்டகால தவணை வைப்புகளுக்கு வட்டி மாத தவணைகளிலும், மூன்று மாத தவணைகளிலும் வழங்கப்படும்.

ஏனைய விவரங்கட்கு செயலாளரிடம் தொடர்பு கொள்ளவும்.

கே. நடராஜன், பி.ஏ., செயலாளர்.

திறன் மிக்க கரங்கள்

திரு ஏ. கோவிந்தசாமி,
வேளாண்மைத்துறை அமைச்சர்.

இப்படிப்பட்ட கைத்தறி வார விழாக்களை நடத்துவதன் மூலம் தேங்கியுள்ள கைத்தறித் துணிகளை விற்பனைச் செய்ய வழியேற்படுகிறது. இந்த விழா அகில இந்திய அடிப்படையில் நடைபெறுகின்ற காரணத்தால்தான் இப்படி ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படுகிறது. இந்த விழா பொங்கல் தீபாவளி போன்ற காலங்களில் நடத்தப்பட்டால் நன்ருக இருக்கும். அந்த சமயத்தில் ஏழை உழவர்கள்கூட ஏராளமான அளவில் கைத்தறித துணிகளை வாங்க முன்வருவார்கள். எனவே இந்த விழாவைத் தமிழகத்தைப் பொருத்தவரையாவது பொங்கல் சமயத்தில் நடத்த அகில இந்திய கைத்தறி போர்டார் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறித் துணிகள் மிக அதிக அளவில் தேங்கிவிட்ட காரணத்தால் ஒரு சமயம் கைத்தறி நெசவாளர்களுக்கு மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டது. அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் ஊர் ஊராகச் சென்று மக்களிடையே பிரசாரம் செய்து கைத்தறித் துணிகளைச் சுமந்து விற்பனைச் செய்தார்கள். அதன்மூலம் கைத்தறியை ஆதரிக்க வேண்டும் என்ற ஓர் உணர்ச்சியைப் பொதுமக்களிடையேஏற்படுத்திஞர்கள்.

அப்படிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் இன்று ஆட்சிப் பொறுப்புக்கு வந்துள்ளது. எனவே கைத்தறித் தொழிலுக்கு எந்தெந்த வகையில் உதவ முடியுமோ அந்தந்த வகையில் உதவ இந்த அரசாங்கம் தயங்காது.

நண்பர் திரு நாச்சிமுத்து அவர்கள் கைத்தறித் தொழிலில் உள்ள பல பிரச்னைகளைப் பற்றிக் குறிப்பிட்டார். நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இந்தப் பொறுப்பில் இருக்கிருர். அவர் இந்தத் தொழிலுக்கு நல்ல முறையில் உதவி செய்வார்.

இன்று கைத்தறித் துணிகளைப் பார்க்கும்போது இவை கைத்தறிதாஞ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இந்த அளவுக்குக் கைத்தறி நெசவாளர்களது திறமை வளர்ந்துள்ளது என்ருலும் அவர்களது வாழ்க்கைத் தரம் உயரவில்லை. கைத்தறியை நம்பியுள்ள மக்களின் தொகை அதிகம். கதருக்குக் காட்டப்படும் சலுகை கைத்தறிக்குக் காட்டப்படவில்லை. இதை நான் சட்ட மன்றத்தில் சுட்டிக் காட்டியபோது "ஏன்? கதரும் கைத்தறியில்தானே நெய்யப்படுகிறது?" என்று அன்றிருந்த அமைச்சர்கள் கேட்டார்கள். கதரும் கைத்தறியில் நெய்யப்படுவதுதான். அதை நான் மறுக்கவில்லை. ஆனல் கதருக்குக் காட்டப்படும் சலுகை கைத்தறிக்கு காட்டப்படவில்லையே, ஏன் என்றுதான் கேட்டேன்.

அரசாங்க அலுவல்களுக்குப் பயன்படுத்தப்படும் துணிகள், ஒரு சில துறைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் துணிகள் ஆகியவைகளுக்குக் கதரும் கைத்தறியும் கலந்து கொடுக்கலாம் என்று நான் கூறினேன். அன்று அது நடைபெறவில்லை. ஆனல் இப்போது இந்த அடிப்படையில்தான்

கைத்தறிக்கு உதவி செய்ய நினைத்திருக்கிறோம்.

இதனால் கதருக்கு ஆபத்து என்று எந்தக் காங்கிரஸ்காரரும் உண்மையான தேசியவாதியும் கூறமாட்டார்கள் என்று நம்புகிறேன். நண்பர் திரு நாச்சிமுத்துவும் கதர்தான் அணிந்திருக்கிறார். நண்பர் திரு மாரியப்பனும் கதர்தான் அணிந்திருக்கிறார். ஆனால் அவர்களைவிட இந்தக் கைத்தறித் தொழிலுக்காக உழைப்பவர்கள் யாரும் இருக்கமுடியாது. எனவே கதரும் கைத்தறித் துணிகளும் கலந்து பயன்படுத்தப்படுவது பற்றி யாரும் குறை கூறமாட்டார்கள். யாருக்கும் இதில் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது.

கைத்தறித் துணிகள் வெளிநாடுகளில் விரும்பி வாங்கப்பட்டன. அதிலும் குறிப்பாக வண்ணம் மாறும் துணிக்கு நல்ல வரவேற்பு இருந்தது. எனவே வண்ணம் மாறும் துணி உற்பத்தியில் பெரும்பாலான நெசவாளர்கள் ஈடுபட்டனர். புதிதாகவும் பலர் இத்துறைக்கு வந்தனர். ஆனால் இப்போது வெளி நாடுகளில் அந்தத் துணிக்கு இருந்த கிராக்கி குறைந்துவிட்டது. அதனால் அதை நம்பிப் புதிதாக இந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் பெரிய திண்டாட்டம் ஏற்பட்டுள்ளது. எனவே வெளிநாடுகளில் நமது கைத்தறித் துணிகளுக்குக் கிராக்கிக் குறைந்தது பற்றி ஆராய்ந்து மீண்டும் அந்த கிராக்கியை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு முயலவேண்டும்.

கைத்தறித் தொழிலுக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் திரு ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தலைமையில் தமிழக சட்ட மன்றத்தில் கரை போட்ட வேட்டியும் வர்ணப் புடவையும் கைத்தறிக்கு ஒதுக்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அன்று கட்சி விட்டுக் கட்சி மாறி அரசாங்கத்தைக் கவிழ்க்கக் கூடிய முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு நெருக்கடியான நிலை. இருந்தும் இந்த ஒரு தீர்மானத்தை எல்லா கட்சிகளும் எதிர்ப்பின்றி ஒரு மனதாக நிறைவேற்றி அனுப்பி வைத்தன. இந்த தீர்மானத்தை மத்திய அரசு மதிக்கவில்லை.

மீண்டும் அத்தகையதொரு தீர்மானத்தைக் கொண்டுவந்து ஒரு மனதாக நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். திரு ராஜகோபாலாச்சாரியார் தலைமையில் அன்று அந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது போலவே இன்று அறிஞர் அண்ணாவின் தலைமையில் இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்படுவதற்கு எல்லாக் கட்சியினரும் உதவுவார்கள் என்று நம்புகிறேன்.

இன்று கைத்தறித் துணிகளுக்கு மக்களிடையே நல்ல ஆதரவு ஏற்பட்டுள்ளது. அந்த அளவு கைத்தறித் துணிகளில் புதிய புதிய ரகங்கள், கண்ணைக் கவரத்தக்க வேலைப்பாடுகள் அடங்கியுள்ளன. குறிப்பாக அம்மாப்பேட்டை சொஸைட்டியிலிருந்து வந்துள்ள துணிகள் மிகக் கவர்ச்சிகரமாக இருக்கின்றன. அதற்கு நண்பர் திரு மாரியப்பன் அவர்கள்தான் பாராட்டுக்குரியவராவார். அவரை மட்டும் பாராட்டினால் போதாது. நண்பர் திரு நாச்சிமுத்து அவர்களுக்கும் பாராட்டுத் தெரிவித்துக் கொள்ள வேண்டும். அவர் பொறுப்பிலுள்ள சென்னிமலை சொஸைட்டியிலிருந்து வந்துள்ள சென்டெக்ஸ் பெட்ஷீட்டுகள் மிகப் பிரமாதமாக இருக்கின்றன. அது போலவே காஞ்சீபுரம் பட்டும் புகழ் பெற்றதாகும். அத்துடன் ஆரணிப் பட்டு, எனது தொகுதியிலிருக்கும் திருவெண்காடு பட்டு ஆகியவைகளும் பெயர் பெற்றவையாகும். மற்றும் குறிஞ்சிப்பாடி, புவனகிரி சொஸைட்டிகளிலிருந்து வந்துள்ள துணிகளும் மிக நன்றாக இருக்கின்றன. இப்படிப் பல இடங்களிலிருந்து பலவகையிலும் சிறப்பான துணிகள் இங்கு வந்துள்ளன. அவைகளில் எதை வாங்குவது, எதைத் தள்ளுவது என்று தீர்மானிப்பது கஷ்டம். என்றாலும் மக்கள் தங்களுக்குத் தேவையான துணிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு வசதியாகத்தான் எல்லாப் பகுதிகளிலிருந்தும் எல்லா வகையிலும் சிறப்பான துணிகள் இந்த விழாவில் கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ளன. அவைகளில் விருப்பமானவைகளை வாங்கிச் செல்லவேண்டும் என்று எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு ரகம் பிடிக்கும். அப்படிப் பார்க்கும்போது இங்குள்ள எல்லா ரகங்களும் எல்லோருக்கும் பிடிக்கும். எனவே இந்த விழாவுக்கு வந்துள்ள கைத்தறித் துணிகள் எதுவும் விற்பனையாகாமல் நின்றுவிடாது என்று நம்புகிறேன்.

மூவகையான சிக்கல்கள்!

திரு ஆர். துரைசாமி, ஐ.ஏ.எஸ்.,

நான் சென்ற ஆண்டில் இந்த விழாவில் கலந்துகொண்டபோது நமது கைத்தறித் துணிகளின் ஏற்றுமதி வாய்ப்புக் குறைந்துவிட்டது என்று குறிப்பிட்டேன். குறிப்பாக நமது வண்ணம் மாறும் துணிகளுக்கு அமெரிக்காவில் இருந்து வந்த கிராக்கி குறைந்துவிட்டது என்று கூறினேன். அதற்குப் பல காரணங்கள். அவற்றுள் அங்குள்ள மக்களின் விருப்பங்கள் அடிக்கடி மாறி வருவதும் ஒரு காரணமாகும்.

ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்டதால் ஏற்றுமதி பெருகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நாம் எதிர்பார்த்த அளவு ஏற்றுமதி பெருகவில்லை. கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியும் அப்படியே; கைத்தறித் துணிகளில் பெரும்பான்மையாக வண்ணம் மாறும் துணிகளே ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. ஆனால் அதற்கும் இப்போது வெளிநாடுகளில் இருந்த வரவேற்புக் குறைந்துவிட்டது. எனவே நாம் அந்த நாட்டு மக்களின் மாறிவரும் விருப்பங்களை அனுசரித்து நமது ரகங்களை அடிக்கடி மாற்றிக்கொள்ளவேண்டும். புதிய புதிய ரகங்களில் கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்யவேண்டும். நாம் முயற்சி செய்தால் நிச்சயம் முன்போலவே அங்கெல்லாம் நமது கைத்தறித் துணிகளுக்குக் கிராக்கி ஏற்படுத்த முடியும்.

கைத்தறித் துணிகள் அடிக்கடி விற்பனையாகாமல் தேங்கிவிடுகின்றன. அத்துடன் கைத்தறிக்குத் தேவையான மூலப்பொருட்களின் விலை உயர்ந்துவிட்டது. குறிப்பாக நூல் விலை உயர்வின் காரணமாக கைத்தறித் துணியின் உற்பத்திச் செலவு அதிகரித்திருக்கிறது. என்றாலும் அந்த அளவு துணிகளின் விலையை உயர்த்த வழியில்லை. எனவே மூலப்பொருட்கள், குறிப்பாக நூல் நியாயமான விலைக்குக் கிடைத்தால்தான் நெசவாளர்களுக்கு வேலை கொடுக்க முடியும் என்ற நிலை இருக்கிறது என்று நண்பர் திரு நாச்சிமுத்து அவர்கள் கூறினர்.

தற்போது பருத்தி நூல் கிடைப்பதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் இங்கு பருத்தி விலை அதிகம். இறக்குமதி செய்யப்படுகின்ற பஞ்சின் விலையும் உயர்ந்துவிட்டது. அதே சமயத்தில் நூற்பு ஆலைகளின் வேலை நாட்களைக் குறைக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் தொழிலாளர்களுக்கு ஊதியம் உயர்ந்துள்ளது. இதன் காரணமாக நூல் விலை உயர்ந்துவிட்டது. அதன் விலையைக் குறைப்பது என்பதும் சிரமம் என்ற நிலை இருந்து வருகிறது.

கூட்டுறவு நூற்பாலைகளில் போதுமான நூல் கிடைப்பதாக இருந்தால் நூல் விலையை ஓரளவு குறைக்க முடியும். ஆனால் தேவையான அளவு இப்போது கூட்டுறவு ஆலைகளில் நூல் உற்பத்தியாவதில்லை. ஆகவே இந்த நிலையில் கைத்தறித் துணிகளுக்கு ஒரு நிலையான விற்பனை வாய்ப்பைத் தேடிக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

கைத்தறித் துணிகளுக்கு நிலையான விற்பனை வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டு கைத்தறித் தொழில் தனது சொந்தக் காலிலேயே நிற்கப் பழகிக்கொள்ளவேண்டும். இந்தப் பொறுப்பு நெசவாளர்களைச் சார்ந்ததாகும். கைத்தறித் தொழில் அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது என்பது எந்தக் காலத்திலும் நடைபெறக் கூடியதல்ல. தள்ளுபடி கொடுப்பதன் மூலம் கைத்தறித் துணிகளுக்கு விற்பனை வாய்ப்பை ஏற்படுத்திக்

கொடுப்பது என்பது ஒரு நிரந்தரமான ஏற்பாடாக இருக்க முடியாது. தள்ளுபடி கொடுப்பதெல்லாம் ஒரு தற்காலிக ஏற்பாடுதான். இந்த ஏற்பாடு ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குத்தான் நீடிக்க முடியும். நியாயமான ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் இந்தக் கைத்தறித் தொழிலில் உள்ள சிக்கலுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கண்டாக வேண்டும்.

கைத்தறித் தொழிலுக்கு ஏற்படுகின்ற பல்வேறு சிக்கல்களைப் பற்றி ஆராய்ந்து அவைகளுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதில் அகில இந்தியக் கைத்தறி போர்டார் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன். இந்தத் தொழிலுக்குள்ள சிரமங்களை உணர்ந்து, அவைகளுக்கு அவ்வப்போது பரிகாரம் தேடிக் கொள்வது என்பது ஒருபுறமிருந்தாலும் அவைகளுக்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் என்ற நிலை ஏற்பட்டாலொழிய இந்தத் தொழிலைக் காப்பாற்றுவது என்பது இயலாத காரியம் என்பதே என் கருத்து.

கைத்தறித் தொழிலுக்கு இன்று ஏற்பட்டுள்ள சிக்கல்களில் மிக முக்கியமாக மூன்றைக் குறிப்பிடலாம். ஒன்று நூல் விலை. கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் நூல் கிடைக்க வேண்டுமானால் கூட்டுறவு நூற்பாலைகளில் போதுமான அளவு உற்பத்தி செய்யவேண்டும். அந்த நிலை இன்னும் ஏற்படவில்லை. நடப்பு ஆண்டில்கூட கூட்டுறவு ஆலைகளில் நூல் உற்பத்தி மிகவும் குறைவாகத்தானிருக்கிறது.

இரண்டாவது, கைத்தறித் துணிகளின் தேக்கம். இந்த ஆண்டில் அதிக அளவில் துணி தேங்கும் அபாயம் ஏற்படவில்லை. நாளடைவில் கைத்தறித் துணிகளின் விற்பனை அதிகரிப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. எனவே தேக்கம் என்ற பிரச்னை அநேகமாக இனி ஏற்படாது என்று நம்பலாம்.

மூன்றாவதாக ஏற்றுமதி; அதிலும் நாம் முயற்சி செய்தால் நல்ல முன்னேற்றம் காண முடியும். வெளிநாடுகளில் நல்ல விளம்பரம் செய்வதன் மூலமும், அந்தந்த நாட்டு மக்களின் விருப்பத்தை அனுசரித்து புதிய புதிய ரகங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமும் ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள மந்த நிலையைப் போக்கிவிட முடியும் என்று நம்புகிறேன்.

நாளடைவில் விசைத்தறிகள் ஏற்படும்போது கைத்தறித் தொழிலுடன் விசைத்தறியும் இணைந்து ஒரு நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கலாம். கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் படிப்படியாக விசைத்தறிகளுக்கு மாறிவிடும்போது கைத்தறியை நம்பியுள்ளவர்களின் தொகை குறையும். போட்டி குறையும். இதனால் கைத்தறித் தொழிலுக்கு ஏற்படும் பல சிக்கல்கள் தவிர்க்கப்படும்.

இன்று கைத்தறித் தொழிலில் ஒரு நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நல்ல நல்ல ரகங்கள் கைத்தறியில் உற்பத்தியாகின்றன. இந்த வளர்ச்சி இன்னும் விரிவடையும்போது கைத்தறித் துணிகளுக்கு ஒரு நிரந்தரமான விற்பனை வாய்ப்பு ஏற்படும். பொதுவாக கைத்தறித் தொழில் தனக்குத்தானே வாழ வேண்டும்; வளரவேண்டும் என்பது தான் என் அவாவும் நாட்டு மக்களின் அவாவுமாகும். அப்படி ஒரு நிலை நிச்சயம் ஏற்படும் என்று நம்புகிறேன்.

சிக்கல் தீர வழி!

திரு ஈ. வெ. கி. சம்பத்

ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெற்று வருவது போலவே இந்த ஆண்டும் இந்த விழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. இத்தகைய விழாக்களில் கைத்தறித் தொழிலுக்கு ஆதரவு கொடுக்க வேண்டிய அவசியம் பற்றிப் பொதுமக்களுக்கு விளக்கவும், அரசாங்கத்திடம் கைத்தறித் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்களை எடுத்து விளக்கி அதற்குத் தீர்வு காண உதவுமாறு கேட்டுக் கொள்ளவும் வேண்டிய கடமை ஏற்படுகிறது.

அமைச்சர் திரு கோவிந்தசாமி குறிப்பிட்டது போல திரு ஆச்சாரியாரின் அமைச்சரவை இருந்தபோது அரசியல் காழ்ப்புகள் அதிகரித்திருந்த நிலையிலும் கைத்தறிக்குக் கரைபோட்ட வேட்டியையும் வர்ணப் புடவைகளையும் உற்பத்தி செய்யும் உரிமையை ஒதுக்கித் தர வேண்டும் என்ற தீர்மானம் எல்லாக் கட்சியினராலும் ஒரு மனதாக வாக்களிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை இங்கு அரசியல் கட்சிகள் தமக்குள்ள வேறுபாடுகளை மறந்து கைத்தறித் தொழிலுக்கு ஆதரவு கொடுத்து வருகின்றனர். கைத்தறி நெசவாளர்களது பிரச்னையில் அரசியல் வேறுபாடுகள் எழுவதில்லை. எல்லாக் கட்சியினரும் நெசவாளர்களுக்கு உதவுகின்ற வகையில் அவரவர் தம்தம் திறமைகளைக் காட்டி வருகின்றனர். இனிமேலும் அப்படியே செயல்படுவார்கள் என்பதிலும் ஐயப்பாடு கிடையாது.

கைத்தறித் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல் தீர்க்கப்படவேண்டும். கைத்தறித் தொழில் கட்டாயம் பாதுகாக்கப்பட்டாகவேண்டும். கைத்தறியை நம்பியுள்ளவர்களின் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டே தீரவேண்டும். இதையெல்லாம் யாரும் மறுக்க முடியாது. முடிந்தால் கதருக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் அத்தனையும் கைத்தறிக்கும் கொடுக்கப்படவேண்டும் என்பதில் யாருக்கும் மறுப்புக் கிடையாது. அன்று இருந்த சூழ்நிலையில் கதருக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் கைத்தறிக்கு அளிக்கமுடியாமலிருந்தது. இன்றுள்ளவர்கள் பரிசீலனை செய்து கதருக்கு அளிக்கப்படும் சலுகை கைத்தறிக்கும் அளிக்க முடியும் என்று கண்டால் தாராளமாகச் செய்யலாம். அப்படி செய்வதற்கு யாரும் குறுக்கே நிற்க மாட்டார்கள்.

இன்று கைத்தறித் துணிகளைப்பார்த்து அவை மில் துணிகளைப் போலவே—மில் துணிகளை விட — என்றெல்லாம்தான் நமது சிந்தனைகள் செல்கின்றனவே யன்றி கதரைப் போல—கதரைவிட என்ற எண்ணம் நமக்கு ஏற்படவில்லை. இது எதைக் காட்டுகிறது? கைத்தறிக்கும் மில் துணிகளுக்கும்தான் போட்டியே தவிர இதரத் துணிகளோடு போட்டியிருப்பதாகக் கருத நியாயமில்லை என்பதையே காட்டுகிறது. எனவே உண்மையான போட்டி மில் துணிகளோடுதான். அந்தப் போட்டியைச் சமாளிக்கும் சக்தி பெற்று கைத்தறித் தொழில் தனக்குத்தானே சொந்தக் காலில் நிற்கக்கூடிய ஒரு நிலைக்கு வளரவேண்டும் என்பதுதான் எல்லோருடைய அவாவும் ஆகும்.

ஆலைக்கும் கைத்தறிக்கும் போட்டியென்றால் ஆலைகளே கூடாது என்பது பொருளல்ல. அதுவும் சுதேசிதான். ஆலைத் துணிகளும் கிளாஸ்கோவிலிருந்தோ, லங்காஷயரிலிருந்தோ, மான்செஸ்டரிலிருந்தோ வரவில்லை. இங்கே உள்ள ஆலைகளில்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. அந்த ஆலைகளில் இங்கே உள்ள மக்கள்தான் வேலை செய்கிறார்கள். அதிலும் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். எனவே ஆலைகள் மூடப்பட்டாலும் ஆபத்துத்தான்.

எனவே கைத்தறித்தொழில் தனக்கு எதிரான போட்டிகளை தனக்குத்தானே சமாளித்துக் கொள்ளக்கூடிய ஒரு நிலை வரவேண்டும் என்றுதான் எல்லோரும் விரும்புவார்கள். கைத்தறியை ஆதரிக்கவேண்டும் என்று மற்றவர்கள் வந்து வக்காலத்து வாங்கவேண்டிய அவசியமே ஏற்படாமல் கைத்தறித் தொழில் தனது திறமையின் உதவியைக் கொண்டு முன்னேறவேண்டும்; முன்னேறும் என்ற நம்பிக்கையும் உண்டு. ●

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

இன்று நம் நாட்டின் மக்கள் தொகை ஐம்பத்தி ஒரு கோடியை எட்டிப்பிடித்து விட்டது. இன்னும் இந்தத் தொகை வளர்ந்து கொண்டேதான் போகும். இருந்தும் கைத்தறித் தொழிலுக்குப் போதுமான ஆதரவில்லையே, ஏன்?

அதுவும் இப்போது நாளொரு நாகரிகம், பொழுதொரு பாஷன் என்று மாறிக்கொண்டே இருக்கிறது. காலையில் ஒரு உடை மாலையில் ஒரு உடையென்று மாற்றிக்கொண்டே இருக்கிறார்கள். இருந்தும் கைத்தறித் துணிகள் தேங்கி விடுகின்றனவே, ஏன்?

கைத்தறித் துணிகள் எந்த வகையில் குறைந்துவிட்டன? தரத்திலா? ரகத்திலா? பளபளப்பிலா? பகட்டிலா? எந்த வகையிலும் ஆலைத் துணிகளைவிட கைத்தறித் துணிகள் மட்டமில்லையே! விலையும்கூட அதிகமில்லையே! இன்னும் சொல்லப்போனால் ஆலைத் துணிகளை விட விலையில் குறைவாகத்தானே இருக்கிறது? இவ்வளவு இருந்தும் கைத்தறித் துணிகளுக்கு மக்களிடம் போதுமான ஆதரவு இல்லையே! இந்த நிலை நல்லதல்ல.

கைத்தறித் தொழில் ஒரு புராதனமான தொழில். இந்தத் தொழிலை நம்பி முப்பது லட்சம் குடும்பங்கள் இருக்கின்றன. இது தவிர இந்தத் தொழிலுக்குத் துணைத் தொழில்களான நூல் வர்த்தகம், சாயத் தொழில், ஜவுளிக் கடைகள் ஆகியவைகளில் சுமார் ஐந்து லட்சம் குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன. நம் நாட்டில் உழவுத் தொழிலுக்கு அடுத்தபடியாக அதிக மக்கள் ஈடுபட்டுள்ள தொழில் நெசவுத் தொழில்தான். இந்தத் தொழிலுக்கு ஆதரவில்லையென்றால் இதை நம்பியிருக்கின்ற குடும்பங்களின் கதி என்ன ஆவது?

கண்ட கண்ட துணிகளுக்கெல்லாம் காசைக் கொட்டிக் கொடுத்து உடம்பையும் கெடுத்து உள்ளத்தையும் கெடுத்துக் கொள்வதைவிட கைத்தறித் துணிகளுக்கு ஆதரவு கொடுப்பதன்மூலம் இந்தத் தொழிலை நம்பியிருக்கின்ற ஏழை நெசவாளர்களது குடும்பங்களைக் காப்பாற்றினோம் என்ற மனநிறைவு கொள்ளலாம்.

இப்போது ஓரளவுக்கு நம் தாய்மார்கள்தான் கைத்தறிக்கு ஆதரவு கொடுத்து வருகிறார்கள். அதிலும் பழம் பண்பாட்டில் நம்பிக்கையுள்ள தாய்மார்கள்தான் பெரும்பாலும் கைத்தறித் துணிகளை வாங்குகிறார்கள். உதட்டுச்சாயத் தாய்மார்கள் எந்தெந்த துணிகளுக்கோ கொண்டுபோய் காசைக் கொடுக்கிறார்கள். அவர்களது பார்வையும் கைத்தறியின் பக்கம் திரும்ப வேண்டும்.

எவ்வளவுதான் விலை கொடுத்து வாங்கினாலும், என்னதான் பளபளப்பாக இருந்தாலும் கைத்தறிப் பட்டுப் புடவைகளுக்கு அவை ஈடாகுமா? கல்யாணப் பெண்ணுக்கு எடுக்கும் பட்டுப் புடவை அவளது பேத்திகூட கட்டிக் கொள்ளலாம் என்று கூறுவார்கள். அதாவது, ஒரு பெண் மணப் பெண்ணாக இருக்கும்போது கட்டிக் கொண்ட பட்டுப் புடவை அந்தப் பெண் குழந்தை பெற்று அந்தக் குழந்தை வளர்ந்து மணப் பருவம் எய்தி, அதற்கும் திருமணம் முடிந்து குழந்தையும் பெற்று, அந்தக் குழந்தையும் வளர்ந்து வரும்வரையும் அதற்குப் பின்பும் அந்தப் பட்டுப்புடவை

திரு எம். ஏ. மாணிக்கவேலு, பி.ஏ., பி.எல்.,
சென்னை மேல் சட்டசபைத் தலைவர்

இருக்கும் என்பார்கள். அவ்வளவு காலம் வேறு எந்தப் புடவையும் உழைக்காது. நைலக்ஸோ, நைலானே, டெர்லினே, டெரிகாட்டனே கைத்தறிப் புடவைகளைப்போல் நீண்ட நாட்களுக்கு உழைக்காது.

அதுவும் கைத்தறிப் புடவை கட்டிக் கொண்டிருக்கும் தாய்மார்களைப் பார்க்கும்போது ஒரு லட்சுமி கடாட்சம் தாண்டவமாடுகிறது, ஆனல் நைலான்—டெர்லின் புடவைகளைக் கட்டிக் கொண்டிருக்கும் தாய்மார்களைப் பார்க்கும்போது என்னவோ போல இருக்கிறது.

எனவே நமது இளந்தாய்மார்கள் தங்களது மனதைக் கைத்தறியின் பக்கம் திருப்பவேண்டும். அதிலும் குறிப்பாக கல்லூரி மாணவிகள் கைத்தறிக்கு ஆதரவு கொடுக்க முன்வரவேண்டும். இதையேதான் மாணவர்களுக்கும் கூறுகிறேன். இப்போது மாணவர்கள் விரும்பக்கூடிய பல வகையான ரகங்கள் கைத்தறியிலும் கிடைக்கின்றன. கைத்தறித் துணிகளுக்கும் பளபளப்பூட்டி சுருங்காமலிருக்கச் செய்யும் முறை வந்துவிட்டது. இங்கேயே நமது ஈரோட்டில் அதற்கான எந்திரங்களைக் கொண்டு கைத்தறித் துணிகளை பளபளபாக்கிச் சுருங்காத்தன்மையும் ஏற்படுத்தப்படுகிறது.

இன்று கைத்தறியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. புதிய புதிய ரகங்கள், கண்ணைப் பறிக்கும் வண்ணங்கள், வித விதமான வேலைப்பாடுகளைக் கொண்ட கைத்தறித் துணிகள் தயாராகின்றன. இன்று தமிழ் நாட்டில் கைத்தறித் துணிகளின் தரத்தோடும் ரகத்தோடும் போட்டியிட வேறு எந்தத் துணிகளாலும் முடியாது என்ற அளவு கைத்தறித் தொழிலில் திறமை வளர்ந்துள்ளது.

இங்கு கைத்தறியில் இவ்வளவு முன்னேற்றம் ஏற்படக் காரணமாக இருப்பவர் நமது நண்பர் நாச்சிமுத்து அவர்கள் தான் என்று கூறினல் அது மிகையாகாது. அவரது முயற்சியில் இந்தத் தொழில் நன்ருக முன்னேறி வருகிறது. அவர் கூட்டுறவின்கீழ் உள்ள நெசவாளர்களுக்குமட்டுமின்றி கூட்டுறவுக்கு வெளியே உள்ள நெசவாளர்களது நன்மைக்காகவும் பாடுபட்டு வருகிருர். இப்போது இந்த விழாவுக்கு வந்துள்ள கடைகளில் கூட்டுறவுக் கடைகள் மட்டுமின்றி கூட்டுறவுக்கு வெளியே உள்ள கைத்தறித் துணிக் கடைகளும் உள்ளன.

இங்குள்ள கடைகளை நான் சுற்றிப் பார்த்தேன். எந்தத் துணியைப் பார்த்தாலும் ஆசை ஏற்படுகிற அளவுக்கு ஒவ்வொரு துணியும் இருக்கிறது. கைத்தறியில் இவ்வளவு முன்னேற்றமா என்று ஆச்சரியமடைந்தேன். இவ்வளவு நல்ல துணிகளை வாங்குவதற்கு மக்கள் ஏன் தயங்கவேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. இருந்தாலும் இப்போது இந்த விழாவில் நல்ல விற்பனையாகி வருவதாகக் கூறியதைக் கேட்டபோது எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. கைத்தறித் துணிகளுக்கு மக்களிடையே நல்ல ஆதரவு பெருகி வருகிறது என்பதை உணர்ந்தேன்.

பொதுவாக இந்தக் கைத்தறித் தொழில் வாழவேண்டுமானல், இதை நம்பியுள்ள குடும்பங்கள் வயிருர உண்ண வேண்டுமானல் நமக்குத் தேவையான துணிகளில் முக்கால் பங்கு கைத்தறித் துணிகளாக வாங்குவது என்று நாம் ஒவ்வொருவரும் முடிவெடுத்துக்கொள்ள வேண்டும். மீதியுள்ள கால் பங்கில் பாதி கதரும், பாதி மில்லும் என்று ஒதுக்கிவிட வேண்டும்.

இப்போது ஒரு சாரார்தான் கைத்தறித் துணிகளை ஆதரிக்கிருர்கள். அதாவது பெண்கள்தான் அந்தப் பழைய பண்பாட்டைக் கைவிடாமல் கைத்தறிப் புடவைகளையே கட்டுகிருர்கள். இதுபோலவே மற்ருெரு சாராரும் அதாவது ஆண்களும் கைத்தறிக்கு ஆதரவு கொடுக்க முன்வருவார்களேயானல் பிறகு கைத்தறித் தொழிலுக்கு நெருக்கடியே ஏற்படாது. நெசவாளர்களுக்கும் கவலை கிடையாது. நமது நண்பர் நாச்சிமுத்து அவர்களுக்கும் தொல்லையிருக்காது. அவர் பேசாமல் நிம்மதியாக உட்கார்ந்து ஓய்வெடுத்துக் கொள்ளலாம். எனவே, நமது நண்பர் நாச்சிமுத்துவுக்கு சதா கைத்தறியைப் பற்றி இருந்துகொண்டிருக்கும் கவலையை மாற்றுவதற்காகவாவது நாம் கைத்தறிக்கு ஆமோகமான ஆதரவு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்களின் பங்கு

திரு கே. பாலதண்டாயுதம்

இன்று மாணவர்கள் தினம் என்று தலைவர் திரு நாச்சிமுத்து அவர்கள் நினைவூட்டினார். நான் இந்தக் கைத்தறி வார விழாவில் ஒவ்வொரு ஆண்டும் கலந்துகொள்ளும்போது அது மாணவர் தினமாகவே இருக்கிறது. இந்த ஆண்டும் மாணவர் தினமான இன்று நான் இந்த விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

அந்தக் காலத்தில் நான் மாணவர் இயக்கத்தில் சேர்ந்திருந்தேன் என்ற ஒரு காரணத்திற்காக எனக்கு எப்படியோ இந்த விழாவில் மாணவர் தினத்திலேயே பங்கு கொள்ளும் வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது என்று நினைக்கிறேன்.

இக்காலத்து மாணவர்களின் உணர்ச்சிகளை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்களது சிந்தனை, செயல் ஆகியவைகளின் போக்கு எங்களுக்கு ஒரு புதிராகவே இருக்கிறது. நாங்கள் மாணவர்களாக இருந்த காலத்தில் எங்களுக்கு ஒரு கவர்ச்சியிருந்தது. அந்தக் கவர்ச்சி சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடும் வீரர்களில் நாமும் ஒருவர் என்ற பெருமித உணர்ச்சியால் ஏற்பட்டது. இன்றும் மாணவர்கள் பலவகையான போராட்டங்களை நடத்துகிறார்கள். அவர்களுக்கும் ஏதோ கவர்ச்சியிருக்கிறது.

அன்றைய மாணவர்களுக்கும், இன்றைய மாணவர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் வேறுபாடு உண்டு. அன்று நாங்கள் அடிமை இந்தியாவில் மாணவர்களாக இருந்தோம். இன்று சுதந்திர இந்தியாவின் மாணவர்களாக இருக்கிறார்கள். அன்று நாங்கள் சுதந்திர இயக்கத்தால் கவரப்பட்டோம். இன்று மாணவர்கள் பொருளாதாரப் புரட்சியால் கவரப்படுகிறார்கள் என்றே கருதுகிறேன்.

இன்று ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்திற்கு மாணவர்கள்தான் காரணம் என்று கூறப்படுகிறது. அது உண்மையுமாகும். வெறும ஆட்சி மாற்றம் மட்டும் ஏற்பட்டால் போதாது. பொருளாதார மாற்றமும் ஏற்படவேண்டும். அதற்கும் மாணவர்கள்தான் காரணமாக இருக்க வேண்டும். நாட்டில் பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்திய பெருமை மாணவர்களையே சாரவேண்டும். ஒரு நாட்டின் பொருளாதாரம் முன்னேற வேண்டுமானல் அந்த நாட்டு மக்களிடையே சுதேசிய உணர்ச்சி தீவிரமடைய வேண்டும்.

சுதேசிய உணர்வு தீவிரமடையும் போது ஒரு நாட்டின் பொருளாதாரம் எப்படி முன்னேறும் என்பதற்கு ஒரு உதாரணம், சுதந்திரப் போராட்டக் காலத்தில் ஏற்பட்ட சுதேசிய உணர்ச்சியின் விளைவாக இந்தியர்களுக்குச் சொந்தமான ஆலைகள் அன்று கோடிக் கணக்கான ரூபாய் லாபமடைந்ததைக் குறிப்பிடலாம். கதருக்கு முக்கியத்துவம அளிக்கப்பட்ட அதேவேளையில், கைராட்டினத்திற்கு மரியாதை அளிக்கப்பட்ட நேரத்தில் இங்கிருந்த டாடா, பிர்லாக்களுக்குச் சொந்தமான ஆலைகள் நிமிர்ந்து எழுந்து நின்றன. இந்த உலகத்திலேயே ஜவுளித் தொழிலுக்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டபோது மான்செஸ்டர், லங்காஷயர் ஆலைகள் படுத்துவிட்ட போது, இந்திய ஆலைகள் எழுந்து நின்றன. கோடி கோடியாக லாபம் சம்பாதித்தன. இந்திய ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் இந்த உலகமெல்லாம் ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்த நாட்டிற்கு அந்நியச் செலாவணி வந்து குவிந்தது. இந்த நாட்டின் பொருளாதாரம் உயர்ந்தது. ஆனல் அன்று இங்கு அந்நிய ஆட்சி இருந்ததின் காரணமாக அந்தப் பொருளாதார முன்னேற்றத்தின் பலனை நம்மால் அனுபவிக்க முடியவில்லை. இன்று அப்படியில்லை. இன்று இந்த நாட்டிற்கு எந்த வகையில் அந்நியச் செலாவணி கிடைத்தாலும், எந்த வகையில் இந்த நாட்டின் பொருளாதாரம் உயர்ந்தாலும் அதன்

பலனை நாம் துய்க்கமுடியும். அதனால் ஒரு பொருளாதாரப் புரட்சி ஏற்பட முடியும்.

ஆபத்துக் காலத்தில்தான் நாம் சுதேசியத்தின் அருமையை உணர்ந்து கொண்டோம். அண்மையில் நிகழ்ந்த இரண்டு படையெடுப்பின்போதும் நம்முடைய நண்பர்கள் என்று கருதப்பட்டவர்கள் நமக்கு உதவி செய்ய மறுத்து விட்டார்கள். அவர்களிடமிருந்து பெற்ற ஆயுதங்களுக்கு மாற்று உறுப்புகள் கூடக் கொடுக்க மறுத்துவிட்டார்கள். அந்த நிலையில் நமது இளைஞர்கள் 726 புதிய கண்டுபிடிப்புகளைச் செய்தார்கள். அந்த ஆயுதங்களுக்கெல்லாம் மாற்று உறுப்புகளைச் சொந்தமாகவே தயாரித்தார்கள். அதன்மூலம் எதிரிகளை முறியடிக்க முடிந்தது.

விடுதலை வேண்டும் என்ற போதும் சுதேசிய உணர்வு தீவிரமடைந்தது. எதிரிகள் வந்து உள்ளே புகுந்தபோதும் சுதேசிய உணர்வுதான் முன்வந்து நின்றது. அதே சுதேசிய உணர்வு தான் பொருளாதார விடுதலைக்கும் தேவைப்படுகிறது.

நம் நாட்டில் ஏற்படும் பொருளாதார வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட வர்க்கத்திடம் சென்று குவிந்துவிடாமல் பார்த்துக் கொள்வதுதான் பொருளாதாரப் புரட்சிக்குத் தேவையான முதல் படியாகும். ஆலை முதலாளிகளின் லாப வேட்டைக்கு இரையாகாமல் அந்தப் பணம் கைத்தறி நெசவாளர்களிடையே பரவுமானால் அது ஒரு பெரிய பொருளாதார மாற்றமாகும். எனவே இளைஞர்கள் கைத்தறியின்பால் தங்களது கவனத்தைத் திருப்பவேண்டும்.

உள்நாட்டில் மட்டும் கைத்தறிக்கு ஆதரவு வளர்ந்தால் போதாது. வெளிநாடுகளிலும் நமது கைத்தறித் துணிகளுக்கு வாய்ப்புகள் பெருகவேண்டும். இன்று உலகத்திலுள்ள சோஷலிஸ நாடுகள் நமது கைத்தறித் துணிகளை ஏராளமாக வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கின்றன. அந்த நாடுகளுடனெல்லாம் நாம் வர்த்தக உறவு வைத்துக் கொள்ளவேண்டும். அதன் மூலம் நமது கைத்தறித் துணிகளை நிறைய அளவில் அங்கு ஏற்றுமதி செய்யமுடியும்.

நான் சந்தித்த சில வெளிநாட்டு நண்பர்கள் இங்கிருந்து திரைப்படங்களை அனுப்பவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் நம் நாட்டுக் கலாச்சாரத்தை—பண்பாட்டைப் பிரதிபலிக்கின்ற வகையில் உள்ள படங்கள்தான்வேண்டும் என்றார்கள். ஆனால் நம்நாட்டுப் படங்களிலோ எந்த நாட்டுக் கலாச்சாரம் என்றே புரிந்துகொள்ள முடியாமல் என்னென்னவோ மாதிரி உடைகளை அணிகிறார்கள். அதைப் பார்த்து நம்முடைய இளைஞர்களும் பெண்களும் அது போலவே உடையணியத் தொடங்குகிறார்கள்.

இதனால்தான் தலைவர் திரு நாச்சிமுத்து அவர்களுக்கு ஒரு யோசனை சொல்ல நினைக்கிறேன். ஜெமினி கணேசன், சிவாஜி கணேசன், பத்மினி, சாவித்திரி போன்றவர்களுக்குக் கைத்தறி ஆடைகளைக் கொடுத்து ஒரு படம் எடுப்பாரே ஆனால் இந்த நாட்டில் கைத்தறிக்கு நல்ல மவுசு ஏற்பட்டுவிடும் என்று நினைக்கிறேன்.

ஆனால் இப்படி ஒரு நிலை இருப்பது நல்லதல்ல. இந்த நிலை மாறவேண்டும். நம்நாட்டுக் கலாச்சாரம்–பண்பாடு பாதுகாக்கப்படவேண்டும். நம்முடைய கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கின்ற வகையில் நமது உடைகள் இருக்கவேண்டும். நமது கலாச்சாரத்தில் நமக்குள்ள பற்று-பாசம் ஆகியவைகளைக் கண்டு திரைப்பட நடிகர்கள் திருந்தவேண்டும். நாம் உடுத்தும் துணிகளைப் பார்த்து அவர்கள் உடைகளை அணிந்துகொள்ளும் ஒரு நிலை ஏற்படவேண்டும்.

இன்று கைத்தறியில் நல்ல நல்ல ரகங்கள்—கவர்ச்சிகரமான ரகங்கள் வந்துள்ளன. அவைகளை வாங்கி நெசவாளர்களுக்கு உற்சாகமூட்டினால் மேலும் மேலும் புதிய புதிய மோஸ்தர்களில் கைத்தறித் துணிகள் வந்து கொண்டே இருக்கும். அந்த மோஸ்தர்கள்தான் இந்த நாட்டின் பாஷையை உருவாக்கக்கூடியவையாக இருக்கும். எனவே அந்த அளவு கைத்தறித் துணிக்கு மக்களிடையே ஆதரவு பெருகவேண்டும். குறிப்பாக இளைஞர்களிடையேயும் மாணவர்களிடையேயும் கைத்தறிக்கு ஆதரவு பெருகவேண்டும். கைத்தறி நெசவாளர்களின் வாழ்வு வளம் பெறவேண்டும் என்று விரும்புகிறேன்; வளம் பெறும் என்றும் நம்புகிறேன்.

காலத்திற்கேற்ற

கண்கவர் ஆடைகள்!

திரு சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.,
முதலமைச்சர்.

கைத்தறித் தொழிலுடன் எனக்குள்ள தொடர்பும் அக்கறையும் நான் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள இந்த நேரத்தில் மட்டுமல்ல; இதற்கு முன்பிருந்தே இந்தத் தொழிலுடன் எனக்குத் தொடர்பும், இதன்பால் ஒரு அக்கறையும் இருந்து வந்திருக்கிறது. இதற்குக் காரணம் நான் பிறந்து—வளர்ந்து—வாழ்கின்ற காஞ்சிபுரம் நெசவாளர்கள் நிறைந்துள்ள பகுதியாகும். காஞ்சிபுரம் என்பது நெசவாளர்கள் நிறைந்த பேட்டைகளும் — பாளையங்களும்-கடைவீதிகளும்-நெசவை நம்பியிருக்கின்ற மக்களும் நிறைந்ததாகும். எனவே, அங்கு வாழ்ந்து வருகிற எனக்கு நீண்ட நெடுங்காலமாகவே நெசவாளர்களோடு நெருங்கிய தொடர்பு இருந்துவருவது இயல்பே. பல ஆண்டுகளாகவே நெசவாளர்களது கஷ்டங்களையும் நெருக்கடிகளையும் நேரடியாகவே உணர்ந்துள்ள காரணத்தால் இந்தத் தொழிலில் எனக்கு ஒரு அக்கறை பிறந்திருப்பது இயற்கையேயாகும்.

நெசவாளர்களது கஷ்டங்கள் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றன. அவைகளுக்கான பரிகாரங்கள் கிடைக்கவில்லை என்று கூறப்பட்டது. நூல் எப்போதுமே சிக்கலுக்கு ஆளாவதுதான். அதுபோலவே அந்த நூலுடன் தொடர்பு கொண்டுள்ள நெசவாளர்களது வாழ்விலும் அடிக்கடி சிக்கல்கள் ஏற்படுகிறது. அந்த சிக்கல்களைப் பக்குவமாக நீக்கவேண்டும்.

கைத்தறித் தொழிலில் எவ்வளவு சிக்கல்கள்—கஷ்டங்கள்—நெருக்கடிகள் இருந்தபோதும் கைத்தறித் துணிகளின் நேர்த்தியும் கவர்ச்சியும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. மற்ற ஆலைத் தொழிலுக்குக் கிடைக்கின்ற வாய்ப்பு-வசதி-அரசாங்க உதவி-விஞ்ஞானத் துணை ஆகியவை இல்லாத நிலையிலும்கூட, நேர்த்தியான-மெச்சத்தக்க—வியக்கத்தக்க வகையில் கைத்தறி நெசவாளர்கள் தங்களது திறமையைக் கொண்டு கண்ணைக் கவரும் ஆடைகளைத் தயாரித்து வருகின்றனர்.

இப்படிப்பட்ட நேர்த்தியான துணிகளை ஆலைகளில்தான் உற்பத்தி செய்ய முடியும் என்று நம்பப்பட்ட ஒரு காலமிருந்தது. ஆனால் இன்று யந்திரத்தின் துணை கொண்டு தயாரிக்கப்படும் துணிகளைவிட கைத்தறியில் தயாரிக்கப்படும் துணிகள் கண்ணைக் கவரத்தக்க வகையில் மிக வேகமாகத் தயாரிக்கப்படுகின்றன.

மக்களது விருப்பங்களைக் கண்டு அடிக்கடி தினுசுகளை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று சில பெரியவர்கள் கூறுவார்கள். அப்படிக் கூறுகிறவர்கள், ஆண்டுக்கொரு முறை இந்த விழாவுக்கு வரும்போது மட்டும் கைத்தறியைப் பற்றி நினைத்துப் பார்ப்பவர்களாகத்தான் இருப்பார்கள். கைத்தறி ஆடைகளைக் கண்ணில் பார்ப்பவர்களாக இருப்பார்கள். கைத்தறித் துணிகளின் தினுசுகள் நாளுக்கு நாள், வாரத்துக்கு வாரம் மாறிக் கொண்டிருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியாது.

ஏதாவது சினிமாப் படம் ஒரு வாரம் ஒழுங்காக ஓடிவிட்டால் அந்தப் படத்தில் வரும் நடிகர்கள் நடிகைகள் அணிந்திருக்கும் ஆடை தினுசுகளைப் போலவே கைத்தறியிலும் ஆடை தினுசுகள் வெளி வந்துவிடும். அந்தப் படத்தின் கதாநாயகி அணிந்திருந்த சேலையைப்போல்

கைத்தறியில் தயாரிக்கப்பட்டு, மறுநாள் கடைகளில் விற்பனைக்கு வரும்போது அந்த சேலைக்கு அந்தப் படத்தின் பெயரை வைத்து விடுவார்கள்.

இப்படி ஒரு படம் வெளி வந்து வெற்றிகரமாக ஓடிவிட்டால் அந்தப் படத்தில் வரும் கதாநாயகி அணிந்திருந்த சேலையைப் போலவே மறுநாள் தனது தறியில் நெய்துவிடுகின்ற அந்த நெசவாளி அந்தப் படத்தை ஒரு முறைக்கு நான்கு முறை பார்த்து தனது சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டு வேலையைத் தொடங்குவதில்லை. அவனுக்கு அந்த அளவு வசதியும் இல்லை. ஒரே ஒரு முறைதான் ஒரு படத்தைப் பார்க்கிறான். அதில் நடிக்கின்ற கதாநாயகி அணிந்திருக்கும் சேலையை பார்க்கிறான். அதைப்போல் தயாரிக்கவேண்டும் என்று நினைக்கிறான். நம்மாலும் முடியும் என்று நம்புகிறான். அந்த நம்பிக்கை விரல் நுனிக்கு வருகிறது. வேலையைத் தொடங்குகிறது. உடனே அந்தக் கதாநாயகி அணிந்திருந்த சேலையைப் போன்றதொரு அழகான சேலையை நெய்து முடிக்கின்றான்.

எனவே கைத்தறி நெசவாளர்கள் காலத்தோடு ஒட்டி மக்களது தேவைகளை அறிந்து நாளுக்கொரு தினுசாக துணிகளைத் தயாரிக்கின்றனர் என்பதில் சந்தேகம் கிடையாது. அதில் சந்தேகமிருந்தால் இங்கே உள்ள கடைகளில் போய் பாருங்கள். எந்தக் கடையிலுள்ள எந்தத் துணியைப் பார்த்தாலும் வாங்கலாமா என்றுதான் தோன்றுமே தவிர அந்தத் துணியின் நாணயம்—நேர்மையில் ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருக்கத் தோன்ருது. இங்கே உள்ள கைத்தறித் துணிகள் நேர்த்தியில் — கவர்ச்சியில் ஒன்றையொன்று போட்டியிட்டுக் கொண்டு கண்ணைப் பறிக்கக்கூடியவையாக இருக்குமே தவிர, அவைகளில் எதையும தள்ளிவிடக்கூடிய நிலையில் இருக்காது. இப்படிப்பட்ட அழகிய—அருமையான கைத்திறன் படைத்த இந்தத் தொழிலைப் பாதுகாக்கவேண்டும் என்று நான் இந்தப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பே சொல்லியிருக்கிறேன். இன்றும் அதையே சொல்கிறேன்.

இன்று இப்படிப்பட்ட கைத்தறித் தொழிலுக்குப் பலவகையிலும் கஷ்டங்கள்—நெருக்கடிகள் ஏற்பட்டிருப்பதாக இந்தச் சங்கத்தின் தலைவர் திரு நாச்சிமுத்து அவர்கள் குறிப்பிட்டார்.

நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் நூல் கிடைப்பதில்லை. சாயப் பொருட்களின் விலையேற்றம், இந்தத் தொழிலை நடத்தத் தேவையான முதலீடு தர பாங்குகளின் தயக்கம், நம் நாட்டுக் கைத்தறித் துணிகளை இறக்குமதி செய்து வந்த நாடுகள் இப்போது கதவைச் சாத்திவிட்டதால் ஏற்பட்டுள்ள தேக்கம் ஆகியவைகளின் காரணமாக நேர்த்தியான ஒரு தொழில், காலாகாலமாக பலர் ஈடுபட்டுள்ள தொழில், ஒரு காலத்தில் ரோமானிய நாடு பாராட்டிய தொழில் இன்று ஒரு பஞ்சத் தொழிலாக மாறிவிட்டது. அதை நம்பியுள்ள மக்களின் வாழ்வு பரிதாபகரமான நிலைக்கு வந்திருக்கிறது. இந்த தொழிலை ஆதரிக்க தள்ளுபடி பத்து பைசா கொடுக்கலாமா? பதினைந்து பைசா கொடுக்கலாமா? தலையில் சுமந்து விற்கலாமா? கண் காட்சியை நடத்தலாமா?—என்றெல்லாம் சிந்திக்க வேண்டிய நிலைக்கு வந்திருக்கிறது. வெளிநாடுகளில் சந்தை தேடி அலைய வேண்டியிருக்கிறது. இதற்குக்காரணம் யார் என்பதை இந்தச் சங்கத்தின் தலைவர் திரு நாச்சிமுத்து அவர்கள் நன்கு அறிவார். அவர்கூட கைத்தறித் துணிகளுக்குச் சந்தை தேட அமைச்சர்களுடன் சேர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்று வந்தவர்தான்.

வெளிநாடுகளில் நமது தூதரகங்கள் இருக்கின்றன. நமது வெளிநாட்டு வர்த்தகத்தைப் பெருக்குவதற்கென்றே அமைப்புகளும் இருக்கின்றன. அவைகளுக்காகக் கோடிக்கணக்கில் பணம் செலவிடப்படுகிறது. அந்தத் தூதராலயங்களும் இதர அமைப்புகளும் நமது கைத்தறித் துணியின்பால் அந்த நாட்டு மக்களுக்கு ஆர்வம் உண்டாகும்படி செய்ய வேண்டும். அப்படி வெளிநாடுகளில் உள்ளவர்கள் நமது கைத்தறி ஆடைகளின் மீது அந்த நாட்டு மக்களுக்கு ஆர்வத்தை ஊட்டியிருந்தால் இன்று அந்த நாடுகளிலெல்லாம் நல்ல கிராக்கி ஏற்பட்டிருக்கும்.

நான் வெளிநாடு சென்றிருந்த நேரத்தில் அங்குள்ள நமது அதிகாரிகளைச் சந்தித்தேன். அவர்களில் நூற்றுக்கு ஒருவர்கூட கைத்தறி ஆடைகளை அணிந்திருக்கவில்லை. பலர் மேல்நாட்டு உடைகளையும், ஒரு சிலர் தேசிய உடை என்ற பெயரால் கதராடையையும் அணிந்திருந்தார்கள். அவர்களுக்கு நமது கைத்தறி ஆடைகளைப் பற்றியே எதுவும் தெரியவில்லை. அப்படிப்பட்டவர்கள் அந்த நாட்டு மக்களிடம் சென்று கைத்தறி ஆடைகளைப் பற்றிக் கூறினல் அது எப்படியிருக்கும்? அவர்

களுக்கு நமது காஞ்சிபுரம் பட்டுச் சேலையைப் பற்றித் தெரியுமா? புளியங்குடி குண்டஞ்சியின் நயம் தெரியுமா? இவர்கள் போய் கடையநல்லூர் சரக்கு நல்ல சரக்கு, சேலம் குண்டஞ்சு வேட்டி நல்ல வேட்டி, புவனகிரி சட்டைத் துணிகள் பிரமாதமாக இருக்கும் என்றெல்லாம் சொன்னால் எப்படியிருக்கும்? இதைச் சொல்லுகின்ற அவர்கள் எந்தத் துணியை அணிந்திருக்கிறார்கள் என்று அந்த நாட்டு மக்கள் பார்க்கமாட்டார்களா? ஆகவே அவர்கள் கைத்தறித் துணிகளைப் பற்றிக் கூறுவதில் உயிரில்லை. அவர்களும் கைத்தறி ஆடைகளை அணிந்துகொண்டு அங்கு நடைபெறும் கண்காட்சிகளில் நமது கைத்தறித் துணிகளைப் பற்றி எடுத்துச் சொல்லுமளவுக்கு ஒரு நிலையிருந்தால் உலகச் சந்தைகளில் கைத்தறிக்கு நல்ல வரவேற்புக் கிடைக்கச்செய்ய முடியும். அங்கு மட்டுமின்றி, இங்கும் கைத்தறித் துணிகளை விற்பவர்கள் கைத்தறித் துணியைத்தான் அணிந்துகொண்டிருக்க வேண்டும். கைத்தறித் தொழிலுக்காக உழைப்பதாகக் கூறுபவர்களும் கைத்தறித் துணிகளைத்தான் அணிந்துகொள்ளவேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்காகப் பாடுபடுவதாகக் கூறிக்கொண்டு அவர்கள் கதரையோ மற்ற துணிகளையோ அணிந்துகொண்டிருந்தால் அவர்கள் கூறுவதில் உள்ள ஆழத்தைப் பற்றி, உண்மையைப்பற்றி மற்றவர்கள் சந்தேகிக்கமாட்டார்களா?

இலட்சக்கணக்கான மக்கள் இந்தத் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மன்னிக்கவேண்டும். அவர்கள் வாழ்ந்து கொண்டிருப்பதாகக் கூறிவிட்டேன். உண்மையைச் சொல்வதென்றால் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை; வதைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ அவர்களது துணிகளுக்கு மார்க்கெட் தேடிக்கொடுப்பது மத்திய அரசின் கடமையாகும்.

நூல் விலை ஏறியிருக்கிறது. அதனால் கைத்தறித் துணியின் உற்பத்திச் செலவு கூடுகிறது. ஆனால் அந்த அளவு கைத்தறித் துணிகளின் விலையை ஏற்ற வழியில்லை. நூல் விலை ஏற்றத்திற்குக் காரணம் கேட்டால் பருத்தி விலை உயர்வு. பருத்தி சாகுபடி செய்பவர்களைக் கேட்டால் "அதில் ஒன்றும் லாபமில்லை. இப்போது கொடுக்கின்ற விலை எங்களுக்கே கட்டுபடியாகவில்லை" என்று கூறுகிறார்கள்.

இந்த நிலையில் நெசவாளர்கள் மக்களுடைய ஆதரவை — அனுதாபத்தை எதிர்நோக்கியிருக்கிறார்கள். இந்தத் தொழில் நசிந்துப் போகாமல் நெசவாளர்கள் பாதி வயிருவது கஞ்சி குடிக்குமளவுக்கு உதவி வருபவர்கள் தாய்மார்கள்தான். அந்த நல்ல காரியத்தை மட்டும் நமது தாய்மார்கள் செய்யத் தவறியிருந்தார்களானால் இந்தக் கைத்தறித் தொழில் என்றோ நசிந்துப் போயிருக்கும். எனவே இன்றளவும் இந்தக் கைத்தறித் தொழில் உயிருடனிருக்கிறது என்றால் அதற்கு நமது தாய்மார்கள்தான் காரணம். ஆடவர்கள் வெவ்வேறு வகையான ஆடைகளில் கருத்தைச் செலுத்துகிறார்கள். அவர்கள் எப்படிப் போனாலும் நமது தாய்மார்கள் மறவாமல் கைத்தறி ஆடைகளை ஆதரித்து வருகிறார்கள். அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது வணக்கத்தையும் மரியாதையையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விசைத்தறிகள் அடுத்துள்ள மாநிலங்களில் பரவிவிட்ட காரணத்தால் இங்கு கைத்தறித் தொழிலுடன் போட்டியிடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. எந்த ஒரு திட்டமும் கொள்கையும் அகில இந்திய ரீதியில் எல்லா மாநிலங்களிலும் ஒரே அடிப்படையில் அமுல் நடத்தப்பட்டால்தான் நடைமுறையில் சிக்கல் ஏற்படாது. ஒரு இடத்தில் மதுவிலக்கு, மற்றொரு இடத்தில் புதிதாக பீர் கடைகள் திறப்பு என்று இருந்தால் என்ன செய்வது? அது போல ஒரு மாநிலத்தில் விசைத்தறி, மற்றொரு மாநிலத்தில் விசைத்தறி இல்லையென்றால் மேலும் பிரச்னைகள் பெருகத்தானே செய்யும்?

எந்த ஒரு கொள்கையாக இருந்தாலும், அது மதுவிலக்குக் கொள்கையாக இருந்தாலும், விசைத்தறித் திட்டமாக இருந்தாலும் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஒரே மாதிரி அமுல் நடத்த மத்திய அரசு முனையவேண்டும். இல்லாவிட்டால் மதுவிலக்கை அமுல் நடத்தும் எங்களுக்கு அதனால் ஏற்படும் நஷ்டத்திற்கு ஒரு ஈட்டுத் தொகை கொடுக்க மத்திய அரசு முன்வரவேண்டும். அது போலவே விசைத்தறியால் ஏற்படும் போட்டியைச் சமாளிக்க இங்குள்ள கைத்தறிக்கு உதவ ஒரு தொகையைக் கொடுக்கவேண்டும்.

அதுவுமில்லை, இதுவுமில்லை என்றால் எப்படி முடியும்? கைத்தறித் தொழிலுக்கு உதவி செய்வதாக இருந்தால் விசைத்தறி சம்பந்தமாக அகில இந்திய அடிப்படையில் ஒரே சீரான கொள்கை

அமுல் நடத்தப்படவேண்டும். இன்று கைத்தறித் துணிகளுக்குப் போட்டியாக ஆலைத் துணிகள் மட்டுமின்றி விசைத் தறித் துணிகளும் வந்துவிட்டன. இந்த நிலையில் இங்கு இந்தக் கைத்தறியை நம்பியுள்ள முப்பது லட்சம் மக்களுக்கு அரை வயிற்றுக்காவது சோறு போட்டாகவேண்டும். அந்தக் கடமையை நமது தாய்மார்கள்தான் செய்து வருகிறார்கள். அவர்களும் ஆமதாபாத் சேலையையும் கட்டாவ் வாயிலையும் பார்த்து மனதைப் பறிகொடுத்து விடுவார்களானால் இந்தக் கைத்தறித் தொழில் வாழ முடியாது. எனவே மறுமுறையும் தாய்மார்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாய்மார்களுக்கு மட்டுமின்றி இன்று ஆடவர்கள் விரும்பும் பல வகையான ரகங்கள் கைத்தறியில் வந்துள்ளன. ஆலைத் துணிகளைவிட கைத்தறித் துணிகளுக்குப் பளபளப்புக்கூடியே இருக்கிறது. இதனால் ஒரு சிலர் ஆலைத் துணிகளைக்கூடக் கைத்தறித் துணி என்று கூறி விற்றுவிடுவதுகூட உண்டு.

ஆலைத் துணிகளுக்கு நல்ல விளம்பர வசதி இருக்கிறது. நமது கைத்தறித் துணிகளுக்கு அப்படிப்பட்ட விளம்பரமும் இல்லை; வசதிகளுமில்லை. இந்த நிலையில் இது போன்ற விழாக்கள் மூலம் தான் ஏதோ ஓரளவு விளம்பரம் கிடைக்கிறது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பொதுமக்களின் ஆதரவைத் திரட்டி, அனுதாபத்தைப் பெற்று வாழ வேண்டிய நிலையில்தான் இன்று கைத்தறித் தொழில் இருக்கிறது. இந்த நிலையை மக்களும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். எனவேதான் இத்தகைய விழாக்களுக்கு ஏராளமான மக்கள் வந்து கைத்தறி ஆடைகளை வாங்கிச் செல்கிறார்கள். இந்த ஆதரவு தொடர்ந்து நீடிப்பதுடன் வளர்ந்து நெசவாளர்களது வாழ்வில் வளம் பெருகவும் உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்தாபிதம்: 1957 தபால் பை: 18
போன்: 284 தந்தி: "குமரிபாங்க்"

கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கு லிமிடெட், நாகர்கோவில்.

கிளை: மார்த்தாண்டம், தக்கலை.

தலைவர்: திரு. எல். ராமச்சந்திர நாடார்
உப-தலைவர்: திரு. ஜி. டானியல், பி.ஏ., பி.எல்.,

கீழ்க்கண்ட வட்டி விகிதங்களில் டிப்பாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

கரண்ட் ... ½% சேவிங்ஸ் ... 4 %

சீசன் டிப்பாசிட்டுகள்: ரூ. 1,000-ம், அதற்கு மேலும்—
15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை ... 1½%
46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை ... 3 %

நிரந்தர டிப்பாசிட்டுகள்: ரூ. 100-ம், அதற்கு மேலும்—
5% முதல் 7½% வரை.

மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்டு போடும் நிரந்தர டிப்பாசிட்டுகளுக்குத் தமிழ்நாடு சர்க்காரின் உத்தரவாதம் கொடுக்கப்படுகிறது.

கே. எஸ். நமச்சிவாயம், பி.ஏ.,
துணைப் பதிவாளர்—காரியதரிசி.

எதிர் நீச்சல்

ஒரு நாட்டினுடைய பொருளாதார வளம அந்த நாட்டின் வெளி நாட்டு வாணிப வளர்ச்சியில்தான் அடங்கி யிருக்கிறது. வெளி நாட்டிலிருந்து பொற்காசுகளைப் பெற்று உள் நாட்டி லிருந்து செய்பொருட்களை விற்பனை செய்யும் ஒரு நிலை எவ்வளவுககெவ் வளவு அதிகரிக்கிறதோ அவ்வளவுக்கவ் வளவு அந்த நாட்டின் பொருளாதாரம வளர்ச்சி பெறும். எனவே வெளி நாட்டு வாணிபப் பெருக்கத்தைக் கருத் தில் கொண்டுதான் ஒரு நாட்டின் உற் பத்தித் துறை நடைபெறும்.

பழைய தமிழகத்தில் கைத்தறித் தொழிலுக்கு அந்த நிலை இருந்தது. வெளி நாடுகளிலிருந்து கபபல கப்ப லாகப் பொன்னைக் கொண்டுவந்து கொடுத்து இங்கிருந்து கைத்தறி ஆடை களை வாங்கிச் செல்வார்கள். அபபடிப் பட்ட கைத்தறித் தொழில் இனறு நலிந்து கிடக்கிறது.

காரணம் இது ஒரு குடிசைத் தொழி லாக நாம் செயது வருகிறோம. எனவே குடிசைத் தொழில்களுக்குப் பாதுகாப் பளிப்பது அரசாங்கத்தின கடமை என்ற முறையில் இந்தக் கைத்தறித் தொழிலுக்கு அரசாங்கம் உதவி செய்து வருகிறது.

அரசாங்கம் எந்த அளவு உதவி செய் தாலும் பொதுமக்கள் எந்த அளவு ஆதரவு கொடுத்தாலும் இந்தத் தொழி லுக்கு அவையெல்லாம் ஒரு நிரந்தரப் பாதுகாப்பாக அமையாது.

எனவே இந்தத் தொழிலுக்கு ஒரு நிரந்தரப் பாதுகாபபுக் கொடுக்கவேண் டும் என்று கருதி 1952-ல் தமிழக அரசு எதிர்க்கட்சியினருடைய ஒருமித்த ஆதர வுடன் "கரை போட்ட வேட்டியையும் வண்ணப்புடவைகளையும் கைத்தறிக்கே ஒதுக்கவேண்டும" என்று ஒரு தீர் மானததை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுபபி வைததது. ஆனால் மத்திய அரசு அந்தத் தீர்மானத்தைக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டது.

அதுபோலவே தமிழகத்தில் விசைத் தறி புகுத்தப்பட்டால இங்கு கைத்தறித் தொழில் நசிந்து விடும் என்று கருதி இந்த விசைத்தறிகளைப் புகுத்துவதை தமிழக அரசு கடுமையாக எதிர்தது வந் தது. பிறகு இப்போது விசைத்தறியை அனுமதிப்பது என்று முடிவு செய்யப் பட்டுள்ளது.

ஒரு காலத்தில் கைத்தறித் துணிகளை எடுத்து மூட்டை கட்டித் தலையில் வைத்துச் சுமந்து தெருத தெருவாகக் கொண்டு போய் விற்பனை செய்தது திராவிட முன்னேற்றக் கழகம். இப்படி யெல்லாம் நெசவாளர்களுக்கு உதவி செய்தவர்கள் இன்று இந்த மாநில ஆட்சியை ஏற்றுள்ளனர். ஆனால் இந்த மாநில அரசிடம் கைத்தறிககு என்று கரை போட்ட வேட்டியையும் புடவையையும் ஒதுக்கும் அதிகாரம் இல்லை. அந்த அதிகாரம் மத்திய அர சிடம்தான் இருக்கிறது.

அது மட்டுமின்றி, இன்று மத்திய அரசின் வெளி நாட்டுக் கொள்கையின் காரணமாக மற்ற நாடுகளிடம் நமக் கிருந்த உறவுகளில் கோளாறு ஏற் பட்டு நம்முடைய கைத்தறித் துணிகளை அந்த நாடுகளெல்லாம வாங்க மறுக்கும் ஒரு நிலையும் இருந்து வரு கிறது.

இப்படிப்பட்ட ஒரு நிலையில் மத்திய அரசின் பொறுப்பிலும் மாநில அரசின் பொறுப்பிலுமா கைத்தறித் தொழி லுக்குச் செய்யப்படுவனும் உதவிகள் எவ்வளவு இருந்தாலும், ரூபாய்க்கு பத்துக் காசு தள்ளுபடி கொடுத்து வந்தாலும் இந்தத் தொழில நாளுக்கு நாள் நலிந்துகொண்டே வருகிறது.

விசைத்தறியின் போட்டி, ஆலைத் துணிகளின் போட்டி, வெளி நாடுகளில் வீழ்ந்துவிட்ட சந்தை எனப் பல வழி களிலும் இந்தத் தொழில் எதிர் நீச்சல போடவேண்டிய ஒரு நிலை இருந்து வருகிறது.

புலவர் திரு கே. கோவிந்தன், எம்.ஏ., பி.ஓ.எல்.,

சென்னை சட்டசபை உதவி சபாநாயகர்.

முக்கோணச் சுழல்

திரு பி. முராரி, ஐ.ஏ.எஸ்.,
கைத்தறி நெறியாளர்.

ஆண்டாண்டுதோறும் கைத்தறி வார விழாக் கொண்டாடப்பட்டு வருவதன் நோக்கம் பற்றி இங்கு கடந்த பதினான்கு நாட்களாக உங்களிடையே உரையாற்றிய அரசியல் தலைவர்களும் அமைச்சர்களும், மற்றும் பல பொது நலத் தொண்டு செய்து வருவோரும், பல பெரியோரும் எடுத்துச் சொல்லியிருப்பார்கள்.

பண்டைக் காலத்தில் சிறப்புற்று விளங்கிய இந்தக் கைத்தறித் தொழில் இன்று நலிவுற்றுக் கிடக்கின்ற காரணம் பற்றியும் விளக்கியிருப்பார்கள். இன்று ஒரு இக்கட்டான நிலையில் இருந்து கொண்டிருக்கும் இக்கைத்தறித் தொழிலை நம்பிக் கொண்டிருக்கின்ற இருபது லட்சம் பேருக்கு வாழ்வளிக்க நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய முயற்சிகள் பற்றியும் கைத்தறிக்குப் பொதுமக்கள் ஆதரவு நல்க வேண்டிய அவசியம் பற்றியெல்லாம் அவர்கள் கூறியிருப்பார்கள்.

இத்தகைய விழாக்களை நடத்துவதன் மூலம் மக்களைக் கூட்டி வைத்துக் கைத்தறியின்பால் மக்களது கவனத்தைக் கவரவேண்டும் என்பதற்காகவே அரசாங்கம் ரூபாய்க்குப் பத்துக் காசு தள்ளுபடி கொடுக்கிறது. இப்படி ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் விழாக் காலங்களில் மட்டுமின்றி பொங்கல் தீபாவளி போன்ற பண்டிகைக் காலங்களிலும் இவ்வாறு தள்ளுபடி கொடுக்கப்படுகிறது.

இப்படிப் பல வகையிலும் அரசாங்கம் உதவி செய்தும் பொதுமக்களது ஆதரவைத் திரட்டியும் கைத்தறி நெசவாளர்களது கவலையைப் போக்கிக் கண்ணீரைத் துடைக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த முயற்சியில் பொதுமக்களது ஆதரவு அதிகரித்தால்தான் வெற்றியடைய முடியும்.

தமிழ்நாட்டில் இப்போது ஏழு லட்சம் தறிகள் இருக்கின்றன. இந்த ஏழு லட்சம் தறிகளை நம்பி இருபது லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அந்த இருபது லட்சம் மக்கள் பொது மக்களது ஆதரவையும் அனுதாபத்தையும் நம்பியிருக்கிறார்கள். பொது மக்களின் அனுதாபத்தைக் கைத்தறியின்பால் திருப்பி கைத்தறிக்கு அவர்களுடைய ஆதரவை திரட்டி அந்த இருபது லட்சம் நெசவாளர்களையும் காப்பாற்ற வேண்டும் என்று அரசாங்கமும் மற்றும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களில் முன்னணியில் இருப்பவர்களும் முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

கைத்தறித் தொழிலுக்கு இப்போது மட்டுமல்ல, கடந்த பதிமூன்று ஆண்டுகளாகவே தொடர்ந்து பல நெருக்கடிகள்-சோதனைகள்-ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இதற்குக் காரணம் மூன்று அடிப்படைகள் தான்.

முதல் அடிப்படை மூலப் பொருள்; அது கிடைப்பதில் ஏற்படும் சிக்கல். இரண்டாவது அடிப்படை மூலதனம்; அதைத் திரட்டுவதில் உள்ள சிரமம். மூன்றாவது அடிப்படை விற்பனை வாய்ப்பு; அதை ஏற்படுத்திக் கொள்வதிலே உள்ள போட்டி. இப்படி ஒரு முக்கோணச் சுழலில் அகப்பட்டுத் தங்களது திறமையும் வலிவையும் கொண்டு எதிர்த்துப் போராடி வருகிறார்கள் கைத்தறி நெசவாளர்கள்.

இதில் முதல் சிக்கலான மூலப் பொருளை எடுத்துக் கொண்டால், முதல் தேவையான முக்கிய மூலப் பொருள் நூல். இதில் பருத்தி நூல், பட்டு நூல், செயற்கைப்பட்டு நூல் என்று மூன்று வகையான நூல்கள தேவைப் படுகின்றன.

பருத்தி நூலுக்கு விலை உயர்ந்து விட்டது. பட்டு நூலின் விலை நான்கு மடங்காகப் பெருகிவிட்டது. செயற்கை பட்டு நூல் தேவையான அளவு கிடைப்பதில்லை.

பருத்தி நூலின் விலை உயர்ந்துவிட்ட தற்குக் காரணம் பருத்தியின் பற்றுக் குறையும் அதன் விலை உயர்வும் தான். பட்டு நூல் விலை உயர்வுக்குக் காரணம் இங்கு கிடைக்கும் காஷ்மீர் பட்டு நூலை யாரும விரும்புவதில்லை. மைசூர் பட்டு நூலுக்குத்தான் கிராக்கியிருககிறது. எனவே கோரா என்று சொல்லப்படும அந்தப் பட்டு நூலின் விலை மூன்று மடங்கு உயர்ந்துவிட்டது. செயறகைப் பட்டு நூல் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டிய நிலையில் இருப்பதால் அந்நியச் செலாவணி நெருக்கடி, ரூபாயின் நாணய மாற்று மதிப்புக் குறைப்பு ஆகியவை களின் காரணமாக ஏற்பட்டுள்ள விலை உயர்வும் பற்றுக்குறையும் சேர்ந்து போதுமான அளவு செயற்கைப்பட்டு நூல் கிடைப்பதில்லை.

இதுபற்றியெல்லாம் ஆராய்ந்து பருத்தி நூலின் விலையைக் குறைக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்பட் டுள்ளது. இப்போதே பருத்தி நூலின் விலை ஓரளவு இறங்கத் தொடங்கி விட்டது. இனி வெகு விரைவிலேயே நியாயமான விலைக்கு பருத்தி நூல் கிடைக்கத் தொடங்கும் என்று நம்பு கிறேன்.

பட்டு நூலைப் பொருத்தவரை வெளி நாடுகளிலிருந்து இறககுமதி செய்ய வேண்டும் எனறு மத்திய அரசைக கேட்டுக் கொள்ள உத்தேசிக்கப்பட் டுள்ளது.

செயற்கைப்பட்டு நூல் தாராளமாகக் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முப்பது லட்சம் ரூபாய் பெறுமான செயற்கைப்பட்டு நூல் மேற்கு ஜெர் மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட விருக்கிறது.

அத்துடன் சாயப் பொருட்களின் இறக்குமதியையும் தாராளமாக்குவது பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இந்த அளவில் கைத்தறித் தொழி லின் மூலப் பொருள் சிக்கல்கள் விரைவில் தீர்க்கப்படும் என்று நம்பு கிறேன்.

அடுத்து மூலதனச் சிக்கல். இந்தச் சிக்கல் கூட்டுறவுத் துறையில் உள்ள கைத்தறிகளுக்கு மட்டுமின்றி கூட்டுற வுக்கு அப்பாலுள்ள கைத்தறிகளுக்கும் இருக்கிறது.

கூட்டுறவுக் கைத்தறி சங்கங்களுக்கு ரிசர்வ் பாங்கு என்று சொல்லப்படுகிற பிரதம வங்கி தறிகளின் எண்ணிக்கை அடிப்படையில் கடன் வழங்கிவருகிறது. இப்போது புதிதாக ஏற்படுத்தப்பட் டுள்ள விதிகளின் காரணமாக உற்பத்தி அடிப்படையில்தான் கடன் வழங்கப் படும என்று ரிசர்வ் பாங்கார் கூறுகின் றனர். இதனால் கூட்டுறவு சங்கங் களுக்குப் பெரிய நெருக்கடி ஏற்பட் டுள்ளது. இந்தச் சிக்கல் பற்றி ரிசர்வு பாங்காருடன அகில இந்தியக் கைத்தறி போர்டார் பேச்சு நடததி புதிய விதிகளை கைத்தறியைப் பொறுத்தமட்டில் திருத்தி அமைக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

தனியார் கைத்தறிகளுக்கு ஏற்படும் மூலதனச் சிக்கல்களைப் போக்க தமிழ கத்தில் கைத்தறி நிதி உதவி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிறு வனம் ஐமபது லட்சம் ரூபாய் மூலதனத் தைக் கொணடு கூட்டுறவுக்கு வெளியே உள்ள நெசவாளர்களுக்கு ஓரளவு கடன் கொடுத்து உதவி வருகிறது என்றாலும் இந்த உதவி போதாது

இதற்கு மத்திய அரசு கருணை கூர்ந்து ஆயுள் நிதிப் பாதுகாப்புக் கழகம் போனற அமைப்புகளிடமிருக்கும் நிதியிலிருந்து ஒரு தொகையை கைத் தறி நிதி உதவி நிறுவனத்தில் முதலீடு செய்ய ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக இன்று கைத்தறித் துணி களுக்கு உள் நாட்டிலேயே அதிக அளவில் விற்பனை வாய்ப்பைத் தேடிக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. காரணம் வெளிநாடுகளில் முன்பு இருந்த அளவு இப்போது வண்ணம் மாறும் துணிகளுக்கு கிராக்கி இல்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு என்றாலும் முக்கியமான காரணம் அங் குள்ள மக்களது விருப்பங்களில் ஏற் பட்டுவரும் மாறுதல்தான். மேல் நாட்டு மக்களெல்லாம் அவ்வப்போது தங்களது விருப்பங்களை மாற்றிக் கொள்ளக்கூடிய

வர்கள். எனவே அவர்களது விருப்பத்தை அறிந்து அவ்வப்போது நம்முடைய துணிகளின் ரகங்களையும் மாற்றிக்கொள்ள வேண்டும். அத்துடன் உள்நாட்டு மக்களின் கருத்தைக் கவரத்தக்க வகையிலும் நம்முடைய திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அந்த விசைத்தறியைத் தமிழகத்தில் அனுமதிப்பது பற்றிய சிக்கல். இங்கு விசைத்தறி புகுத்தப்பட்டால் இங்குள்ள கைத்தறி நெசவுத் தொழில் பாதிக்கும் என்றும், நெசவாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டு விடும் என்றும் கருதி நாம் இங்கு விசைத்தறிகளை நிறுவுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தோம். ஆனால் இப்போது நிலைமை வேறு விதமாகத் திரும்பிவிட்டது. அடுத்துள்ள மாநிலங்களிலெல்லாம் விசைத்தறிகள் நிறுவப்பட்டு அந்தத் தறிகளில் உற்பத்தி செய்யப்படும் துணிகள் இங்கு வந்து நம்முடைய கைத்தறித் துணிகளோடு போட்டியிடக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டுவிட்டதால் நாமும் விசைத்தறிகளை நிறுவுவது தவிர வேறு வழி கிடையாது என்ற முடிவுக்கு வந்துள்ளோம்.

விசைத்தறிகள் வந்தால் கைத்தறித் தொழிலிலுள்ளவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுவதோடு கைத்தறிக்கு என்று ஒரு குறிப்பிட்ட ரக ஒதுக்கீடும் நிச்சயம் உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே அரசாங்கத்தின் உதவி என்றுமே கைத்தறிக்கு உண்டு. எனினும் பொது மக்களது ஆதரவால்தான் அந்த தொழில் வாழவேண்டும். எனவே மக்கள் தங்களாலியன்ற ஆதரவை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசபெருமாள் நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட்,

18, 19, சின்னக்கடை முத்தையா பிள்ளை சந்து (தெற்கு வாசல்), மதுரை.

★

கூட்டுறவு முறையில் தயாரிக்கப்பட்ட எங்கள்

கைத்தறி சேலைகள்

யாவருக்கும் நம்பிக்கையும், திருப்தியும் தருவது.

நவீன ரகம்
உறுதியானது
உத்திரவாதமுள்ளது சாயம்
நியாயமான விலை

நம சொசைட்டியில் சொந்தத்தில் சாயம் போடப்பட்ட, கைதேர்ந்த நெசவாளர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட 80 நிர், 100 நிர். நூல் & கோடம்பாக்கம் சேலை தினுசுகளும், 5, 6, 7, 8, 9 & 10 கஜங்களில் விலை சகாயமாயும், சாயத்திற்கு உத்திரவாதத்துடனும் மொத்தமாகவும், சில்லறையிலும் சப்ளை செய்து வருகிறோம்.

பொது ஜனங்களும், வியாபாரிகளும் நமது சொசைட்டிக்கு விஜயம் செய்து கைத்தறி ஜவுளிகளை வாங்கி நம் கூட்டுறவு சொசைட்டியை ஆதரிக்க வேண்டுகிறோம்.

V. D. சின்னதம்பி,
கூட்டுறவு உதவி பதிவாளர்–விசேஷ அதிகாரி.

இருமுனைப் போட்டி

டாக்டர் எம். சந்தோஷம்,
எம்.பி.பி.எஸ்., எப்.சி.சி.பி., எம்.பி.,

கைத்தறி நெசவுத் தொழிலில் உள்ளவர்கள் மிகக் கடுமையாக உழைக்கின்றார்கள். வேறு எந்தத் தொழிலில் உள்ளவர்களைக் காட்டிலும் கைத்தறி நெசவாளியின் உழைப்பு எந்த வகையிலும் குறைந்ததல்ல. கைத்தறி என்பது உடலுழைப்பும் கைத்திறனும் கொண்ட ஒரு வித்தையாகும். இப்படிப்பட்ட ஒரு வித்தையில் தேர்ந்திருக்கும் தொழிலாளி தனது வயிறாரக் கஞ்சி குடிக்கக்கூடப் போதாத வருவாய்தான் அடைகிறான்.

பொதுவாக சென்னை போன்ற நகரங்களில் ஒரு உணவு விடுதிக்குள்ளே புகுந்து ஒரு மனிதன் சாப்பிட வேண்டுமானால் குறைந்தது ஒன்றரை ரூபாயாவது வேண்டும். அந்த ஒன்றரை ரூபாய் தான் ஒரு நெசவாளிக்கு இப்போது ஒரு நாளைய வருமானமாகும். அந்த வருமானத்தைக் கொண்டு ஐந்து பேர் ஆறு பேர் கொண்ட ஒரு குடும்பம் வாழ வேண்டும். சுருக்கமாகப் பார்த்தால் ஒரு மனிதன் சாப்பிடும் அளவில் ஆறில் ஒரு பங்குதான் நெசவாளர்களின் குடும்பங்களிலுள்ளவர்கள் சாப்பிடுகிறார்கள் என்று கூறலாம்.

கைத்தறி நெசவாளர்கள் இன்று ஒரு போட்டி நிறைந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கம் ஆலைகளின் போட்டி. மற்றொரு பக்கம் விசைத் தறிகளின் போட்டி. இப்படி இருமுனைப் போட்டிகளுக்கு இடையே சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். விஞ்ஞானத்தின் உதவியும் பெரிய மூலதனத்தின் சக்தியும் கொண்டு உற்பத்தி செய்து குவிக்கின்ற ஆலைகளோடு கையால் நெய்கின்ற தொழிலாளி போட்டியிடவேண்டிய ஒரு நிலை இருப்பதைப் பார்க்கும்போது, எந்திரத் துப்பாக்கியை வைத்துக் கொண்டிருப்பவனுக்கு எதிராக வெறுங்கையோடு நிற்பவன் "உன்னை இந்தக் கையாலே குத்திக் கொன்றுவிடப் போகிறேன்" என்று கூறுவதைப்போல இருக்கிறது.

ஒரு பக்கம் நூல் விலை ஏற்றம், சாயப் பொருட்களுக்குப் பற்றாக்குறை, உற்பத்தி செய்த துணிகளின் தேக்கம்; மறுபுறம் ஆலைகளின் போட்டி. எனவே இந்தத் தொழிலுக்கு அரசாங்கத்தின் உதவி தேவைப்படுகிறது. அந்த வகையில் அரசாங்கத்தைக் குறை சொல்ல முடியாது. அரசாங்கமும் பல வகையில் உதவி செய்துகொண்டுதான் வருகிறது. என்றாலும் இந்தத் தொழிலுக்கு மக்களது ஆதரவு பெருகினால்தான் வாழ முடியும். தனக்குத்தானே பாதுகாத்துக் கொள்ள முடியும். கண்ணுக்குக் கவர்ச்சியும் விலையில் மலிவும் இருந்தால்தான் கைத்தறித் துணிகளை மக்கள் விரும்பி வாங்குவார்கள்.

கைத்தறித் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களின் விலை உயர்ந்துகொண்டே போக, கைத்தறித் துணிகளின் கிராக்கி குறைந்து கொண்டே போகும் ஒரு நிலையில் எவ்வளவுதான் அரசாங்கம் உதவி செய்தாலும் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களது வாழ்க்கையில் தெம்பு ஏற்படும் என்ற நம்பிக்கையில்லை.

எனவே இந்தத் தொழிலை நம்பியுள்ளவர்களுக்கு வேறு நல்ல வருவாயுள்ள தொழில்களில் வேலை வாய்ப்புகள் தேடித் தரப்பட வேண்டும். இப்போதுள்ள நூற்பு-நெசவு ஆலைகளில் ஏற்படும் வேலை வாய்ப்புகள் முதலில் கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட பிறகுதான் மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று சட்டம் செய்யவேண்டும். இதுபற்றியெல்லாம் அரசாங்கம்தான் பரிசீலனை செய்ய வேண்டும்.

அத்துடன் கைத்தறிக்கென்று ஒரு சில ரகங்களை ஒதுக்குவது பற்றியும் யோசிக்க வேண்டும். 1952-ஆம் ஆண்டிலேயே திரு ராஜாஜி அவர்களின் அமைச்சரவையில் எதிர்க் கட்சிகளின் ஆதரவோடு ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானத்தை

அமுல் நடத்த மத்திய அரசாங்கம் முன் வரவேண்டும்.

கரைபோட்ட வேட்டியும் கலர் சேலையும் கைத்தறிக்கு ஒதுக்கப்படவேண்டும் என்ற அந்தத் தீர்மானத்தை அன்றே மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்குமானால் இன்று கைத்தறித் தொழிலுக்கு இத்தனை நெருக்கடிகள் வந்திருக்காது. அன்று அந்தத் தீர்மானம் அப்படியே கிடப்பில் போடப் பட்டுவிட்டது. இந்த நிலை மிகவும் வருந்தத்தக்கதாகும். இதுபற்றி மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் கூடி விவாதித்து, இதற்கு உடனடியாக ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டும்.

அரசாங்கம் இந்தத் தொழிலுக்குப் பல வகையிலும் பாதுகாப்புக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளது. அதுபோலவே பொது மக்களும் இந்தத் தொழிலுக்கு ஆதரவு கொடுக்கக் கடமைப்பட்டவர்களாவார்கள். சமுதாயத்தின் ஒரு பெரும் பகுதி பட்டினி கிடந்துகொண்டிருக்கும்போது மற்றொரு பகுதி மட்டும் நிம்மதியாகச் சாப்பிட முடியுமா? இந்தத் தொழிலில் தமிழகத்தில் முப்பது லட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர். அவர்களைக் காப்பாற்ற வேண்டியது மற்றவர்களுடைய கடமை.

எனவே ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவைப்படும் துணியில் ஒரு பகுதியை யாவது கைத்தறித் துணியாக வாங்க வேண்டும். எல்லா மக்களும் தங்களது துணித் தேவையில் ஒரு பகுதியை கைத்தறித் துணிகளைக் கொண்டு பூர்த்தி செய்யக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டால் பிறகு கைத்தறித் தொழிலுக்கு எப்போதும் ஆபத்தோ நெருக்கடியோ வராது. நெசவாளர்களும் மற்றவர்களைப்போல வசதியாக வாழ்க்கை நடத்துவார்கள். எனவே எல்லோரும் கைத்தறித் துணிகளையே வாங்கவேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

சென்னை இராஜ்ய கூட்டுறவு பாங்கு லிமிடெட்,

271, அங்கப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1.

தபால் பெட்டி எண் : 226 தொலைபேசி எண் : 22766, 22767 & 24589

★

எங்கள் பாங்கில் நீங்கள் போடும் டிபாசிட்டுகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத் — திற்கும், விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும் —

★

SEASON DEPOSITS — (ரூ. 1,000-ம், அதற்கு மேலும்) : (வருடத்திற்கு)

15 நாட்கள் முதல்	45 நாட்கள் வரை ...	... 1½%
46 நாட்கள் முதல்	90 நாட்கள் வரை ..	... 3 %

FIXED DEPOSITS — (ரூ. 100-ம், அதற்கு மேலும்) : (வருடத்திற்கு)

91 நாட்களும், அதற்கு மேலும்	6 மாதங்களுக்குள்ளாக	...	5 %
6 மாதங்களும் ,,	12 ,,	...	5½%
12 ,, ,,	2 வருடங்களுக்குள்ளாக	...	6¼%
2 வருடங்களும, ,,	3 ,,	...	6½%
3 ,, ,,	5 ,,	...	6¾%
5 ,, ,,	7 ,,	...	7¼%
7 வருடங்களும, அதற்கு மேலும	— —	...	7½%

RECURRING DEPOSITS — தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம் :

மாதத் தவணை ...	12	24	36	48	60	72	84
ரூ. 5-ம், அதன் மடங்குகளும் ரூ.	62	128	198·50	273	355	442	535

ஆர். கனகசபை, எம்.எல்.ஏ., தலைவர். **டி. வர்த்தமானன்,** காரியதரிசி.

வேலைவாய்ப்பு பெருக...

திரு டி. என். லட்சுமிநாராயணன், ஐ.ஏ.எஸ்.,

கைத்தறியை ஆதரிக்கவேண்டிய அவசியம் பற்றி தமிழ் நாட்டு மக்களிடம் விளக்கவேண்டியதில்லை. காரணம் இங்குதான் இது மிகப் பெரிய ஒரு தொழிலாக விளங்குகிறது. விவசாயத்திற்கு அடுத்தபடி மிகப் பெரிய தொழிலாக இருப்பது கைத்தறித் தொழில் என்பதையும், இந்தத் தொழிலை நம்பி லட்சக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் தமிழ் நாட்டு மக்கள் நன்கு உணர்வார்கள். பாரதத்திலேயே அதிக அளவு நெசவாளர்கள் உள்ள மாநிலங்கள் தமிழகமும் ஆந்திரமும் தான். எனவே இங்குள்ள மக்கள் கைத்தறிக்குத் தாங்கள் ஆதரவு கொடுக்க வேண்டிய அவசியத்தை நன்கு உணர்ந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

பாரதத்தின் பெரும் பகுதி மக்கள் ஈடுபட்டுள்ள மிகப் பெரிய ஒரு குடிசைத் தொழில் இந்தக் கைத்தறி நெசவுத் தொழில் என்ற காரணததால் இந்தத் தொழிலுக்கு மத்திய—மாநில அரசாங்கங்கள் முடிந்த அளவு உதவி செய்து வருகின்றன. அவ்வப்பொழுது இந்தத் தொழிலுக்கேற்படும் நெருக்கடிகளுக்குப் பரிகாரம் தேடும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கைத்தறித் துணிகளுக்குத் தள்ளுபடி கொடுத்து வருவதுடன் அவ்வப்போது தேவைப்பட்டபோது கடனுதவியும் செய்யப்படுகிறது. கைத்தறித் துணிகள் அதிக அளவில் தேங்கிவிட்ட காலங்களில் அரசாங்கமே கொள்முதல் செய்வதுடன் கொள்முதல் செய்யக்கூடிய தனிப்பட்ட வர்த்தகர்களுக்கும் தள்ளுபடி வழங்கி வருகிறது. இத்தனை வழிகளில் உதவி செய்தாலும் இந்தத் தொழிலுக்கு அடிக்கடி நெருக்கடி ஏற்பட்டுக் கொண்டுதானிருக்கிறது.

இன்று இவ்வளவு தூரம் எல்லாம் 'ஆட்டோமேடிக் ஸிஸ்டம்' வந்துவிட்ட பிறகு இந்தக் கைத்தறிக்கு எவ்வளவு உதவி செய்தாலும் இது நீடித்து நிலைக்குமா என்று சிலர் சந்தேகப்படுகிறார்கள். ஆனால் இந்த உலகத்தில் எவ்வளவுதான் விஞ்ஞான முன்னேற்றம் ஏற்பட்டாலும் மனிதன் கையால் செய்யப்படும் பொருட்களுக்கு ஒரு தனி மதிப்பு இருந்துகொண்டுதானிருக்கும்.

உதாரணமாக நைலான், நைலக்ஸ், டெர்லின், டெரிகாட்டன் என்று எவ்வளவோ வகையான ஆடைகள் வந்துவிட்டாலும் பட்டு ஆடைகளுக்கு உள்ள மதிப்பு வேறு ஆடைகளுக்கு இருப்பதில்லை. காஞ்சிபுரம் பட்டுப் புடவைக்கு இருக்கும் மதிபபு நைலானுக்கும் நைலக்ஸுக்கும் வரமுடியாது.

நாங்கள் சமீபத்தில் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள மக்கள் நமது பட்டு ஆடைகளை ஏராளமாக வாங்கிக்கொள்ளத் தயாராக இருப்பதாகக் கூறினார்கள். அந்த நாட்டு மக்களுக்கு மனிதன் கையால் செய்யப்படும் பொருட்கள் மீது ஒரு தனி மோகம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அந்த நாட்டு மக்களின் பாஷன்கள் அடிக்கடி மாறுபடக் கூடியவையாக இருக்கின்றன. எனவே அங்கெல்லாம் அவ்வப்போது ஏற்படுகின்ற பாஷன் மாற்றத்தையறிந்து அதற்குத் தக்கவாறு நமது கைத்தறி டிஸைன்களை அடிக்கடி மாற்றிக்கொள்ள வேண்டும்.

மார்க்கெட் சர்வே நிறுவனத்தின் மூலம் ஆங்காங்கு மாறும் பாஷன்கள் பற்றி அவ்வப்போது தகவல்களைப் பெற்று, அதற்கேற்றவாறு நம்முடைய கைத்தறித் துணிகளில் பாஷன்களை உருவாக்கினால் நமது வெளிநாட்டு வர்த்தகம் நிச்சயம் முன்னேற்றமடையும். நமது கைத்தறித் துணிகள் முன்பு ஆண்டொன்றுக்கு பதினெட்டுக் கோடி ரூபாய் பெறுமான அளவு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து இப்போது பத்துக் கோடி ரூபாய் அளவுக்கு

நின்றுவிட்டது. நாம் இன்னும் கொஞ்சம் முயற்சி எடுத்துக் கொண்டால் பழைய படி பதினெட்டுக் கோடி ரூபாய் அளவு ஏற்றுமதி செய்யமுடியும் என்பதில் சந்தேகமில்லை.

என்றாலும் நாம் வெளிநாடுகளை மட்டும் நம்பிக்கொண்டிருக்க முடியுமா? நம் நாட்டு மக்கள் வாழ நாம்தானே பொறுப்பேற்க வேண்டும். இந்த உலகத்திலேயே மிகப் பெரிய மார்க்கெட் பாரதம்தான். இங்கு ஐம்பது கோடி மக்கள் இருக்கிறார்கள். இவர்கள் மனது வைத்தால், தங்களது தேவையில் கால் பங்கைக் கைத்தறி துணிகளாக வாங்குவதென்று தீர்மானித்தால் கூடப்போதும்; இங்குள்ள கைத்தறி நெசவாளர்களது வாழ்க்கை நல்ல செழிப்படையும்.

பொதுவாக நம் நாட்டில் புதிதாக ஒரு இயந்திரத் தொழில் தொடங்குவதற்கு ஐம்பது லட்சம் அறுபது லட்சம் என்று கொள்முதல் போட்டால் ஒரு ஐநூறு பேருக்கு வேலை கொடுக்கலாம். ஆனால் இந்தக் கைத்தறித் தொழிலில் மிகக் குறைந்த மூலதனத்திலேயே இருபது லட்சம் பேருக்கு இங்கு வேலை வாய்ப்புக் கொடுக்கமுடியும். இப்போதும் அதில் இருபது லட்சம் பேர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றாலும் அவர்களுக்குப் போதுமான அளவு வேலை வாய்ப்பு கிடைப்பதில்லை... கிடையாது. கைத்தறித் துணிகள் அடிக்கடி தேக்கமடைவதால் நெசவாளர்களுக்கு அடிக்கடி வேலை இல்லாமல் போய் விடுகிறது. ஒரு மாதத்தில் பத்து நாள் பனிரெண்டு நாள் தான் வேலை கிடைக்கிறது. சில சமயங்களில் அந்த அளவு கூட கிடைக்காது.

இந்த நிலை மாறவேண்டும். அவர்களுக்கு ஆண்டு முழுதும் வேலை வாய்ப்புக் கிடைக்கவேண்டும். அந்த அளவு நம்முடைய ஆதரவு பெருக வேண்டும். கைத்தறித் துணிகள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் தேங்கக்கூடாது. இந்த ஆண்டு இந்த விழாவில் இது வரை இருபத்தி மூன்று லட்சம் ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனையாகியுள்ளதாகக் கூறினார்கள். இந்த விற்பனை அடுத்த ஆண்டில் இரண்டு மூன்று மடங்கு என்று பெருகவேண்டும் என்று விரும்பி, அந்த விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்று இறைவனை வேண்டி, கைத்தறிக்குத் தொடர்ந்து ஆதரவு கொடுக்கவேண்டும் என்று உங்களையும் கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன்.

தந்தி: "VELNOOL" தொலைபேசி: 1101

வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட், நெ. சி. 2401

தபால் பெட்டி எண்: 1

அரியூர், வேலூர் - 2.

அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 60 லட்சம்
செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 21.38 லட்சம்

தமிழ்நாட்டு அரசாங்கம் ரூ. 14 லட்சம் பங்காக முதலீடு செய்துள்ளது.
கதிர்களின் எண்ணிக்கை 12096.

தற்போது உயர்ந்தரக 80s, 60s, 40s நூலை உற்பத்தி செய்து தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலமாகவும், நேரடியாகவும் மலிவான விலையில் பெருமளவில் விற்பனை செய்து வருகிறோம்.

பொது மக்களும், கூட்டுறவு நிறுவனங்களும் எமது ஆலையில் பெருமளவில் பங்குகள் எடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விபரங்களுக்கு மேனேஜிங் டைரக்டருக்கு எழுதவும்.

டி. எஸ். ராமகிருஷ்ணம ராஜா, மேனேஜிங் டைரக்டர். ர. ஜீவரத்தினம், தலைவர்.

வயதைக் குறைக்க இதோ ஒரு வழி!

திரு எம். ஆர். பெருமாள்,
எம்.ஏ., எல்.டி.,

ஆண்டுக்கு ஒருமுறை இந்தக் கைத்தறி வார விழா நடைபெற்று வருகிறது. கடந்த பனிரெண்டு ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இவ்விழா இன்று பதிமூன்றாவது ஆண்டின் கடைசி நாள். இந்த விழாவுக்கு ஏராளமாக மக்கள் வந்து கூடுகிறார்கள். இங்கு வருகின்ற மக்கள் கைத்தறி ஆடைகளை வாங்கிச் செல்கிறார்கள். இதிலிருந்து கைத்தறி ஆடைகளுக்கு மக்களிடையே நல்ல ஆதரவு பெருகியிருக்கிறது என்று தெரிகிறது.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவரான திரு நாச்சிமுத்து அவர்கள் மிகச சிறப்பாக இந்தக் கைத்தறி வார விழாவை நடத்தி வருகிறார். அவரது சலியாத உழைப்பாலும் தன்னலங் கருதாத தொண்டாலும் தமிழ் நாட்டில் கைத்தறித் தொழில் மிக நல்ல முறையில் முன்னேறியிருக்கிறது; முன்னேறிக் கொண்டும் வருகிறது. மேலும் முன்னேறிக் கொண்டே இருக்கும் என்பதிலும் சந்தேகமில்லை. ஏனென்றால் அவர் அந்த அளவு தன்னையே இந்தக் கைத்தறியின் முன்னேற்றத்திற்காக ஒப்படைத்து விட்டார்.

இப்போது நான் போட்டுக் கொண்டிருக்கும் சட்டை கைத்தறிச் சட்டை. உடுத்திக் கொண்டிருக்கும் வேட்டி கைத்தறி வேட்டி. இதோ இந்தக் கைக்குட்டை (சட்டைப் பையிலிருந்து கைக்குட்டையை எடுத்து விரித்துக் காட்டி) கைத்தறிக் கைக்குட்டை. இந்தக் கைக்குட்டையைப் பார்ப்பவர்கள் இதை எங்கே வாங்கினீர்கள் என்று கேட்கத் தவறுவது கிடையாது. நான் வெளிநாடுகளுச் சென்றிருந்தபோதுகூட இந்தக் கைக்குட்டையைத்தான் கொண்டு போயிருந்தேன். அங்குள்ள எனது நண்பர்கள் இந்தக் கைக்குட்டையைப் பார்த்துவிட்டு, "இது மிகவும் அழகாக இருக்கிறதே; இது எங்கே கிடைக்கும்" என்று கேட்டார்கள். "இது எங்கள் நாட்டில்—தமிழகத்தில் கைத்தறியில் நெய்யப்படும் கைக்குட்டை. இதைவிட இன்னும் நல்ல அழகான கைக்குட்டைகளெல்லாம் அங்கு நெய்யப்படுகின்றன; இந்தமாதிரி அழகான கைக்குட்டைகளும் இதரக் கைத்தறி ஆடைகளும் எங்கள் நாட்டிலிருந்து இந்த உலகம் முழுவதற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன" என்று பெருமையோடு கூறிக்கொண்டேன்.

நமது நாட்டுக் கைத்தறித் தொழிலைப் பற்றி அவர்களிடமெல்லாம் மிகவும் பெருமையாகப் பேசினேன். அதே வேளையில் என் உள்ளத்தில் இன்று கைத்தறித் தொழில் உள்ள நிலையைப் பற்றியும் நெசவாளர்களின் வாழ்க்கையைப் பற்றியும் நினைத்துப் பார்த்து பெருமூச்சு விட்டேன்.

நமது கைத்தறித் துணிகளுக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு இருக்கிறது. உள்நாட்டிலும் நல்ல ஆதரவு இருக்கிறது. எல்லாம் சரிதான். ஆனால் கைத்தறி நெசவாளியின் வாழ்வு எப்படியிருக்கிறது என்று பார்த்தால் அங்கேதான் மனம் சங்கடப்படுகிறது.

இப்போது வெளிநாடுகளிலும் நமது கைத்தறி ஆடைகளுக்கு ஓரளவு கிராக்கி குறைந்து விட்டது என்று கூறுகிறார்கள். இந்த நிலையில் நாம் வெளிநாட்டை மட்டுமே நம்பியிருக்க முடியாது. அதுவும் அடிக்கடி அந்த நாட்டு மக்களின் விருப்பங்கள் மாறி வருவதாகவும் கூறப்படுகிறது. எனவே அந்த மக்களின் விருப்பத்தையொட்டி அடிக்கடி நமது கைத்தறி ஆடைகளின் தினுசுகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் கூறப்படுகிறது. அப்படி மாற்றிக் கொண்டுதானாக வேண்டும். என்றாலும்

எத்தனை நாட்களுக்கு இப்படி வெளிநாடுகளையே நம்பிக்கொண்டிருக்க முடியும் என்பதுதான் இப்போது கைத்தறி நெசவாளியின் முன்புள்ள கேள்வி.

ஆகவே வெளிநாட்டுக் கிராக்கியை நம்பியிருப்பதைவிட உள்நாட்டு மக்களின் ஆதரவை நம்பித்தான் இந்தத் தொழில் வாழ்ந்தாக வேண்டும். நம் நாட்டில் பரந்து கிடக்கும் மக்களிடையே கைத்தறித் துணிக்கு நல்ல ஆதரவு கிடைத்து விட்டால் பிறகு கைத்தறி நெசவாளர்களது வாழ்க்கையில் கவலைகளே ஏற்படாது. நிம்மதியாக அவர்கள் வாழ்க்கையை நடத்திச் செல்வார்கள்.

நம்நாட்டிலுள்ள ஐம்பது கோடி மக்களில் ஒரு இருபத்தைந்து கோடி மக்கள் கைத்தறித் துணிகளையே வாங்குவது என்று தீர்மானித்துக் கொண்டால் போதும். அதுவும் முடிந்த அளவு கைத்தறித் துணிகளை வாங்கினாலே போதும். பிறகு இந்தக் கைத்தறித் தொழிலுக்குச் சிக்கல்களே ஏற்படாது.

இன்று கைத்தறித் துணிகள் எவ்வளவோ தூரம் முன்னேற்றமடைந்துள்ளன. கண்ணைப் பறிக்கக்கூடிய வண்ணங்களில், கைவேலைப்பாடுகளடங்கிய தினுசுகள் கைத்தறித் துணிகளில் ஏராளமாக இருக்கின்றன. எனக்கு இப்போது ஐம்பத்தேழு வயதாகிறது. ஆனால் என்னைப் பார்த்தால் இருபத்தைந்து வயதுதான் மதிக்க முடியும் என்று தலைவர் திரு நாச்சிமுத்து அவர்கள் கூறினார்கள். அவர் என் மீதுள்ள அன்பின் காரணமாக அப்படிக் கூறியிருக்கலாம். ஆனால் என்னைப் பார்த்தால் நாற்பது வயது மதிக்கலாம். இதை இப்போது நீங்களே உணர்ந்து கொண்டிருப்பீர்கள். அந்த அளவு என்னுடைய வயதில் பதினேழு வயது குறைந்து தெரிகிறது என்றால் அதற்கு நான் போட்டுக்கொண்டிருக்கும் இந்தக் கைத்தறிச் சட்டைதான் காரணம்.

எனவே நீங்கள் கைத்தறித் துணிகளை வாங்கி அணிந்து கொள்வதன்மூலம் உங்களுடைய வயதைக் குறைத்துக் கொள்ள முடியும் அதற்காகவது நீங்கள் எல்லோரும் கைத்தறித் துணிகளையே வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலில் மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டிருந்தும்கூட இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கைத்தரம் உயரவில்லை. காரணம் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை பெருகி இருப்பதுதான்.

இந்த நிலையில் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களில் ஒரு சிலருக்காவது வேறு தொழில்களில் வேலை வாய்ப்புக் கிடைக்குமானால் ஓரளவு இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களது தொகை குறையும். அப்போது இந்தத் தொழிலில் தனிப்பட்ட திறமையும் பற்றும் பாசமும் கொண்டிருப்பவர்கள் மட்டுமே மிஞ்சுவார்கள். அவர்கள் தங்களது கலைத்திறனைக் கொண்டு—தங்களது தனித் திறமையைக் கொண்டு இந்தக் கைத்தறித் துணிகளுக்கு நல்ல கிராக்கியைத் தேடிக்கொள்ள முடியும்.

சென்னிமலைப் படுக்கை விரிப்புகள் என்றால் அவை உலகப் புகழ்பெற்றவை. வெளி நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு யார் வந்தாலும் சென்டெக்ஸ் படுக்கை விரிப்புகளையும் போர்வைகளையும் வாங்காமல் திரும்பமாட்டார்கள். அந்த அளவு மிக அழகான கைவேலைப்பாடுகளோடு கூடிய அந்தப் படுக்கை விரிப்புகளைப் போல் நெய்யக்கூடிய திறமையுள்ள தொழிலாளி இந்தத் தொழிலையே நம்பியிருப்பதில் தவறில்லை. ஆனால் என்னைப் போல் நாற்பதாம் நெம்பர் வேட்டி நெய்பவனும் இந்தத் தொழிலிலேயே தொடர்ந்து இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

ஆகவே கைத்தறி நெசவுத் தொழிலாளர்களில் ஒரு சிலருக்கேனும் வேறு தொழில்களில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது நல்லது. அத்துடன் அவர்களது பிள்ளைகளுக்கு உயர்தரக் கல்வியளித்து, முடிந்தால் தொழிற் கல்வியும் புகட்டி வேறு தொழில்களுக்குப் போக ஏற்பாடு செய்யலாம்.

இப்படியெல்லாம் ஒரு நிலை ஏற்பட நீண்ட காலம் பிடிக்கும். எனவே அதுவரை நீங்கள் உங்களால் முடிந்த அளவு கைத்தறித் துணிகளையே வாங்கி ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கைத்தறித் துணிகளுக்காக நீங்கள் செலவிடும் தொகை இந்த நாட்டிலுள்ள லட்சக்கணக்கான நெசவாளர்களது குடும்பங்களை வாழவைக்கப் பயன்படுகிறது என்ற மன நிறைவு ஏற்படுவதுடன், கைத்தறித் துணிகள் நல்ல முறையில் இருப்பதைப் பார்த்து அதனாலும் ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. எனவே உங்களுக்கும் மகிழ்ச்சி; உங்களது ஆதரவைப் பெறும் நெசவாளர்களது குடும்பங்களிலும் மகிழ்ச்சி ஏற்பட கைத்தறியாடைகளை வாங்கி நெசவாளர்களை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தேசியப் பிரச்னை

திரு கே. ஏ. காசிவிஸ்வநாத முதலியார்,
மாநில சங்க உப-தலைவர்.

கைத்தறி நெசவாளர்கள் இன்று இருப்பதா, இறப்பதா என்ற கேள்விக் குறிக்குள் சுழன்று கொண்டிருக்கின்றனர் என்று தலைவர் திரு நாச்சிமுத்து அவர்கள் எடுத்துக் காட்டினார்கள் உண்மையிலேயே இன்று அத்தகைய ஒரு நிலையில்தான் நமது நெசவாளர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

நெசவாளர்களின் அரை வயிற்றுக் கஞ்சிக்குக் கூடக் காணாத அளவு கிடைத்துவந்த கூலியும் இப்போது கிடைக்க வழியில்லை என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது ஒரு புறத்தில் மூலப் பொருட்களின் விலை உயர்வு. மற்றொரு புறத்தில் மிகக் கடுமையான தேக்கம் இந்நிலையில் நெசவாளர்களுக்கு வேலை கொடுக்க வழியில்லை அப்படியே வேலை கொடுத்தாலும் கூலி கொடுக்கப் பணமில்லை என்ற நிலை இருந்துவருகிறது

ரிசர்வு பாங்காரின் கடுமையான விதிகளின் காரணமாக கைத்தறிக் கூட்டுறவு சங்கங்கள் மூடப்படக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தலைவரவர்கள் குறிப்பிட்டார்கள். உண்மையில் இப்போது ஒரு சில பிரதம சங்கங்கள் மூடப்பட்டுவிடக் கூடிய நிலைக்கு வந்துவிட்டன. இன்று ரிசர்வு பாங்காரின் இந்தக் கடுமையான கட்டுத் திட்டங்கள் தளர்த்தப்பட்டாலொழிய கைத்தறி நெசவுத் தொழில் வாழ முடியாது. அதற்கான நடவடிக்கைகளை நமது மாநில—மத்திய அரசாங்கங்கள் எடுத்தாக வேண்டும்

ரிசர்வு பாங்காருடன் பேச்சு நடத்தி கைத்தறி நெசவுத் தொழிலுக்கு இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் பற்றி விளக்கி, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களைப் பெருத்தமட்டிலாவது இந்தப் புதிய கட்டுத்திட்டங்களிலிருந்து விலக்குப் பெற முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டும்.

நூல் விலை உயர்ந்துவிட்டது. சாயப் பொருட்களும் இதரப் மூலப் பொருட்களும் விலை உயர்ந்துவிட்டன. இந்த நிலையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் உயர்ந்துவிட்டன. உணவுப் பொருட்களின் விலையும், உயிர் வாழத் தேவையான இதரப் பொருட்களின் விலையும் உயர்ந்துவிட்ட காரணத்தால் நெசவாளியின் கூலியை உயர்த்திக் கொடுக்கவேண்டியதும் கட்டாயமாகிறது. ஆகவே கைத்தறித் துணிகளின் உற்பத்திச் செலவு ஒன்றரை படங்குக்கு மேல் உயர்ந்துவிட்டது ஆனால் அதே சமயத்தில் துணிகளின் விலையை உயர்த்த வழியில்லை இப்போதுள்ள குறைந்த விலையிலேயே கைத்தறித் துணிகள் விலையாகாமல் தேங்கிவிடும் போது மேலும் விலையை உயர்த்தினால் நிலைமை இன்னும் மோசமாகிவிடும்.

எனவே இந்த வகையில் நமது அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு கைத்தறிக்கு நியாயமான விலையில் நூல் கிடைக்க வழி செய்ய வேண்டும். கைத்தறிக்கு விற்கப்படும் நூல்களுக்கு மட்டுமாவது கலால் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டால் ஓரளவு நூலின் விலை குறையும். இதற்கு நமது மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி ஆவன செய்யவேண்டும்.

கைத்தறித் தொழிலை எடுத்துக்கொண்டால், அது தமிழகத்தின் மிகப் பெரிய தொழிலாக இருக்கிறது. இதர மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்திலும், அடுத்தபடியாக ஆந்திரத்திலும்தான் அதிக அளவில் மக்கள் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். எனவே கைத்தறித் தொழிலின் சிக்கல் என்பது தமிழகத்தின் சிக்கல் என்று சொல்லக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் மத்திய அரசாங்கம் இந்தத் தொழிலுக்குப் பாதுகாப்பளிப்பதில் வடக்கு— தெற்கு என்ற கண்ணோட்டத்துடன் நடந்து கொள்கிறதோ என்று சந்தேகப் படும்படியாக இருக்கிறது என்று இந்த விழாவில் பேசிய சிலர் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட சந்தேகமேற்படாத வகையில் மத்திய அரசாங்கம் இந்தத் தொழிலுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கைத்தறித் தொழில் அந்நிய ஆட்சியின்போது முழுக்க முழுக்க அழிந்தே விட்டது என்று கூறலாம். அந்தச் சமயத்தில் காந்தியடிகள் மட்டும் சுதேசிய உணர்வைத் தூண்டும் வகையில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்காவிட்டால் இந்தத் தொழில் என்றோ அழிந்திருக்கும். ஆனால் அண்ணல் காந்தியடிகளின் கதர் இயக்கமும் சுதேசிய இயக்கமும் கைத்தறித் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டி ஒரு புதிய வேகத்தையும் ஏற்படுத்தின.

அதன்பிறகு சுதந்திரம் பெற்ருேம். சுதந்திரத்திறகுப்பின் கைத்தறித்தொழிலில் ஒரு புதிய ஊக்கமும் உற்சாகமும் பிறந்தது. நமது தேசியத் தலைவர்களும் அரசாங்கமும் கைத்தறித் தொழிலுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வந்தார்கள். அதன்பயனுக நம் நாட்டில் சுமார் முப்பது லட்சம் கைத்தறிகள் ஏற்பட்டன. அவைகளை நம்பி ஒன்றரைக்கோடி மக்களுக்குமேல் வாழ்ந்து வருகிருர்கள்.

இந்த நிலையில் இந்தத் தொழிலுக்கு எந்த நெருக்கடி ஏற்பட்டாலும் அந்த நெருக்கடி ஒரு தேசிய நெருக்கடியாக மதிக்கக்கூடிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. ஒரு சமுதாயத்தில் ஒன்றரைக் கோடி குடும்பங்கள் அமைதியின்றித் துடிக்கும் நிலை ஏற்படுமாஞல் அந்த நிலை அந்தச் சமுதாயம் முழுமைக்கும் பிரதிபலிக்கக் கூடிய ஒரு நிலையாகும்.

ஆகவே கைத்தறித் தொழிலின் பொருளாதார வளர்ச்சியும் வீழ்ச்சியும் பாரதத்தின் பொருளாதார வளர்ச்சியும் வீழ்ச்சியுமாகும். அந்த அளவு இன்று கைத்தறித் தொழில் பாரதத்தின் பொருளாதாரத்தோடு பின்னிப் பிணைந்துள்ளது. இதை நன்கு உணர்ந்து நமது மத்திய அரசாங்கம் இந்தத் தொழிலுக்குத் தேவையான பாதுகாப்புகளைக்கொடுக்குமென்று நம்புகிருேம். மாநில அரசாங்கமும் தன்னுலான எல்லா உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாக அமைச்சர்களும் தலைவர்களும் உறுதியளித்துள்ளனர். அதற்காக அவர்களுக்குக் கைத்தறி நெசவாளர் சமுதாயத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிருேம்.

பொதுவாக கைத்தறிக்கு எவ்வளவு பெரிய நெருக்கடிகள் வந்தாலும் அவைகளை வெற்றிகரமாகச் சமாளித்து, முன்னேறி வருகிருேம் என்ருல் அதற்குக் காரணம் பொது மக்களது ஆதரவுதான் என்பதில் ஐயமில்லை அதிலும் குறிப்பாக தாய்மார்களின் ஆதரவினுல்தான் கைத்தறித் தொழில் தனக்கு ஏற்படும் கடும் சோதனைகளையெல்லாம் சமாளித்து வரமுடிகிறது என்று கூறினுல் அது மிகையாகாது. இந்த நேரத்தில் கைத்தறிக்குத் தொடர்ந்து ஆதரவு கொடுத்து வரும் பொது மக்களுக்கும் குறிப்பாக தாய்மார்களுக்கும் நன்றி கூறிக் கொள்கிருேம்.

[9—4—1967 முதல் 23—4—1967 முடிய சென்னையில் நடைபெற்ற கைத்தறி வார விழாவின்போது நிகழ்த்திய நன்றியுரையிலிருந்து.]

சென்னை மாவட்டக் கூட்டுறவு மத்திய பாங்கு லிமிடெட்,

18/14, மூக்கர் நல்லமுத்து செட்டி தெரு, சென்னை-1.

ஸ்தாபிதம் : 1930 — தொலைபேசி எண் : 21784 & 22989

கிளைகள் : 127, டி. எச். ரோடு, சென்னை-21. : 52503
78, மாதவரம் ஹைரோடு, சென்னை-11. : 61448

தலைவர் : டாக்டர் பி. நடேசன், M.B., B.S.,

அதிகாரம் பெற்ற பங்கு மூலதனம் ... ரூ. 50 லட்சம்
லேவாதேவி மூலதனம் ... ... ரூ. 2.5 கோடி

எல்லாவிதமான டிப்பாசிட்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

டிப்பாசிட் வட்டி விகிதங்கள் வருமாறு :

கரண்ட் டிப்பாசிட்டுகளுக்கு ... ½% — சேவிங்ஸ் டிப்பாசிட்டுகளுக்கு ... 4 %

நிரந்தர டிப்பாசிட்டுகளுக்கு :

90 நாட்களுக்கு ...	4½%	2 வருடம் முதல் 3 வருடங்களுக்குள்	6½%
91 நாட்கள் முதல் 6 மாதங்களுக்குள்.	5 %	3 வருடம் முதல் 5 வருடங்களுக்குள்	6¾%
6 மாதங்கள் முதல் 1 வருடத்திற்குள்..	5½%	5 வருடம் முதல் 7 வருடங்களுக்குள்	7¼%
1 வருடம் முதல் 2 வருடங்களுக்குள்	6¼%	7 வருடமும், அதற்கு மேலும் ...	7½%

36 மாதங்களும், அதற்கு மேற்பட்ட வாய்தாவும் கொண்ட நிரந்தர டிப்பாசிட்டுகளுக்கு அரசாங்கம் பரிபூரண உத்தரவாதம் அளித்துள்ளது.

ரெகரிங் டிப்பாசிட்டுகள்

ரூ. 10	12 மாதங்களில்	ரூ. 124=00
ரூ. 10	24 மாதங்களில்	ரூ. 256=00
ரூ. 10	36 மாதங்களில்	ரூ. 397=00
ரூ. 10	48 மாதங்களில்	ரூ. 546=00
ரூ. 10	60 மாதங்களில்	ரூ. 710=00
ரூ. 10	72 மாதங்களில்	ரூ. 884=00
ரூ. 10	84 மாதங்களில்	ரூ. 1,070=00

மேற்கொண்டு விவரங்களைக் காரியதரிசிக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

என். எம். சிவபெருமாள், காரியதரிசி.

கைத்தறி விழா பட்ஜெட்

ராஜாமணி

ஒவ்வொரு ஆண்டும் மத்திய-மாநில அரசுகளின் வரவு—செலவுத் திட்டங்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படுவதுபோலவே எங்கள் குடும்ப வரவு-செலவுத் திட்டமும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். குடும்பத் தலைவரான என் கணவர் வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்வார். உள் துறையை ஏற்றுக்கொண்டிருக்கும் நான் எனக்கென்று ஒரு பெருந்தொகையை முதலிலேயே ஒதுக்கிக்கொண்டு விடுவதால் மீதியுள்ள நிதி ஆதாரங்களை வைத்துக்கொண்டுதான் இந்த வரவு—செலவுத் திட்டம் தாக்கல் செய்யப் படுவது வழக்கம். குடும்ப உறுப்பினர்களான எனது தலைமகன் ராமு, இரண்டாவது மகன் ரவி, மூன்ருவது மகன் கண்ணன், நான்காவதாகப் பிறந்து ஏழாவது வகுப்பில் இரண்டு ஆண்டுகள் அனுபவம் பெற்றுப் பின்னர் எட்டாவது வகுப்புக்கு மாறிய எனது ஒரே ஒரு பெண் ரமா ஆகிய நால்வரும் தத்தம் செலவுப் பட்டியல்களைத் தாக்கல் செய்வார்கள. அதன் பிறகே விவாதம் தொடங்கும். ஒதுக்கப்பட்ட தொகையை விட செலவுப் பட்டியல்களின் தொகை கூடுமபோதுதான் விவாதத்தில் சூடேறும். பொதுவாக எப்போதுமே ஒதுக்கப்படும் தொகையைவிட செலவுப் பட்டியல்களின் மொத்தத் தொகை அதிகமாகவே இருப்பதுதான் வழக்கம். அதாவது அரசாங்கத்தின் 'பற்ருக் குறை' என்ற இனம் எங்கள் குடும்ப வரவு—செலவுத் திட்டத்திலும் இடம் பெறுவது தவிர்க்க முடியாதது.

எனவே ஒவ்வொரு தடவையும் வரவு-செலவுத் திட்டம் அங்கீகாரம் பெறப்படுவதற்குள் போதும் போதும் என்ருகி விடும். சில சமயங்களில் எதிர்க்கட்சியினரான குழந்தைகள் நால்வரும் ஐக்கிய முன்னணி அமைத்துக்கொண்டு ஆளும் கட்சியினரான என்னையும் என் கணவரையும் படாத பாடுபடுத்தி விடுவதும் உண்டு. அரசாங்க வரவு—செலவுத் திட்டம் ஆண்டுக்கு ஒரு முறை என்ருல் எங்கள் குடும்பத்தின் வரவு—செலவுத் திட்டம் மாதத்திற்கு ஒரு முறை தயாரிக்கப்படுவதாகும். அரசாங்கத்தின் ஐந்தாணடுத் திட்டங்கள் போலவே எங்கள் குடும்பத்தின் ஓராண்டுத் திட்டங்களும் உண்டு.

இந்த ஓராண்டுத் திட்டத்தில்தான் கைத்தறி வார விழாச் செலவுக்கு என்று ஒரு தொகை ஒதுக்கப்படும். இந்தத் தொகையைப் பெறுவதற்கான ஆதாரங்களைப் பற்றி முடிவெடுத்துக்கொண்ட பின் பிப்ரவரி மாதத்திய செலவைக் கட்டுப்படுத்திக் கொள்வது என்ற தீர்மானமொன்றும் ஒருமனதாக நிறைவேற்றப்படும். எனவே ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம பிறந்தவுடன் இந்த மாதம் எந்தச் செலவைக் குறைக்கலாம் என்று முடிவெடுக்கும் பொறுப்பு என்னிடம் விடப்படும். நான் மண்டையைக் குடைந்துகொண்டு ஒவ்வொரு இனத்திலும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துவிட்டுப் பற்ருக் குறையால் போராடிக் கொண்டிருப்பேன்.

ஆயிற்று. கைத்தறி வார விழா தேதி நெருங்கிவிட்டது, அடுத்த வாரம் விழா தொடங்கப் போகிறது என்று என் கணவர் ஒரு வாரததிற்கு முன்பிருந்தே நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் முனைந்துவிடுவார். எங்கள் குடும்பத்திற்கு ஓராண்டுககுத் தேவைப்படும் துணிகளைக் கைத்தறியாகவே வாங்கி விடுவது. அதுவும் அந்த விழாவிலேயே வாங்குவது என்பதுதான் எங்களுடைய குடும்பக் கொள்கையாகும். ருபாய்க்குப் பத்துக் காசு தள்ளுபடி கிடைக்கிறதே என்பதற்காக மட்டும விழாவில்தான் வாங்கிக் கொள்வது என்பதல்ல. எல்லா கைத்தறி நெசவாளர் கூட்டுறவு பிரதம சங்கங்களிலிருந்தும் வந்துள்ள எல்லா விதமான ரகங்களையும் ஒரே இடத்தில் ஒரே சமயத்தில் பார்த்துத் தேவையானவற்றைத் தேர்ந்தெடுக்க வசதியாக இருக்குமே என்பதற்காகத்தான் கைத்தறி வார விழா வரட்டும் என்று காத்துக் கொண்டிருப்பதை நாங்கள் பழக்கப்படுத்திக் கொண்டோம்.

இந்த ஆண்டு பிப்ரவரி பிறந்தவுடனே எங்களது சிக்கனப் போர் தொடங்கி

விட்டது. மாதக் கடைசியில் கணக்குப் போட்டுப் பார்த்தால் இத்தனை ஆண்டுகளும் வழக்கமாக மீதமாகும் தொகையைப்போல் ஒன்றரை மடங்கு தொகை மீதமாகியுள்ளது தெரிந்தது. அத்துடன் எங்களது ஆண்டுத் திட்டத்திலும் கடந்த ஆண்டுகளைவிடக் கொஞ்சம் கூடுதலாகவே ஒரு தொகையை ஒதுக்கியிருந்தோம். ஆக இந்த ஆண்டு கைத்தறிக்கென நாங்கள் செலவிடுவதற்காகச் சேர்ந்துள்ள மொத்தத் தொகை சென்ற ஆண்டைப்போல் இரண்டு மடங்காகும.

இதனால் என் உள்ளம் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது. இந்தத் தடவை பட்டு தினத்திற்குக் கட்டாயம் போய்விடுவது என்று முடிவு கட்டிக் கொண்டிருந்தேன். காஞ்சிபுரம் பட்டுப் புடவைகளில் இரண்டோ மூன்றோ இந்த ஆண்டு என் வீட்டிற்கு வந்துவிடும் என்று எண்ணிக்கொண்டிருந்த எனக்கு பிப்ரவரி கடந்தும் மார்ச் முடிந்தும் கைத்தறி வார விழாத் தொடங்கப்படாதது கண்டு சங்கடமாக இருந்தது. இந்தச் சமயம் பார்த்து என் தலைமகன் “இந்த ஆண்டு கைத்தறி வார விழா நடைபெறாதுபோல் தோன்றுகிறதே” என்று ஐயுற, “நடக்கா விட்டால் கிடக்கிறது ‘கோ-ஆப்டக்ஸ்’ விற்பனை நிலையங்கள் இருக்கவே இருக்கின்றன” என்று என் இரண்டாவது மகன் கூற, “அங்கே உனக்குப் பத்துக் காசு தள்ளுபடி கிடைக்காதே” என்று மூன்றாவது மகன் வெட்ட, “அத்துடன் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வந்துள்ள எல்லா வித ரகங்களிலும் துணிகள் அங்கு கிடைக்குமா” என்று என் மகள் கேள்வி கேட்க எனக்கு ஒரே குழப்பமாக இருந்தது. நல்லவேளையாக அப்போது வந்த என் கணவர் ஒரு பத்திரிகையில் வந்திருந்த கைத்தறி வார விழா விளம்பரத்தை என்னிடம் காட்டினர். அதைப் படித்துப் பார்த்த பிறகுதான் எனக்கு நிம்மதி ஏற்பட்டது.

ஆனால் விழா நடைபெறவிருக்கும் தேதியைப் பார்த்தவுடன் ‘திக்’கென்றது. முதல் தேதி சம்பளத்தையும் சேர்த்துத்தான் ஒரு தொகையைக் கணக்கிட்டு வைத்திருந்தேன். ஆனால் இடையில் ஒன்பது நாட்கள் ஓடுவதற்குள் என்னென்ன செலவுகள் குறுக்கிடப் போகின்றனவோ என்று கவலைப்படத் தொடங்கிவிட்டேன். நான் எதிர்பார்த்ததுபோலவே ஏழாந்தேதி இரவு என் பிறந்த வீட்டிலிருந்து ஒரு படையே திரண்டு வந்து என வீட்டில் இறங்கியது. “சரிதான்! நமது கைத்தறி வார விழா பட்ஜெட் இனி அவ்வளவுதான்” என்று என் உள்மனம் ஏமாற்றத்தால் குமைந்து கொண்டிருக்கும் போது வந்தவர்கள், “சென்னையில் மிகச் சிறப்பாக கைத்தறி வார விழா நடைபெறுகிறதாமே! அதையும் பார்த்துவிட்டுப போகலாமே எனறுதான் வந்தோம்” என்று கூறியபோது எனக்கு ஏதோ ஒரு இனமறியாத சமாதான உணர்ச்சி ஏற்பட்டு அந்த உள்குமைச்சலை அடக்கிவிட்டது.

இந்த ஆண்டு பரவலாக தமிழ்நாடு முழுவதும் கைத்தறி வார விழாக் கொண்டாட ஏற்பாடுசெய்துள்ளது பற்றியும், கைத்தறிக்குப் புதிதாகப் பொறுப்பேற்றுளள அரசாங்கம் செய்யப்போகும் உதவிகளைப் பற்றியும் எனது இரண்டாவது மகன் ரவி அளந்து கொண்டிருந்தான். ஊரிலிருந்து வந்திருந்த எனது அண்ணு, “இந்தத் தடவை கைத்தறி வார விழாவில் இரண்டாயிரம் ரூபாய்க்குத் துணி வாங்கப் போகிறேன்! அதில் உனக்கும் ஒரு புடவை எடுத்துக்கொடுக்க நினைக்கிறேன்! எனவே உனக்குத் தேவையான புடவையை நீயேபார்த்து எடுத்துக்கொள்! நீ புடவை எடுத்துக்கொண்ட பிறகுதான் மீதிப் பணத்தில் உனது அண்ணிக்கும் குழந்தை

பொருட்காட்சியில் 13—4—'67 அன்றைய பொதுக்கூட்டத்திற்குத் தலைமை வகித்த பொது மராமத்துத்துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்களும், சொற்பொழிவாற்றிய திரு காஞ்சி மணிமொழியார் அவர்களும் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த “கைத்தறியாடை அலங்கார இல்லத்தை”க் கண்டுகளித்தனர். அமைச்சரோடு மாநில சங்கத் தலைவரையும், உப-தலைவரையும், இதரர்களையும் படத்தில் காணலாம்.



களுக்கும் துணிகள் வாங்கப் போகிறேன்'' என்று கூறிய போது எனது அண்ணியின் முகம் கறுத்ததா, சிறுத்ததா என்றுகூட நான் கவனிக்கவில்லை. அந்த அம்மாள் தன் தோளில் முகவாய்கட்டையை இடித்துக் கொண்டதை என் கணவர் கவனித்து விட்டார் போலும். எனவே அவர் குறுக்கிட்டு ''முதலில் உன் குடும்பத்திற்குத் தேவையானதை வாங்கு. பிறகு அவளைப் பற்றி கவனிக்கலாம்! அவளுக்குப் புடவை வாங்கிக் கொடுக்க நான் இருக்கிறேனே போதாதா?'' என்றுஒரு போடு போட்டாரோ இல்லையோ எனக்கு 'பொக்'கென்று போய் விட்டது. அடுத்து என் அண்ணியின் வாயிலிருந்து ''இருந்தாலும் தங்கைக்கென்று அவர் பிரியத்தோடு வாங்கிக் கொடுப்பதை வேண்டாமென்று சொல்லக்கூடாது'' என்ற வார்த்தை வெளிப்பட்டது. அந்த வார்த்தை மனதிலிருந்து வெளிப்பட்டிருந்தால் என மனம் குளிர்ந்திருக்கும். போகட்டும்! எப்படியோ இடையே ஒரு நாள் மனப்போராட்டம். மறுநாள் கைத்தறி வார விழா.

விழாத் தொடங்கிய 9-4-'67 ஞாயிறு மாலை ஆறரை மணிக்கெல்லாம் எங்கள் படாளம் பாந்நியன் சாலையிலுள்ள கைத்தறி வார விழாத் திடலை அடைந்து விட்டது. மன்னிக்கவேண்டும். அது விழாத் திடலல்ல! விழா நகர். மயனால் உருவாக்கப்பட்ட மாய நகரத்தைப் போல் காட்சியளித்தது. எள் போட்டால் அது எண்ணெயாகிக் கீழே வழியும் அளவுக்குக் கூட்டம் நெருக்கியடித்துக் கொண்டு எதிரும் புதிருமாக நீந்திக் கொண்டிருந்தது. வீதி வீதியாகப் பிரிக்கப்பட்டிருந்த விற்பனைக் கடை வரிசைகள இரு மருங்கிலும் கண்ணைப் பறித்துக் கொண்டிருந்தன. இத்தனை ஆண்டுகளும் இல்லாத ஏதோ ஒரு சிறப்பு இந்த ஆண்டில் இருக்கவேண்டும என்று நினைக்கும்படியாக இருந்தது. பளபளப்பூட்டும் முறையும் சுருங்காத் தன்மை கொடுக்கும் முறையும் கைத்தறியிலும் உண்டு என்பதை எடுத்துக் காட்டுவதற்காக வந்திருந்த 'மெர்ஸிரைஸ்டு'—'ஸான்போரைஸடு' துணிகளைப் பார்த்தபோதுதான் இந்த ஆண்டு விழாவின் தனிச் சிறப்புப் புலப்பட்டது.

ஆண்டுக்காண்டு கைத்தறி வார விழாவுக்கென்று வந்து குவிகின்ற கைத்தறித் துணிகளின் முன்னேற்றத்தைக்



கைத்தறிப் பொருட்காட்சி மேடையில் நடைபெற்ற மாணவர்களின் பல்கலை நிகழ்ச்சிகளில் ஒன்று.

கண்டு மலைத்துப் போனேன். சென்ற ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும் எவ்வளவு மாறுதல்கள்? அடேயப்பா! இந்த மாறுதல்களனைத்தும் ஒரே அடியாக ஏற்பட்ட மாறுதல்களாக இருக்க முடியுமா? முடியாது! ஒவ்வொரு நாளும் ஏற்படுகின்ற மாறுதல்களின் மொத்த உருவத்தைத்தான் இந்த விழாவில் பார்க்கிறோம் என்பதை உணர்ந்து கொண்டபோதுதான் நமது கைத்தறிக் கலையின் வளர்ச்சி எந்த வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

அவ்வப்போது ஏற்படும் மாறுதல்களை ஒட்டி கைத்தறித் துணிகளின் ரகங்களும் மாறிக்கொண்டே வந்திருக்கின்றன. நமது நெசவாளர்களது திறமையை மிகச் சாதாரணமாகக் கணக்கிடக் கூடிய ஒரு சிலருடைய கருத்துக்கள் எவ்வளவு தவறானவை என்று எனக்குள்ளே எண்ணிச் சிரித்துக் கொண்டேன்.

வகையிலும் வண்ணத்திலும் ரகத்திலும் தரத்திலும் ஒன்றையொன்று போட்டியிட்டுக் கொண்டிருந்த துணிகளின் அழகைக் கண்டு மெய்மறந்து நின்ற என்னைப் பார்த்து ''ஏன்! இந்த விழாவுக்கு வந்துள்ள அத்தனை துணிகளையும் அப்படியே மொத்தமாக வாங்கி விட வேண்டுமென்று நினைக்கிறாயா?'' என்று என் கணவர் கேட்டபோதுதான் நான் மீண்டும் இந்த உலகத்திற்குத் திரும்பி வந்தேன். என் அண்ணாவும் அண்ணியும் தங்களது வேலையை முடித்துக்கொண்டு பெரிய பெரிய பொட்டலங்களைத் தாங்கிக்கொண்டு கட்டுக்கடங்காத மகிழ்ச்சி பொங்கத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். நானும் என் கணவரும் ஒரு வகையாக எங்கள்

உலகப்பம்பாளையம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், S. 897,

குமரமங்கலம் அஞ்சல் : சேலம் மாவட்டம்.

எங்கள் சங்கத்தில் ஸ்டீல் பண்ணையில் தயார் செய்த NF. 17x50-ல் 2x4, 2x2¼, 2x5 ரகங்களில் ரிப்பன் பார்டர் வேஷ்டிகளும், NF. 17 நெம்பரில் சொந்தச் சாயச்சாலையில் தயார் செய்த 11 கால் கலர் பீஸ்களும், 17x50 காடா பீஸ்களும், உயர்ந்த ரக நூலினால் தயாரிக்கப்பட்டு சரசமான விலையில் கிடைக்கும்.

எங்கள் ஜவுளிகள் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் எல்லா விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

கே. வெங்கிடாசலம்,
தலைவர்.

வேலையை முடித்துக்கொண்டு ஆளுக்குப் பத்துப் பதினைந்து என்று பொட்டலங்களைத் தாங்கிக் கொண்டு விழாத் திடலை விட்டு வெளியேறினோம்.

என் அண்ணா "ஒரு டாக்ஸியைப் பிடிக்கலாமா?" என்று கேட்க, "தேவையில்லை? இந்த விழாவுக்கென்றே தனி பஸ்கள் போடப்பட்டுள்ளன" என்று கூறியவாறே பஸ் நிறுத்தத்தை நோக்கி நடக்க, எதிரே வரும் மக்கள் கூட்டத்திற்குள் நீந்தியவாறே நாங்கள் பஸ் நிறுத்தத்தைச் சென்று அடைந்தோம். அங்கு நீண்டு நெளிந்து வளைந்திருந்த 'க்யூ'வில் நின்று கொண்டிருந்த எங்களுக்கு ஒரு வகையாக பஸ் கிடைத்து வீடு வந்து சேருவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. என்றாலும் துணிகளைப் பார்த்த என் பிள்ளைகள் உற்சாகத்தால் துள்ளிக் குதித்த காட்சியைக் கண்டு என் பெற்ற மனம் குதூகலத்தால் துள்ளிக் குதிக்கும்போது நாங்கள் வீடு வந்து சேருவதற்கு ஏற்பட்ட சங்கடங்கள் மறைந்து விட்டன.

மறுநாள் எங்கள் வீட்டிலே ஒரே விழாக்கோலம் தான். அடுத்த வீட்டுக்காரர்கள், எதிர்த்த வீட்டுக்காரர்கள் வந்து நாங்கள் வாங்கி வந்திருந்த துணிகளைப் பார்த்து 'விலையென்ன? எந்த சொஸைடி?' என்றெல்லாம் ஆளுக்கு ஒரு கேள்வியாகப் போட்டு எங்களைத் திணற அடித்துக் கொண்டிருந்தார்கள்.

கைத்தறி வார விழா நடைபெற்ற பதினைந்து நாட்களும் எங்கள் வீட்டிலும் விழாக் கோலமாகவே இருந்தது நாங்கள் முதல் நாள் வாங்கிவந்த துணிகளில் ஒரு சிலவற்றை இன்னும் கொஞ்சம் வாங்கியிருந்தால் பரவாயில்லையே என்ற உணர்வு தோன்றி ஒவ்வொரு நாளும் தவறாமல் விழாவுக்குச் செல்வதும் ஏதாவது ஒன்றிரண்டு துணிகளை வாங்கி வருவதும் வழக்கமாகி விட்டது. 'எனக்கு இது! இல்லை இது எனக்குத்தான்' என்று ஒரே துணிக்காக என் மூன்று பிள்ளைகளும் ஒன்றுக்கொன்று குதறிக் கொள்வதைப் பார்த்து ஒவ்வொன்றிலும் மூன்றாக வாங்கிவிட்டால் போகிறது என்று அவர்களுக்குச் சமாதானம் கூறிவைத்தேன். அதன் விளைவு இந்த ஆண்டில் நாங்கள் கைத்தறி வார விழாவுக்கு என்று போட்டு வைத்திருந்த 'பட்ஜெட்' மூன்றரை மடங்காக உயர்ந்து விட்டது. எனவே இந்த ஆண்டில் எங்களது சிக்கன இயக்கம் மிகக் கடுமையான கட்டத்தில் தொடங்கியுள்ளது. செலவைச் சிக்கனப் படுத்துவதில் மொரார்ஜி தேசாயோடு போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார் என் கணவர். இந்தச் சிக்கன இயக்கத்தின் விளைவு அடுத்த ஆண்டு கைத்தறி வார விழாவுக்கென்று ஒதுக்கப்படுகிற தொகை இந்த ஆண்டைவிட குறைந்தது இரண்டு மடங்காகவாவது உயரும் என்று எதிர்பார்க்கிறோம்.

கைத்தறி வார விழாச் செய்திகள்

13-வது அகில இந்திய கைத்தறி வார விழாவும் பொருட்காட்சியும் 9—4—'67 முதல் 23—4—'67 வரை திருநெல்வேலி சந்திப்பு, இந்து கல்லூரிப் பள்ளி விளையாட்டு அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. நெல்லை மாவட்டத்தில் இயங்கிவரும் பல நெசவாளர் சங்கங்கள் பங்கெடுத்துக்கொண்டன. கோவை, சேலம், இராமநாதபுரம், கன்னியாகுமரி முதலிய மாவட்டங்களிலிருந்து பல நெசவாளர் சங்கங்கள் வந்திருந்தன. கோ-ஆப்டெக்ஸ் சேல்ஸ் எம்போரியமும், பட்டு மாளிகையும் பங்கெடுத்துக் கொண்டன. மதுரை மில்லும், தென் இந்திய கூட்டுறவு நூற்பு ஆலையும் ஸ்டால்கள் எடுத்து தங்கள் மில்களில் உற்பத்தியாகும் நூல்களை விளம்பரத்துக்காக வைத்திருந்தன. சங்கரன் கோவில் கூட்டுறவு பால் விநியோக சங்கமும், திருநெல்வேலி பால் விநியோக சங்கமும் ஸ்டால்கள் வைத்திருந்தன.

பொருட்காட்சி ஸ்டால்களில் மாத்திரம் 15 தினங்களில் 4,20,000 ரூபாய்க்குக் கைத்தறியாடைகள் விற்பனையாயின.

9—4—'67 அன்று மாவட்ட கலெக்டர் திரு எம். எம். ராஜேந்திரன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் திருமதி சுசிலா ராஜேந்திரன், பி.எஸ்ஸி., பொருட்காட்சியைத் திறந்து வைத்தார்கள். குன்றக்குடி அடிகளார் அவர்கள் அகில இந்திய கைத்தறி வாரத்தைத் துவக்கி வைத்தார்கள். ஒவ்வொரு நாள் இரவிலும் பொருட்காட்சி கலை அரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் பல தலைவர்கள், அறிஞர்கள் பேசினார்கள். திருவாசக மணி திரு கே. எம். பாலசுப்பிரமணியம், பி.ஏ.; பி.எல்., அவர்கள் மூன்று தினங்கள் பேசினார். திருக்குறளார் திரு வி. முனுசாமி, பி.ஏ., பி.எல்., அவர்கள் இரண்டு நாட்கள் பேசினார்.

20—4—'67 அன்று மாவட்ட கலெக்டர் தலைமையில் அரிஜன நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள். நெல்லை மாவட்டத்தில் கைத்தறி துணி அதிகமாக உற்பத்தி செய்த கல்லிடைக்குறிச்சி நெசவாளர் சங்கத்திற்கும், மேலப்பாளையம் நெசவாளர் சங்கத்திற்கும் முறையே முதலாவது, இரண்டாவது பரிசுகளை அமைச்சர் வழங்கினார்.

21—4—'67 அன்று சட்டமன்ற உறுப்பினர் திரு எம். ராஜாங்கம் தலைமையில் தமிழ்நாடு உணவுத் துறை அமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் அவர்கள் பேசினார். பொருட்காட்சியில் அதிகமாக விற்பனை செய்து காட்டிய கோ-ஆப்டெக்ஸ் சேல்ஸ் எம்போரியம், அம்மாப்பேட்டை நெசவாளர் சங்கம், பன்னிக்கோடு இரணியல் ஆகிய மூன்று ஸ்டால்களுக்கும் முறையே மூன்று பரிசுகள் வழங்கப்பட்டன.

22—4—'67 அன்று நடந்த நற்சான்றிதழ் வழங்கும் விழாவில் மாவட்ட போலீஸ் அதிகாரி திரு என். தேவசகாயம் தலைமையில் திருமதி தேவசகாயம் அவர்கள் உயர்நிலைப் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கு நடந்த பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளையும், நற்சான்றிதழ்களையும் வழங்கினார்.

23—4—'67 அன்று நடந்த நன்றி நவிலல் விழாவுக்குத் திரு ஏ. பி. சி. வீரபாகு தலைமை தாங்கினார்.

ஒவ்வொரு தினமும் மாலை 6–30 முதல் 8–00 மணிவரை நாதஸ்வர இசை, கிளாரினட் இசை, வில்லிசை, மெல்லிசை, கர்னாடக இசை, சிறுமிகளின் ஆடல், பாடல் போன்ற கலா நிகழ்ச்சிகள் நடந்தன. இரவு 9–00 மணிக்குக் கலையரங்கில் பரதநாட்டியமும், பல கலைஞர்களின் நாடகங்களும் நடந்தன. பல்லாயிரக் கணக்கான மக்கள் கலை நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தனர். பதினைந்து தினங்களும் கைத்தறி விழா நெல்லையில் திருவிழாக் காட்சியாக இருந்தது என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

இறுதி நாள் விழாவில் கைத்தறிப் பொருட்காட்சி சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பும், பூரண ஆதரவும் தந்த தலைவர்கள், அதிகாரிகள், அன்பர்கள் அனைவருக்கும் செயலாளரால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

* * *

சேலத்தில் நடைபெற்ற 13-வது அகில இந்திய கைத்தறி வார விழாப் பொருட்காட்சியில் சேலம் கோ-ஆப்டெக்ஸ் ரிக்ரியேஷன் கிளப்பினரால் 14—4—'67 அன்று 'வைர மோதிரம்' என்ற நாடகமும், 21—4—'67 அன்று

புதிய கூட்டுறவுப் பதிவாளர்

கூட்டுறவுப் பதிவாளராகப் பணியாற்றிய திரு ஆர். பசுபதி, ஐ.ஏ.எஸ்., அவர்கள் கைத்தொழில் இலாகா நெறியாளராக மாற்றலானதை முன்னிட்டு அப்பதவிப் பொறுப்பை திரு வி.கே.சி. நடராஜன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் ஏற்றுள்ளார். தமிழக அரசின் ரெவின்யூ இலாகாவில் செட்டில்மெண்ட் நெறியாளராகப் பணியாற்றி நிர்வாக அனுபவம் மிக்க நமது புதிய பதிவாளரின் சேவை கூட்டுறவியக்கத்தின் வளர்ச்சிக்கு மிகவும் பயன்படும் என்பதில் சந்தேகமில்லை.

• • •

அறிவிப்புகள்

அடுத்த இதழ் 'நெசவாளி' 'நெசவாளர் மாநாட்டுச் சிறப்பு மலராக' வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். மாநாட்டில் மாநில சங்கத் தலைவர் திரு எம் பி. நாச்சிமுத்து அவர்கள் நிகழ்த்திய வரவேற்புரையையும், மாநாட்டை துவக்கிவைத்த கல்வி, தொழிலமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., கூட்டுறவுக் கொடியை ஏற்றிவைத்த சட்டம், கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு எஸ். மாதவன், பி.காம்., பி எல், தேசியக் கொடியை ஏற்றிவைத்த சேலம் கூட்டுறவு மத்திய பாங்குத் தலைவர் திரு கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் ஆகியோரின் சொற்பொழிவுகளையும், மாநாட்டுத் தீர்மானங்களையும், புகைப் படங்களையும் தாங்கி, அதிக பக்கங்களுடன் மலர் சிறப்பான முறையில் வெளிவரும்.

—ஆசிரியர்.

• • •

இடமின்மையால் திரு ந. சஞ்சீவி அவர்களின் "சொல்லின்பம்" இலக்கியக் கட்டுரையின் தொடர்ச்சி ஜூலை இதழில் இடம் பெறும்.

—ஆசிரியர்.

'ஏற்றிய தீபம்' என்ற நாடகமும் நடத்தப்பட்டன. இரண்டு நாடகங்களுக்கும் சேலம் தருமபுரி மாவட்ட பிரதம நெசவாளர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் திரு கே. வி. ஏ. அர்த்தனாரி முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்.

14—4—'67 அன்று தமிழ் வருடப் பிறப்பன்று அரங்கேற்றம் செய்யப்பட்ட 'வைர மோதிரம்' என்ற நாடகத்தைக் காண கட்டுக்கடங்காத கூட்டம் சேர்ந்திருந்தது. தலைமை தாங்கிய திரு கே. வி ஏ. அர்த்தனாரி முதலியார் அவர்கள் தமது தலைமை உரையில், நாடகம் நடத்துவதில் இன்று சேலத்திலேயே சேலம் கோ-ஆப்டெக்ஸ் ரிக்ரியேஷன் கிளப்பினர்தான் சிறந்து விளங்குகின்றனரென்றும், நாடகம் மிகவும் விறுவிறுப்புடனும், சுவையுடனும் நடந்ததென்றும் கூறினார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், இந்நாடகத்தை சிறந்த முறையிலும், கருத்துடனும், கதைச் செறிவுடனும் எழுதிய தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க சேலம் பிராந்திய விற்பனை அதிகாரி திரு எம் மாரிமுத்து, பி ஏ., பி.காம்., எச் டி.சி., அவர்களின் திறமையை மிகவும் பாராட்டிப் பேசினார். நாடகத்தில் பங்கு கொண்ட நடிகர்களுக்கு மாலையணிவித்து அவர்களின் நடிப்புத் திறமையைப் பாராட்டினார். நாடகத்தின் இயக்குனரான திரு ஜி. அப்பாவு அவர்களையும், நாடகத்திற்குப் பாடல்கள் எழுதிக்கொடுத்து பின்னணி பாடிய திரு முத்துவேந்தன் அவர்களையும் பாராட்டிப் பேசினார்.

21—4—'67 அன்று 'ஏற்றிய தீபம்' என்ற நாடகம் நடத்தப்பட்டது. கைத்தறி பிரசாரத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இந்த நாடகம் சென்ற ஆண்டு கைத்தறி வார விழாவில் 'இலட்சிய துடிப்பு' என்ற பெயரில் நடத்தப்பட்டது. நகைச்சுவை அம்சம் நாடகத்தில் அதிகமாக இருந்தது. நாடகம் நடந்துகொண்டிருக்கும்போது மழைத் தூரல்கள் விழுந்தபோதும் மக்கள் கலையாமல் அமைதியாக இருந்து நாடகத்தைப் பார்த்து ரசித்தனர். இந்நாடகத்தின் கதை, வசனம், பாடல்கள் ஆகியவற்றை திரு முத்துவேந்தன் அவர்கள் ரசிக்கும்படியாக எழுதியிருந்தார்.

கைத்தறி வார விழா பொருட்காட்சி கமிட்டியினர் சேலம் கோ-ஆப்டெக்ஸ் ரிக்ரியேஷன் கிளப்பிற்குக் கலை நிகழ்ச்சிகளுக்கான இரண்டாவது பரிசாக ஒரு வெள்ளிக்கோப்பை அளித்தனர்.

தொலைபேசி எண். : 3259

ஜார்ஜ் டவுன் கூட்டுறவு பாங்கு லிமிடெட், எண். 8512

பாங்கு அலுவல் நேரம் : காலை 8 முதல் 10-30 வரை; மாலை 3 முதல் 5-30 வரை

(தமிழ்நாட்டில் சிறந்த கூட்டுறவு அர்பன் பாங்கெனப் பாராட்டி,
இந்த பாங்குக்குத் தமிழ்நாடு அரசாங்கம் கேடயம் வழங்கியுள்ளது)

தலைவர் :

டாக்டர் பி. நடேசன், எம்.பி., பி.எஸ்.

அதிகாரம் பெற்ற மூலதனம்	...	ரூ. 25 லட்சம்
நடைமுதல் மூலதனம்	...	ரூ. 2 கோடிக்கும் அதிகம்

டிபாசிட்டு வட்டி விகிதங்கள் :

(அ) பிக்சட் டிபாசிட்டுகளுக்கு $7\frac{1}{4}\%$ வரை வட்டி வழங்குகிறோம். நீண்டகால தவணையில் அதிக டிபாசிட்டு தொகை முதலீடுகளுக்கு விசேஷ வட்டி உண்டு.

(ஆ) சேவிங்ஸ் டிபாசிட்டுகள் 4%.

(இ) ரெக்கரிங் (மாதாந்திர சேமிப்பு):
ஒரு யூனிட் = 1 ரூபாய். குறைந்தது = 5 யூனிட்டுகள். கட்டவேண்டிய மாதம் = 84.
மாதம் ரூ. 100 கட்டினால் கிடைக்கும் தொகை ரூ. 10,600.
இதைத் தவிர போனஸ் வேறு உண்டு.

29, கிருஷ்ணப்ப நாய்க்கன்
அக்ரஹாரம் தெரு, சென்னை-1.

டி. அருணாசலம்,
பி.ஏ., பி.காம். (ஹானர்ஸ்), ஜி.டி.சி., காரியதரிசி.

தொலைபேசி எண் : 300 தந்தி : "காஞ்கோமில்ஸ்"

காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட்,

நெ. ஜி. 1897

வையாவூர் (தபால் பெட்டி : 2) — காஞ்சிபுரம்.

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்	...	60 லட்சம்
செலுத்தப்பட்ட மூலதனம்	...	20.26 லட்சம்
தமிழக அரசின் பங்கு முதலீடு	...	10 லட்சம்
கதிர்களின் எண்ணிக்கை	...	12,312

எங்களது நூற்பாலையில் உற்பத்தி செய்யும் தரமான 40s, 60s நூலை தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின்மூலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும், நெசவாளர்களுக்கும் நியாய விலையில் விற்பனை செய்து வருகிறோம்.

ஆலையில் பங்கு செலுத்த விரும்புவோர் ஒரு பங்கின் மதிப்பு ரூ. 100-ம், நுழைவு கட்டணம் பங்கு ஒன்றுக்கு ரூ. 2 வீதம் செலுத்தி பங்குதாரராகச் சேரலாம். பங்குகளுக்கு 9 சதம் வரை டிவிடெண்ட் தர தமிழக அரசு சிறப்பு அனுமதி தந்துள்ளது என்பதை மகிழ்வுடன் அறிவிக்கிறோம்.

பொதுமக்களும், கூட்டுறவு நிறுவனங்களும் அதிக அளவில் பங்குகள் எடுத்து, உற்பத்தியாகும் நூலை வாங்கி உபயோகித்து பயனுற வேண்டுகிறோம்.

விபரங்களுக்குப் பொது மேலாளருக்கு விண்ணப்பிக்கவும்.

வி. சீனிவாசன்,
பொது மேலாளர்.

எஸ். எல்லப்ப முதலியார்,
தலைவர்.

மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட், மதுரை-1.

தொலைபேசி எண் : 4023, 4024 & 2134. தபால் பெட்டி எண் : 14.

தந்தி : " சென்கோபாங்க் ".

★

திரு. வ. அழகப்பன், B.A. B.L., தலைவர்.

★

கிளைகள் :

திண்டுக்கல், தேனி, பழனி, கம்பம், திருமங்கலம், கொடைக்கானல், நிலக்கோட்டை, மேலூர், உசிலம்பட்டி, ஒட்டன் சத்திரம், பெரியகுளம், தல்லாகுளம், பத்லகுண்டு, சோழவந்தான்.

★

கோரும் வைப்புகளும் (Call Deposits) *விசேஷ கால வைப்புகளும்* (Season Deposits) *3 சத விகித முதல் 4 சத விகித வட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.*

தவணை வைப்புகள் (Fixed Deposits) *3 மாதம் முதல் 84 மாதங்களுக்கு மேலும் $5\frac{1}{2}$ சத விகித முதல் $7\frac{1}{2}$ சத விகித வட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.*

சேமிப்பு கணக்கு வைப்புகள் (S. B.) *காசோலை மூலம்* (Cheque) *நடத்திக்கொள்ளலாம். 12 வயதுக்கு மேற்பட்ட மைனர்கள் அவர்கள் பெயரில் கணக்குகள் வைத்து அவர்களே வரவு செலவு செய்யலாம். வட்டி 4 சத விகிதம். வாரமொன்றுக்கு ரூ. 5,000 வரை பணம் திரும்பப் பெறலாம்.*

$6\frac{1}{2}$ சத விகித வட்டிக்கு ரிக்கரிங் டிபாசிட்டுகளும், 7 சத விகித கூட்டு வட்டிக்குப் பிராவிடெண்ட் நிதி வைப்புகளும் மாதாந்திர தவணையில் பெற்றுக்கொள்ளப்படும்.

விபரத்திற்கு விண்ணப்பிக்கவும்.

S. N. ராஜமாணிக்கம், B.A., B.Com. (Hons.), C.A.I.I.B.,
காரியதரிசி.

திருச்செங்கோடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

எஸ். 523,

திருச்செங்கோடு.

★

எங்களிடம் நவீன டிசைன்களில் தயாராகும் கோட்டிங் & சர்டிங் பீசுகள், 20s & 30s வேஷ்டிகள், காடா பீசுகள், கண்கவர் வனப்பு மிக்க கைத்தறிச் சீட்டி இரகங்கள், கைத்தறி வாயல்கள், 6, 7, 8 கெஜங்களில் சுங்குடிச் சேலைகள் ஆகியவை கிடைக்கும்.

★

எங்கள் சங்கத்தின் சரக்குகள் மாநில சங்கத்தின் எல்லா (கோ-ஆப்டெக்ஸ்) விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

கே. ஏ. காசிவிஸ்வநாதன்,
தலைவர்.

COCK TEX SAREES

வாழ்க கூட்டுறவு! வளர்க கைத்தொழில்!

ஸ்தாபிதம்:
1947

சேல்ஸ் டிப்போ:
சேலம், சத்தி.

சாவக்கட்டுப்பாளையம் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட், நெ. K-1130

சாவக்கட்டுப்பாளையம் (போஸ்ட்),
(வழி) நம்பியூர் : கோவை ஜில்லா.

★

100s நெ. 80s நெ. நூல்களில்
சேலை ரகங்கள், வேஷ்டிகள், சோளி தினுசுகள்
முதலியவை நவீன ரகங்களில், நவீன டிசைன்களில்
சாயத்திற்கும், தரத்திற்கும் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

கைத்தறி ஜவுளிப் போட்டியில் சென்னை அரசாங்கத்தின் முதற்பரிசு பெற்றது.

சென்னை ராஜ்ய நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின்
எல்லா எம்போரியங்களிலும் (கோ-ஆப்டெக்ஸ்),
கைத்தறி மாளிகைகளிலும் (ஹேண்டுலூம் ஹவுஸ்)
எமது சங்க ஜவுளிகள் கிடைக்கும்.

★

P. அப்பாசாமி, B.A.,
சீனியர் இன்ஸ்பெக்டர் / காரியதரிசி.

V. ராமசாமி,
உப-தலைவர்.

C. ரங்கசாமி செட்டியார்,
தலைவர்.

M. வேலுசாமி	டைரக்டர்
R. பெருமாள்சாமி	,,
S. சுப்ரமணியம்	,,
C. நடராஜ்	,,
M. முருகசாமி	,,

Phone : 5730 Estd. 1931 Grams: COOPLOOM

கோயமுத்தூர் தேவாங்க நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சொஸைடி, லிமிடெட், கே. 649

15/37, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்-1.

★

NF 84 (100^s) நூல் & கோரு சில்க் சேலைகள்

புதிய டிசைன்களில் தயாரிப்பவர்கள்

தரத்தின் சின்னம்

* உழைப்பில் உறுதியானது
* நம்பிக்கையானது
* கலர்களில் கவர்ச்சியானது
* டிசைன்களில் சிறந்தது

என 33 வருடங்களாக மங்காது புகழ்பெற்று விளங்கி வருவது **"கோவை தேவாங்கா"** சேலைகளே.

இந்தியாவிலும், வெளி நாடுகளிலுமுள்ள *"கோ-ஆப் டெக்ஸ்"* விற்பனை நிலையம், *"கைத்தறி மாளிகை"* முதலிய இடங்களில் எமது சேலைகள் விற்கப்படுகின்றன.

எப்பொழுதும் **"கோவை தேவாங்கா"** சேலைகளையே கேட்டு வாங்குங்கள்.

எஸ். தர்மலிங்கம்,
தலைவர்.

தந்தி: "COOPFIRE" டெலிபோன்: 23261

கூட்டுறவு பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் சொசைட்டி லிமிடெட்,

சென்னை - 1

தபால் பெட்டி எண்: 1249

(இந்தியாவிலேயே கூட்டுறவு முறையில் இயங்கும் முதன்மையான ஸ்தாபனம்)

★

தலைவர்:

டாக்டர் P. நடேசன், M.B., B.S.,

உப - தலைவர்:

D. கிருஷ்ணமூர்த்தி கவுண்டர்

★

அலுவல்கள்:

எல்லாவிதமான நெருப்பு இன்ஷ்யூரன்ஸ், திருட்டுப் பாதுகாப்பு இன்ஷ்யூரன்ஸ், மோட்டார் இன்ஷ்யூரன்ஸ், நம்பிக்கை உத்தரவாத இன்ஷ்யூரன்ஸ், 'மெரைன்', 'எரெக்ஷன்', 'கேஷ்-இன்-டிரேன்ஸிட்' இன்ஷ்யூரன்ஸ்

★

சொத்துக்களும், நிதிகளும்
ரூ. 30 லட்சத்துக்கு மேல்

★

விவரங்களுக்குச் சங்கத்தின் சென்னை அலுவலகத்துக்கு விண்ணப்பிக்கவும்.

காரியதரிசி.

தமிழர் ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கவேண்டிய தலையாயப் பிரசுரம்

சென்னை—இந்தியா தமிழ் டைரக்டரி

1967

MADRAS—INDIA TAMIL DIRECTORY

[சென்னை நகர்—தமிழகம்: 365 பஞ்சாயத்து யூனியன்கள், 70 முனிசிபாலிட்டிகள் — நகரங்கள் — பட்டணங்கள் — கிராமங்கள் — க்ஷேத்திரப்பதிகள்-மற்றெல்லா விவரத்துடன்-இந்தியாவின் 17 மாகாணங்கள் சகல விவரத்துடன்—சிலோன்— மலேயா — சிங்கப்பூர் — பாகிஸ்தான் — உலகம் — அகில உலக நாடுகள் விவரம் அடங்கியது.]

★

வாணிபம், விளம்பரம், உற்பத்தி, தொழில், பிரதிநிதித்வம், விநியோகம் இன்னோரன்னப் பிறவற்றின் அறிவுக் களஞ்சியம். தமிழ் நாட்டின் வனப்பு, வளம், வாணிபம் மற்றெல்லா விபரமும் கொண்ட பிரசுரம்.

(சுமார் 27 வரை படங்கள், 350 ஆப்டோன் படங்களுடன்
1/8 டெம்மி சைஸ், சுமார் 720 பக்கங்கள்
மஹாபலிபுரம் வர்ணஜால முகப்பு அட்டை கொண்டது.)

தமிழக அரசு சபாநாயகர், தலைமை அமைச்சர், மற்ற ஏனைய அமைச்சர்கள் நல்வாழ்த்து செய்தியுடன் வெளிவந்துள்ளது.

ஆசிரியர்:

டி. வீட்டு திரு டி. கே. நந்திகேசுவரன்
ஆசிரியர்: எக்ஸ்போர்ட் இந்தியா பத்திரிகை (ஆங்கிலம்)

★

பிரசுரம்:

எக்ஸ்போர்ட் இந்தியா ஜர்னல்

பப்ளிகேஷன்ஸ்

பீட்டர்ஸ் ரோடு — சென்னை-14

போன்: 85237 — தமிழக அரசு

விலை ரூ. 9 — தபால் செலவு ரூ. 1/50

இன்றே உங்கள் பிரதிக்கு ஆர்டர் செய்யவும்

தந்தி : சென்டெக்ஸ் *போன் :* 32 & 38

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

சென்னிமலை

★

படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள்,
நவீன அலங்கார ஆடைகள், துண்டுகள்

தரத்திற்கும், நவீன ரகத்திற்கும்,
அழகான கெட்டிச் சாயத்திற்கும்
...க்கும் சிறந்தவை.

...ல் முதற் பரிசுகளும்,
மெடல் சர்டிபிகேட்டுகளும்
...ட்டுள்ளன.

★

சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின்
எல்லா விற்பனை எம்போரியங்களிலும் கிடைக்கும்.

எம். பி. நாச்சிமுத்து, பி.ஏ., பி.எல்.,
தலைவர்.

போன்: 284 தந்தி: "கோஆப்ஸ்பின்"

தென்னிந்திய
கூட்டுறவு நூற்பாலை லிமிடெட்,

பேட்டை : திருநெல்வேலி

★

அதிகாரம் பெற்ற பங்கு மூலதனம்	... ரூ.	60.00	லட்சம்
செலுத்திய பங்குத் தொகை	... ,,	49.96	,,
க்ஷேம நிதி	... ,,	2.00	,,
ஈடு செய் நிதி		1.20	,,

கதிர்களின் எண்ணிக்கை

உற்பத்தி

இவ்வாலையில் உற்பத்தி
சென்னை மாநில கைத்தறி
சங்கத்தின் மூலமாக இ
எல்லா நெசவாளர் கூட்டுறவு சங்க
விநியோகிக்கப்படு

எம். பி. நாச பி.ஏ., பி.எல்.,

Published by T.P. Shanmugasundaram, B.Com., for The Tamil Nadu (Madras State) Handloom Weavers' Co-operative Society Ltd., Egmore, Madras-8. Printed by Sri K. Ramaswamy, B.A. (Hons.), C.S.R.—Secretary at the Central Co-operative Printing Works Ltd., 1/17, Mount Road, Madras-2. Editor: G. PANNEERSELVAM, B.Sc., D.P.P.A.